

மணிவாசகர் பதிப்பகம்

# இலக்கியவகை அகராதி

மணிவாசகர் பதிப்பகத்தின்
வெள்ளிவிழா வெளியீடு

புலவர் இரா. இளங்குமரன்

மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம்

முதற்பதிப்பு : டிசம்பர், 1985

உரிமை செறிவு

பதிப்பாசிரியர்

ச. மெய்யப்பன், எம். ஏ.,

விலை ரூ. 20-00

கிடைக்குமிடம்

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி சிதம்பரம்-608 001

14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600 001

55, லிங்கிச் செட்டித் தெரு சென்னை-600 001

28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625 001

3/4 ராஜ வீதி கோயமுத்தூர்-641001

சென்னை போன்: 512996, சிதம்பரம் போன்: 2799

அச்சிட்டோர்: கற்பகம் அச்சகம், சென்னை-600 002.

# சிற்றிலக்கிய ஆய்வு வளம்

ச. மெய்யப்பன், எம். ஏ.,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மணிவாசகர் பதிப்பகம் தொடக்கநாள் முதலே சிற்றிலக்கியங்கள் குறித்து ஆய்வு நூல்களை வெளியிட்டு வருகிறது. சதக இலக்கியங்கள் பதிப்பகத்தின் இரண்டாவது வெளியீடு. தொடர்ந்து சிற்றிலக்கிய வரிசையில் பன்னிரண்டு நூல்களைப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

ஐம்பதுகளில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சிற்றிலக்கியங்களைப் பற்றிய ஆய்வினைச் 'சொற்பொழிவு வரிசை' எனும் அமைப்பில் வெளியிட்டது. அப்பணியின் சிறப்பு பல்வகைச் சிற்றிலக்கியங்கள் பற்றிய வெளிப்பாட்டிற்கு வாய்ப்பாக அமைந்தது.

அறுபதுகளில் மணிவாசகர் பதிப்பகம் சிறந்த திட்டத்துடன் ஆய்வு நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டது. ஒவ்வொரு சிற்றிலக்கியம் பற்றியும் தனித்தனி ஆய்வு நூல் வெளிவந்தது.

சதக இலக்கியம்
தூது இலக்கியம்
உலா இலக்கியம்
பரணி இலக்கியம்
பள்ளு இலக்கியம்
அந்தாதி இலக்கியம்
பிள்ளைத்தமிழ் இலக்கியம்

எனும் தலைப்புக்களில் சிற்றிலக்கியங்கள் பற்றிய மிக நுட்பமான தெளிவான ஆய்வு நூல்கள் வெளிவந்தன.

எழுபதுகளில் அறிஞர் நா. வீ. செயராமன் அவர்கள் 'சிற்றிலக்கியச் செல்வம்' எனும் சிறந்ததொரு நூலை அளித்தார்கள். அது சிற்றிலக்கியம் பற்றிய விரிவான விளக்க நூலாக அமைந்தது.

எண்பதுகளில் திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்களின் 'சிற்றிலக்கிய வகைகள்' போன்ற சிற்றிலக்கிய வகைகள் அனைத்தையும் பற்றிய முழுப்பார்வையுடன் கூடிய முழுமை யான ஆய்வு நூல்களை அளித்தது.

அண்மையில் திரு. கு. முத்துராசன் அவர்களின் 'இலக்கிய வடிவங்கள்' எனும் நூலை வெளிக்கொணர்ந்தது. எல்லாவகையானும் சிற்றிலக்கிய ஆய்வுக்கு மணிவாசகர் பதிப்பகம் என அறிஞர்களின் போற்றுதலையும் பாராட்டு தலையும் பெற்றுவிட்டது.

மணிவாசகர் பதிப்பகத்தின் இவ்வரிசை, சிற்றிலக் கியங்கள் பற்றிய புதிய செய்திகளையும் ஆய்வு முடிவுகளை யும் ஆய்வில் புதிய ஒளியையும் அளித்துள்ளது. எம். ஃபில்; எம். லிட்; பிஎச். டி. ஆய்வு செய்வோருக்கு அடிப்படை நூல்களாகவும் ஆதார நூல்களாகவும் எடுத்துக்காட்டு நூல்களாகவும் திகழ்கின்றன.

அண்மைக் கால ஆய்வுகளில் மணிவாசகர் பதிப்பக நூல் மேற்கோள் காட்டப்படாத ஆய்வேடுகளே இல்லை யென உறுதியாகக் கூறலாம். இத்துணைச் சிறப்புக்கும் காரணம் ஆய்வு நூல்களையே வெளியிடுவது எனும் திட்டமும் அடிப்படை நூல்களுக்கு முன்னுரிமை கொடுத்துப் பதிப்பிப்பதுமே ஆகும். ஒவ்வோர் ஆய்வு நூலிலும் உள்ள பட்டியலும் பிற சேர்க்கைகளும் சிற்றிலக்கியம் பற்றிய கருவூலங்களாக, கலைக்களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. இந்த வகையில் **அறிஞர் இளங்குமரன்** அவர்கள் தொகுத்த சிற்றிலக்கிய அகரவரிசையான '**இலக்கிய வகை அகராதி**'யை மிகுந்த பெருமிதத்துடன் அவ்வரிசையில் மணிமுடியாய் வெளியிட்டு மகிழ்கிறது.

இளங்குமரன் பெருமித வாழ்வினர். சங்கப் புலவ ரனைய தூயர். இன்று மதுரையில் வாழும் சங்கப் புலவர். சொல்லாய்வாளர். நல்ல கட்டுரையாளர். சிறந்த நூலாசிரியர். ஆய்வு மதுகையுடையவர். காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழியற் புலத்தில் பேராசிரியர்.

பன்னூல் ஆசிரியராகிய இளங்குமரன் தூய தமிழ் இயக்கத்தின் தலைமைத் தொண்டர். பாவாணரின் முதல் வரிசை மாணவர். தனித்தமிழ் பரப்பும் வன்தொண்டர். அஞ்சா நெஞ்சினர். தமிழ் இயக்கத் தூண். இளைய தலைமுறைக்குச் சிறந்ததொரு வழிகாட்டி.

இந்நூலில் சிற்றிலக்கியங்களின் பெயர் பட்டியலைத் தராமல், **சிற்றிலக்கியங்களின் வகைகளை** ஆராய்ந்து தெளிவாக வரிசைப்படுத்தியுள்ளார். வரிசைப்படுத்தி அவ்வகையின் எண்ணிக்கையினை 360 வரை கண்டுபிடித் துள்ளார். 96 வகை என மரபு வகையாகச் சொல்லப் பெற்ற இலக்கிய வடிவங்கள் **தொல்பொருள் ஆய்வு** போல் இவரது ஆய்வால் அகழ்ந்தெடுக்கப் பெற்றுள்ளன. வகைமை ஆய்வில் இந்நூல் தலைமையும் தாய்மையும் உடையது. இவ்வகை நூல்கள் வளர்ந்து வரும் தமிழ் ஆய்வின் கலங்கரை விளக்கமாகும். நூலாசிரியரின் அயரா உழைப்பும் பன்னூல் பயிற்சியும் தெளிந்த அறிவும் அறிவுத் திட்பமும் இந்நூலை வளப்படுத்தியுள்ளன. பெருமைமிகு ஆசிரியர் தம் நூலைத் தொடர்ந்து வெளியிடும் வாய்ப்பினை மணிவாசகர் பதிப்பகத்திற்கு அளித்தமை மகிழ்ச்சிக்குரியது. நல்லாய்வு நாளும் சிறக்க, செழிக்க வாழ்த்துகிறேன்.

# ஆராய்ச்சி முன்னுரை

1976-ல் செந்தமிழ்ச் செல்வியில் ''**இலக்கிய வகைமை— ஒரு வேண்டுகோள்**'' என ஒரு வேண்டுகை விடுத்தேன். இந் நூல் வரவினை அப்பகுதி காட்டுவதாகலின் அதனை அப்படியே வடித்தேன் (செ. செ. 50: 283):

''தொண்ணூற்றாறு வகைச் சிறு நூல்கள்' என்னும் கருத்து, தமிழ் இலக்கிய உலகில் பெரிதும் வழங்கப் பெறு கின்றது; அகர வரிசை நூல்களும் குறிப்பிடுகின்றன. ஆனால் பாட்டியல் நூல்களைப் பயின்றபோதும், சிற்றிலக் கியங்களைக் கற்றபோதும் ''தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்கள்தாமா உள்ளன?'' என்னும் ஐயம் எனக்குக் கிளர்ந்து கொண்டே இருந்தது. அதன் விளைவே '**இலக்கிய வகைமை**' என்பதொரு நூலாக உருக்கொண்டது.

பல்வேறு பாட்டியல் நூல்களையும் ஆராய்ந்ததில் சில செய்திகள் புலனாயின:

க) பாட்டியல்கள் 96 வகைச் சிறுநூல்கள் என்னும் ஒரே வரம்பு கொண்டு சொல்வன அல்ல.

உ) அவை கூறும் சிறு நூல்களின் வரிசை முறையும் ஒப்பானவை அல்ல.

ங) எல்லாப் பாட்டியல்களுக்கும் பொதுவான சிறு நூல்கள், தனித்தனியே சிறப்பான சிறு நூல்கள் என இருவகைப் பாகுபாடுகள் கொள்ளக் கிடக் கின்றன. பொது நூல்கள் நாடு தழுவியவை என்றும், சிறப்பு நூல்கள் வட்டாரமும் வழக்கும் தழுவியவை என்றும் அறியப்பெறுகின்றன.

௪) பாட்டியல்கள் கூறும் சிறுநூல்களையெல்லாம் அடைவுசெய்யப் பெறின் 96 வகைக்கும் மிகு கின்றன.

(ரு) பொது வழக்கான சிறு நூல்களை மட்டுமே கூறி யமையும் பாட்டியல் நூல்களும் உண்டு என்பவை அவை.

யான் தொகுத்து வைத்துள்ள பாட்டியல் நூல்கள், சிற்றிலக்கிய நூல்கள், இலக்கிய வரலாறுகள், புலவர் வரலாறுகள் ஆகியவற்றைக் கொண்டு 163 வகைச் சிறு நூல்கள் உளவாதல் புலப்பட்டது. அப் புலப்பாட்டின் தூண்டலால் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் **திரு. வ. சுப்பையாபிள்ளை** அவர்களுக்கு என் சிற்றிலக்கிய ஆய்வை வெளியிட்டேன்.

அவர்கள் மிக உவப்புற்றனர். ‘மனிதர்காள் இங்கேவம் கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ!’ என அப்பரடிகள் கனிந்து அழைத்தாற்போல அழைத்து, நிற்கும் தவத்திரு. **மறைமலையடிகளார் நூல் நிலையத்திலுள்ள** அரிய நூல்களையெல்லாம் ஆராய வாய்ப்பளித்தார்.

அப்பொழுது, கழகப் பொது மேலாளர் திரு. **இரா. கலியாண சுந்தரனார்** அவர்களும், நூலகர் திரு. **இரா. முத்துக்குமாரசாமி** அவர்களும் உழுவலன்பால் உதவிய உதவிகள் பெரிதும் ஊக்கின. இவ்வாராய்ச்சியால் அரிய சிற்றிலக்கிய வகைகள் பல கிடைத்தன.

மேலும் கழக ஆட்சியாளர் அவர்கள் வழியால் திருவான்மியூர், டாக்டர் உ. **வே. சாமிநாதையர்** நூல் நிலையத் தொடர்பும், திருவாமாத்தூர், வண்ணச்சரப் **தண்டபாணி அடிகளார்** திருமடத்தொடர்பும் வாய்த்தன. அவற்றால் பெற்றபயன் பெரிதாகும்.

தமிழ் செய்த தவத்தால் பிறந்த பெருமகனார் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஆவார்.

**அவர்கள்** வெளியிட்டுள்ள சுவடிப்படியாலும், அச்சில் வாராத பிரபந்தத் திரட்டு, பிரபந்த தீபம் என்னும் நூல்களின் கைப்படிகளாலும் அறியவந்த சிற்றிலக்கிய நூல்கள் பலவாயின. தண்டபாணி அடிகளாரின் திருப்பெயரனார் **முருகதாச அடிகளாரும்**, அவர்கள் திருமகனார் புலவர் **சங்கரலிங்கனார்** அவர்களும் தண்டபாணி அடிகளார் படைத்த சிற்றிலக்கியப் புதுப்படைப்புகள் பலவற்றைக் கனிவோடும் எழுதி உதவினர். விளக்கங்களும் தந்தனர். இவ்வகையால் பெருக்கமுற்ற இலக்கிய வகைமை மேலும் பெருக்கமுற வாய்ப்பு உண்டு என்று கருதியே இவ்வேண்டுகோள் விடப்பெற்றதாம்.

செல்வி ஆராய்ச்சி இதழ்; அறிவு வேட்கையர் அவாவும் இதழ்: பயில்வாரே அன்றி நூல் படைப்பாரும் போற்றும் இதழ். ஆகலின் "செல்விவட்டப் புலமையாளர்கள் இங்குக் காட்டப்பெறும் சிற்றிலக்கிய வகைகளை அன்றி வேறு சில வகைகளையும் ஆய்ந்து அறிந்திருத்தல் கூடும். அவற்றைக் குறிப்பிட்டு உதவுவார்களாயின் பெருநன்றியுடையேன். இதனைச் செந்தமிழ்ச் சிற்றிலக்கிய ஆராய்ச்சிக்குச் செய்யும் உதவியாகக் கருதி அறிவு நலங்கனிந்த அன்பர்கள் உதவுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன். அடியிற்காணும் பட்டியலில் 287 வகை நூல்களைக் காணலாம்."

இவ்வாறு வேண்டிக்கொண்டு **அகலக்கவி** தொடங்கி **வேனில்மாலை** ஈறாக 287 வகை நூல்கள் அக்கட்டுரையில் பட்டியல் இட்டுக் காட்டப்பட்டன! ஆய்வாளர், ஆர்வலர் மாட்டிருந்து, எதிர்பார்ப்புக்கு இடம் எதுவும் இல்லாது அமைந்தது! எனினும், சென்னை, **ஓலைச் சுவடி நூலகச்** சுவடிகள், தஞ்சை, **சரசுவதிமால்** நூல் நிலையச் சுவடிகள் ஆயவையும் பயன் செய்தன. படிப்படியே இலக்கிய வகையும் பெருகியது. இலக்கிய வகைகளை எழுதி அகரவரிசை முறையில் அடைவு செய்யப்பட்டது.

சிற்றிலக்கிய வகைகளை, அகராதி முறையில் காண்பதற்கு வாய்ப்பாகவும், ஆய்வாளர்க்கும் ஆர்வலர்க்கும் எளிமையாகப் பயன் கொள்ளத் தக்கதாகவும் இத் தொகுப்பு அமைந்துள்ளது. எடுத்துக் கூறும் செய்தியை **அகர முறையில்** கூறுவது போல் ஆய்வாளர்க்கு வாய்ப்பானது பிறிதொன்றில்லை என்பது வெளிப்படை. அப் பட்டறிவே என்னைப் பல்வேறு கருவி நூல்களை அகர முறையில் செய்விக்க ஏவுகின்றதாம்.

இனிச், சிற்றிலக்கியத் தோற்றம், வளர்ச்சி குறித்தும் இவண் எண்ணல் வேண்டும்.

தொல்காப்பியம் சிற்றிலக்கியங்கள் பலவற்றுக்குக் கால்கோள் செய்தது.

பாட்டு, தொகை, பாவிகம் ஆகியவை பல சிற்றிலக்கியங்களை உருவாக்கின.

அரசியல், கலையியல், தொழிலியல், வாழ்வியல், இறையியல் என்பவை சிற்றிலக்கியங்கள் பலவற்றை உருவாக்கி உரமிட்டு வளர்த்துள்ளன.

புலமக்கள் அன்றிப் பொதுமக்கள் துலங்கச் செய்த இலக்கிய வகைகளும் பல.

இலக்கிய வகைகளை 'எண்ணிக்-கைவிட்டார்' 'எண்ணிக்கை' விட்டாரே ஆவர். நாளும் வளரும் ஒன்றன் வளர்ச்சியை, நாளெண்ணி வாழும் மாந்தர் அளவிட்டுரைக்க இயல்வதோ?

ஓரிடத்து ஒருகாலத்து ஒருவர் ஒரு நோக்கில் எண்ணியது மாறா இயல்பிற்றாமோ? அடிப்பட்டுப்போன வழக்காறு மாறாமையால் ஆழ்வார் பன்னிருவர், நாயன்மார் அறுபத்து மூவர், அறங்கள் முப்பத்திரண்டு, கலைகள் அறுபத்து நான்கு, இறைவன் குணங்கள் எட்டு, கூலங்கள் ஒன்பது, வள்ளல்கள் எழுவர் என எண்ணலாம்! அவ்வெண்ணிக்கை நிலையிலேயே நிற்க வளரும் அறிவுலகும், தேர்ந்த உணர்வுலகும், நிறைந்த

எண்ணவுலகும் ஒப்புவது இல்லை! அவ்வாறு இல்லாமையா லேயே, ''பதின்மூன்றாம் ஆழ்வார் என இவரைச் சொல்லலாம்;'' ''அறுபத்து நான்காம் நாயனார் என இவரைச் சொல்லலாம்'' எனச் சொல்லி அமைதல் உண்டாயிற்று.

இறைவன், முழுமுதல்வன்; அவன் முழு நிறை குணங் களைச் சிற்றறிவும் சில்வாழ்நாள், பல்பிணி மும் மயக்கு முடைய ஒருவன் 'எண்குணத்தான்;' என எண்ணிக் கூற வல்லனோ? என்னும் உந்துதலால் 'எண்ணுகின்ற குணமெல்லாம் உடையவன்' எனப் புத்துரை காணவும் ஏவிற்று! இந்நிலைப்பட்டதே தொண்ணூற்றாறு வகைச் சிறுநூல்கள் என்னும் திட்டமும் என அமைக!

சிற்றிலக்கிய வளர்ச்சியை மிகமிகப் பின்னுக்குத் தள்ளுதல் வரலாற்றுப் பார்வை! ஆனால் அதன் தோற்றம் தொல்காப்பியத்திற்கும் முன்னுக்குத் தள்ளத் தக்கதாம்.

'' காவலர்க் குரைத்த கடைநிலை''

'' கண்படை கண்ணிய கண்படை நிலை''

வாயுறை வாழ்த்து, செவியறி வுறூஉ புறநிலை வாழ்த்து என்று கூறும் அவர் 'மொழிப' என முன்னோரை முன்னிறுத்திய செய்தி காலத்தொன்மை காட்டுவதே யன்றோ. இங்குச் சுட்டிய கடைநிலை, கண்படைநிலை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து என்பவை துறை யளவில் தோன்றிச் சிற்றிலக்கியமாக வளர்ந்ததே யன்றோ.

ஆசிரியர் தொல்காப்பியர்,

'' கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எய்தச் சொன்ன பக்கமும்.''

என்று கூறும் நூற்பாவின் நான்கடி, 'துறை' யளவிலோ ஒழிந்தது? பத்துப் பாட்டில் செம்பாதியைப் பறித்துக் கொண்டு நூலுருப் பெற்றுவிட்டதே!

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற் றுப்படை (மலைபடுகடாம்) என்பவை தொல்காப்பியம் தந்த சிற்றிலக்கிய வகைமையே யல்லவோ!

'பதிற்றுப்பத்து' என்பது என்ன தந்தது? பத்தைத் (பதிகத்தை) தந்தது; நூற்றையும் (சதகத்தையும்) தந்தது! அம்மட்டோ? ஈறுமுதலாக (அந்தாதியாக) வரும் சிற்றிலக்கிய வகைத் தோற்றத்தை நான்காம் பத்து நவில்கின்றதே! ஐங்குறு நூறும் (18) அந்தாதிக்கும் பத்துக்கும் சான்றாகின்றதே.

தமிழுக்குத் தனிச் சிறப்பாம் அகப்பொருளின் முப் பொருள் வழியேயும், திணை துறைகளின் வழியேயும், புறப் பொருள் திணை துறைகளின் வழியேயும் யாப்பியல் வழியேயும் எண்ணற்ற சிற்றிலக்கியங்கள் எழுந்துள்ளமை யைப் பயில அறியலாம்.

இறையாண்மைகொண்ட அரசன் வழியாகவும், இறை வனாம் முழுமுதல்வன் ஈடிலா அன்பில் ஈடுபட்டுப் பாடிய அடியார் பாடல்கள் வழியாகவும் எழுந்த இத்தொகுப் பளவில் அடங்கிவிடக்கூடியவையன்றாம். இனிச் சிற்றிலக் கியப் பரப்பு வகையை ஒரு பகுப்பு வகையில் பார்க்கலாம். வகைக்குக் காட்டப்படுவன, எடுத்துக்காட்டாம் அளவே! முழுத் தொகுப்பு அன்றாம்.

## அரசு இயல்

அரச அடையாளம் (சின்னம்)
—குடைவிருத்தம், செங்கோல் விருத்தம்.
அரச உறுப்பு (தசாங்கம்)
—மலை, ஆறு, நாடு முதலியன
அரண்மனை நடைமுறை—எச்சரிக்கை, கட்டியம்.
அறவுரை —முதுமொழிக் காஞ்சி.
உலா —பவனிக் காதல், விலாசம்.
உறக்கம் விழிப்பு
—கண்படை நிலை, துயிலெடை நிலை.

ஊரும் பேரும்—ஊர் நேரிசை, பேர் நேரிசை
ஊர் இன்னிசை, பேர் இன்னிசை
நாமக்கோவை.
ஒற்று —புறநாட்டுச் செய்கை.
கொடை —கனகாபிடேகம், சீட்டுக்கவி.
செய்தியறிவித்தல்—தூது.
திருமணம் —சுயம்வரம்.
திருமணவாழ்த்து—சோபனம்.
படைநிலை —தளசிங்காரம், யானை விருத்தம்.
புறத்திணை —உழிஞைமாலை, வெட்சிமாலை.
புறத்துறை —அமர்க்களவஞ்சி, கொடைநிலை.
போர் —தானைமாலை. திக்கு விசயம்.
போர்க்களம் —பறந்தலைச்சிறப்பு, களவழி.
வெற்றி விழா—பரணி, திருப்பெயர்ப்பொறி.
முடிசூட்டு —பட்டாபிடேகம்.
வரலாறு —மெய்க்கீர்த்தி, குலோதய மாலை.
வாழ்த்து —யாண்டுநிலை.
விண்ணக வெற்றி—வச்சிராங்கி.

## இறை இயல்

இறைவன் திருவுலா —வாகனக் கவி.
இறை வேண்டுகை —விண்ணப்பம், வேட்டல்.
காவல் கடன் —காப்புமாலை, கவசம்.
கோயில் நடைமுறை —கோயிலொழுகு,
சந்நிதி முறை.
திருப்பெயர் கூறல் —நாமாவளி.
திருமால் பிறப்பு —உற்பவமாலை.
திருமால் சிறப்பு —பூவைநிலை.
படையல் —காவடிச்சிந்து.
முருகு வழிபாடு —படைவீட்டுப்பதிகம்.
வழிபாட்டுச் செலவு —வழிநடைச்சிந்து.
வழிவழிப்புனைவு —தொன்மம் (புராணம்).
வாழ்த்து —திருப்பல்லாண்டு.

## யாப்பியல்

அடியளவு —குறுந்தொகை, நெடுந்தொகை.
அமைப்பு —கண்ணி, கோவை, மாலை,
எழுகூற்றிருக்கை.

உறுப்புக் குறைதல் —ஒரு போகு.
உறுப்புச் செய்கை—இதழ் குவிபா, இதழ் அகல்பா.
எண்ணும் எழுத்தும்—எண்ணெழுத்து மாலை.
எழுத்து வரிசை—சுக்கரமாலை, உயிர் வருக்கமாலை,
வருக்கமாலை.

ஒரே வகைப்பா—ஒருவருக்கப்பா.
ஒலிவகை —வண்ணம், கொம்பிலாப் பாடல்.
ஒன்றில்பல —பகுபடுபாட்டு, பிறிதுபடுபாட்டு
ஓரெழுத்து —ஓரெழுத்தந்தாதி.
களவை —கலம்பகம், மஞ்சரி.
சொல் நிலை —மிறைக்கவி; சக்கரமாற்று,
கூடற்சதுக்கம், மடக்கு.

திரட்டு, தொகை—பிரபந்தத்திரட்டு, எட்டுத்தொகை.
பலவகைப்பா—இணைமணி, மும்மணி, பன்மணி.
பழங்கதை —பிசி.
பழமொழி —பழமொழி, பழமொழிமேல் வைப்பு.
பாடல் எண் —ஐந்தகம், பதிகம், நூறு, ஆயிரம்.
பாவகை —வெண்பா, அகவல், விருத்தம்.
மொழி —தமிழ் சொரி சிந்தாமணி.
வழக்காட்டு —சாழல், வசன சம்ப்ரதாயம்.
வசை இசை —அங்கதம்.
வினாவிடை —வினாவுரை, வினாவிடை.
வேற்றுமொழி வரவு
—இலகரி, இலாலி, இலீலை, உலாவணி.

## பொருளியல்

அகத்துறை —உலாமடல்.
அகப்பொருள்—அகப்பொருட்கோவை.
அவலம் —இரங்கல்மாலை, கையறுநிலை.
ஆறு —நதிவிசேடம்.
உரிப்பொருள்—ஊடல்மாலை.
காலநிலை —கார் எட்டு, கார் நாற்பது.
திணை —ஒரு திணைமாலை, ஐந்திணைச்
செய்யுள், பாடாண் பாட்டு.

துறை —ஒரு துறைக் கோவை, மடல்.
நிலவு —விடய சந்திரோதயம்.
பருவநிலை —வேனில் மாலை.
புறத்துறை —நெடுமொழிவஞ்சி.

பொழுது —நாழிகைக் கவி.
விண்மீன் —தாரகை மாலை.

## வாழ்வியல்

இடமறிதல் —குறியறிசிந்து.
உடல் —அங்கமாலை.
உடன்போக்கு உதவி—தெய்வக் கையுறை.
உறுப்பு —நயனப்பத்து.
ஒழுங்குறுத்தல்—கேசாதிபாதம், பாதாதிகேசம்.
காமம் —மதனசிங்காரம், மதன விசையம்.
குடிப்பிரிவு —குளுவநாடகம், குறவஞ்சி.
குடும்பப்போர்—ஏசல்.
குழந்தை —குழமகன், பிள்ளைத்தமிழ்.
கொட்டங்கி (கோடாங்கி)—மாதிரக்கட்டு.
பிரிவு —பிரிவுசுரம், துனிவிசித்திரம்.
பிறப்பியம் —சாதகம்.
மகளிர் நோன்பு—பாவை, தாமரை நோன்பு.
மகளிர் பருவம்—பருவமாலை.

## தொழிலியல்

உலக்கை குற்றல்—வள்ளைப்பாட்டு, சுண்ணம்.
உழவு —பண்ணை விசித்திரம், பள்ளு.
ஏற்றம் —ஏற்றப் பாட்டு.
களவு —களவு கன்னி.
வணிகம் —கப்பற் சிந்து.
வழிப்பறி —வேடுபறி.
வேட்டை —கானவேட்டம்.

## இசையியல்

ஆட்டுதல் —தாலாட்டு.
இசை —ஆனந்தக் களிப்பு, பதம், கீர்த்தனை.
இசைக்கருவி —பறைநிலை, வில்லடிப்பாட்டு
சந்தம் —சந்த விருத்தம், பல்சந்தமாலை.
வகுப்பு —புயவகுப்பு.
வண்ணிப்பு —வண்ணம், ஒலியலந்தாதி.

## ஆட்டவியல்

அடித்துப் பாடல் —பந்தடி.
ஆடிப் பாடல் —ஊசல்.

எறிந்து பாடல் —அம்மானை.
கொட்டிப் பாடல்—கும்மி.
கொய்து பாடல் —பூவல்லி.
தாவிப் பாடல் —உந்தி பறத்தல்.
நோக்கிப் பாடல் —தோள் நோக்கம்.
விளித்துப் பாடல்—கோத்தும்பி

### மெய்ப்பாட்டியல்

இரங்கல் —புலம்பல், இரங்கல் மாலை
சினம் —கோபப் பிரசாதம்.
சுவை —நவரசம், நவரச மஞ்சரி.
வலக்காரம் —தேவாங்க வரையுள்.
வீறுகோள் — திருமறம்.

### மெய்யியல்

அருணிலை —ஆற்றுப்படை
அறநிலை —தருமவிசேடம்
அறிவுரை —செவியறிவுறூஉ, நெஞ்சறிவுறூஉ
மெய்யுரை —போதம், நானிலைச் சதகம்.

இவ்வாறே இவற்றையெல்லாம் பெருக்கிக் கொள்ளவும், விரித்துக் கொள்ளவும் வாய்ப்பு உண்டு.

இலக்கிய வகை அகரவரிசையில் இடம் பெற்றுள்ளவை, உரிய அளவால் விளக்கப் பெற்றுள. நூற்பாக்களும் வேண்டுமிடத்துத் தரப்பெற்றுள. எடுத்துக்காட்டுகளும் இயம்பப் பெற்றுள.

விரித்துக் கூறவேண்டியவை விரித்தும், சுருக்கிச் சொல்லவேண்டியவை சுருக்கியும் சொல்லப்பட்டுள. பெயரளவானே சுட்டப் பெறுவனவும் கிடைக்கும் குறிப்புகளைக் கொண்டு ஓரளவு விளக்க முயற்சி செய்யப் பட்டுளது.

சிற்றிலக்கியங்கள் காலவகையில் பிற்படத் தனி நூலுருக் கொண்டவை, ஆதலால் 'வடமொழியாட்சி' பெயரில் மிக்குள. அவையெல்லாம் அடைப்புக் குறிக்குள் தமிழாக்கஞ் செய்யப் பெற்றுள. அவற்றுள் விடுபெற்றனவும் இருக்க வாய்ப்பு உண்டு. தமிழாட்சி போற்றப்

பெறுமாயின், வடமொழிப்பெயர் தானே படிப்படியே மறைய வாய்ப்பாம். தமிழாக்கத்தில் மேலும் திருந்த இடமானவை இருக்கலாம். பயிலப் பயிலவே புத்தாக்கச் சொற்கள் பொலிவுறும் வண்ணத்தை அடையும் என்பது வெளிப்படும் உண்மையாம்.

இலக்கிய வகைமை ஆய்வு 1972-ல் தொடங்கப் பெற்றது. அதன் வேண்டுகை அப்பணி நிறைவித்து 1976-ல் வெளிப்பட்டது. நூல் வெளியீடோ 1985 இறுதியில் ஆகின்றது. இதனை வருவிருந்தாய் ஏற்று வனப்புற வெளிப்படுத்தும் மெய்யன்பர் மணிவாசகர் பதிப்பக உறுதுணையர் **பேராசிரியர் ச. மெய்யப்பனார்.**

மெய்யப்பர் சிற்றிலக்கிய நூல்களும், சிற்றிலக்கிய நூலாய்வு நூல்களும் நிரம்ப வெளியிட்ட பேற்றாளர். கழக மேனாள் ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சு. அவர்கள் தமிழ்ப்பணியில் தம் மனத்தைப் பறி கொடுத்து நெஞ்சாரப் பாராட்டுபவர். அவர்கள் பணி 'யைத் தம் முன்னோட்டப் பணியாகக் கொண்டு அவ்வகை யில் நூல் வெளியிட முகிழ்ப்பவர். என் கெழுதகை அன்புக்கும் நண்புக்கும் உரிமை பூண்டவர். அன்னார் இந் நூலை வெளியிடும் ஆர்வத்தில் தளிர்த்துக் கடனாற்றி யமைக்கு நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

சிற்றிலக்கியங்களை யாத்த பெருமக்களை நினைவ தோடு, அவற்றை வெளியிட்டும், ஆராய்ந்தும் தொண் டாற்றிய பெருமக்கள் எல்லோரையும் நினைவுகூர்ந்து நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன்.

தமிழ் வாழ்வே தவவாழ்வாக்கிவரும் திருவருளை நினைந்து வழிபடுகின்றேன்.

| | |
|---|---|
| பாவாணர் ஆராய்ச்சி நூலகம் | தமிழ்த்தொண்டன் |
| திருநகர், மதுரை-6. | **இரா. இளங்குமரன்** |

# இலக்கியவகை அகராதி

## அக்கரமாலை (எழுத்துமாலை)

அகரமுதலாகிய ஒழுங்கில், மொழிக்கு முதலாக வரும் எழுத்துகளுக்கெல்லாம் பாடல் அமைந்தது 'அக்கரமாலை' எனப் பெறும்.

அக்கரம்—எழுத்து; இவண், மொழிக்கு முதலாக வரும் எழுத்துகளைக் குறித்து.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகியவை அக்கர மாலை முறையில் அமைந்தவை.

'அருணாசல அக்கரமாலை' இணைக்குறட்டாழிசை யால் அமைந்துள்ளது.

வருக்கக்கோவை, வருக்கமாலை காண்க.

## அகப்பொருட்கோவை

அகப்பொருள் துறைகளை ஓர் ஒழுங்குறுத்திக்கோத்த அமைப்புடையது இக்கோவையாகும்.

கோக்கப்பட்டவையெல்லாம் பொதுவாகக் 'கோவை' எனத்தக்கனவே எனினும், அவை ஆசாரக்கோவை, வருக்கக்கோவை, ஞானக்கோவை எனப்படுவதன்றிக் 'கோவை' என்ற அளவில் குறிக்கப்படுவன அல்ல. அவ்வாறு குறிக்கப்படுவது அகப்பொருட்கோவையே. 'கோவை' காண்க.

### அகலக்கவி (பாவிகம்)

பொருட்டொடர் நிலையாய் விரிவுறச் செய்யும் பெரு நூல்கள் அகலக்கவி எனப்படும். பெருங்காப்பியம், காப்பியம், புராணம் (தொன்மம்) என்பவற்றைக் காண்க.

நால்வகைக் கவிஞருள் 'வித்தார கவி' எனப் பெறு வானால் இயற்றப்படும் பெருநூலே அகலக் கவியாம்.

"பாவிகம் என்பது காப்பியப் பண்பே."

என்பது தண்டியலங்காரம். காப்பியம் என்பது பாவிகமாம். பாவிகம் பாடவல்லான் "பாவிகன்" என்க.

### அகவல்

அகவல் பாவால் அமைந்த நூல் 'அகவல்' எனப் பெறும். பல பாடல்கள் அமைந்திருப்பின் அதனை 'அகவல்' என வழங்கப் பெறுவது இல்லை. ஒரோஒரு நெடிய அகவலால் அமைந்த ஒரு நூல் வகையே 'அகவல்' எனப் பெறும். அகவலாவது அழைக்கை; "அகவன் மகளே அகவன் மகளே" என வரும் பழம் பாடல் இதனைத் தெளிவிக்கும்.

வள்ளலார் அருளிய 'அருட்பெருஞ்சோதி அகவல்' 1596 அடிகளைக் கொண்டது.

மாணிக்கவாசகர் அருளிய 'கீர்த்தித் திருவகவல்' 'போற்றித் திருவகவல்' என்பனவும், கபிலர் பாடிய 'கபிலர் அகவலும்' அகவல் நூல் வகைக்கு எடுத்துக்காட்டுகள். நம்மாழ்வார் பாடிய 'திருவாசிரியம்' அகவலே.

பத்துப்பாட்டுள் 'பட்டினப்பாலை' ஒன்று நீங்கலாக எஞ்சிய ஒன்பதும் அகவல் பாவால் அமைந்த நூல்களே எனினும், அக்காலத்து 'அகவல்' என ஒரு நூல்வகை, எண்ணப் பெறவில்லையாகலின் அவற்றைப் 'பாட்டு' என்றே வழங்கினர்.

### அங்கதச் செய்யுள்

அங்கதச் செய்யுளை ஆசிரியர் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். வெளிப்பட வசைகூறும் செம்பொருள் அங்கதம், பழி மறைத்துக் கூறும் பழிகரப்பு அங்கதம் என்னும் இரு பகுப்பையும் சுட்டுகிறார். வெண்பா யாப்பை அதற்கு உரிமையும் ஆக்குகிறார். இவ்வங்கதம் பழிப்பதுபோலப் புகழ்வதாகவும், புகழ்வது போலப் பழிப்பதாகவும் அமைந்து 'வஞ்சப்புகழ்ச்சி' என்னும் பெயரும் பின்னாளில் பெற்றது.

அங்கதச் செய்யுள் தனிப்பாடல் தொகுதிகளுள் பலவுளவேனும், நூலாக அமைந்தது அருமையே. அவ்வகையில் கவிமணி தேசிகவிநாயகர் இயற்றிய 'மருமக்கள் வழி மான்மியம்' எடுத்துக்காட்டாம். பாவேந்தரின் 'இருண்ட வீடும்' எண்ணத்தக்கதாம். ஆயின் இவை 'அங்கதம்' என்னும் நூல் வகைப் பெயரைப் பெற்றில என்பது குறிப்பிடத்தக்கது (கடைநிலை காண்க).

### அங்கமாலை (உறுப்பு மாலை)

ஆண் பெண் என்னும் இருபாலார்க்கும் உரிய, உடல் உறுப்புகளை வெண்பாவினாலாவது, வெளிவிருத்தத்தினாலாவது அழகுறுத்தி அந்தாதியாகப் பாடுவது 'அங்கமாலை எனப்பெறும்.

"மிக்க உறுப்பை வெண்பா விருத்தம்
தொக்கவொரு முறையால் தொடர்வுறப் பாடுதல்
அங்க மாலை யாமெனப் பகர்வர்."

—(இலக்கண விளக்கம் பாட்டியல் 75)

உறுப்புகளை முறைப்படுத்துவதில் அடிமுதல் முடியிறுதியாகக் கொள்வதைப் பாதாதி கேசம் (அடிமுடி) என்றும், முடிமுதல் அடியிறுதியாகக் கொள்வதைக் கேசாதி பாதம் (முடியடி) என்றும் கூறுவர்.

" கடிதலில் லாக்கலி வெண்பாப் பகரும் அவயவங்கள்
முடிவது கேசமக் கேச முதலடி யீறும்வந்தால்
படிதிகழ் பாதாதி கேசமும் கேசாதி பாதமுமாம்
மடிதலில் வெண்பா விருத்தம் பலவங்க மாலை
யென்னே."

— (நவநீதப் பாட்டியல் 43)

அடிமுடி உறுப்புகள்

" அகங்கால் உகிர்விரல் மீகாில் பரடு கணைமுழந்தாள்
மிகுங்கால் நிதம்பமும் உந்தியுதர மரைமுலையும்
நகஞ்சார் விரலங்கை முன்கைதோள் கண்டம்
முகம்நகைவாய்
நகுங்கா திதழ்மூக்குக் கண்புரு வம்நெற்றி
தாழ்குழலே."

— (நவநீதப் பாட்டியல் 44)

" அகவடி உகிரே விரல்புற வடியே
பரடே கழலே கணைத்தாள் முழந்தாள்
குறங்கே அல்குல் கொப்பூழ் வயிறதன்
வரையே இடையே மயிரின் ஒழுக்கே
முலையுகிர் விரலே முன்கை அங்கை
தோளிணை கழுத்தே முகநகை செவ்வாய்
மூக்கே கண்ணே காது புருவம்
நுதலெனும் ஆறைந் துறுப்புடன் இரண்டும்
பாத மாதியா வேண்டுதல் புணர்ப்பினஃ (து)
ஓதிய பாதம் ஆதியாம் என்ப."

— (பன்னிரு பாட்டியல் 332)

அகவல், வஞ்சிப் பாக்களால் அவயவமாலை வரும் எனவும், கலிப்பா வருதலையும் விலக்கார் எனவும் கூறுவர்.

" அகத்தியன் நுதலிய பல்பொருள் வகையான்
அகவல் வஞ்சி ஆயிரு பாவினும்
அவைவரத் தொடுப்ப தவயவ மாலை
அதுகலி விரவினும் வரையார் ஆண்டே."

— (பொய்கையார் பாட்டியல்)
(நவநீதப் பாட்டியல் 44 மேற்கோள்)

அப்பரடிகள் ஒரு பதிகத்தைத் 'திருவரங்க மாலை' யாகப் பாடினார். அதில் தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை, ஆக்கை, கால் என்பன முறையே சொல்லப் பெறு கின்றன.

பெரியாழ்வார் பாடிய 'கண்ணன் திருப்பாதாதிகேச வண்ண' த்தில் பாதம், விரல், கணைக்கால், முழந்தாள், குறங்கு, முத்தக்காசு, மருங்கு, உந்தி, உதரம், மார்பு, தோள், கை, கண்டம், வாய், நாக்கு, நயனம், முறுவல், மூக்கு, கண்கள், புருவம், குழை, நெற்றி, குழல் என்பன முறையே ஓதப்பெறுகின்றன.

அப்பரடிகள் தம் தலை முதலியவற்றை விளித்துப் பாடினார். பெரியாழ்வார் கண்ணன் அடிமுதல் முடியீறாகப் பாடினார். இவை அங்கமாலைக்குரிய இலக்கணத்தைப் பெறாவாயினும், அங்கமாலைக்கு முன்னோடிகள் என்னத் தக்கன.

அங்கமாலைக்குப் பின்னாடி என்னத் தக்கதும் உண்டு. அது, 'கவசம்' என்னும் பெயர் கொண்டது. விநாயக கவசம், சட்டி கவசம் முதலியன அவை. "இன்ன இன்ன உறுப்புகளை இப்படி இதனால் காக்க" எனவரும் அமைவுடையவை அவை.

"தெய்வங்களுக்குப் பாதாதி கேசமும், ஏனையவர்களுக்குக் கேசாதி பாதமும் கூறுதல் மரபென்பர்" என்பது, நவநீதப் பாட்டியல் குறிப்புரை (43).

## அட்டகம் (எட்டகம்)

ஒரே வகை யாப்பில் பாடல்கள் எட்டுப் பாடுவது அட்டகம் ஆகும்.

வண்ணச் சரபம் தண்டபாணியடிகள் பாடியது மந்திர அட்டகம். எட்டெழுத்தைப் பற்றிக் கூறும் எட்டுப்பாடல்களையுடையது. இது திருவரங்கத் திருவாயிரத்தில் உள்ளது.

**அட்ட மங்கலம் (எண்மங்கலம்)**

'கடவுள் காக்க' என்று அகவல் விருத்தம் எட்டால் பாடப்பெறுவது அட்டமங்கலம் ஆகும். அட்டம்—எட்டு; மங்கலம்—மங்கல வாழ்த்து.

அட்டமங்கலம் அந்தாதியாக வரும்.

"ஒருவனைக் காக்கவென் றிறைவனை ஏத்திய
எண்வகை யகவல் விருத்தம் புணர்தல்
நண்ணிய அட்ட மங்கலம் என்ப."

"இறைவனை ஏத்திய எண்வகை மங்கலம்
அறிதரு பாவே அகவல் விருத்தம்."
—(பன்னிரு. 299, 300)

"கடவுளைப் பாடியக் கடவுள் தானே
காக்கவென் றகவல் விருத்தம் இருநான்
கந்தாதித் தறைகுவ தட்டமங் கலமே."
—(முத்துவீரியம் 1047)

இப்பாடல் இவ்வகையில் ஒன்பதாக அமையின் 'நவமணி மாலை' யாம். இதனை,

"அட்ட மங்கலம் எட்டுமன் விருத்தம்
கவிதொறும் தெய்வம் காப்பவென் றுரைப்பது
நவமணி மாலையந் நடைய வென்ப."

என்னும் தொன்னூல் விளக்கம் (274).

"அட்ட மங்கலமே ஆதிக் கடவுளை
ஆசிரிய விருத்தம் எட்டந்தாதித் துரைத்தலே."

என்னும் பிரபந்த தீபம் (3).

**அண்டகோசம் (உலகப்படைப்பு)**

நிலம் நீர் தீ வளி விண் என்னும் ஐம்பெரும் பூதங்களும் கலந்த மயக்கம் உலகம் என்பது தொல்காப்பியம். அதனை விரித்துக் கூறுகின்றது பரிபாடல்,

உலகை, இறைமையாக் காணும் மெய்ப் பொருளாளர்,

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி."

என்று பாடினார் (திருவாசகம் போற்றித் திருவகவல்).

இவ்வாறு, உலகம் தோன்றிய வகையை விரித்துக் கூறும் நூல் அண்டகோசம் என்பதாம். "அண்ட நிலை சாற்றல் அண்டகோசம்; வகுப்புக் கலிவெண்பாவாம்" என்பது பிரபந்தத்திரட்டு (39).

உலகப் படைப்பு வரலாறு விவிலிய நூலில் உள்ளமையும் ஒப்பிட்டுக் காணத்தக்கது.

**அந்தாதி (முடிமுதல்)**

ஒரு செய்யுளின் இறுதிச்சீரோ, அதன் ஈறுப்பேர் அதனை அடுத்துவரும் செய்யுளுக்கு முதலாக வருமாறு பாடப்பெறும் நூல் அந்தாதி ஆகும்.

கலித்துறையால் செய்யப்பெறுவது 'கலித்துறை அந்தாதி' என்றும், வெண்பாவால் செய்யப்பெறுவது 'வெண்பா அந்தாதி' என்றும் பெயர் பெறும்.

பத்துச் செய்யுள்களால் வருவது பதிற்றந்தாதி; நூறு செய்யுள்களால் வருவது நூற்றந்தாதி; பதிற்றுப்பத்தந் தாதி என்பதும் அது.

ஐம்பது செய்யுள், எழுபது செய்யுள், தொண்ணூறு செய்யுள் எனக்கொண்டு வருவனவும் அவ்வெண்பெயரால் விளங்கும்.

ஒருபொருள்மேல் பத்து, நூறு என்னும் தொகைபட அந்தாதியாக வருவதால் இதனை 'அந்தாதித் தொகை' என்றும் கூறுவர்.

"வெண்பாகலித்துறை வேண்டியபொருளிற்
பண்பால் உரைப்பதந் தாதித் தொகையே."
—(பன்னிரு. 330)

"வெண்பாப் பத்து கலித்துறை பத்துப்
பண்புற மொழிதல் பதிற்றந் தாதி."

"நூறு வெண்பா நூறு கலித்துறை
கூறுதல் நூற் றந் தாதிக்கோளே."
—(இலக். பாட். 81, 82)

"வெண்பா ஐம்பதானும் எழுபதானும்
தொண்ணூ றானும் வந்தால் பேர்பெற்று முடிவது
அந்தத் தொகை வெண்பா அந்தாதியாம்."
—(நவநீதப். 38)

காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, முதலாழ்வார் மூவர் பாடிய திருவந்தாதிகள் குறிப்பிடத்தக்கன. 'திருநூற்றந்தாதியும்' அரியது. தண்டபாணி அடிகள் பாடிய ஆங்கிலியர் அந்தாதி புதுவது.

"சொல்லரு மேன்மைப் பசுமேடம் ஆதியதுய்த் துவக்கும்
புல்லறி வாண்மை பொலிஆங் கிலியர் புறம்கொடுக்க
வெல்லவல் லானைப் படையா திருக்கின்ற வேதனுக்கு
நல்ல மதியொன்றுண்டாகுங்கொ லோவெள்ளை
நாமகளே."

என்னும் முதற்பாடலே அவ்வந்தாதி உட்கிடையை விளக்கும்.

சதகம், பதிற்றுப் பத்தந்தாதி பார்க்க.

### அந்தாதித்தொகை (முடிமுதல் தொகை)

வெண்பாவால் ஆயினும் கலித்துறையால் ஆயினும் வேண்டிய பொருளைப் பற்றிப் பத்து, நூறு என்னும் தொகைபெற வரும் சிறுநூல், அவ்வவ் வந்தாதித்தொகை எனப் பெயர் பெறும். 'அந்தாதி' காண்க.

**அநுராகமாலை (சிற்றின்பமாலை)**

அநுராகம்—சிற்றின்பவேட்கை. தலைவன், கனவின் கண் ஒருத்தியைக் கண்டுகேட்டு உண்டு உயிர்த்து இன்புற்ற தைத் தன் உயிர்த் தோழனிடம் உரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவால் கூறுதல் அநுராக மாலை எனப்படும்.

—(தொன்னூல், 283 உரை)

“ கனவின் ஒருத்தியைக் கண்டுகேட் டுண்டுயிர்த்
தினிதிற் புணர்ந்ததை இன்னுயிர்ப் பாங்கற்கு
நனவில் உரைத்தல் அநுராக மாலை.”

—(இலக். பாட். 104)

இஃதனுராகமாலை என்றும் எழுதப்பெறும்:

“ கனவில் ஒருத்தியைக் கண்டுகேட் டுண்டுயிர்த்
தினிமை யுறப்புணர்ந் ததைத்தன் இன்னுயிர்ப்
பாங்கற்குத் தலைமகன் பகர்ந்த தாக
நேரிசைக் கலிவெண் பாவான் நிகழ்த்துதல்
அனுராக மாலையாம் ஆயுங் காலே.”

—(முத்துவீ. 1048)

**அம்மானை**

மகளிர் மூவர் அமர்ந்து, ஒருவர் ஒருவினாவை எழுப்ப, மற்றொருவர் அதற்கொரு மறுமொழிதர, வேறொருவர் அவ்வினாவையும் விடையையும் தொடர்புறுத்தி உரைக்கப் பாடிக்கொண்டு அம்மானைக் காய்விளையாடுவதாகப் பாடுவது அம்மானையாம்.

அம்மானைப் பாடல் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. அது வரிப் பாடல் வகையைச் சேர்ந்ததாய் ‘அம்மானைவரி’ எனப்படுகின்றது.

அம்மானைப் பாடல் ஐந்தடிகளை யுடையதாகவும், செப்பலோசையுடையதாகவும் அமையும்.

முன்னிரண்டடிகளும் முதலாமவள் வாக்காகவும், அடுத்த இரண்டடிகளும் இரண்டாமவள் வாக்காகவும், இறுதியடி ஒன்றும் மூன்றாமவள் வாக்காகவும் அமையும்.

ஒவ்வொருவர் வாக்கின் நிறைவினும் 'அம்மானை' என்னும் சொன்முடிவிருக்கும்.

கலம்பகம் முதலிய இலக்கியங்களில் இடம்பெற்ற இவ்வம்மானை, பின்னே தனிநூல் வடிவுற்ற காலையில் யாப்பியல் மாறிப்போயநிலையும் அறிய முடிகின்றது.

எடுத்துக்காட்டு "இராமப்பையன் அம்மானை."

" வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணம் காத்த உரவோன்யார் அம்மானை;
ஓங்கரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண்
அம்மானை;
—சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை."

இச்சிலப்பதிகார அம்மானை வரிப்பாடலின் முதல் நான் கடிகளும் ஓரெதுகையாகவும், இரண்டாம் மூன்றாம் அடிகள் மடக்காகவும், ஐந்தாம்அடி எதுகை விகற்பத் தனியடியாகவும் எல்லா அடிகளும் அடியளவில் செப்பலோசை உடையவையாகவும் இருத்தல் அறிக.

### அமர்க்கள வஞ்சி

போர்க்களத்தில் மாண்டார் உடலையும், மற்றைக் கரி, பரிகளின் உடலங்களையும் காகம் கழுகு நாய் நரி பேய் முதலியன தின்று களித்தாடும் சிறப்பைக் கூறுதல் அமர்க்கள வஞ்சி எனப்படும். இதனைச் **செருக்கள வஞ்சி** என்றும் கூறுவர்.

" விருத்தவகை பத்தான் விளம்பும் அதனைச்
செருக்களம் எனவே செப்பினர் புலவர்."

—(பன்னிரு 319)

" செருக்களங் கூறின் செருக்கள வஞ்சி."

—(இலக். பாட். 109)

" போர்க்களத் திறந்த புரவி நால்வாய்
மக்கள் உடலையும் வாயசம் கழுகு

பேய்நாய் பசாசம் பிடுங்கிப் பருகிக்
களித்துப் பாடிய சிறப்பைக் காட்டல்
செருக்கள வஞ்சியாம் செப்புங் காலே.''
—(முத்துவீ. 1073)

**அரசன் விருத்தம் (அரசன்பா)**

பத்துக் கலித்துறையும், முப்பது விருத்தமும், கலித் தாழிசையுமாக மலை, நாடு நகர் வருணனையும், வாள் மங்கலமும் தோள்மங்கலமும் பாடி முடிப்பது அரசன் விருத்தமாகும்.

'' அரசன் விருத்தம்கலித்துறைஈரைந் தகன்மலைமேல்
விரவிய நாடு நகர்சிறப்பாய் விருத்தமுப்பான்
உரைசெய் கலித்தாழிசையும்வாள் மங்கலம் ஓதுவது
புரவலர் ஆயவர்க் காமென் றுரைப்பர் புலவர்களே.''
—(நவநீத். 51)

'' அரசன்விருத்தமே ஐயிரு கலித்துறை
விருத்த முப்பான் வெண்கலித் தாழிசை
இவற்றால் இறைவன் எழிலூர் மலைகடல்
வான்மங் கலந்திண் தோள்மங் கலமுதல்
வருணனை யெல்லாம் வகுத்துப் பாடலே.''
—(பிரபந்ததீபம். 5)

அரசன் விருத்தம் முடிபுனைந்த வேந்தற்குப் பாடப் பெறுவதாகும்.

'' கலித்துறை பத்தும் கலித்தா ழிசையும்
விருத்த முப்பதும் வெற்புநீர் நாடு
வருணனை யொடுநில வருணனை தாமும்
வாண்மங் கலமும் தோண்மங் கலமும்
அறைகுவ தரசன் விருத்த மாகும்.''
—(முத்துவீ. 1,103)

**அரிபிறப்பு**

உற்பவ மாலை காண்க.

**அலங்கார சட்கம் (அறுமணியணி)**

வெண்பா, கட்டளைக்கலித்துறை, எழுசீர் ஆசிரிய விருத்தம், இரட்டை ஆசிரிய விருத்தம், சந்தக்கவி ஆசிரியம்

என்னும் அறுவகைப் பாடல்களும் முறையே அமைந்து வரப்பெறும் ஆறன் அடுக்குநூல் அலங்கார சட்கம் எனப் பெறும்.

சட்கம்—ஆறு; வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளாரால் பாடப்பெற்ற, 'திருநெல்வேலி திருப்பணி ஆறுமுக நயினார் அலங்கார சட்கம்' 36 பாடல்களால் அமைந்த நூலாகும். இதனை 'அறுமணி' என்று கூறுவது உண்டு என்பது, விருதை சிவஞானயோகிகள் இயற்றிய 'நாகேசர் அறுமணி' என்னும் நூலால் விளங்கும்.

**அலங்கார பஞ்சகம் (அணி ஐந்தகம்)**

வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியப்பாவும், ஆசிரிய விருத்தமும், வண்ணமும் என்னும் ஐந்தும் மாறிமாறி அந்தாதியாக வரப்பாடுதல் அலங்கார பஞ்சகம் எனப் பெறும் (பஞ்சகம்—ஐந்துடையது)

"வெண்பா கலித்துறை வேறாசிரியம் விருத்தம்—வண்ணம்
பண்பால் வருவ அலங்கார பஞ்சகமாம்."

—(நவநீத. 42)

"வெண்பா அகவல் கலித்துறை அகவல்
விருத்தம் சந்த விருத்தமிள் வகையே
மாறி மாறியந் தாதித் தொடையாய்ப்
பாடுவ தலங்கார பஞ்சக மாகும்."

—(முத்துவீ. 1108)

**அலங்காரம் (அழகுநூறு)**

அழகுறுத்திப் பாடப்பெறும் நூறு கட்டளைக்கலித் துறைப் பாடல்களைக் கொண்டது அலங்காரமாம்.

பழனித்திருவாயிரத்தில் வரும் 'அலங்காரம்' காண்க. இதனை இயற்றிய தண்டபாணியடிகள் இயற்றியனவே வேல் அலங்காரம், மயிலலங்காரம், ஆறெழுத்தலங்காரம், வாளலங்காரம், தமிழலங்காரம் என்பன. அருணகிரியார் அருளிய கந்தரலங்காரமும் கருதத்தக்கது.

**அலைசல்**

அலைசல் என்பது அலைபோல் அலையும், நிலையிலாத் தன்மையாம். அதற்கு, இரங்குதலாக அமைந்தது 'அலைசல்' எனப்படுகின்றது.

இவ்வகையில் அடிமைத் திறத்து அலைசல், அவத் தொழிற்கு அலைசல், நாளவத்து அலைசல், அவலமதிக்கு அலைசல், ஆனாவாழ்வின் அலைசல், அருட்டிறத்து அலைசல் என அலைசல் பதிகங்கள் வள்ளலார் தொகுதியில் உள. இவற்றுள் இறுதிய தொன்றும் கொச்சகக்கலிப்பா 36 பாடல்களையுடையது. ஏனையவை யெல்லாம் கழிநெடிலடியாசிரியத்தால் ஆயவை. எல்லாமும் பதிகங்கள்.

**அவயவமாலை (உறுப்பறிக்கை)**

'அங்கமாலை' காண்க. இனி, 'அவயவ அறிக்கை' என்பதொரு நூல் வகையும் உண்டு. ஒவ்வோர் அவய வத்தையும் 'விளித்துக்கூறி' இவ்வாறு இவ்வாறு செயு லாற்றுக என்று அறிவிப்பதாய் அமைவது அந்நூல்,

" தலையே நீவணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந்—தலைவனைத்
தலையே நீவணங்காய். "

என்பது முதலாகக் கண்காள், செவிகாள், மூக்கே, வாயே, நெஞ்சே, கைகாள் என விளித்தும், ஆக்கை, கால், உற்றார் என்பனவற்றை உரைத்தும் குற்றாலத்தானை நோக்கி முறையிட்டுரைக்கும் அப்பரடிகள் திருவங்கமாலைப் பாடல் இப்பனுவல் வகைக்கு எடுத்துக்காட்டாகலாம்.

இன்னும்,

" காவுந்தி கைதன் கைதலை மேற்கொண்
டொருமுன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு

நாம மல்லது நவிலா தென்னா
ஐவரை வென்றோன் அடியிணை அல்லது
கைவரைக் காணினும் காணா வென்கண்
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
தருகர் அறவன் அறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி ஒருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடியல்லதென்
தலைமிசை யுச்சி தானணிப் பொறாஅ
திறுதியில் இன்பத் திறைமொழிக் கல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயராது.''

எனக் கவுந்தியடிகள் வாக்காக இளங்கோவடிகள் கூறும் பகுதியும் எண்ணத்தக்கதாம்.

பரிதிமாற் கலைஞர் பாடிய 'அவயவ அறிக்கை' பாவலர் விருந்தில் இடம் பெற்றுள்ளது.

**ஆடாமணி**

ஆடாத மணியை ஆட்டி அரிவை ஒருத்தி அறங்கேட்டகாலை, வேந்தன் வருந்தி அவளிடத்துச் சென்று கேட்டலைப் பற்றிக் கூறுவது ஆடாமணி என்பதாம்.

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுட."

என்பதையும், கண்ணகியார் வழக்குரையையும் இணைத்துக் கொண்டெழுந்த இலக்கிய வகை ஈதெனலாம்.

இதன் இலக்கணம் :

"வாயின் மணிநா அசையாமற் செய்மின்னாள்
வாயின் மணிமுற் றுற அசைக்க—வேயிறைவன்
பூசலிட்டுப் பின்மேவப் பூட்டி உரைப்பதுவே
வாசமிகும் ஆடா மணி."

—(பிரபந்தத்திரட்டு 9)

**ஆண்கூடல்**

உலாப்போழ்தில், மகளிர் கூட்டத்திடையே, தன் காதல் மங்கை வருதல் கண்டு, அக்கூட்டத்தினின்று

அவளை விலக்கிக், காமன் அன்ன தலைமகன் அவள் உறுப்புகளின் அழகினைப் புகழ்ந்துகூறிக் கூடுதல் 'ஆண் கூடல்' என்பதாம்.

" பவனிமின்னார் கூட்டமயற் பாவை வரல்கண்டு
திவளார நீக்கியெதிர் செவ்வேள்—அவளுறுப்புக்
கூறல்ஆண் கூடல். "

—(பிரபந்தத்திரட்டு. 17)

**ஆற்றுப்படை**

பரிசு பெற்று வருவார் ஒருவர், பெறக் கருதிப் போவார் ஒருவரை வழியிடைக்கண்டு, தாம் பெற்ற வளத்தையும் அதனை அருளிய தலைவன் நாடு, ஊர், புகழ், கொடை முதலியவற்றையும் கூறிப் பரிசு பெற்று வர வழிப்படுத்துதல் (ஆற்றுப்படுத்துதல்) ஆற்றுப்படை யாகும். இதனை,

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கம். "

என்று கூறும் தொல்காப்பியம் (பெர்ருள். 91).

" புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கானத்திடை
வறுமை யுடன்வருஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை."

எனப் புலவரையும் இணைத்துக் கொண்டார் பன்னிரு பாட்டியலுடையார் (320).

" ஓங்கிய அதுதான் அகவலின் வருமே."
" புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே."

என யாப்பையும் உரைத்து புலவராற்றுப் படைக்கொரு விளக்கமும் தருகிறது அப்பன்னிரு பாட்டியல் (321-2)

“புலவர்கள் வாழ்த்துநலம்,
நிறைந்த பொருநரைப் பாணரைக் கூத்தரை
நீள்நிதியம்
பெறும்படி ஆற்றுப்படுப்பன ஆசிரி யம்பெறுமே.”

என்று நவநீதப்பாட்டியலும்,

“ஆற்றுப் படையே அகவல் பாவால்
விறலி பாணர் கூத்தரில் ஒருவர்
பரிசுக்குச் சென்ற பாவலர் புகழும்
கொடையும் கொற்றமும் வழியிடைக் கூறலே.”

என்று பிரபந்த தீபமும் ஆற்றுப்படை இலக்கணத்தை எளிவரக்கூறும்.

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பவை பழமையான ஆற்றுப்படை நூல்கள். சங்கப் பாடல்கள் வேறு சிலவற்றிலும் ஆற்றுப்படையுண்டு. இவற்றுள் வரும் செய்தியைக் கொண்டே, ஆற்றுப்படை இலக்கணம் தோற்றியதெனலாம்.

மாணாக்கர் ஆற்றுப்படை, ஆசிரியர் ஆற்றுப்படை, தமிழ்மகள் ஆற்றுப்படை எனக் காலத்துக்கேற்ற புதுப் பொருட்கு இருப்பாகவும் ஆற்றுப்படை பெருகி வருகின்றது.

**ஆறெழுத்தலங்காரம் (ஆறெழுத்தில்)**

திருமுருகன் ஆறெழுத்துகளைப் பற்றி நூறு பாட்டுப் பாடுதல் ஆறெழுத்தலங்காரமாம். ஆறு எழுத்து—சரவணபவ.

தண்டபாணி அடிகள், ஆறெழுத்தலங்காரம் பாடியுள்ளார். அதிலுள்ள பாடல்கள் வாழ்த்துடன் 103.

**ஆனந்தக்களிப்பு (பெருமகிழ்ச்சி)**

இரண்டடிகளாய் ஒரெதுகையுடையதாய் ஒவ்வோர் அடியும் மூன்றுசீர்களும் தனிச்சொல்லும், பின்னும் நான்கு

சீர்களும் உடையதாய்ச் சிந்துநடையில் வருவது ஆனந்தக் களிப்பு எனப்பெறும். கடுவெளிச்சித்தர் ஆனந்தக்களிப்பும், வள்ளலார் ஆனந்தக்களிப்பும் காண்க.

“ நந்த வனத்திலோர் ஆண்டி—அவன்
நாலாறு மாதமாய்க்குயவனை வேண்டிக்
கொண்டுவந்தானொரு தோண்டி—மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி.”

இவ்வாறு முப்பத்துநான்கு பாடல்களையுடையது கடுவெளிச் சித்தர் ஆனந்தக் களிப்பு. இதன் எடுப்பு;

“ பாபம்செய் யாதிருமனமே—நாளைக்
கோபஞ்செய் தேயமன் கொண்டோடிப் போவான்.”

என்பதாம்.

“ ஞான மருந்திம் மருந்து—சுகம்
நல்கிய சிற்சபா நாத மருந்து.”

என்னும் எடுப்பும்,

“ அருட்பெருஞ் சோதி மருந்து—என்னை
ஐந்தொழில் செய்தற் களித்த மருந்து
பொருட்பெரும் போக மருந்து—என்னைப்
புறத்தும் அகத்தும் புணர்ந்த மருந்து.”

என்பது முதலாகத் தொடுப்பும் அமைவது வள்ளலார் ஆனந்தக்களிப்பு.

இவ் ஆனந்தக் களிப்பின் இயையும், வெண்டளைச் சீர்மையும் சந்தமும் இனிக்க இயலல் அறிக.

தனித்தொகுதியாம் அளவுக்கு ஆனந்தக்களிப்புப் பாடிய வள்ளலார் ‘ஆனந்தமேவீடும்’ பாடுகிறார்.

ஆனந்தப்பெருக்கில், இசையொடு இசைக்கருவியும் இயையும் என்பதை வெளிப்படுத்துகிறார்; “ஊதூது சங்கே” என்றும், “சின்னம்பிடி” என்றும் வரும் முழக்குச் சொற்களால் இதனை அறியலாம்.

'ஆனந்தக் களிப்பு' இவ்விலக்கணம் அமைய நான்கடிப் பாடலாக வருவதும் உண்டு.

**ஆனைத்தொழில் (யானைத்தொழில்)**

ஆனைபிறந்த நாடு, அதன் குலநன்மை, அதன் உயர்ச்சி, அளவு, அகவை, சினத்தின் பொருட்டால் நிலை நின்று நீக்குதல், சினத்தால் கொலைபுரிதல் ஆகிய வற்றைக் கூறிப் பின்பு அரசன் அதனை அணையிற் பிணித்தவாறும் வஞ்சிப்பாவால் கூறுதல் ஆனைத் தொழி லாகும். ஆனைத்தொழில் அருந்தொழில் என்பது, 'இவன் பெரிய ஆனைத்தொழிலைச் செய்யாநிற்க' என்னும் ஈட்டுரையால் (7. 4. 3.) புலப்படும்.

"பிறந்த நிலம்குலம் ஒக்கம் அளவு பிராயம்எழில்
சிறந்த மாக்கோபக் கிரமத்தில் விட்டகதிர் சினத்தால்
இறந்துயிர்கோடல் செயக்கண் டிறைகந்தினிற்பிணித்தல்
உரைத்திடும் வஞ்சி உரமுடை யானைத்தனித்
தொழிலே."
—(நவநீத. 49)

இவ்வானைத் தொழில் இலக்கணத்தை,

"மூவகை நிலனும் மூவகை நிறைவும்
பல்வகைத் தேயமும் எழுவகை உறுப்பும்
வருணமும் யாண்டும் ஐவகைக் கொலையும்
இருவகை நடையும் ஐவகை உணர்வும்
உடையோர்ப் பேணலும் உளப்படப் பிறவும்
கண்ணிய வேளாண் பாவின் நலம்பெற
எண்ணி உரைப்ப தியானைத் தொழிலே."

எனப் பன்னிருபாட்டியல் பகரும். இதன் பொருள் விளக்கத்தை அஃதுரைக்குமாறு:

"மலையே யாறே காடே என்றிவை
நிலைபெறு நிலனென நிறுத்திசி னோரே
... ... ... ..."

உயரமும் நீளமும் சுற்றும் அளவினில்
குறையா தியல்வது **நிறை**வெனப் படுமே.

... ... ... ...

**பல்வகைத் தேயம்** கொல்களிறு பிறக்கும்
பல்வகைத் தேயமும் என்மனார் புலவர்

... ... ... ...

பாதம் நாலும் கையும்வா லதியும்
கோசமும் நிலனுறீத் தீண்டுதல் **குறியே.**

... ... ... ...

**குலமெனப்** படுவது பலவகை வருணமும்
நலனுற உரைக்கும் நலத்த தென்பது.

... ... ... ...

நலமிகு வாழ்நாள் பொலிவுற இயம்புதல்
**யாண்டென** மொழிப வியனெறிப் புலவர்.

... ... ... ...

கையுமுற் கூறும் கடியபிற் கூறும்
கூர்ங்கோ டிரண்டும் **கொலைத்**தொகை வகையே.

... ... ... ...

முன்னர் ஊன்றிய காற்குறி தன்னிற்
பின்னர்ப் பதமிடுவது **தோரண** மென்ப.

... ... ... ...

பிறழ விடுவது வக்கிரமதுவே
சாரிகை விகற்பமும் ஆகும் என்ப.

... ... ... ...

நன்மை இயற்றலும் தீமை இயற்றலும்
பற்றிய நன்மை தீமை நினைத்தலும்
கயக்கறு காலம் நினைத்தலும் **புலனே.**

... ... ... ...

வழுவா துடையோர் ஏவல் இயற்றல்
உடையோர்ப் பேணல் என்மனார் புலவர்.''

—(பன்னிரு. 271—281)

ஆனைத்தொழிலை அகவற்பாவால் இயற்றுதலும் உண்டு என்பதை,

" அகவலும் உரித்தெனெ அறைகுநர் உளரே."
—(பன்னிரு. 282)

என்பதனால் அறியலாம்.

**ஆனைவிருத்தம் (ஆனைப்பா)**

யானையைப் பற்றிப் பத்து ஆசிரிய விருத்தம் பாடுவது ஆனைவிருத்தம் என்னும் சிறுநூலாம். (நவநீதப். 41)

" ஆனையைப்பற்றி வெண்பாவினால் பாடுதலும்
உண்டு என்றும், அதற்கு ஆனைப்பா என்பது
பெயர் என்றும்"

பிரபந்தத் திரட்டுக்கூறும் (1. 15).

**இங்கிதமாலை**

"கடவுளிடத்து மானிடப்பெண் நயந்தபக்கம்."

என்னும் முறையால், பாடப் பெறுவது இங்கித மாலையாகும். அதன்கண் வெளிப்படைப் பொருள் ஒன்றும், உட்பொருள் ஒன்றும் அமைந்து இருத்தலை வள்ளலார் பாடிய இங்கிதமாலையுள் கண்டறிக. 166 பாக்களால் அமைந்த இவ்விங்கிதமாலை அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்த யாப்பில் வந்ததாகும்.

இங்கிதமாலை பாடாண்டிணையின் பாற்பட வரும் என்பதும், வினாவும் விடையுமாக இயலும் என்பதும் வள்ளலார் வாக்கால் அறியக்கிடக்கின்றன. இதன் உள்ளீடு எள்ளல் என்னும் அசதியாடற் பொருளாயும் கிடத்தல் சுவைபெருக்குவதாம்.

" பிட்டின் நதிமண் சுமந்தவொற்றிப்
பிச்சைத் தேவர் இவர்தமைநான்
தட்டின் மலர்க்கை யிடத்தெதுவோ
தனத்தைப் பிடியு மென்றுரைத்தேன்

மட்டின் ஒருமூன் றுடனேழு
மத்தர் தலையீ தென்றுசொலி
எட்டி முலையைப் பிடிக்கின்றார்
இதுதான் சேடி என்னேடி.'' (3)

ஓதனம் — சோறு; ஓதனத்தைப் பிடியும் என்ன அவர் தனத்தைப் பிடித்தார் என அசதியாடல் காண்க. ஒரு மூன்றுடன் ஏழு மத்தர் ஏன்பது பதுமத்தர் (நான்முகன்) எனச் சுவைமிகுத்தல் அறிக.

'இங்கிதம் தெரியாதவன்' என்னும் நாட்டுவழக்கிலுள்ள 'இங்கிதம்' நூற்பெயரீட்டை வழங்கியிருக்கலாம்.

## இணைமணிமாலை

வெண்பா இரண்டு வந்து பின் கலித்துறை இரண்டு வந்து அவ்வாறே நூறு பாட்டான் முடிவது இணைமணி மாலையாகும்.

“ ...... வெண்பாக் கலித்துறை தாமிவையாம் வருபா விரண்டிரண் டாத் தம்முள் மாறின்றி நூறுவரின் பொருமான் விழியாய் இணைமணிமாலை புகல்வர்களே.''
—(நவநீத. 37)

“ இணைமணி மாலை தணிவில் அந்தாதியாய்
மறையவர் பாவும் வணிகர்தம் பாவின்
துறையும் இயைந்தீ ரைம்பது வருமே.''
—(பன்னிரு. 252)

“ வெண்பாக்கலித்துறை ஈரிரண்டியைந்த
ஒண்பா நூறவை இணைமணி மாலை.''
—(பன்னிரு. 253)

வெண்பாவும் அகவலும் இணைந்து அந்தாதியாய் நூறு வருவது வெண்பா அகவல் இணைமணிமாலை என்றும், வெண்பாவும் கலித்துறையும் இணைந்து அந்தாதியாய் நூறு வருவது வெண்பாக்கலித்துறை இணைமணிமாலை என்றும் கூறுவாரும் உளர்.

" வெண்பா அகவல் வெண்பாக் கலித்துறை
பண்பான் ஈரைம் பஃதந் தாதி
இயலின் வகுப்ப திணைமணி மாலை."
—(இலக். பொருள். 446)

" வெண்பா அகவல் வெண்பாக் கலித்துறை
இரண்டிரண் டாக இணைத்து வெண்பா
அகவல் இணைமணி மாலை வெண்பாக்
கலித்துறை இணைமணி மாலையாகும்."
—(முத்துவீ. 1050)

பிரபந்த தீபம் இணைமணி மாலை இலக்கணத்தை

" இணைமணி மாலை இலக்கணம் இயம்பலில்
வெண்பா அகவல் வெண்பா கலித்துறை
இரண்டிரண் டந்தாதித் திருநூறு இயம்பலே."

என்கிறது (9). நூறுபாடலை இருநூறு பாடலாக்கிக் கொள்கிறது இது. 'மாலை' என்னும் பெயருண்மை முடி முதல் (அந்தாதி) நடையது என்பதை வெளிப் படுத்தும்.

**இயன்மொழி வாழ்த்து**

இக்குடிப் பிறந்தோர்க்கெல்லாம் இக்குணம் இயல் பென்னும் அவற்றை நீயும் இயல்பாகவுடையை என்றும் இன்னோர் போல் நீயும் இயல்பாக ஈவாயாக என்றும் உயர்ந்தோர் அவனை வாழ்த்துவதாகக் கூறுவது இயன் மொழி வாழ்த்தாகும்.

" இக்குடிப் பிறந்தோர்க் கெல்லாம் இக்குணம்
இயல்பென் றுநீயும் அவற்றை யுடையை
என்றும் இன்னோர் போல்நீயும் இயல்பாக
ஈயென்றும் உயர்ந்தோர் எடுத்துமற் றவனை
வாழ்த்துவ தாக வழுத்தல் இயன்மொழி
வாழ்த்தாமென்ன வழுத்தினர் புலவர்."
—(முத்துவீ. 1128)

"இயன்மொழி வாழ்த்தே இக்குலத் தோய்நீ
பயனிளித் திடுவெனப் பாவலர் பகர்தலே."
—(பிரபந்ததீபம். 11)

இயன்மொழி வாழ்த்து, பாடாண்திணை என்னும் புறத்துறை சார்ந்தது என்பது, தொல்காப்பியத்தால் அறியப்பெறும். புறநானூற்றினும் பதிற்றுப்பத்தினும் இயன்மொழி வாழ்த்து உண்டு.

**இரங்கல்**

இரங்கல் என்பது நெய்தல் திணையின் உரிப் பொருளாதல் பழமையான நெறி. அவ்விரங்கலை அகத் திணை நூல்கள் பரக்கக் கூறுகின்றன. திருக்குறளும் இரங்க லுக்கு உறுப்பு நலனழிதல், நெஞ்சொடு கிளைத்தல், நிறையழிதல், அவர்வயின் விதும்பல், குறிப்பறிவுறுத்தல் என ஐந்ததிகாரங்களைக்கொண்டுள்ளது.

அகப்பொருள் சார்ந்த இவ்விரங்கல் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கியும்" "நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து" உருகியும் திளைக்கும் இறைமைக் காதல் ஏக்கத்திற்கும் வளர்ந்தது.

இவ்வகையில் திருவாசகம், திருவருட்பா, நாலாயிரப் பனுவல் ஆகியவற்றில் பெருக்கமான பாடல்கள் உள. அழுங்கல், அழிதல், முறையீடு, ஆற்றாமை எனப் பல வடிவங்களையும் பெற்று இரங்கல் வெளிப்பட்டது உண்டு.

'இறந்த காலத் திரங்கல்' என்பது பட்டினத்தார் பாடியது.

இரங்கல் 'கையறுநிலைப்' பொருளதாதல் ஆங்குக் காண்க.

**இரட்டைச் சொல் யமக மாலை (இரட்டைச்சொல் மடக்குமாலை)**

ஒரே சொல் இருமுறை மடக்கி நான்கடிக்கண்ணும் வந்து பொருள் வேறு பயப்பது [இரட்டைச் சொல்

யமகமாலை எனப்பெறும். இந்நூல், கட்டளைக் கலித் துறையால் வரும்.

புரசை அட்டாவதானம் (எண்கவனகம்) சபாபதி முதலியாரால் பாடப் பெற்ற 'திருத்தணிகை இரட்டைச் சொல் யமகமாலை' 30 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமைந்துள்ளது.

## இரட்டை மணிமாலை

வெண்பாவும் அதன்பின் கலித்துறையும் முறையேவந்து இருபது பாட்டான் முடிவது இரட்டை மணிமாலையாகும்.

" இரட்டைமணி,
தருபா இருபது வெண்பாக் கலித்துறை
தாமிவையாம்." —(நவநீத. 37)

" வெண்பா முதலாக் கலித்துறை விண்வரும்
இந்த இருப திரட்டைமணி மாலை
ஆதியந்தம் வெண்பாக் கலித்துறை
ஏதமின்றி வருவ திரட்டைமணி மாலை;
அதுவே நாலைந் தியலும் என்ப."
—(பன்னிரு. 254, 255)

இருபது வெண்பாக் கலித்துறை இயைபின்
வருவது இரட்டை மணிமாலை யாகும்
—(இலக். பாட். 59)

இரட்டை மணிமாலை இயம்புங் காலை
வெண்பாக் கலித்துறை விரவிப் பப்பத்தும்
நேரிசை வெண்பா ஆசிரியவிருத்தம்
இவற்றாம் இருபதந் தாதித் தியம்பலே.
—(பிரபந்ததீபம். 8)

வேறொரு வகையாலும் இரட்டை மணிமாலை கூறுவர்:

வெண்பா விருத்தம் வியப்புற இருபஃ
தெண்பட உரைப்பது இரட்டைமணிமாலை.
—(இலக். பாட். 69)

**இராசாங்கமாலை (இறைமாட்சிமாலை) :**

வெண்கலிப்பாவால் அரசன் வெற்றிச்சிறப்புகளை யெல்லாம் உரைப்பது இராசாங்கமாலை என்பதாம்.

"வெண்கலியா லேவிருதுண் டானவெல்லா
மேயுரைத்தல்
மண்ணுலகில் ராசாங்க மாலையாம்."
—(பிரபந்தத்திரட்டு 19)

**இரு சொல்லலங்காரம் (இரு சொல்லழகு)**

"பாரை இடிவதேன் ? பாம்புஒடுவதேன்?"

"ஆலிலை உதிர்வதேன்? இராவழி நடப்பதேன்?"

இவை இரண்டு இரண்டு வினாக்களாக வருவன. ஆயினும் இரண்டற்கும் விடை ஒன்றே. இவை வாய்மொழி இலக்கியமாக ஊன்றி வளர்ந்தமையால் ற, ர; ன, ந; ள, ழ வேறுபாடு இல்லாதும் வரும்.

முன்னதற்கு, அடிப்பாரற்று; அடிப்பாரற்று, என்பது விடை.

அடுத்ததற்கு, பறிப்பாரற்று; பறிப்பாரற்று என்பது விடை.

இத்தகைய நாட்டியல் வழக்காறே ஏட்டியியலிலும் இடம்பெற்றுப் பனுவலுமாயிற்று.

இருசொல் அலங்காரம் அன்றி முச்சொல் அலங்காரம் என்னும் நூலும் வெளி வந்ததைச் சுட்டுகின்றது "தமிழ் இலக்கிய வகையும் வடிவும்" என்னும் அறிஞர் ச. வே. சுப்பிரமணியனார் நூல் (304—5).

**இருபா இருபது**

பத்து வெண்பாவும் பத்து அகவலும் அந்தாதித் தொடையால் இருபது இணைந்து வருவது இருபா இருபதாகும்.

"ஒருபது வெண்பா ஒருபஃதகவல்
இருபது வரினிரு பாவிரு பஃதே."
—(இலக். பாட். 62)

"இருபா இருபது வெண்பா அகவல்."
—(நவநீதப். 37)

"அகவல்வெண் பாவும் அந்தாதித் தொடையாய்
இருப திணைந்து வரவெடுத் துரைப்பது
இருபா இருபஃ தென்மனார் புலவர்."
—(முத்துவீ. 1089)

**இல்லற வெள்ளை:**

வண்ணமும் வெண்பாவும் ஒன்பதாக இல்லறச் சீர்மை குறித்து இயம்புவது இல்லற வெள்ளையாம்.

"கலைதரு வண்ணமும் வெள்ளையும் ஒன்பான்
நிலைபெறப் புணர்ப்பினஃ தில்லற வெள்ளை."
—(பன்னிரு 301)

இனி, இல்லற வெள்ளை, "வெண்கலிப்பா ஒன்றானும், சந்தவகை ஒன்பதினானும், வெண்பா ஒன்பதினானும் வரும் என்பாரும் உளர் என்பார் பன்னிருபாட்டியலார் (301). (மங்கல வெள்ளை காண்க).

**இலகரி (களிப்புப் பேரலை)**

தேன் சுவை போன்றதாம் இனிய பொருளைக் குறிக்கும் இலகரி, இனிய பாக்களால் ஆகிய நூலைக் குறித்து வந்தது. சங்கரரின் 'செளந்தரிய லகரி' வீரை கவிராயரால் மொழி பெயர்க்கப்பட்டது இவ்வகை நூலின் முன்னோடி.

வள்ளலாரின் 'சல்லாபலகரி', தண்டபாணி அடிகளின் 'முருகானந்த லகரி' ஆகியவை தொடர்ந்தவை.

'லகரி',யை 'அலை' யெனக் கொண்டு பெயர்க்கப் பட்டமை வாலம் அம்மையாரின் 'அழகின் அலை' (செளந்தர்ய லகரி) என்பதால் விளங்கும்.

**இலட்சுமி விலாசம் (திருப்பேறு)**

கன்னி ஒருத்தியின் திருமணத்தைக் கவினோடு நடத்தி வைக்கத் திருமாலும் திருமகளும் ஒருங்கு வந்ததாகப் பாடுதல் இலட்சுமி விலாசமாம்.

"பெண்ணை, மணங்கூட்ட மாலொடுபொன் வந்ததாப் பாடல், அணைலட் சுமிவிலா சம்"

—(பிரபந்தத்திரட்டு. 3)

**இலாலி (இன்சொல்)**

இலாலி என்னும் சொல் இடம்பெறப் பாடப்படும் மங்கலப் பாடல் 'இலாலி' எனப்படுகின்றது.

திருமணத்தின் மங்கலப் பாடலாகப் பாடப்படும் இலாலி இறைவனைப் பாடுதற்கும் பொருளாயிற்று. இசைப்பாடல் வடிவிலும் இலாலி இயல்வதுண்டு

**இலீலை (திருவிளையாடல்)**

தெய்வத் திருவிளையாடல் பற்றிக் கூறுவதாக அமைந்தது இலீலையாம். இவ்வகையில் புகழ்வாய்ந்தது பிரபுலிங்க லீலை, தியாகராச லீலை என்பன.

இலீலை பல்வேறு கதைக் குறிப்புகளைக் கொண்டு நடப்பதால் பல்வேறு யாப்பமைதியமைந்த பாடல்களைக் கொண்டுள்ளது.

'திருவிளையாடல் புராணம்' என்பது 'இலீலை' எனபதுடன் ஒப்பிட்டு இணைத்து நோக்கத் தக்கது.

'கிரீடை' எனவரும் பனுவல் 'இலீலை' வகையினதே. நாலாயிரப்பனுவலில் 'கண்ணன் பாலக்கிரீடை' உள்ளது'

**இதழ்குவிபா**

'இதழ் அகல்பா' தோன்றியபின், ஏன், 'இதழ்குவிபா' இருத்தல் கூடாது? என்னும் எண்ணத்தால் பிறந்தது 'இதழ்குவி பா' ஆகும்.

இதழொட்டிப் பிறக்கும் எழுத்துகளாலேயே பாடல் அமைவது இஃதாகும். இப்பாவகையில் வரும் எழுத்துகள் இதழ் ஒட்டிப் பிறப்பதால் இப்பாவினை 'ஒட்டகம்' எனப் பெயர் சூட்டலாம். இதழொட்டாப்பாட்டு (நிரொட்டகம்) என்னும் பெயரைக் கருதுக. 'ஒட்டகம்' என்பதன் பெயர்ப் பொருள்தான் என்ன? எத்துணை நாள்களோ ஒட்டிப் போய்ப் பட்டினி கிடக்கும் கரணியத்தாலேதான் ஒட்டகப் பெயர் வந்ததறிக. அகம் — இடம்; இவண் வயிறு.

இவ்வகைப் பாடல்களை எழுதியவர் தண்டபாணி அடிகளார் ஆவார்.

### இதழகல் அந்தாதி

இதழொட்டா எழுத்துகளையே அமைத்து அந்தாதித் (முடிமுதல்) தொடைபடப் பாடப்படுவது இதழகல் அந்தாதியாம்.

உ ஊ ஒ ஓ ஔ என்னும் உயிரெழுத்துகளும் இவற்றின் வரிசையும் ப், வ், ம் என்னும் ஒற்றும் இவற்றின் உயிர் மெய்யெழுத்துகளும் இதழொட்டிப் பிறப்பன. ஆகலின் இவற்றை விலக்கிப் பாடுவதே 'இதழகல்' பாவென்க.

திருவரங்க இதழகல் அந்தாதி, திருநெல்வேலி இதழகல் அந்தாதி என்பவை தண்டபாணி அடிகளால் பாடப் பட்டவை. முன்னதில் 32 பாடல்களும், பின்னதில் 33 பாடல்களும் உள.

இதழகல்பா 'நிரொட்டகம்' என வடமொழியில் வழங்கப்படும்.

இதழகல் அமைவுடையதாய், ஓரடியே மடங்கி நாலடி யாய் அடிதோறும் வேறு வேறு பொருள்தருவதாய் முடி முதல் தொடைபட அமைவது 'ஏகத்தாள் இதழகலந்தாதி' எனப்படும்.

இதழகல் எழுத்துகளையுடையதாய், ஒருதொடை அமைவுடையதாய்ப் பாடப்பட்ட ஒரு நூல் ஒரு தொடைச் செய்யுள் நிரோட்டகக் குகனந்தாதி என்பதாம். இதனையும் அவ்வடிகளே அருளினார். இந்நூலில் 102 படல்கள் உள.

'ஏகபாத நூற்றந்தாதி' பார்க்க.

**இன்பமடல்**

மடல் காண்க.

**இன்னிசைத் தொகை**

இன்னிசை வெண்பா எழுபதேனும் தொண்ணூறேனும் தொடுத்துப் பாடின் அஃது இன்னிசைத் தொகை எனப்பெறும்.

" தொண்ணூ றேனும் எழுப தேனும்
இன்னிசை தொடுப்பின் இன்னிசைத் தொகையே."

—(பன்னிரு. 288).

" இனிதின் ஓசை மேம்பா டுடைமையின்
இன்னிசைஎன்பர் தொன்னெறிப் புலவர்."

—(பன்னிரு. குறிப்பு. பக். 42).

**உத்தியாபனம் (நிறைவு)**

கோடைப்பொழுதில் தலைவன் தலைவியைக் காண்பதற்குச் சோலைக்கண் சேறலும், அப்பெண்ணாள் தலைவன் வருகையறிந்து அன்பால் உருகிப் புன்முறுவலுடன் புறத்தே நிற்றலும், தூதுவிடுத்து அவளை அடைந்து இன்புறுதலும் கூறுதல் "உத்தியா பனம்" என்னும் இலக்கியச்செய்தி ஆம்.

" வேனிற் பொழுதிலிறை மின்கன்னி ஆசையால்
தான்சோலை மேவுறஅத் தையலறிந் — தூனுருக
நின்றுநகை யாத்தூது நெட்டிப்பின் னேமருவல்
பன்னுகாதல் உத்யா பனம்."

—(பிரபந்தத்திரட்டு 42).

**உந்தி பறத்தல்**

உந்து, உந்துதல், உந்துவண்டி, உந்துபந்து இன்ன வெல்லாம் இக்கால ஆட்சிச் சொற்கள். இவற்றின் மூலவைப்பு 'உந்தி பறத்தல்' 'உந்தீபற' என்பவற்றில் உள.

பெரியாழ்வார் பாடிய உந்தி பறத்தல் 'பாடிப்பற' என்னும் முடிவுடையது. ஆயின், 'உந்தி பறந்த ஒளியிழை யார்கள் சொல்' எனவரும் பதிக இறுதிப்பாடல் உந்தி பறத் தலைத் தருவதுடன், ஒளியிழையார் உரிமையையும் தரு கின்றது. கலித்தாழிசையால் அமைந்தது ஆழ்வார் பாடல்.

> "பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் வகைசெய்து
> நஞ்சுமிழ் நாகம் கிடந்தநற் பொய்கைபுக்(கு)
> அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட் டருள்செய்த
> அஞ்சன வண்ணனைப் பாடிப்பற.
> —அசாதைதன் சிங்கத்தைப் பாடிப்பற."

இனி வேறோரு வகைக்கலித் தாழிசையால் வரு கின்றது மணிமொழியாரின் திருவுந்தியார். அதில் ஒரு பாடல் :

> "வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
> உளைந்தன முப்புரம் உந்தீபற
> ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற."

'உந்திபற' ஏன் 'உந்தீபற' என்றானது 'காவிரி' இசைக்காகக் 'காவேரி' யாகவில்லையா?

இவ்வுந்திப் பனுவல் உந்தி வளர்ந்ததால் சோமசுந்தர நாயகரின் சித்தாந்த உந்தியார் நூற்று மூன்று பாடல்களை யுடையதாயிற்று.

**உயிர் வருக்கமாலை (உயிரினமாலை)**

அகரமுதல் அஃகோனம் ஈறாக அமைந்துள்ள பதின்மூன்றெழுத்துகளுக்கும் ஒவ்வொரு பாடலாக அமைந்த சிறுநூல் உயிர்வருக்க மாலையாகும்.

இவ்வகையில் எழுந்த ஒருநூல் ''மதுரை மீனாட்சியம்மை உயிர்வருக்கமாலை'' என்பதாம்.

வருக்கக்கோவை, வருக்கமாலை என்பவற்றில் வரும் எழுத்துகளில் உயிர் வருக்கத்தை மட்டும் வாங்கிக்கொண்டு அமைவதால் 'உயிர் வருக்கமாலை' என்னும் பெயர் பெற்றது.

மீனாட்சியம்மை உயிர்வருக்கமாலையின் ஒவ்வொரு பாடல் முடிவும், ''வருமடியார் குறைதீர வரமருளும் அதிகார மதுரை மீனாட்சி யுமையே'' என முடிகின்றது. பதினான்கு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய வகையான் அமைந்தது இந்நூல்

## உலா

இளம் பருவத் தலைமகன் ஒருவனைக் குலம் குடிப் பிறப்பு மங்கலவழிமுறை இவற்றின் இன்னான் என்பது தோன்றக் கூறி, அவன் மாதரார் நெருங்கிய பெருவீதியில் உலாவரப் பேதை முதலிய ஏழு பருவப் பெண்களும் கண்டு தொழுததாக நேரிசைக் கலி வெண்பாவாற் கூறுவது உலா ஆகும். **உலாப்புறம்** என்பதும் இது.

''முடிபுனைந்த மன்னவருமாய் இருபத்தொரு பிராயத்துக்கு உட்பட்டவர்களுக்கும் தேவர்களுக்கும் உலாப் பாடலாம்; அல்லார்களுக்கு ஆகாது'' என்பார் நவநீதப் பாட்டியல் உரைகாரர்.

> '' குழமகனைக்கலி வெண்பாக் கொண்டு
> விழைதொல் குடிமுதல் விளங்க உரைத்தாங்
> கிழைபுனை நல்லார் இவர்மணி மறுகின்
> மற்றவன் பவனி வரஏழ் பருவம்
> உற்ற மானார் தொழப் போந்த துலாவாம்.''

—(இலக். பாட். 98)

> '' பாட்டுடைத் தலைவன் உலாப்புற இயற்கையும்
> ஒத்த காமத் திளையாள் வேட்கையும்
> கலிஒலி தழுவிய வெள்ளடி இயலால்
> திரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே.''

—(பொய்கையார்) (பன்னிரு. 216

" பேதைமுதலா எழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக்குரியான் ஒருவனைக்
காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே."
—(பன்னிரு. 217)

எழுபருவ மாதர்க்கும் உரிய பெயரையும் அவர்களின் ஆண்டளவையும்:

" ஐந்து முதலே ழாண்டும் பேதை."
" எட்டு முதனான் காண்டும் பெதும்பை."
" ஆறிரண் டொன்றே ஆகும் மங்கை."
" பதினான் காதிபத் தொன்பான் காறும்."
" எதிர்தரு மடந்தை மேலாறும் அரிவை."
" ஆறு தலையிட்ட இருபதின் மேலோர்
ஆறுந் தெரிவை எண்ணைந்து பேரிளம்
பெண்ணென்
றோரும் பருவத் தோர்க்குரைத் தனரே."
—(இலக். பாட். 88-103)

இவ்வியாண்டுகளைப் பிறவாறுங் கூறுப:

" பேதைக் கியாண்டே ஐந்துமுதல் எட்டே."
" பெதும்பைக் கியாண்டே ஒன்பதும் பத்தும்."
" மங்கைக் கியாண்டே பதினொன்று முதலாத்
திரண்ட பதினா லளவும் சாற்றும்."
" மடந்தைக் கியாண்டே பதினைந்து முதலாத்
திடம்படும் ஒன்பதிற் றிரட்டி செப்பும்."
" அரிவைக் கியாண்டே அறுநான் கென்ப."
தெரிவைக் கியாண்டே இருபத்தொன்பது."
" ஈரைந் திருநான் கிரட்டி கொண்டது
பேரிளம் பெண்டுக்கியல்பென மொழிப."
—(பொய்கையார் பன்னிரு 221-27)

"பேதை முதலெழு வோர்க்குப் பிராயங்கள்
பேசிடுங்கால்
ஆதியில் ஐந்தேழ் பதினொன்று பன்மூன்று
பத்தொன்பதே
மீதிரு பத்தைந்து முப்பத்தொன் றாதிய நாற்பதென
ஓதுவர் தொன்னூற் பருனித ரெல்லாம் உணர்ந்து
கொண்டே."

—(நவநீத. 46)

இனிப் பெண்பாலார்க்குக் காட்டியவாறே ஆண் பாலார்க்கும் பருவமும் ஆண்டும் காட்டினார் உளர். அவர் காட்டுமாறு:

"பாலன் யாண்டே ஏழெனமொழிப."
"மீளி யாண்டே பத்தியை காறும்."
"மறவோன் யாண்டே பதினான் காகும்."
"திறலோன் யாண்டே பதினைந் தாகும்."
"பதினா றெல்லை காளைக் கியாண்டே."
"அத்திறமிறந்த முப்பதின் காறும்
விடலைக் காகும்; மிகினே முதுமகன்."

—(அவிநயனார். பன்னிரு. 229-234)

ஆடவர்க்கு உலாப்புறம் கொள்ளுதற்குரிய உய ரெல்லை நாற்பத்தெட்டுயாண்டளவு என்றும் குறித் தாருளர்.

"நீடிய நாற்பத் தெட்டின் அளவும்
ஆடவர்க் குலாப்புறம் உரித்தென மொழிப."

—(பன்னிரு. 235)

**உலாமடல்**

கனவில் காரிகை ஒருத்தியைக் கண்டு களித்த ஒருவன் அவளை அடைவது கருதி 'மடலூர்வேன்' என்று கலிவெண்பாவால் கூறுதல் உலா மடலாகும்.

"கனவில் ஒருத்தியைக் கண்டு புணர்ந்தோன்
நனவில் அவள்பொருட்டாக நானே
ஊர்வேன் மடலென் றுரைப்ப துலாமடல்."
—(இலக்கணப் பாட்டியல் 97)

"கனவில் ஒருத்தியைக் கண்டு கலவி
இன்ப நுகர்ந்தோன் விழித்த பின்னவள்
பொருட்டு மடலூர்வேன் என்பது கலிவெண்
பாவான் முடிப்ப துலாமட லாகும்."
— (முத்துவீ. 1086)

உலா என்னும் பனுவலும், மடல் என்னும் பனுவலும், ஒருசார் இயைந்த தன்மையதாகப் பெறுதலின் 'உலாமடல்' எனப் பெற்றது. 'மடல் உலா' என மாற்றியியைப்பின் 'மடலூர்தல்' என்னும் பொருளே பட்டமையுமாகலின் 'உலாமடல்' என்றாராம். 'மடல்' காண்க.

**உலாவணி**

இசுலாமிய சமயச் சார்பால் தமிழ் இலக்கிய வகை பெற்ற பெருக்கத்துள் ஒன்று 'உலாவணி'யாகும். இதனை 'இலாவணி' என்பது பெருவழக்கு.

உலாவணி பாடுதலில் தேர்ச்சி மிக்க புலவராகத் திகழ்ந்தவர் உறையூர் சித்திரகவி சையத் இமாம் பாவலர் ஆவார்.

"உலாவணி என்ற சொல்தான் தற்போது இலாவணியாக மாறி வழக்கில் இருந்து வருகிறது. இல் + ஆ + அணி எனப் பிரித்துக் காட்டிப் பொருள் கூறுவாரும் உண்டு. உள்ளமெனும் வீட்டில் குடிபுகுந்த ஆத்மாவுக்கு அழகு சேர்ப்பது என்பதாகக் கருதுவார்கள்" என்பார் "மதனீ" (இசுலாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைக்கோவை பக். 309).

'எரிந்த கட்சி' 'எரியாத கட்சி' என ஏசலிப்பும் காம னெரிப்புப் பற்றியும் உலாவணி உண்டு என்பதை

விளக்குவதொரு நூல். அஃது, 'எரியாத கட்சி சிங்காரக் கேள்வி லாவணி' என்பது. அதனை இயற்றியவர் பட்டமும் பெயரும் 'தமிழ் நாடெங்கும் புகழ்பெற்ற காமதகனக் கண்டனக் கட்சிக் கவிக்கேசரி தஞ்சை முத்தமிழ் வித்துவ பாப்புதாசர்'' என்பது.

மன்மதன் பண்டிகைக் கேள்வி:

'' காமன் பண்டிகை என்று வருடந் தோறும்
காணும் மாசிப்பிறை கண்டவுடனே நீங்கள்
ஆமணக்கு பேய்க்கரும்புத்தட்டை கொண்டு
அருமையுடன் நட்டுவைக்கோற் பிரியைச் சுற்றிப்
பாமரர்கள் ராட்டி ஒன்றைத் தொங்கவிட்டுப்
பங்குனி மாதப் பருவமட்டும் அங்கே
நேமமதாய்க் கடலை மொச்சை தேங்காயிட்டு
நெறியாகக் கொளுத்தச் சொன்ன புராணம்
காட்டே.''

உலகில் மன்மதன் எத்தனை என்று ஒரு கேள்வியைப் போடுகின்றது அது.

'' மால்மகன் மதனென்குதொரு புராணம்
மலர்வேதன் மகனென்கு தொரு புராணம்
பால்வண்ணன் மகனென்கு தொருபுராணம்
பகர்தர்மன் மகனென்கு தொருபுராணம்
சால்வண்ணன் மகனென்கு தொருபுராணம்
சங்கல்பன் மகனென்கு தொருபுராணம்
வேள்மதனித்தனை பேரை நூல் சொன்னாலே
வெந்தமதன் எந்தமதன் விளம்புவீரே!''

எரிந்த கட்சியைப் பாடிக் கெட்டழிந்தவர்களைக் கூறி, ''பாப்புதாசன் அறைவதைக் கேட்டு வாயை மூடு மூடு'' எனப் புத்தகம் மூடுகின்றது.

இலாவணி வெண்பா, விருத்தம், இசைப் பாடல்களாக இயல்வதையும் தருக்க நெறியில் நடப்பதையும் இந்நூலால் அறியலாம்.

**உழத்திப்பாட்டு**

உழவர் புகழ் உலகறிந்தது; 'உழவு' என்றோர் அதிகாரம் வள்ளுவ வாய்மொழியாக இலங்குவதும், ஏர் எழுபது, திருக்கைவழக்கம் என்னும் நூல்களைக் கம்பர் இயற்றியதும் உழவின் பெருமையை விளக்குவனவாம்.

'ஏரோர் களவழி' என்னும் தொல்காப்பியச் செய்தியும், 'ஏர்மங்கலம்' பாடும் இளங்கோவடிகள் இசைச்செய்தியும் எண்ணத்தக்கன.

உழத்திப்பாட்டு என்னும் நூல்வகையைப் பன்னிரு பாட்டியல் (164) தருகின்றது. அதன் இலக்கணத்தை,

" புரவலற் கூறி அவன்வா ழியவென்
றகல்வயற் றொழிலை ஒருமை உணர்ந்தனள்
எனவரும் ஈரைந் துழத்திப் பாட்டே."

என்கின்றது.

பத்துப்பாட்டே அளவாகவும், புரவலர் புகழ் கூறி வாழ்த்துவதும் உழுதொழில் திறம் கூறுவதுமே பொருளாகவும் இவ்வுழத்திப்பாட்டு சுட்டப்பெறுகின்றது. உழத்திப் பாட்டின் வளர்ச்சியே பள்ளு என்னும் நூலாம்.

'பள்ளு' பார்க்க.

**உழிஞை மாலை**

பகைவர் ஊர்ப்புறஞ் சூழ, உழிஞைப் பூமாலை சூடிப் படைவளைப்பதைக் கூறுவது உழிஞை மாலையாகும்.

" மாற்றார் ஊர்ப்புறம் வளைதர உழிஞை
வனைந்து காலாள் வளைப்பது கூறல்
உழிஞை மாலையாம் உணருங் காலே."

—(முத்துவீ. 1076)

" உழிஞை மாலையே ஒன்னலர் ஊர்ப்புறம்
ஒருங்குடன் வளைக்க உழிஞைத்தார் சூடிப்
படைசெலும் பண்பைப் பகர்தல் என்ப."

—(பிரபந்த தீபம். 13)

முப்பது பாடல்களையுடையது உழிஞைமாலை எனப் பிரபந்த மரபியல் கூறும்.

“ முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற் றாகும் என்ப.”

என வரும் தொல்காப்பியம் (1011) இவண் கருதத்தகும்.

**உற்பவ மாலை (பிறப்பு மாலை)**

திருமால் பிறப்புப் பத்தினையும் பத்து அகவல் விருத்தத்தால் பாடுவது உற்பவ மாலை எனப்பெறும்.

“ அரிபிறப் பொருபதும் அகவல் விருத்தத்
துரிதிற் புகறல் உற்பவ மாலை.”
—(இலக். பா. 108)

உற்பவமாலை **‘அரிபிறப்பு’** எனவும் வழங்கப்பெறும்

“ சேலே ஆமை ஏனம் சிங்கம்
கோல வாமனன் மூவகை இராமர்
கரியவன் கற்கி எனவரு கடவுளர்
புரிதரு தோற்றம் தெரிதரப் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவனைக் காக்க வேண்டி
இனமொழி நாட்டி அகவல் விருத்தம்
ஒருப தியற்றுதல் ஆழியோன் பிறப்பே.”
—(பன்னிரு. 298)

உற்பவமாலையினைத் ‘தசப்பிராதுற்பவம்’ என்பார் நவநீதப் பாட்டியலுடையார்.

“ குறைவில்லது தசங் கூறிற் றசப்பிரா துற்பவமே.”
—(நவநீத. 52)

என்பது அது.

**ஊசல்**

ஊசலாடுவதாகப் பாடப்பெறும் ஒருவகைச் சிறுநூல் ஊசலாயிற்று.

சிலப்பதிகாரத்தில் ‘ஊசல்வரி’ என வரிப்பா உண்டு.

“ ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றார்து தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்.”

என்பது சிலம்பிலொரு பாட்டு.

பெண்பால் பிள்ளைத் தமிழ் நூல்களில், ‘ஊசல்’ பத்தில் ஒரு பங்கைப் பற்றிக் கொண்டது. பின்னே, ஊசல் தனிநூல் உருக்கொண்டது.

கோயில்களில் திரு ஊசல், திருப்பொன்னூசல் என விழாக்கள் எடுப்பது வழக்கு. இறைமையில் தோய்ந்த அடியார்கள் இவ்வகையில் பாடி மகிழ்ந்துள்ளனர். மணிமொழிப் பெருந்தகை பாடியது திருப்பொன்னூசல்.

திருவரன்குளத்தீசர் திருவூசல் என்பது ஆவணப்பெரும் புலவர் வேலாயுதனார் இயற்றியது. அதில் முதற்பாட்டு:

“ அருளாட அருளம்மை அப்ப ராட
அருள்நிறைந்த பெரியோர்கள் களிப்புற் றாடப்
பொருளாடப் புவனமெலாம் செழித்தே ஆடப்
புண்ணியமும் புகழறமும் தழைத்தே ஆடத்
தெருளாடு ஞானமெலாம் கதிப்புற் றாடச்
செந்தமிழும் பாவலருஞ் சிறப்புற் றாட
மருளாடு மக்கள்மனம் மகிழ்ந்தே ஆட
மாட்சிமிகும் அரன்குளத்தீர் ஆடீர் ஊசல்.”

இவ்வூசல் 36 பாடல்களையுடையது.

“ அகவல் விருத்தம் கலித்தாழிசையால்
பொலிதரும் கிளையொடும் புகலுவ தூசல்.”

என்று ஊசல் இலக்கணம் கூறும் இலக்கணவிளக்கப் பாட்டியல் (85).

ஊசல் கலித்தாழிசையால் வரும் என்பார் நவநீதப் பாட்டியலார் (50).

" அகவல் விருத்தத் தானா குதல்கலித்
தாழிசை யானா னாகுதல் சுற்றத்
தோடும் பொலிக ஆடீர் ஊசல்
ஆடாமோ ஊசல் ஊசலாகும்."

என்பது முத்துவீரியம் (1122).

**ஊடல்மாலை**

ஊடுதல், ஊடுதல் நிமித்தம், ஊடல் நீக்கம் ஆகியவை பற்றிய இலக்கியம் ஊடல் மாலை என்பது.

ஊடல் மாலையை நவநீதப் பாட்டியல் சுட்டும் (66). அது.

" தொழிலால் தொக்கன ஊசல், ஊடன் மாலை, கூடன் மாலை போல்வன."

என்பது.

திருக்குறளிலுள்ள புணர்ச்சி விதும்பல், நெஞ்சோடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை என்பவற்றைக் காண்க.

**ஊர்நேரிசை**

பாட்டுடைத் தலைவன் பெயரினைச் சார, நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுதல் ஊர்நேரிசை எனப்பெறும்.

" இன்னிசை போல இறைவன் பெயரூர்
தன்னின் இயல்வது தானே ரிசையே."

—(இலக். பாட். 70)

" ஊரைச் சார உரைப்பதூர் நேரிசை."

—(முத்துவீ. 1095)

**ஊர்வெண்பா**

பத்து நேரிசை வெண்பாக்களால் ஊரின் சீர் உரைப்பது ஊர் வெண்பா எனப்பெறும். (நவநீத. 41)

"வெண்பா வாற்சிறப் பித்தூர் ஒருபான்
பாவிரித் துரைப்பதூர் வெண்பா ஆகும்."
—(முத்துவீ. 1096)

**ஊரின்னிசை**

பாட்டுடைத் தலைவன் ஊரினைச் சார இன்னிசை வெண்பாவினால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுதல் ஊரின்னிசை எனப்பெறும்.

"இறைவன் பெயரூ ரினையின் னிசையான்
முறையிற் றொண்ணூ றெழுபா னைம்பான்
அறையின் அப்பெயர் ஆகும் என்ப."
—(இலக். பாட். 65)

"பாட்டுடைத் தலைமகன் ஊரைச் சார
இன்னிசை வெண்பா எழுபான் இருபஃ
தேனும் எழுபா னேனும் ஐம்பஃ
தேனும் இயம்புவ தூரின் னிசையே."
—(முத்துவீ. 1093)

**எச்சரிக்கை**

அரசன் திருவோலக்கத்திற்கு வருங்கால் அல்லது உலா வருங்கால் அவ்வரசனை முன்னிலையாக்கி, அவையில் உள்ளார்க்கு அவ்வரசன் வருகையை எச்சரித்துப் பாடுவது எச்சரிக்கை என்னும் இலக்கிய வகையாகும். எச்சரிக்கை= முன்னறிவித்தல்.

அரசன் திருவோலக்கத்தில் வீற்றிருக்கும்போது அவ்வரசன் தன்மை இத்தகைத்து என அவையில் உள்ளார்க்கு எச்சரித்தலும் இவ்வெச்சரிக்கையேயாம்.

அரசனை அன்றி, இறைவன் திருவருகை, திருவோலக்கம் ஆகியவற்றை எச்சரித்துப் பாடுவதும் உண்டு. திருப்போரூர் முருகன் எச்சரிக்கை என்பது இவ்வகையைச் சார்ந்தது.

“பிறைசூடிய சடையானருள் பிள்ளைப்பெரு மாளே
மறையோர்நிறை போரூர்வரு மன்னாளச் சரிக்கை.”

‘பராக்கு’ எனக் கட்டியங்கூறுவதையும், ‘அமைதி’ என முறை மன்றங்களில் கூறும் வழக்குண்மையையும் கருதுக.

**எட்டெட்டந்தாதி**

ஒருவகை யாப்பில் எட்டுப் பாடலாக எட்டுவகை யாப்பில் பாடப்பட்ட 64 பாடல்களைக் கொண்ட நூல் எட்டெட்டந்தாதி. இவ்வகையில் அமைந்தது காஞ்சி காமாட்சி எட்டெட்டந்தாதியாகும். (ஓலைச்சுவடி நூலகம் 240, 241).

**எண்கூற்றிருக்கை**

எழுகூற்றிருக்கையின் வளர்ச்சி எண்கூற்றிருக்கையாம். இவ்வகைப் பாடல் அருளியவர் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளாவார்.

ஏழோடு அமைந்த எழுகூற்றிருக்கை, அதன்மேல் எட்டாக உயர்ந்து நிற்பதே எண்கூற்றிருக்கையாம்.

**எண்சீர் எண்பது**

எண்சீர் அகவல் விருத்தம் எண்பது அமையப் பாடப்படுவதொரு நூல் எண்சீர் எண்பதாம்.

தெய்வத் திருவாயிரத்தில் வரும் ‘எண்சீர் எண்பது’ எடுத்துக்காட்டாம். இந்நூல் தண்டபாணி அடிகள் அருளியது.

**எண்செய்யுள்**

பாட்டுடைத் தலைவனது ஊரினையும், பெயரினையும் முதல் ஆயிரம் பா அளவும் பாடி, அவ்வெண்ணாற் பெயர் தருவது எண்செய்யுளாம்.

“ஊரையும் பேரையும் உவந்தெண் ணாலே
சீரிதிற் பாடல் எண்செயு ளாகும்.”

—(இலக். பாட். 88)

"பாரியது பாட்டு, 'கபிலரது பாட்டு' எனச் செய்தோன் பெயர் பற்றி வருவனவும் கொள்க" என்பார் இலக்கண விளக்கப் பாட்டியலார்.

"பாட்டுடைத் தலைவன் ஊரும் பெயரும்
பத்துமுதல் ஆயிரம் அளவும் பாடி
எண்ணாற் பெயர்பெறல் எண்செய்யுளாகும்.
—(முத்துவீ. 1080)

**எண்ணெழுத்து மாலை**

முதற்பாடல் எண்முறையிலும் அடுத்த பாடல் எழுத்து முறையிலும் அமைந்து தொடர்வதால் எண்ணெழுத்து மாலை என்னும் பெயர் பெற்றது.

இளம்பாவலர் வேங்கடராமனாரும், அருட்பாவலர் சேதுராமனாரும் முறையே எண்ணும் எழுத்தும் பாட இரட்டையர் யாத்த நூலாய் இலங்குவது "மதுரைப் பரிபூரண விநாயகர் எண்ணெழுத்துமாலை" என்பதாம். இந்நூல் கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் நூற்று எட்டனைக் கொண்டுள்ளது.

எண்கள் ஒன்று முதல் பத்துவரை ஏறி அதன்பின் இருபது முப்பது என நூறு வரைக்கும், இருநூறு முந்நூறு என ஆயிரம் வரைக்கும், ஈராயிரம், மூவாயிரம் எனப் பத்தாயிரம் வரைக்கும், இலக்கம், பத்திலக்கம், கோடி என ஏறி இலக்கம், ஆயிரம், நூறு, பத்து வரைக்கும் ஒன்பது முதல் ஒன்றுவரைக்கும் இறங்கியும் 'அனந்தாய்' நிறைகின்றது.

எழுத்துகள் அகரமுதல் அஃகேனம் முடிய முறையாகத் தொடர்ந்து, பின்னர் க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன என்னும் உயிர் மெய் வரிசையுள் ங, ண, ழ, ள, ற, ன என்பவை ஒன்றும், வ இரண்டும், எஞ்சியவை மூன்றும் ஆகிய எழுத்துகளை ஏற்றாங்குக் கொண்டுள்ளது.

இம்மாலையின் அருமைப்பாடு பாராட்டத் தக்கது. எனினும், டடம், டவுள், டக்கை, டமருகம், டவண்டை, டிண்டிமம், டாகினி, ராசினி, ரீங்காரம், லாகினி, லவணம், லாசகன், லுத்தன் என வரும் ஆட்சிகள் ஏற்றத்தக்கன அல்ல.

"ழகரந் தனக்கே உரித்தா வுடைத்தமிழ்."
"ளகர மெய் சேர்ந்ள வாரண மாப்பிள்ளையாய்."
"றச்சேர் இடைஇலியும்பிலியும் அற்றவ."
"னவ்விரண் டாமெழுத் தாக்கொள் வசரக."

என்னும் ஆட்சிகள் அருமையிலும் அருமையாம்!

இலக்கிய வகையுள் இவ்வெண்ணெழுத்துமாலைக்கு முற்பட எழுந்தது "வைணவி எண்ணெழுத்துமாலை" யாம். அதனை இயற்றியவர், இவ்விரட்டையருள் இளவலாராம் அருட்கவியாரே.

**எழுகூற்றிருக்கை**

ஏழு அறையாகக் குறுமக்கள் (சிறுவர்) முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமையால் ஒன்று முதலாக ஏழு இறுதியாக முறையானே பாடுவது எழுகூற்றிருக்கையாகும்.

ஒன்று இரண்டு ஒன்று என்று வந்து பின் ஒன்று என்னும் எண் வந்து இரண்டு மூன்று என்று ஏறிப் பின்னர் இரண்டு ஒன்று இரண்டு மூன்று நான்கு என ஏறிக் கீழிறங்கி மீண்டும் ஏறி இவ்வாறு ஏழு என்னும் எண் வரையில் அமையும். இவ்வெழுகூற்றிருக்கையின் எண் முடிநிலை ஏழு வரைக்கும் சென்று ஒன்றில் அமைவதும் உண்டு. இருவகை எழுகூற்றிருக்கைக்கும் எடுத்துக்காட்டு யாருப்பங்கல விருத்தியுட் காண்க (96). தமிழ் ஞானசம்பந்தர் இயற்றிய திருவெழுகூற்றிருக்கையும், திருமங்கை மன்னர் இயற்றிய திருவெழுகூற்றிருக்கையும் காண்க.

"கோதில் ஏழறை ஆக்கிக் குறுமக்கள்
முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும்
பெற்றி யால்வழு வாமை ஒன்று
முதலாக ஏழீ றாய்முறை யானே
இயம்புவ தெழுகூற் றிருக்கை யாகும்."

—(முத்துவீ. 1123)

எழுகூற்றிருக்கைக்கோர் எடுத்துக்காட்டு:

"ஓர்ஒருபொருளாய், இரண்டாய் ஒன்றி
ஒன்றிரண்டின்றி மூவிரு நெறியோர்க்கு
ஒருமைகண்டிருமையின் மூவாநாற்பயன்
முத்தமிழ் இருங்கடலோடொருங்குதலும்,
ஒன்றுடன் இரண்டும் மூன்றும் நாலும்
கூடிய தொகைப்படு கோலங்கொளலும்,
ஐவர் ஒற்றென நாற்றிசைபரவ
மூவருந்தானாயிருப்பது மறைத்துஓர்
ஓரனிருஞ்சபைமூப்பினர் தம்முகம்
நால் ஐந்(து) இல் ஆறி யேற்றலும்,
ஐந்நாற்றோளின் மூன்றுலகெடுத்தோன்
இருகூ றாவிழ ஒருகணை ஏவலும்,
ஒருருள் இரதனை முக்கணன் நான்முகன்
ஐயர்கோன்முதலினர் அறியமறைத்தலும்,
ஏழெருதினையும் இளைப்பறப்பிணித்திட்(டு)
ஐம்பால்ஓதி அணங்கனாட்பெறலும்,
நாற்கால் மும்மதத்(து) இருமருப்பொருமா
உய்யக் கானத்து ஓடிச் சேறலும்,
மாமறை ஒலிசால் மணிமதிள் அரங்கக்
கோயில் நாப்பண் கொடும்பற்பேழ்வாய்
ஆயிரம் காட்டும் அரவப் பாயலின்
மேற்றுயில் குவியாவிழித்திருமாலே."

இவ் வெழுகூற்றிருக்கை திருவரங்கத் திருவாயிரத்துள்ளது-ஆசிரியர் தண்டபாணி அடிகள். இருக்கை அமைப்பு:

க

க உ க

க உ ங உ க

க உ ங ச ங உ க

க உ ங ச ரு ச ங உ க

க உ ங ச ரு சா ரு ச ங உ க

க உ ங ச ரு சா எ சா ரு ச ங உ க

இத் திருவரங்கத்திருவாயிரத்தில் வரும் எழுகூற்றிருக்கை ஒன்று, என்று தலைப்பெண் தந்து பின்னர் ஒன்று எனத் தொடர்கிறது. இது பிறர்பாடிய எழுகூற்றிருக்கையினும் புத்தமைப்பினதாம். எழுகூற்றிருக்கை அந்தாதித் தொடைபட வருவது 'எழுகூற்றந்தாதி'யாம். தண்டபாணி அடிகள் பாடிய சமயாதீத எழுகூற்றந்தாதி 87 பாடல்களையுடையது.

'எண்கூற்றிருக்கை,' 'ஒன்பான்கூற்றிருக்கை' என்பவற்றைப் பார்க்க.

## எழுபா எழுபது

ஏழுவகைச் சமயங்களுக்கும், ஏழுவகை யாப்பினால் பப்பத்துப் பாடலாக எழுபது பாடலால் அமைந்த நூல் 'எழுபா எழுபது' ஆகும்.

இந்நூலில் வரும் ஏழ்வகைச் சமயங்கள்: கதிரவம் (சௌரம்), சிவனியம் (சைவம்), உமையியம் (சாத்தேயம்), மாலியம் (வைணவம்), பிள்ளையாரியம் (காணாபத்தியம்), குமரனியம் (கௌமாரம்), பொது என்பனவாம்.

இவ்வெழுவகை வழிபாட்டுக்கென்றே ஏழுநாள்கள் அமைந்ததாகக் கொள்வார் தண்டபாணி அடிகள்: 'எழுபா எழுபஃது' என்பது அவ்வடிகளார் யாத்த ஒரு நூலாம்.

**ஏகபாதநூற்றந்தாதி (ஓரடி நூறு முடிமுதல்)**

ஓரடியே நான்கடியாக மடங்கி வர ஒவ்வோர் அடிக்கும், பொருள் வேறுபட்டு வருவது ஏகபாதமாம். இவ்வாறு ஏகபாதம், நூறுகொண்டு அந்தாதித் தொடைபெற வருவது **ஏகபாத நூற்றந்தாதி** எனப் பெயர் பெறும். பெரும்புலவர் **அரசஞ்சண்முகனாரால்** ஏகபாத நூற்றந்தாதி ஒன்று இயற்றப்பெற்றது. அதன் முதற் பாடற்கு மட்டும் நூறு பொருள் விரித்துக் கூறி உரையெழுதியுள்ளார். **ஆளுடைய பிள்ளையார்** திருப்பிரமபுரப்பதிகம் ஒன்றை ஏகபாதத்தியற்றி யுள்ளார். ஏகபாதம் - ஓரடி. ஏகபாதத்தை 'ஏகத்தாள்' என்பார் தண்டபாணி அடிகள்.

"அம்பா விகையத்தங் கோடலங் கஞ்சத்த னத்தனையே
அம்பா விகையத்தங் கோடலங் கஞ்சத்த னத்தனையே
அம்பா விகையத்தங் கோடலங் கஞ்சத்த னத்தனையே
அம்பா விகையத்தங் கோடலங் கஞ்சத்தனத்தனையே"

என்பது அரசஞ்சண்முகனார் பாடிய ஏகபாத நூற்றந்தாதி யின் முதற்பாடலாம், கடவுள் வாழ்த்து.

**ஏகாதசமாலை (பதினொருபா மாலை)**

அகவல்விருத்தம் பதினொன்றால் முடி முதல் தொடை அமைவுறப் பாடப்படுவது ஏகாதச மாலையாம்.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய 'திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை' இவ்வகைக்கு எடுத்துக் காட்டாம்.

**ஏசல்**

ஏசல் — பழித்தல்.

பள்ளுநூல்களில் இடம்பெறும் மூத்தாள் இளையாள் போராட்டுரை ஏசல் நூலாக உருக்கொண்டது எனலாம்.

ஒரு கணவனுக்கு அமைந்த மனைவியர் இருவர் ஏசலாக எழுந்த நூல், கணவன் மனைவியர் ஏசலாகவும், இருவர் வழிபடு தெய்வ ஏசலாகவும் வளர்ந்தது.

வீட்டுச் சண்டை, தெருச்சண்டை, சமயப்போர், கட்சிப்போர், நாட்டுப்போர் எனப் பெருகியும் பெருக்கியும் வரும் உலகியல், ஏசல் நூலின்மூலம் எனல் கருதத் தக்கதாம்.

'வள்ளி தெய்வயானை ஏசல்.'
பலவூர்களுக்கு உண்டு.

பாவநாசம் இறைவன் வயிராசநாயகருக்கும் உலகம்மை நாயகிக்கும் நடந்த ஏசலைக் கூறும் 'ஏசற்பிரபந்தத்தில்' ஒரு செய்தி:

"குற்றமொன்றும் செய்யாக் கொலைவேடர் கோன் விழியைப்
பற்றிப் பிடுங்கியது பாவமன்றோ?"

என்பது அம்மை 'குற்றச் சாற்று'

"கொற்றமுறும்,
மாவலியைக் காவலிடை வைத்துகந்து நன்றி கொன்ற
பாவமெவர் செய்வார் பணிமொழியே?"

என்பது ஐயன் 'மாற்றுச் சாற்று.'

ஏசியவர் ஏசிக்கொண்டே இருப்பின் என்னாம்?

"ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்."

—(திருக்குறள். 1330)

என்பதுபோல், இவ்வேசலும் இறுதியில் 'இருமையிலா ஒருமை' எய்துதலோடு நிறைவுறும்.

"நீரும் குளிர்ச்சியும்போல் நீங்காக் குணகுணியாய்ச்
சீரொன்றும் சத்தி சிவமாகி."

விளங்கும் காட்சியைக் கூறுகிறது பாவநாசம் ஏசற் பிரபந்தம்.

'கலிவெண்பா'வினால் ஏசல் நூல் இயலும். அகவல் நடையிடுவதும் உண்டு.

### ஏற்றப்பாட்டு

'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை' என்பது பழமொழி. 'மூங்கில் இலைமேலே' எனத்தொடங்கும் ஏற்றப்பாட்டை முழுதுமறிவதற்காகக் கல்வியில் பெரிய வரையே காக்க வைத்த கதையே ஏற்றப்பாட்டின் ஏற்றம் கூறும்.

ஏ — உயர்வு; ஏன், ஏணி, ஏர், ஏற்றம், ஏறு எல்லாம் உயர்வுப் பொருள். ஏறி நடையிடுதலாலேயே ஆழ்கிணற்று நீர், மேன் மட்டப்பொருளாகின்றது. ஏறி, ஏறுநடையிட அமைந்த பொறி ஏற்றம் ஆயிற்று. ஏணி ஏற்றம், மலை யேற்றம், ஏற்ற இறக்கம் அறியாதவையா?

ஏற்றம் பழைமைப் பொறி. ஆயின் ஏற்றப்பாட்டு என்னும் தனிப்பனுவலாட்சி பிற்பட்டதே. மருதவளங் கூறுங்கால் இடம்பெற்ற ஏற்றச் சிறப்பு, பின்னே வளர்ந்த நிலை இது.

'வெற்றிலைக் கொடிக்கால்' என்றால் ஏற்றம்தான்! ஏற்றப் பாடல்தான்! கூட்டுறவால் குடிசைகள் குலாவும் நிலைக்களம், ஏற்றமிறைத்தல் எனலாம்.

வேலையை விளையாட்டாக்கும் ஏற்றம், இசைக்கும், கணக்குக்கும் பத்திமைக்கும், புனைவுக்கும் எல்லாம் இட மாதல் பாராட்டுக்குரிய நிலை.

ஞானக்குறவஞ்சி பாடி ஞானக்கும்மி ஆடும் சித்தர், ஞான ஏற்றமும் ஏறுகிறாரே!

"பிள்ளையாரும் வாரி
பிள்ளையாரு மங்கே
பெருத்தமூலா தாரம்
சிறுத்தஇதழ் நாலாம்."

பாடல் தொடர்கிறது. இரண்டுடனே வாரி, மூன்றுடனே வாரி, நாற்பதியால் எட்டு என எண்ணிக்கையும் போடு

கிறது. ''இராமயோகி தந்த இராசயோகி சேடன்'' எனப் பாட்டாளி முத்திரையுடன் முடிகின்றது. மோனை இயைபுடைய குறளடியாக நடையிடுகின்றது இவ்வேற்றப் பாட்டு; குசேலர் ஏற்றப்பாட்டு 1500 அடிகளால் இயல்கின்றது! ஏற்றமில்லையா!

**ஐந்திணைச் செய்யுள்**

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடலாகிய ஐவகை ஒழுக்கங்களையும் விளக்கும் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்து திணைகளையும் தெரிந்து கூறுதல் ஐந்திணைச் செய்யுளாகும்.

> '' உரிப்பொருள் தோன்ற ஓரைந்திணையும்
> தெரிப்ப தைந்திணைச் செய்யுளாகும். ''
>
> —(இலக். பாட். 89)

> '' புணர்தல் முதலிய ஐந்துரிப் பொருளும்
> அணிபெறக் குறிஞ்சி முதலிய ஐந்திணை
> இணையும் இயம்புவ தைந்திணைப் பாவே.
>
> —(முத்துவீ. 1043)

**ஐம்படை விருத்தம் (ஐம்படைப்பா)**

சக்கரம், வில், வாள், சங்கு, தண்டு ஆகிய ஐம்படைகளையும் அகவல் விருத்தத்தால் பாடுவது ஐம்படை விருத்தம் எனப்பெறும். திருமால் காக்க எனும் பொருட்டாகக் குழந்தைகளுக்கு அணிவிக்கும் ஐம்படைகள் இவை என்க.

> '' சக்கரம் தனுவாள் சங்கொடு தண்டினை
> ஐம்படை அகவல் விருத்தமாகும். ''
>
> —(பன்னிரு. 291)

திருவரங்கத் திருவாயிரத்திலுள்ள 'ஆயுத பஞ்சகம்' இவ் வைம்படை விருத்தமாம்.

**ஒருதிணைமாலை**

ஒரு திணையில், ஒரே துறை குறித்த பாடல்களால் அமைந்த நூல் ஒருதிணைமாலை எனப்பெறும்.

'திருமருங்கை ஒருதிணைமாலை' என்பது இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இது, மருத்துவாழ்மலை (மருங்கூர்) முருகனைக் குறித்துக் குறிஞ்சித் திணையில் 'குறைநயத்தல்' என்னும் துறையில் பாடப்பெற்ற 108 பாடல்களையுடையதொரு நூலாகும்.

இனி ஒரோஒருதுறையைப் பற்றிக் கட்டளைக் கலித் துறையால் பாடப் பெறுவது ஒருதுறைக்கோவை எனப் பெறும். 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் ஒருதுறையைப் பற்றிப் பல புலவர்கள், பல புரவலர்கள் மேல் யாத்த நூல்கள் உண்டு. அமுத கவிராயர் சேதுபதிமேல் இயற்றிய ஒருதுறைக்கோவை 400 பாடல்களையுடையது. 'ஒருதுறைக் கோவை' காண்க.

**ஒருதுறைக்கோவை**

அகத்துறையுள் ஒரோஒருதுறையினை எடுத்துக் கொண்டு பாடுவது ஒரு துறைக்கோவை எனப்பெறும். இக்கோவை கட்டளைக்கலித்துறையால் வரும். 'நாணிக் கண் புதைத்தல்' என்னும் ஒரு துறைக்கு நானூறு பாடல்கள் பாடினார் **அமிர்தகவிராயர்** என்பவர். அது 'நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒருதுறைக்கோவை' என்னும் பெயரால் வழங்கப்பெறுகிறது. அதே துறையில் அதே அளவில் இராசராசேசுவர சேதுபதி ஒருதுறைக் கோவையும் உண்டு. அது பெரும்புலவர் இரா. இராகவரால் இயற்றப் பட்டது. நூறு பாடல்களால் அமைந்த ஒருதுறைக் கோவை பல.

**ஒருபது கூற்றிருக்கை**

ஒன்பது கூற்றிருக்கையின் மேல் வளர்ச்சியே இந் நூலாம். இவ்வகையும் பாடியவர் எண் கூற்றிருக்கை,

ஒன்பது கூற்றிருக்கை என்பவற்றை அருளிய தண்டபாணி அடிகளே ஆவார். அவர் அருளியது 'விட்டுணு ஒருபது கூற்றிருக்கை' என்பது.

## ஒருபா ஒருபது

அகவலும் வெண்பாவும் கலித்துறையும் ஆகிய இவற்றில் ஒன்றனால் அந்தாதித் தொடையில் பத்துப் பாடல்கள் பாடுவது ஒருபா ஒருபது எனப்பெறும். வெண்பா அகவல் என்னும் இரண்டு பாவகையால் வரும் ஒருபா ஒருபது எனக் கூறும் பன்னிரு பாட்டியல் (338).

" வெள்ளை யாதல் அகவல் ஆதல்
தள்ளா ஒருபஃதொருபா ஒருபது. "

முத்துவீரியம் மூவகைப்பாவைச் சுட்டும்.

" அகவல் வெண்பாக் கலித்துறை ஆகிய
இவற்றுள் ஒன்றினால் அந்தாதித் தொடையாய்
ஒருபஃதுரைப்பது ஒருபா ஒருபது. "
—(முத்துவீரியம் 1088)

## ஒருபோகு

முன்னிலையாலும், படர்க்கையாலும் கடவுளைப் பழிச்சுதல் (வாழ்த்துதல்) ஒருபோகு ஆகும்.

கலிப்பாவிற்குரிய ஆறு உறுப்புகளுள் வண்ணகமோ எண்ணோ இரண்டுமோ குறையினும் ஒருபோகு என்பதே யாம்.

கலி உறுப்புகள் மயங்கியும் மிக்கும் குறைந்தும் வரினும் கொச்சக ஒருபோகு என்று கூறுவர்.

ஒருபோகு தேவர்களைப் பாடுதலால் தேவபாணி எனவும் பெறும்; அது திருமாலுக்குரியதாம். மற்றும் சிவபெருமானுக்கும் முருகனுக்கும் உரித்தாகவும் கூறுவர்.

வேந்தன் அறச்செயல், குடிநிலை, அறிவுத்திறம் ஆகிய வற்றை வாழ்த்துதலும் ஒருபோகியற்கை என்பர்.

" தன்மை முன்னிலை படர்க்கையுட் டன்மை
ஒழித்திரு வகையுள் ஒன்றால் கடவுட்
பழிச்சும் ஒருபோ கிருமூன் றுறுப்பும்
அமைந்தொருங் கியலும் நயந்திகழ் கலியுள்
வண்ணகம் போதினும் எண்ணே போதினும்
ஓதிய உறுப்பாற் பேர்புகன் றனரே."

" வரன்முறை பிறழ உறுப்பு மயங்கி
மிக்கும் குறைந்தும் வருவது கொச்சக
ஒருபோ காமென உரைத்தனர் புலவர்."

**— (பன்னிரு. 206, 207)**

" தேவபாணி தெரியுங் காலை
மாசறு துழாய்முடி மலைந்த சென்னி
நீர்நிலம் அளந்த நெடியோன் மேற்றே."

" சுடர்கதிர்த் திங்கள் சூடியோற்கும்
படர்திரைப் பனிக்கடல் மாதடிந் தோற்கும்
உரிய காலமும் உளவென மொழிப."

" வேந்தன் வேண்டும் நெறிசெய் தாலும்
வாய்ந்த மதியும் மரபும் வாழ்த்தலும்
விதியென மொழிப மெய்ந்நெறிப் புலவர்."

**— (பன்னிரு. 210—212)**

**ஒரு வருக்கப்பா**

ஒருவகை அல்லது ஓரின எழுத்துகளாலேயே பாடப் பட்ட பாடல்களையுடைய நூல் 'ஒருவருக்கப்பா' எனப் படும். இஃது முடிமுதல் தொடர்பொடும் வருவதும் உண்டு.

" தாதிதூ தோதீது", " திதத்தத்தி தாதத்தி"

எனவரும் தனிப்பாடல்கள் இவ்வகைக்குச் சான்று. தண்டபாணி அடிகள் இத்தகரவருக்கத்தாலே ஒரு வருக்கப்பா இயற்றியுள்ளார்.

ஒரெழுத்தந்தாதி பார்க்க.

**ஒலியந்தாதி (ஒலி முடிமுதல்)**

பதினாறு கலை ஓரடியாக வைத்து இவ்வாறு நாலடிக்கு அறுபத்து நாலு கலை வகுத்து, வண்ணமும் கலை வைப்பும் தவறாமல் அந்தாதியாக முப்பது செய்யுள் பாடுவது ஒலியந்தாதி என்று சொல்லப்படும்.

"ஈட்டிய ஈரெண் கலை வண்ணச் செய்யுள்
இயைந்தமுப்பான்
கூட்டிய நீடொலி அந்தாதி."

— (நவநீத. 39)

"தத்தம் இனத்தின் ஒப்புமுறை பிறழாது
நாலடி ஈரெண் கலையொரு முப்பது
கோலிய தொலியந் தாதி யாகும்."
ஈரொலி யாகிய எண்ணான்கு கலையெனச்
சீரியற் புலவர் செப்பினர் கொளலே
வண்ணகம் என்ப தொலியெனப் படுமே."

— (பன்னிரு, 267-269)

"ஒலியந்தாதியையே ஒருசாரார் பல்சந்த
மாலையென்று அடக்குவர்."

என்பார் நவநீதப்பாட்டியல் உரையுடையார். அவர் வண்ணம் என்பதும் வகுப்பு என்பதும் ஒன்று என்பாரை மறுத்து, அஃது (வகுப்பு) ஆசிரிய விருத்தம் ஆதலும் அறிக" என்றார்.

ஒலியந்தாதியை அளவியல் தாண்டகம் என்பாரும் உளர் என்பதை,

"மூவெட்டி ரண்டெழுத்தாய் மூன்றடி நான்காய்ச்
சந்தம்
பாவதன்மீத் தாண்டகமுப் பானாகமேவலொலி
யந்தாதி."

என்பார் பிரபந்தத் திரட்டுடையார் (74).

**ஒலியந்தாதியை** ஒலியலந்தாதி என்றும் வழங்குவர். அவர் பதினாறு கலை எட்டுக் கலையாக வரவும் பெறும்

என்றும், வெண்பா, அகவல், கலித்துறை ஆகிய இம் மூன்றையும் பத்துப்பத்தாக அந்தாதித்துப் பாடுவதும் ஒலியலந்தாதியாகும் என்றும் கூறுவர்.

" பதினாறு கலையோ ரடியாக வைத்து
நாலடிக் கறுபா னாலுகலை வகுத்துப்
பல்சந்த மாக வணங்கலை வைப்பும்
வழுவாதந் தாதித்து முப்பது செய்யுட்
பாடுவ தெட்டுக் கலையானும் வரப்பெறும்
அன்றியும் வெண்பா அகவல் கலித்துறை
பப்பத் தாக அந்தா தித்துப்
பாடு வதுமாம் ஒலியலந் தாதி."

— (முத்துவீ. 1082)

இனி, 64 கலைச்சந்தப் பாடல்கள் 30 முடிமுதல் தொடையமையப் பாடப்படுவதை முதல் ஒலியலந்தாதி என்றும், அதிற்பாதியளவாக 32 கலைச் சந்தப் பாடல்கள் அமைப்பதை நடுஒலியல் அந்தாதி என்றும் கூறும் வழக்குண்டு.

முதலொலியல் அந்தாதி, பேரொலியல் அந்தாதி என வெவ்வேறாக இரண்டு ஒலியலந்தாதிகளை அருளியுள்ளார் தண்டபாணி அடிகள். இஃது எவரும் பாடாத அருமைப் பாடுடையதாம். 'முதல்' என்பது முதன்மையையும் சுட்டும் அல்லவோ!

### ஒன்பது கூற்றிருக்கை

எண்கூற்றிருக்கைக்கு மேல் வளர்ந்த வளர்ச்சியுடையது இவ்வொன்பது கூற்றிருக்கை.

சிவபெருமான் மேல் ஒன்பது கூற்றிருக்கை பாடியவர் தண்டபாணி அடிகள்.

### ஓரெழுத்தந்தாதி (ஓரெழுத்து முடிமுதல்)

ஓரெழுத்தே செய்யுண் முழுமையும் வந்து அந்தாதித் தொடையால் அமையும் நூல் ஓரெழுத்தந்தாதியாகும்.

ஓரெழுத்தந்தாதி குற்றுயிரான் வந்த மடக்கு, நெட்டு யிரான் வந்த மடக்கு, ஒருமெய்யான் வந்த மடக்கு என்று பகுக்கப்படும்.

**கருப்பையா பாவலர்** என்பார் ஓரெழுத்தந்தாதி நூல் ஒன்று யாத்துள்ளமையைத் **தமிழ்ப்புலவர் அகராதி** வெளிப் படுத்துகின்றது (பக். 100). திருச்சுழியல் ஓரெழுத்தந்தாதி, கழுகுமலை ஓரெழுத்தந்தாதி என்பவை இவ்வகைய. (தனிச் செய்யுட் சிந்தாமணி 346).

(எ. டு:)

“தத்தித்தா தூ துதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைத்ததா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது. —(**தண்டி. 45 மேற்**)

இது தகர எழுத்தொன்றான் வந்த செய்யுள். ‘ஒரு வருக் க்ப்பா’ பார்க்க.

**கட்டளைக் கலிப்பா**

சங்கச் சான்றோர்க்கு முற்பட்டோர் கட்டளை அடியால் செய்யுள் செய்தலை வழக்காகக் கொண் டிருந்தனர். தொல்காப்பியர் கூறும் அடிகளுக்குரிய எழுத்து எண்ணிக்கை அதனை வெளிப்படுத்தும். அதனை வெளிப் படையாக விளக்குவது போல அமைந்தது ‘கட்டளை’ என்னும் சொல்லாட்சி.

கட்டளைக் கலித்துறை என்பது நேரசையில் தொடங்கும் அடிக்குப் பதினாறு எழுத்தையும் நிரை யசையில் தொடங்கும் அடிக்குப் பதினேழெழுத்தையும் கொண்டிருக்கும். இக்கட்டளைக் கலிப்பா, ஓரடியை இரண்டு அரையாகவும் அரையடியை நாற்சீரளவின தாகவும் அவ்வரையடி நேரில் தொடங்கின் பதினோ ரெழுத்தும், நிரையில் தொடங்கின் பன்னிரெழுத்தும் பெற்றுவரும். யாப்பால் பெற்றபெயர் நூலுக்கு ஆயிற்று.

“ கட்டளைக் கலிப்பா நாட்டுங் காலை
ஒருமாக் கூவிளம் ஒருமூன் றியைய
நேர்பதி னொன்று நிரைபன்னீ ரெழுத்தாய்
நடந்தடிப் பாதியாய் நான்கடி ஒத்தவாய்
வருவதின்று வழங்கும் நெறியே.”

— (தொன்னூல் விளக்கம் 236)

**கட்டியம்**

அரசன் திருவோலக்கத்தில் வீற்றிருக்கும்போது, அவ்வரசன் புகழை அவையிலுள்ளார் கேட்டு மகிழுமாறு, கட்டியங் கூறுவோன் கூறுவதுபோல் அமைக்கப் பெற்ற நூல் கட்டியம் எனப்பெறும்.

எடுத்துக்கொண்ட பாடல்அடியின் சீர்எண்ணிக்கையை அளவாகக் கொண்டு ‘பெரிய கட்டியம்’ ‘சிறிய கட்டியம்’ என இருவகையாகக் கூறப்பெறும்.

சிதம்பர அடிகளாரால் இயற்றப்பெற்ற ‘திருப்போரூர் முருகர் பெரியகட்டிய’ மும், ‘திருப்போரூர் முருகர் சின்னக் கட்டிய’ மும் இவற்றுக்குச் சான்றாம்.

இவற்றுள், முன்னது எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தானும், பின்னது வெண்செந்துறையானும் அமைந்துள்ளன.

**கடாநிலை**

கொற்றவைக்குக் கடாப்பலியூட்டுவதைப் பற்றிப் பாடுவது கடாநிலை எனப்பெறும்.

“ கொற்றவை தனக்குக் கொற்றவர் எறியும்
கடாநிலை உரைப்பது கடாநிலை யாகும்.”

“ வடாஅதுறை கன்னிக்கு மன்னவர் எறிந்த
கடாநிலை உரைப்பது கடாநிலையாகும்.”

— (பன்னிரு. 326, 327)

கடா என்றது எருமைக்கடாவை. கொற்றவைக்குக் கடாப்பலியிடல் இந்நூற்றாண்டின் மையப்பகுதிவ்ரை

யிலும் கூடத் தொடர்ந்தமை, பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன்கோயில், 'பன்னீராட்டைக் கொருமுறை எருமைப் பலியீட்டால்' அறியலாம்.

**கடிகை வெண்பா**

'நாழிகை வெண்பா' காண்க.

**கடைநிலை**

பரிசில் நீட்டித்தபோது அதனை வெறுத்த புலவன், வேந்தனது கடை காவலரிடம் முனிந்துரைப்பதாக வரும் நூல் கடைநிலை எனப்படும். இக் கடை நிலையை **வசைப்பாட்டு** என்றும், **அங்கதம்** என்றும் கூறுவர்.

"கடைநிலை என்பது காணுங் காலைப்
பரிசில் உழப்பும் குரிசிலை முனிந்தோர்
கடையகத் தியம்பும் காட்சித் தென்ப."

"பரிசில் நீட்டித்தல் அஞ்சி வெறுத்தோர்
கடைநின் றுரைப்பது கடைநிலை என்ப."
— (பன்னிரு. 355, 356)

"கடைநிலை எனினும் வசைப்பாட் டெனினும்
அங்கதம் எனினும் ஒருபொருள் மேற்றே."
— (பன்னிரு. சங்கப்பிரதி. 161)

இனிக் கடைநிலையைப் புறத்துறையில் வரும் 'வாயினிலை' என்பாரும் உளர். அது, சான்றோர், 'எம்வரவினைத் தலைவற்கு உரை' எனக் கடை காவலர்க்குக் கடைக்கண் நின்று கூறுதல் என்பர் (அகராதிகள்).

"புரவலன் நெடுங்கடை குறுகிய என்னிலை
கரவின் றுரையெனக் காவலர்க் குரைத்தன்று."
— (பு. வெ. 190)

என்னும் புறத்துறை, கொண்டு கூறப்பெற்றது இதுவாகும்.

'கடைநிலை' — வினாவிநிற்றல் எனப்பொருள் காணலும் உண்டு.

" பெரியோர் சேணிடை வருதலாற் பிறந்த
வருத்தம் தீர வாயில்காக் கின்றோர்
என்வர வினையிறைக் கியம்புதி நீயெனக்
கடைக்கணின் றுரைப்பது கடைநிலை யாகும் "
—(முத்துவீ. 1099)

பரிசில் நீட்டிக்கப் பருவரலுற்ற புலர்கள் பாடிய பாடல்கள் பல புறநானூற்றில் இடம் பெற்றுள. கடைநிலைக்கு முன்னோடி அவ்வை என்க (127, 382—4, 391—5, 398).

**கண்ணி**

ஈரடி ஓரெதுகையாய் அமைந்த பாவகை கண்ணி எனப்பெறும். இருமலர்களை இணைத்துத் தொடுப்பதைக் கண்ணி என்று வழங்குதல் அறிக. இக்கண்ணிவகைப் பாவால் அமைந்த நூல் கண்ணி என்று வழங்கப்பெறும்.

தாயுமானவர் பாடிய பராபரக்கண்ணி காண்க.

ஈரடி ஓரெதுகையாய் வருவதுடன் இரண்டாமடி மடக்காகவும் கண்ணி வருவதுண்டு. அதனை வள்ளலார் பாடிய வருகைக்கண்ணி முதலியவற்றால் அறிக.

கண்ணிகள் வெண்டளை பிறழாமல் வரும் என்க.

**கண்படைநிலை**

காலை, பகல, மாலை ஆகிய பொழுதுகளில் அரசியல் பொருளியல் கலையியல் மறையியல்களில் ஈடுபட்ட வேந்தனை, "மகளிரோடு, இன்பத்துயில் கொள்க" என்று வேண்டிப் பாடுவது கண்படைநிலையாகும்.

" காலைபகல் மாலை யாழ்முறை அறத்தியல்
அமைச்சியல் அரசியல் ஏனை இயலிசை
நாட கத்திய லோடு நான்மறை

முறையே எய்தினை ஊழி வாழி
இனிய மகளிரேர் டின்பத்துயில் கொள்கென்
றிங்ஙன முரைப்பது கண்படை யாகும். ''
—(பன்னிரு. 323)

கண்படை கொள்ளுமாறு மருத்துவரும் அமைச்சரும் கூறுவர் என்க.

'' அரசரும் அரசர் தமைப்போல் வாரும்
அவைக்கண் நெடிது நாளாக வைகிய
வழிமருத் துவரும் மந்திரி மாரும்
முதலியோர் தமக்குக் கண்டுயில் கோடலைக்
கருதி உரைப்பது கண்படை நிலையே. ''
—(முத்துவீ 1091)

'' கண்படை நிலையே காவலன் அவைக்கண்
சுற்றம் சூழஉத்துணை சூழ இருத்தலின்
நெடும்பொழு துரிவரும் நித்திரை கூறலே. ''
— (பிரபந்த தீபம். 60)

'' கண்படை பண்ணிய கண்படை நிலை''யைப்
பாடாண்திணைப் பகுதியாகக் குறிக்கும். ''
—(தொல்காப்பியம் 1036)

கோயில்களில் நிகழ்த்தப் பெறும் பள்ளியறை நிகழ்ச்சி, குழந்தைகளுக்கெனக் கிளர்ந்த தாலாட்டு என்பவை கருதத் தக்கன.

பள்ளியெழுச்சி பாடுதல் நூலுருப்பெற்றதுபோல் கண் படை நிலையும் உருக்கொண்டதாம்.

**கணக்கு**

'கணக்கு' என்பது நூல் என்னும் பொருட்டது. 'மேற் கணக்கு' 'கீழ்க்கணக்கு' என்பவை நூல் என்னும் பொருளைத் தருதல் அறிந்தது. நூலாய்ந்து கற்பிக்க

வல்லார் 'கணக்காயர்' எனப்பட்டனர். 'கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என்பது தமிழறிந்தது.

'கணக்கு' என்பது பற்றிய இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் பகர்கின்றது;

"மேல்கீழ்க் கணக்கென இருவகைக் கணக்கே."

"மேற்கணக் கெனவும் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையால் பகர்ந்தனர் கொளலே."

"அகவலும் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் தொகுப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையும் அவ்வகை எண்பெறின்
எள்ளறு கீழ்க்கணக் கெனவும் கொளலே."

"ஐம்பது முதலா ஐந்நூ றீறா
ஐவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்."

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்
திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும்."

—(பன்னிரு. **344—348**)

கீழ்க்கணக்கு, மேற்கணக்கு காண்க.

**கதை**

நல்லதங்காள் கதை, சித்திரபுத்திரநாயினார் கதை, கட்டபொம்மன் கதை, கோவலன் கதை, தேசிங்குராசன் கதை முதலிய கதைகள் எளிய இலக்கியங்களாக நடமாடு கின்றன. இக்கதைகளுக்குப் 'பெருங்கதை' என்னும் பெயர் வழிகாட்டி எனலாம்.

சிலப்பதிகாரம் மணிமேகலையில் வரும் கதைப்பகுதிகள் காதை எனப்படுவதும், "காதை என்பது கதைபொதி பாட்டு" எனப்படுவதும் கருதத்தக்கவை.

மேலே கூறப்பட்ட கதைகள் கலித்தளையால் அமைந்து ஈரடிக்கண்ணிகளால், தொடர்ந்து கதை கூறுவதாக இயல்கின்றன. இவ்வமைப்பு எளிமையும் இனிமையும் வருணனையும் கொண்டு நடப்பதால் கற்றறியா மாந்தரும் கேட்டுச் சுவைத்து மகிழ்வுறுதலை நாட்டுப் புறங்களில் இன்றுங்காண முடிகின்றதாம்.

**கதைமொழிமாற்று**

கதைமொழிமாற்று இன்னதென்பதை,

" ஏற்றமின்னும் தானுமாய் மின்சொல்லைத் தானுமுறப்
பெண்ணாணுக், கானாற் கதைமொழி மாற்றாம்."

எனப் பிரபந்தத்திரட்டுக் கூறுகின்றது (64).

மின்னும் தானும் என்பது மனைவியும் கணவனும் அல்லது தலைவியும் தலைவனும் என்பதாம். 'ஏற்ற' என்பதால் எதிரிட்டு வந்தார் என்பது இல்லையாம்.

அவள் கூறும் கதையைக் கேட்டு அவன் மறுமொழி கூறலும், அவன் கூறும் கதையைக் கேட்டு அவள் மறுமொழி கூறலும் கதைமொழிமாற்று என்பதாம். விடுகதை, அளிப்பான் கதை என்னும் வழக்குகளை நோக்கினால் கதைமொழிமாற்று என்பது தெளிவாகும்.

'விடுகவி' காண்க.

**கப்பல் பாட்டு**

கப்பற்சிந்து, ஓடப்பாட்டு, படகுப்பாட்டு, ஏலேலோ பாட்டு என்பனவும் இதுவே.

இப்பாட்டு இருவராலோ இருகுழுவினராலோ பாடப் படுவதாய் அமையும். முன்னே பாடுபவர் பாட்டைப் பாடி, 'ஏலேலோ' என இசைப்பார்; பின்னே பாடுபவர், 'ஐலசா' என்பர். இவ்வமைப்பும் ஓடத்தில் துடுப்பை ஒரொழுங்கில் தள்ளுதற்குப் பயனுடையதாம். கற்றூண், மரத்தடி ஆகிய

வற்றைப் புரட்டுவார் முன்பாட்டும் பின்பாட்டும் பாடிக் கொண்டு செயலாற்றுதல் இதனை விளக்கும்.

கப்பலில் வரும் பொருள்வகை, கப்பல் சென்று வந்த நாடுகள், கப்பல் அமைப்பு ஆகியவையும் கப்பல் பாட்டில் இடம்பெறும்.

திருமண ஏசல் பாட்டும், கப்பல் பாட்டாக விளங்கு கின்றது. மாப்பிள்ளையை ஏசல், மகட்கொடையாளரை (சம்பந்தியை) ஏசல், மணமகளை அண்ணி கொழுந்தியர் ஏசல் எனவும் ஏசற்பாட்டுருக்கொள்ளும்.

தெப்பத் திருவிழாக்களில் இறைமைச் செய்தியைத் தாங்கிக் கப்பல் பாட்டு வெளிப்படுதல் பல இடங்களில் காணக்கூடியதாம்.

'கருமாணிக்கன் கப்பற்கோவை' என்பதொரு நூலுண்மை அறியத்தகும்.

இராமலிங்கக் குருக்கள் என்பார் இயற்றிய 'மதுரை மீனாட்சி கப்பற் சிந்து' என்னும் நூலின் தொடக்கம்:

"ஏலேலோ—ஏலேலோ—தினம்
ஏலேலோ—ஏலேலோ,
ஆத்தாளே ஈசுவரியே—எங்கள்
அம்பிகையே அண்டமெல்லாம்
பூத்தாளே நின்மீதில்—நன்றாய்ப்
புகழ்ந்துரைக்கும் கப்பலுக்கு—ஏலேலம்."

## முடுகுகளில் ஒன்று

"குடையாணி குமிழாணி கூராணி தங்கம்
குச்சாணி உச்சாணி அச்சாணி வெள்ளி
கடையாணி தடையாணி சடையாணி செம்பொன்
கணக்கடங் காததோர் தங்கத் தகட்டால்
இடைகள் தெரியாமலே கோட்டித் திருத்தி

இரத்தினக் கற்களை மேலே யமைத்த
முடியாணி முள்ளாணி சுள்ளாணி பூட்டி
மூவாறு பாய்மரம் மேலே நிறுத்தி—ஏலேலம்.''

**கலம்பகம்**

பல்வேறு பாவும் பாவினமும் உறுப்பும் கலந்து வரலுடைமையால் கலம்பகம் என்னும் பெயர் பெற்றதாம். பலவகை மலர் மிடைந்த தொடையைக் கலம்பகம் என்று வழங்கினர். அது 'கதம்பம்' என வழக்குற்றது. 'கலம்', பன்னிரு மரக்கால் என்னும் முகத்தலளவைக்கருவி. 'பகம்' அதிற்பாதியாம் ஆறுமரக்கால். இப்பன்னிரண்டும் ஆறுமாகிய 18 உறுப்புகளை உடைமையால் கலம்பகப் பெயர் பெற்றதென்றும் கூறுவர்.

ஒருபோகும் வெண்பாவும் கலித்துறையும் முதற் கவியுறுப்பாக முற்கூறப்பெற்றுப், புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம் மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இப்பதினெட்டு உறுப்புகளும் பொருந்த மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னும் இவற்றால் இடையே வெண்பா கலித்துறை விரவ அந்தாதித் தொடையால் முழுதுறக் கூறல் கலம்பகமாகும்.

இக்கலம்பகம் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும்; வணிகர்க்கு ஐம்பதும், உழவர்க்கு முப்பதுமாகப் பாடுதல் வேண்டும் என்பர். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது பேணிக்கொள்ளாப் பிழையால் பிறந்த கேட்டுச் சான்றாம் இது.

" ஒருபோகு வெண்பாக் கலித்துறை உறமுன்
வருபுய மதங்கம் மானை காலம்
சம்பிர தம்கார் தவங்குறம் மறம்பாண்
களிசித் திரங்கல் கைக்கிளை தூது
வண்டுதழைமேற் கொண்டெழும் ஊசல்
மடக்கு மருட்பா வஞ்சி விருத்தம்
அகவல் கலியினம் அகவல் விருத்தம்
வஞ்சி வஞ்சித்துறை வெண்டுறை மருவி
இடையிடை வெண்பாக் கலித்துறை நடைபெற்
றந்தாதி மண்டலித் தாங்கலம் பகமே."

— (இலக் பாட். 51)

" மூலம் ஒருபோகு வெண்பாக் கலித்துறை மூன்றுறுப்பாய்
ஏலும் புயத்தோடம் மானைபொன்னூசல்
இயமகம் விற்
கோல மறங்குறம் சிந்துநற் கைக்கிளை கொண்டதூது
கால மதங்கி களிசம் பிரதம் கலம்பகமே."

— (நவநீத. 33)

கலம்பகத்தில் வரும் பாடல்தொகை வருமாறு:

" அதுவே,
இமையவர்க் கொருநூ றிழிபைந் தையர்க்
கமைதரும் அரசர்க் காகும் தொண்ணூ
றமைச்சருக் கெழுபான் வணிகருக்கைம்பான்
அமைத்தனர் பின்னவர் தமக்கா றைந்தே."

— (இலக். பாட். 53)

இனிப்பிறா பிறர்க்கும் கலம்பகம் வகுக்குமாற்றையும், அவர்க்குப் பாடல் தொகையாமாற்றையும் பலர் பலவாறு கூறுவர். வருமாறு:

" தேவர்க்கும் முனிவர்க்கும் காவல் அரசர்க்கும்
நூறு தொண்ணூற் றைந்துதொண் ணூறே
ஒப்பில் எழுப தமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்கென விளம்பினர் செய்யுள்."

— (பன்னிரு. 43)

" தேவர்க்கு நூறு முனிவர்க் கிழிவைந்து சேனியத்தைக்
காவற்குரிய அரசர்க்குத் தொண்ணூறு காவவரால்
ஏவற்றொழிலவற் கெண்ப தெழுப திருநிதியம்
மேவப் படுமவர்க் கைம்பது முப்பது மிக்கவர்க்கே."
—(நவநீத. 35)

" அமரர்க்கு நூறந் தணருக் கிழிவைந்
தரசர்க்குத் தொண்ணூறு மூன்றாம்பட்ட
முடிபுனையா மன்னர்க் கெண்பது
வணிகர்க் கெழுபது மற்றை யோர்க்குத்
துணியில் அறுபத் தஞ்சு சொல்லும்'."

" அந்தணர் அரசர் வணிகர் வினைஞர்க்குத்
தொண்ணூ றெண்ப தெழுப தறுபது
விண்ணோர் தமக்கு நூறெண விளம்பினர்."

" அமரர்க்கு நூறந் தணருக் கிழிவைந்
தரசர்க்குத் தொண்ணூ றன்றி முடிபுனையைப்
புதல்வருக் கெண்பது புகலுங் காலே."

" தானைத் தலைவர்க்கும் வணிகர்க்கும் எழுப
தேனை யோர்க்கிழி யிருபது பாட்டே."
—(நவநீத. 35)

கலம்பகம் மண்டலித்துப் பாடப்பெறும். மண்டலித்துப் பாடுதல் என்பது அந்தாதித்தொடையால் செய்யுட்கள் அனைத்தையும் வகுத்து ஈற்றுச் செய்யுள் ஈறு, முதற் செய்யுள் முதலோடு அந்தாதியாய் அமையப் பாடுதல்.

**கலம்பகமாலை**

ஒருபோகும் வெண்பாவும் கலித்துறையும் முதலாகக் கூறப்பெறும் கலம்பக உறுப்புகளுள் ஒருபோகு, அம்மானை என்னும் இரண்டும் ஒழிந்து எஞ்சியவெல்லாம் இனிதுவரின் அது கலம்பகமாலை என்னும் பெயர்பெறும் (கலம்பகம் காண்க).

"ஒருபோ குடனே அம்மனை நீக்கி
வெள்ளை முதலா எல்லா உறுப்பும்
தள்ளா இயலது கலம்பக மாலை."

"ஒருபோ கம்மனை ஒழித்துவெண் பாடுதற்
கருதிற் பேரது கலம்பக மாலை."

—(பன்னிரு. 260—261)

கலம்பகமாலையைப் 'பல்மணிமாலை' என்றும் கூறுவர்:

"பன்மணி மாலை பகரும் விதிமுறை
ஒருபோ கம்மானை ஊசல் ஒழிய
ஏனை உறுப்புகள் எல்லா வற்றுளும்
அவ்வாறு செய்யுள் அறைவர்கற் றோரே."

என்பது பிரபந்ததீபம் (29).

கலம்பகமாலை என்னும் பெயரீடு,

"பலபூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை."

என்னும் பெரும்பாணாற்றுப்படை உரையையும்,

"களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல் கொண்டு."

என்னும் தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பாடலையும் (திருப்பள்ளி. 5) நினைவுறுத்துவதாம்.

**கலித்தொகை**

தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்னும் அடிப் பட்ட அலகுகளையும் வண்ணகம், அம்போதரங்கம் என்பனவற்றையும் உடையது கலி. இக்கலிப்பாவகை யால் அமைந்த நூல், 'கலித்தொகை'ப் பெயர் பெற்றது. எட்டுத்தொகையுள் ஒன்றாகிய கலித்தொகை இவ்வகைப் பட்டதே. இக்கலித்தொகை, தத்துவராயர் அடங்கன்

முறைகளுள் ஒன்றாக மெய்ப்பொருள் கூறுவதாக அமைந்துளது.

கலித்தொகை 'தொகைநிலை' எனவும் படும்.

"தொகைநிலை என்பன தோன்றக் கூறில்
கலியடி செய்யுள் கலித்தொகை யாமே."

என்பது பிரபந்ததீபம் (51).

**கலியந்தாதி**

வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவின எழுத்துக்களும் அளவே அமைந்து, குறிலுக்குக் குறிலும் நெடிலுக்கு நெடிலும் பொருந்தி நான்கு கலைகொண்டது ஓரடியாய், அவ்வண்ணம் நான்கடியாகியும், ஒருவகை ஒலியே உடையதாகியும், முப்பத்திரண்டு கலையொடு பொருந்தியும் குறிலும் நெடிலும் இணைந்துவரின் அவ்வாறே இணைந்தும் முப்பது கட்டளைக்கலிகள் அந்தாதி முறையில் வருமாயின் அது கலியந்தாதி எனப் பெயர் பெறும்.

"வல்லினம் மெல்லினம் இடையின எழுத்துப்
புல்லி மருங்கு போகா தொன்றிக்
குறிலெனில் குறிலே நெடிலெனில் நெடிலே
பொருந்தி நாற்கலை கொண்டோ ரடியாய்த்
திருந்தும் இவ்வகை நான்கடி யாகியும்
ஓரொலி யாகியும் எண்ணான் காகிய
கலையொடு பொருந்தியும் குறிலும் நெடிலும்
முறைமுதல் வரினும் அவ்வெழுத் தாகியும்
இப்பரி சியன்ற முப்பது கட்டளை
மிக்கது கலியந் தாதி யாகும்."

—(பன்னிரு. 265)

இனி வெண்கலிப்பாவாகவும் சிறுபான்மை வரும் என்பர்:

"வெண்கலி யுஞ்சில சிறுபான்மை வருமே."
—(பன்னிரு. 266)

இது, கலித்துறை அந்தாதி எனவும் பெறும். திருக் கருவைக் கலித்துறை அந்தாதி எடுத்துக்காட்டாம். இனிக் கட்டளைக்கலித்துறை அந்தாதி என்பதும் இதுவே. திருவரங்கத் திருவாயிரத்தில் இடம் பெற்றுள்ளது, கட்டளைக் கலித்துறை அந்தாதி.

**கலியாண சுந்தரம்**

"சொந்தத்தின் மானைக் கல்யாண மணங்குறி வென்றே செய்தலான் கலியாண சுந்தரம்" என இதன் இலக்கணத்தைப் பிரபந்தத் திரட்டுக் கூறுகின்றது (44).

உரிமையமைந்த பெண்ணொருத்தியை மணக்கத் திட்டமிட்டு அவளை மணந்து வெற்றிகொண்ட செய்தியைப் பற்றிக் கூறுவது கலியாண சுந்தரம் எனப்படும் என்கின்றது.

உரிமையமைந்த பெண்ணே எனினும் அவளை அடை தற்கு இருந்த தடைகள் இடையூறுகள் ஆகியவற்றை வெற்றி கொண்டமையும், அதன்பின்னர் உற்றார் உறவினர் பகைமை நீங்கிப் பாங்குற மணமுடித்து வைத்து மகிழ்ந்த சிறப்பையும் கூறுவதாக இந்நூல் அமைந்ததாகலாம்.

**கலிவெண்பா**

கலிவெண்பாவால் அமைந்த நூல் கலிவெண்பா எனப் படும். அக்கலிவெண்பா ஒரோ ஒன்றாகவும் நூலாதற் கேற்ற நெடியதாகவும் இருக்கும் என்க.

குமரகுருபர அடிகள் இயற்றிய கந்தர் கலிவெண்பா, வள்ளலார் அருளிய விண்ணப்பக் கலிவெண்பா, பரஞ் சோதியார் பாடிய திருவிளையாடல் போற்றிக் கலி வெண்பா முதலியன குறிப்பிடத்தக்கன.

"சொற்பெறுமெய்ஞ் ஞானச் சுயஞ்சோதி யாம்தில்லைச்
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே."

என விளித்து, "வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம்" எனச்சுட்டி,

"சூழ்ந்திடுக என்னையுநின் தொண்டருடன் சேர்த்தருள்க
வாழ்ந்திடுக நின்றாண் மலர்."

என விண்ணப்பித்து நிறைகின்றது வள்ளலாரின் விண்ணப்பக் கலிவெண்பா. அது 417 கண்ணிகளைக் கொண்டுளது.

வேறுசில பனுவல்களும் கலிவெண்பாவால் பாடப்படுவதுண்டெனினும் அவை வேறுபிற பெயர்களைக் கொண்டனவாக, இவ்வொன்றும் பாவகையால் பெயர் பெற்றதாம். கலிவெண்பா—பன்னீரடியின் மிக்குவரும் நெடிய வெண்பா.

**கவசம் (மெய்ம்மறை)**

போரில் பாதுகாப்பாகக் கொள்ளப்பட்ட ஒரு கருவி மெய்ம்மறை என்னும் கவசமாகும். இதனை 'மெய்புகு கருவி' என்பர். 'மெய்ம்மறை' என்றும் கூறுவர். வீட்டை 'வளிமறை' என்பதும் கருதத்தக்கது.

உடலுக்கு வரும் ஊறுபாட்டை விலக்கிக் காப்பதற்குக் கவசம் இடுமாப்போல, உள்ளத்திற்கு வரும் ஊறுபாட்டை விலக்கிப் பாதுகாக்கும் வண்ணம் இறையருளை நாடிப் பாடும் நூல் கவசம் எனப்பெற்றது.

மணிமொழியார் சுட்டும் 'திருநீற்றுக்கவசம்' என்னும் ஆட்சி (46. 1) இறையருள் நாடிய கவச ஆட்சிக்கு எடுத்துக் காட்டாம்.

கவசம் பெருநூல்களின் பகுதியாக இருந்து தனி நூலுருக் கொண்டமை காசிகாண்டச் சக்தி கவசம், பாகவத நாராயண கவசம் முதலியவற்றால் விளங்கும்.

இந்நாளில் கவசங்கள் பல விளங்குகின்றன. அவற்றுள் 'கந்தர்சட்டி கவசம்' பெருவழக்கினது. அது நிலை மண்டில ஆசிரியப்பாவான் அமைந்தது. அறுசீர் விருத்தத் தால் கவசம் அமைதல் பாம்பன் குருதாச அடிகள் இயற்றிய 'சண்முக கவசத்தால்' அறியலாம். உயிரெழுத்து, மெய் யெழுத்து ஆகிய முப்பது எழுத்துகளில் தொடங்கும் முப்பது பாடல்களையுடைது அது.

**கழிநெடில்**

ஐஞ்சீரடி, நெடிலடி; அதன்மேற் சீர்களையுடைய அடி கழிநெடிலடி; கழிநெடிலடியால் அமைந்த நூல் 'கழி நெடில்' எனப் பெயர் பெற்றது.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பத்துப் பாடல்களையுடையதொரு சிற்றிலக்கியம் 'குறுங் கழிநெடில்' எனப்படுகிறது.

14 சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பப்பத்துப் பாடல்களையுடைய இரண்டு சிற்றிலக்கியங்கள் பெரியநாயகியம்மை நெடுங்கழிநெடிலடியாசிரிய விருத்தம் எனவும், நெடுங்கழிநெடில் எனவும் வழங்கப்படுகின்றன.

இம்மூன்றும் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளாரால் அருளப்பட்டவை.

'கழிநெடில்' வகையிலே உச்சியை எட்டும் ஒருபாடல் வள்ளலார் அருளியது. அது 224 சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தான் அமைந்தது. அத்துணைச் சீர்களையுடைய அடிகளை எதற்காக யாத்தார் அடிகள்? 'இறைவன் திருவடிப் பெருமைக்கோர் அளவும் உண்டோ?' என்பதைக் காட்டுமாப்போலத் 'திருவடிப்புகழ்ச்சி'க்கென யாத்தார். பொருளால் மட்டுமன்றி, அடிகளாலும் அடிச்சிறப்பை விளக்க அடிகள் கொண்ட குறிப்பு இஃதாம்; முதல் திருமுறை முதல்பாட்டு என்பதன் பொருள் என்ன? முதன்மையும், முதன்மையில் முதன்மையும் சுட்டுவது

மட்டுமோ? கடவுள் வாழ்த்துப் பத்துக்குறள்களில், ஏழு குறள்களில் தாளும் அடியும் தலைவைத்து வழிபட்ட வள்ளுவர் உள்ளுறை விளக்கக் குறிப்பும் ஆகலாமே!

**களவழி**

போர்க்களச் செய்தியைக் கூறும் நூல் களவழியாம். களவழி நாற்பது என்றொரு நூல் கீழ்க்கணக்கில் உள்ளது. போர்க்கள நிகழ்ச்சியையே புனைந்துரைக்கும் அந்நூல் பொய்கையாரால் பாடப்பட்டதாம். அது வெண்பா யாப்பினது.

போர்க்களம், செருக்களம், மறக்களம், அமர்க்களம், களம் எனவும் பெயர்பெறும். மறக்களவஞ்சி, செருக்களவஞ்சி காண்க.

> ''ஓஓ உவமன் உறழ்வின்றி ஒத்ததே
> காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
> மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலா
> ஆவுதை காளாம்பி போன்ற புனனாடன்
> மேவாரை யட்ட களத்து.''

என்பதொரு களவழிப்பாட்டு.

களவழி நாற்பது என்பது பெயராயினும் அதில் நாற்பத்தொரு பாடல்கள் உள. புறத்திரட்டில் வரும் 1427 ஆம் பாடல் களவழி என்றிருப்பினும் நூலில் இடம் பெறவில்லை. 41 பாடல்களுமே, 'களத்து' என்றே முடிநிலையடைகின்றன. அவற்றுள் 36 பாடல்கள் 'அட்டகளத்து' என்றும், 3 பாடல்கள் 'பொருதகளத்து' என்றும், ஒவ்வொரு பாடல் 'வீழ்ந்தகளத்து' 'பெய்த களத்து' என்றும் முடிகின்றன. 'களத்து' என்னும் முற்றாட்சியையே புறத்திரட்டுக் கூறும் பாட்டும் கொண்டுள்ளது. 'சிவந்த களத்து' என்பது அதன் முடிநிலையாம்.

**களவுகண்ணி**

காதல்வயப்பட்ட தலைவன் ஒருவன், பேராசையால் நள்ளிருள் போதில் தலைவியைக் களவிற்கொள்ளுமாறு

செல்லுதலைக் கூறுதல் "களவுகண்ணி" என்பதாம். இதனை,

" மானாசை, யாலிறைவன் கங்குலிலே யார்களவிற்
செல்லுதலே, சாலுங் களவுகண்ணி தான்."

என்கிறது பிரபந்தத் திரட்டு (69).

களவிற் செல்லுங்கால் ஏற்படும் இடையூறுகளை விரித்துரைத்து அத்தடைகளையெல்லாம் வெற்றியடைந்த வரலாற்றை விளக்குவதாக இப்பனுவல் அமையலாம்.

கண்ணாற் சிறைகொண்டு அகப்படுத்துலைக் கண்ணி என்றார். இன்றும் கண்ணிபோடுதல், தூண்டில் போடுதல், வலைவீசுதல் என வழக்காறுகள் உண்மை ஒப்பிடக் கூடியதாம்.

களவிற் புணர்ச்சித்தடை, 'வருந்தொழிற்கு அருமை' என்றும் 'இடையூறு கிளத்தல்' என்றும் கூறப்படும்.

" இரவரன் மாலைய னேவரு தோறும்
காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும்
நீடுதுயில் எழினும் நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோள் இன்றுயில் என்றும்
பெறாஅன் பெயரினும் "

என்றுவரும் குறிஞ்சிப்பாட்டும் (239—243),

" தாயும் நாயும் ஊருந்துஞ் சாமை
காவலர் கடுகுதல் நிலவுவெளிப்படுதல்
கூகை குழறுதல் கோழிகுரற் காட்டுதல்
ஆகிய ஏழும் அல்லுக்குறித் தலைவன்
வருந்தொழிற் கருமை பொருந்துத லுரிய."

என்று வரும் அகப்பொருள் விளக்கமும் (161) கருதத்தக்கன.

**கற்பனை விலாசம் (கற்பனை முகவம்)**

தலைவியின் அடிமுதல் முடிவரை உறுப்புகளைக் கற்பனை நயம் செறியப் பாடி, அவள் மறையோர்

வேள்வியில் தோன்றி வந்தவளாகச் சொல்லி, தொடக்க முதல் முடிவு வரை நூலைச் சுவைபெற யாப்பது கற்பனை விலாசம் எனப்படுவதாம்.

" ஆதிமுதல் அந்தம்வரை பாதாதி கேசத்துக்
கோதிய கற்பனை உண்டாக்கி—கோதை
மறையோர்செய் வேள்விதனில் வந்ததாய் அப்பா (டு)
அறிகற் பனைவிலா சும்."

என்பது பிரபந்தத்திரட்டு.

'அப் பாடு'—அப் பாடப்படும் நூல்.

**கன்னிமயக்கம்**

தன் பேரழகால் கன்னியொருத்தியைத் தன்ன வளாக்கித் தன்னகத்துச் சேர்ப்பது 'கன்னிமயக்கம்' என்னும் பனுவலாகக் கூறப்படும்.

" பூவையைத், தவத்தால் எழில்பெற்று மாரன்போல்
வந்து தன் அகத்தாக்கல் கன்னிமயக்கம்."

என்பது பிரபந்தத்திரட்டு (63).

அகத்தாக்கல் என்பது மனத்தாக்கலும், மனைக்கண் ஆக்கலுமாம். முன்னது களவும், பின்னது கற்பும் என்க.

**கனகாபிடேகம் (பொற்கிழி வழங்கல்)**

தன்னால் காதலிக்கப்பட்டாளொரு தலைவியின் அணுக்கத்தோழியர்க்குத் தலைவன், பொற்கிழிவழங்கி அன்பு வெளிப்படுத்தல் 'கனகாபிடேகம்' எனப்படும் இலக்கியமாம். இதன் இலக்கணத்தை,

" வாள்மின்னார், பாங்கியர்க்கு வேந்தன் கனகமுடி,
பாய்விடலாம் கனகாபிடேகம்."

என்று கூறும் பிரபந்தத்திரட்டு (25).

**காஞ்சிமாலை :**

பகைவர் ஊர்ப்புறத்துக் காஞ்சிப்பூமாலை சூடி ஊன்றலைக் கூறுவது காஞ்சி மாலையாம்.

" காஞ்சி புனைந்து கருதார் ஊர்ப்புறம்
ஊன்றலை உரைப்பது காஞ்சி மாலை. "
—(முத்துவீ 1074)

" காஞ்சிப்பூ மாலையே காஞ்சித்தார் சூடிக்
கருதலர் ஊர்ப்புறம் கைப்பற்றலை செப்பலே. "
—(பிரபந்ததீபம். 46)

காஞ்சி என்னும் புறத்திணையின் 'ஊன்றுதல்' என்னும் துறைவழியே பிறந்தது இக்காஞ்சி மாலை என்னும் இலக்கிய வகையாம். காஞ்சி கையறுநிலைப் பொருளதாதல் மறைமலையடிகளார் இயற்றிய சோமசுந்தரக் காஞ்சியால் தெளிவுறும். நிலையாமை பற்றிக் கூறுவதும் காஞ்சியே என்பது தொன்னெறி.

**காதல்**

காதல் என்பது அன்பின் பல்வேறு படிநிலைகளை அடக்கிக்கொண்டிருக்கும் சொல். 'மாதர், காதல்' என்பது தொல்காப்பியம். மாதர் என்பதற்கே காதல் எனப் பொருளுண்மையைத் தெளிவிக்கும் அது.

காதல் என்னும் பனுவல், பால்வேற்றுமையும் பருவ வொற்றுமையும் உடைய இருவர் அன்பைக் கூறுவதாக இலக்கிய வாழ்வுற்றது. களவுக்காதல், கற்புக்காதல் என இருவகைப்பட்ட இயலினும் ஒன்றன்மேல் ஒன்று தொடர்ச்சியாகவும், முதிர்ச்சியாகவும் நிகழ்வதேயாம்.

காதல் நூல்களுள் பெருகப்பயின்று வருவதும், சுவை மிக்கதெனப் பாராட்டப்படுவதும் நாகம கூளப்ப நாயக்கன் காதல் என்பதாம். அதனை இயற்றியவர் சுப்பிரதீபக் கவிராயர் என்பார்.

பாட்டுடைத்தலைவன் மலை ஆறு முதலிய பதின் உறுப்புகளையும் பிற சிறப்புகளையும் கூறித் தொடங்கும் அந்நூல் அவன் கொலுவிருத்தல், வேட்டைக்குச்

செல்லுதல், நற்குறி காட்டல், வேட்டையாடல், சோலையை அடைதல், தலைவியைக் காணல், அவளை வேண்டல், களவில் மணம்புணர்தல், தலைவன் ஊருக்குத் திரும்பல், தலைவி புலம்பல், தோழியர் கூறுதல், தாயின் மகிழ்ச்சி, மகளை வாழ்த்துதல், தலைவனை அடைதல், வாழ்த்து என நூல் நிறைகின்றது. 374 கண்ணிகளை யுடையது அந்நூல். கண்ணிகள் வெண்டளையாப்பின. கொடுமணல் கந்தசாமிக் காதல், பொன்னையன் காதல் என்பவை வெண்டளையன்றிப் பிற தளைகளையும் கொண்டு ஈரடிக் கண்ணியாய் இயல்கின்றன.

**காப்பியம் (பாவிகம்)**

காப்பியம், காவியம் என்பன ஒரு பொருளன. 'ஐம்பெருங்காப்பியம்', 'ஐஞ்சிறு காப்பியம்' என்பன காப்பிய நூல்கள் இவையெனக் கூறும்.

பெருங்காப்பியம் என்பன அறமுதல் நான்கு பொருளும் உரைப்பன என்றும், காப்பியம் என்பன அந்நாற் பொருள் களுள் ஒன்று குறைய உரைப்பன என்றும் பாட்டியல் நூல்கள் கூறும்.

"காப்பியம் என்பது கருதறம் பொருளொடு
இன்பம் இவற்றிலொன் றெஞ்ச இயம்பலே.

என்பது பிரபந்ததீபம் (91).

"அறமுதல் நான்கிற் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப் படுமே."

என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் (11). ஆனால் வெண்பாப் பாட்டியலோ அறம் முதலாம் நாற்பொருளில் குறையாது பிற உறுப்புகள் சில குறைந்து வருதலையே காப்பியம் என்று கூறும்.

"கருதுசில குன்றினும் காப்பியமாம் என்பர்
பெரிதறமே யாதிபிழைத்து — வருவதுதான்
காப்பியமாகும்."

என்பது அஃது (43). சிதம்பரப்பாட்டியலும் (16) இவ்வாறே கூறும்.

இவண் காப்பியம் என்றது சிறுகாப்பியங்களை.

அவை சூளாமணி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயண குமாரகாவியம், நீலகேசி என்பன.

**காப்புமாலை**

தெய்வங்காக்கவென மூன்று பாட்டானாதல் ஐந்து பாட்டானாதல் ஏழு பாட்டானாதல் பாடுவது காப்பு மாலையாம்.

'' காப்பு மாலையே தெய்வம் காக்கவென
மூன்றைந்தேழ் செய்யுளின் மொழிபகற் றோரே.''
—(பிரபந்ததீபம். 35)

'' காப்புமூன் றைந்தேழ் காப்பு மாலையாம்.''
—(இலக். பாட். 72)

'' கடவுள் காத்தலாக ஒருமூன்
றைந்தே ழானும் அறைவது காப்பு
மாலையெனப்பெயர் வைக்கப் படுமே.''
—(முத்துவீ. 1091)

பிள்ளைத்தமிழ் நூல்களில் இடம்பெறும் காப்புப்பருவம் இதனைத் தோற்றுவித்திருக்கலாம். ஏனெனில் பாட்டு டைத்தலைவனைக் காக்கவென்றே இயல்வது அது.

**காமரசமாலை (காமச்சுவை மாலை)**

காமச்சுவையினை நயப்பக் கூறுதல் 'காமரசமாலை யாம்'.

'' சீலமாம் கொக்கோகம் செப்புதலே காமரச
மாலை,''

என்று இதன் இலக்கணம் கூறுகிறது. பிரபந்தத்திரட்டு (38).

கொக்கோகம் எனப் பெயரியதொரு நூல் அதிவீரராம பாண்டியனால் செய்யப்பட்டதாம்.

**கார்எட்டு**

காரின்தோற்றஞ் செயல்களை இறைவன் தோற்றஞ் செயல்களுடன் ஒப்பிட்டு எட்டு வெண்பாக்களால் பாடும் சிறு நூல் 'கார் எட்டு' என வழங்கப்படுகிறது.

'கார் எட்டு' **நக்கீரதேவ நாயனாரால்** அருளப்பெற்ற தென்பதைப் பதினோராம் திருமுறையுள் காண்க.

**காவடிச்சிந்து**

முச்சீர் இரட்டையும், முடுகும், தனிச்சீர் எடுப்பும் உடைய அமைப்புடையது காவடிச்சிந்து ஆகும். காவடிச் சிந்து என்றதும் நினைவுக்கு வருபவர் **சென்னிகுளம் அண்ணாமலையார்** ஆவர். அவர் காவடிச்சிந்துகளைக் காண்க.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவிய பாண்டித் துரையார் பாடிய காவடிச்சிந்தும் உண்டு. திருப்புகழ், தேவார, திருவாசக நாலாயிரப்பனுவல்களாகத் தமிழிசை வெளிப்பட்டும், 'தமிழிசை என ஒன்றில்லை' என்பார் இரங்கத்தக்கார். அவர் அடியார்க்கு நல்லார் அடிப்பொடி யைத் தொட்டுப் பார்த்ததும் இல்லாரேயாவர்.

"சென்னி குளநகர் வாசன்— தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன்—செப்புஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற் புனை
தீரன் அயில் வீரன்."

என்பது 'கோயில்வளம்' என்னும் காவடிச்சிந்தின் முதலடி. பாடியவர் அண்ணாமலையார்.

"வேலா மலைக்குமரி பாலா தமிழ்க்கருள்செய்
மீனுலவுங் குளிர்வானதி தந்திடு மெய்யனே—புகழ்
வானளவுஞ் சிவஞான புரந்திகழ் துய்யனே."

என்பது பாண்டித்துரையார் காவடிச்சிந்தில் முருகக் கடவுள் வாழ்த்தின் ஈற்றடி.

**கானவேட்டம்**

நாற்படையும் புடைசூழ வேட்டைக்குச் சென்ற வேந்தன் ஒருவன், காட்டில் வெதும்ப அலைந்ததனால் மயங்கிக் காட்டு முயலுக்கும் யானை முதலியவற்றுக்கும் அம்பேவித் திகைப்புற அவ்வேளையில் ஆங்கொரு நங்கை யைக் கண்டு களிப்புற்ற செய்தியைக் கூறுதல் கான வேட்டம் என்பர்.

"ஆனைபரி சேனைபுடை யாகவேட் டஞ்சென்று
கானலி னான்மயங்கிக் கானமுயல்—ஆனையிவைக்
கம்பேவி யேதிகைத்த அப்போது மானொருத்தி
இன்பமுறல் கன்னிவேட்ட மே."

—(பிரபந்தத்திரட்டு 49)

**கீர்த்தனம் (சீர்த்தனம்)**

சீர்த்தி என்பது மிகுபுகழ்; சீர்த்தி, கீர்த்தி யானாற் போல், 'சீர்த்தனம்' 'கீர்த்தனம்' ஆயிற்று. சீர்த்தி, சீரர் என்னும் பெயர்களே கீர்த்தி, கீரர் என ஆயிற்று என அறிக. சிறந்த இசையமைப்புடைய பாடலே சீர்த்தன மாம். இது கீர்த்தனை, சங்கீர்த்தனம் எனவும் வழங்கப் படும்.

இவ்வகையில் இராமநாடகக் கீர்த்தனை, நந்தனார் சரிதக் கீர்த்தனை என்பன குறிப்பிடத்தக்கன. இக் கீர்த்தனைகளின் இடை இடையே உரைநடையும் இடம் பெறும். முந்தை நாடகமும் தெருக்கூத்தும் இவ்வகை யிலேயே இயன்றன.

'பசனைக் கோயில்கள்' என்னும் பெயரால் கோயில் விளங்கிய இடங்களிலெல்லாம் பசனைக் கீர்த்தனங்கள் மிக வழங்குகின்றன. கிறித்தவர்களும் வழிபாட்டுக்கு இக்கீர்த்தன முறையைக் கையாண்டனர். 'சர்வ சமய

சமரசக் கீர்த்தனை' என்னும், வேதநாயகர் நூல் இவ் வகையில் சமயப் பொதுமை வாய்ந்து திகழ்கின்றது.

**கீழ்க்கணக்கு**

குறைந்த அடிகளை உடையனவாய், அறம்பொருள் இன்பங்களைப் பற்றிக் கூறும் நூற்றொகுதி கீழ்க்கணக்கு எனப்பெறும். குறைந்த அடிகள் என்பது ஐந்தடியின் ஏறாத அடி என்க.

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்."

—(பன்னிரு. 248)

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் வெண்பாவால் அமைந்தவை என்பது கருதத்தக்கது; கீழ்க்கணக்கு நூல்கள்:

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

**குடைவிருத்தம் (குடைப்பா)**

வேந்தர் வெண்கொற்றக் குடையைக் குறித்து ஆசிரிய விருத்தம் பத்துப் பாடுவது குடைவிருத்தமாகும்.

—(நவநீத. 41)

குடைவிருத்தம் போன்றவற்றைத் "தானை பெற்ற தலைமையோரையன்றி ஏனை முன்னோரைச் சொல்லு தலும் உண்டு" என்று இப்பாட்டியல் கூறும்.

**குதிரை விருத்தம் (குதிரைப்பா)**

குதிரையைப்பற்றி ஆசிரிய விருத்தம் பத்துப்பாடுவது குதிரை விருத்தம் ஆகும். —(நவநீத. 41)

குதிரையைப் பற்றி வெண்பாவினால் பாடப்படின் அது 'குதிரைப்பா' எனப்படும் என்று கூறும் பிரபந்தத் திரட்டு (1 : 15).

**கும்மி**

வெண்டளையான் அமைந்த ஓரெதுகையுடைய எழுசீர்க்கழிநெடிலடிகள் இரண்டுவரப் பாடப்பெறும் பாடல்களைக் கொண்டது கும்மி என்பதாகும். பலபேர் கூடிநின்று ஆடிப்பாடுதலால் கும்மி என்று பெயர் பெற்றது. கும்பல், கும்மிருட்டு, குப்பல், குப்பை முதலிய, 'தொகுதி குறிக்கும் சொற்கள்' பல உளவாதல் அறிக.

ஒவ்வோர் அடியின் நான்காஞ்சீரையும் தனிச் சொல்லாக அமைத்துப் பாடுவதும் கும்மியில் உண்டு. **கொங்கண நாயனார்** அருளிய வாலைக்கும்மி, **மதுரை வாலைசாமி** அருளிய ஞானக்கும்மி முதலியவற்றைக் காண்க. கும்மியைக் 'கொம்மி' என்பார் **வள்ளலார்**. 'நடேசர் கொம்மி' **காண்க.**

கும்மிகள் சந்தம் பலப்பல கொண்டு இயலும் என்பது சாக்கோட்டை உமையாண்டவள் சந்தக் கும்மியால் விளங்கும்.

"கல்லைக் கனிவிக்கும் சித்தனடி — முடி
கங்கைக் கருளிய கர்த்தனடி
தில்லைச் சிதம்பர சித்தனடி — தேவ
சிங்க மடியுயர் தங்கமடி."

என்பது நடேசர் கொம்மியில் ஒரு பாட்டு

"செந்தமிழ் நாடெனும் போதினிலே" எனவரும் பாரதியார் பாடல் கும்மிப்பாட்டேயாம்.

**குலோதயமாலை (குடிவரவு)**

பாட்டுடைத் தலைவன் பிறந்த குடிவரவினை நயமுற விரித்துக் கூறுதல் குலோதயமாலையாம்.

கலிங்கத்துப்பரணி கூறும் 'இராசபாரம்பரியம்' குலோதயச் செய்தியாம். கல்வெட்டுகளில் வரும் மெய்க் கீர்த்திகளும், குடிவரவுரைப்பதுடன், அவர்கள் செய்த செயல்களையும் தலைவன் செய்தவையாகச் சிறப்பித்துக் கூறுவதுண்டு.

''வினிதொழிலாண்ட உரவோன் மருக.''

என்பனபோலப் புறப்பாடல்களில் வருவன குலோதய மாலைக்கு முன்னணியவாம்.

''மானக் குலோதய மாலைகுலந் தான் விரித்தல்.''

என்பது பிரபந்தத்திரட்டு (8).

## குவிபா ஒருபது

இதழ் குவிதலால் பிறக்கும் எழுத்துகளே வரப் பாடப் பெறும் பத்துப்பாடல்களைக் கொண்ட ஒரு சிறுநூல் குவிபா ஒருபதாகும்.

இதழ் ஒட்டப் பிறக்கும் எழுத்துகளும் இதழ் குவிதல் வழியே தோன்றுதலால் அவ்வெழுத்துகளும் இதழ்குவி எழுத்துகளாகவே கொள்ளப்பெறும்.

''உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ்குவிவே''

என்பதனால் இதழ் குவிதலால் பிறக்கும் உயிரெழுத்துகள் இவை என்பது விளங்கும். மெய்யுள் ப், ம், வ், என்பவை இதழ் ஒட்டப் பிறப்பவை.

ப், ம், வ் என்னும் மூன்று எழுத்துகளும், அவற்றின் உயிர்மெய் வரிசை 36 எழுத்துகளும், அம்முன்று வரிசையும் நீங்கிய 15 மெய்களின் வரிசையில் வரிசைக்கு ஐந்தெழுத் தாய்க் கூடிய 75 எழுத்துகளும், உயிர் ஐந்து எழுத்துகளும் ஆக 119 எழுத்துகளும் குவிபாவுக்கு உரிய எழுத்துகளாம்.

இக் குவியெழுத்துகளை விலக்கிப் பாடுவது 'இதழ கல்பா' என்னும் 'நிரொட்டகம்' ஆகும்.

'குவிபா ஒருபது' தண்டபாணி அடிகளாரால் இயற்றப் பெற்றதாகும். 'இதழகல்பா', 'இதழ்குவிபா' காண்க.

**குழமகன்**

குழமகன் = இளமகன்.

கலிவெண்பாவினால் மகளிர் தம் கையிற் கண்ட, இளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து பாடுவது குழமகனாகும்.

"கலிவெண் பாவாற் கையினிற் கண்ட
குழமக னைச்சொலிற் குழமக னாகும்."
—(இலக். பாட். 110)

"மழவும் குழவும் இளமைப் பொருள்."
என்பது தொல். மரபியல்.

இளங்கன்றைக் 'குழக்கன்று' என்பது வழக்காறு.

பெண்மகவானால், குழமகன் மூன்றாம் ஆண்டில் மொழியப்பெறும் என்பர்.

"பேணுதகு சிறப்பிற் பெண்மக வாயின்
மூன்றாம் ஆண்டின் மொழிகுவ குழமகன்."
—(நவநீத. 45. உரை மேற்.)

குழமகன் உலாவரக் கண்டு புகழ்தல் உண்டு என்பது 'பவனிவரு குழமகன்' என்னும் பிரபந்தத்திரட்டால் (14) அறியவரும்.

குழமகன், மகவைப்புகழ்வதாக அமைந்தது. பாலனைப் பழித்தல் என்னும் துறை, இதற்கு எதிரிடைப்பட்டது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றிய,

"கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பலரொடு மிலைந்து

குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்.''

என வரும் இடைக்குன்றூர்கிழார் பாட்டு (புறம் 77) குழமகன் சிறப்பை அழகுற விளக்கும்.

**குளுவ நாடகம்**

'குளுவ நாடகம்' என்னும் பெயர், இது கூத்து வகையைச் சேர்ந்ததொரு நூல் என்பதை வெளிப்படுத்தும். கூத்து வகை நூல் எனின் இசையும் இயலும் இசையாமல் இயலாமை விளங்கலாம்.

காப்பு, தோடையம், மங்கலம், தலைவன் புகழ்பாடல், குளுவன் தோற்றம், சித்துவித்தை கூறல், சிங்கன் வருதல், பறவைகள் வருதல், கண்ணிகுத்தி வேட்டையாடல், பறவைகளைப் பங்கிடல், பரிசுபெறல், சிங்கன் சிங்கியைச் சந்தித்தல், வாழ்த்துதல் என்னும் பகுதிகளையுடையதாகக் குளுவ நாடகம் இயல்கின்றது.

தமிழ்க் கோயிலாகத் தம் குடியிருப்பைக் கொண்டிருந்த அழகிய சிற்றம்பலக் கவிராயரின் மிதிலைப்பட்டித் தலைவனாக இருந்தவன் சின்னமகிபன் என்பான். அவன் மேல் எழுந்தது சின்னமகிபன் குளுவ நாடகமாகும்.

'' கல்லிடும் பச்சி பல்லைக் காட்டுதடா
தமிழருமை யறியா மல்சல சலென்று
கல்வி பண்ணுவோ ருடையபேச் சைக்கேளான்
காண்டீபன் சின்னன்.''

என வரும் பகுதியால் பாடிய புலவன் தகுதியும் பாட்டுடையான் தகுதியும் விளங்கும். குறவஞ்சியில் இடம் பெறும் சிங்கன் சிங்கியர் குளுவ நாடகத்திலும் இடம்பெறுகின்றனர். ஆயின், அவர்களுக்குத் தலையிடம் இல்லை; துணையிடமே யுண்டு. குளுவ நாடகத்தில் குளுவனுக்கன்றோ முதலிடம்; சிங்கனுக்குச் சிங்கியை இணைக்கும் இந்நாடகத்தில்

தலைவன் குளுவனின், குளுவச்சியைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. அவன்தான்,

" ஏகாந்த யோகக் குளுவன் நானே" (11)

என்று ஆடிப்பாடுகிறானே! இனிக் குளுவச்சியைத் தன்னை காட்ட விடலாமா?

**குறத்தியர் பாட்டு**

இது குறம், குறவஞ்சி, குறத்திப்பாட்டு எனவும் படும். 'குறம் பாடல்' என்னும் வழக்கு குறத்தியர் பாட்டின் வழியே வந்ததாம்.

'குறி கூறுதல்' என்பது குறத்தின் வழிவந்த ஆட்சியே; குறிஞ்சிநில வாணர் குறவர் என்பதும் அவர்கள் வெறியாட்டயர்ந்து வேலனை வேண்டலும், கட்டு, கழங்கு, குறி எனப் பார்த்தலும் இலக்கியப் பழமை வாய்ந்தவை.

'குற்றாலக் குறவஞ்சி' இவ்வகை நூல்களில் முதற் பட்டதும் முதன்மையுற்றதுமாம்.

பிறநாட்டுப் பிற சமயவாணரையும் இக்குறவஞ்சி கவர்ந்தமை, வேத நாயக சாத்திரியார் இயற்றிய பெத்தலேம் குறவஞ்சியால் அறியப்படும்.

வெண்ணிலாவின் தலைமேல் மாந்தன் அடிவைத்த இந்நாளிலும், கோல் எடுத்துக் குறி சொல்லும் குறிஞ்சி நிலவாணர் உண்மை குறவஞ்சியின் எச்சம் எனலாம்.

தலைவன் உலா வரவு, மகளிர் காமுறுதல், மோகினி வரவு, உலாப் போந்த தலைவனைக் கண்டு மயங்கல், திங்கள், தென்றல் முதலிய உவாலம்பனம் (வகை), பாங்கி உற்றது என்ன என்று வினாதல், தலைவி பாங்கியோடு உற்றது உரைத்தல், பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியொடு தலைவன் அடையாளங் கூறல், குறத்தி வரவு,

தலைவி குறத்தியை மலைவளம் முதலியன வினவல், குறத்தி மலைவளம் நாட்டு வளம் முதலிய கூறல், தலைவன் தல வளம் கிளைவளம் முதலிய கூறல், குறி சொல்லி வந்தமை கூறல், தலைவி குறி வினவல், குறத்தி தெய்வம் பராவல், குறி தேர்ந்து நல்வரவு கூறல், தலைவி பரிசில் உதவி விடுத்தல், குறவன் வரவு, புள்வரவு கூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத்தேடல், குறவன் பாங்கனோடு குறத்தி அடையாளங்கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவன் அணி முதலிய கண்டு ஐயுற்று வினவலும், குறத்தி விடைகூறலுமாகக் கூறல் பெரும்பாலும் இவ்வகை உறுப்புக்களால் அகவல், வெண்பா, தரவு கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம் ஆகிய செய்யுள் இடைக்கிடை கூறிச் சிந்து முதலிய நாடகத் தமிழாற் பாடுவது குறத்திப் பாட்டு எனப்படும்.

இனி, முக்காலமும் உணர்ந்த குறத்தி குறி சொல்வதாக அமைந்ததே குறத்திப் பாட்டு என்பர் பன்னிருபாட்டியலார் (336).

> '' இறப்பு நிகழ்பெதிர் பென்னுமுக் காலமும்
> திறம்பட உரைப்பது குறத்திப் பாட்டே.''

பிரபந்த தீபம் (72) 'குறத்திப் பாட்டின்' இலக்கணத்தை விரிவுற இயம்புகின்றது.

> '' குறத்திப் பாட்டே கூறும் இலக்கணம்
> தலைவன் உலாவரத் தையலர் காமுறல்
> மோகினி வரவு மொழிதல் உலாவந்த
> தலைவனைக் கண்டு தான்மயங் குறுதல்
> உவாமதி முதலிய உவாலம் பனத்தைப்
> பாங்கி உற்றதென்னென வினாவல்
> தலைவி பாங்கியோ டுற்ற துரைத்தல்
> பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல்
> தலைவி பாங்கியைத் தூது வேண்டல்

தலைவி சகியொடு தலைவன் குறிகூறல்
குறத்தி வரவு கூறல் தலைவி
குறத்தியை மலைவளம் முதலிய வினாவல்
குறத்தி நிலவளம் மலைவளம் கூறல்
தலைவன் குலவளம் நிலவளம் சாற்றல்
குலமகள் குறத்தியைக் குறிதேற வினாவல்
குறத்தி தெய்வம் பராவலங் குறி தேர்ந்து
நல்வரவு நவிலல் தலைவிபொருள் நல்குதல்
குறவன் வரவு புள்வரவு கூறுதல்
கண்ணி குத்தல் கான்பறவை படுத்தல்
குறத்தியைத் தேடல் குறவன் பாங்கனோடு
குறத்தி குறிகூறல் குறத்தியைக் கண்ணுறல்
குறவன் குறத்தியை ஐயுற்று வினாவல்
வினாவிற் குறுவிடை குறத்தி விடுதல்
இவ்வகை உறுப்பெலாம் இயையப் பொருந்திக்
கலித்துறை அகவல் கழிநெடில் விருத்தம்
கலிவிருத்தம் வெண்பா தரவு கொச்சகம்
பதமுதல் சிந்து பாடுதல் பண்பே.''

**குறவஞ்சி** வகையுள் ஞானக்குறவஞ்சி என்பதொரு வகை. அது சிங்கன் சிங்கி உரையாகச் செல்லும் என்பது பீருமுகம்மது அருளிச் செய்த ஞானரத்தினக் குறவஞ்சியால் விளங்கும்.

'' ஆதிக்கு முன்னம் அநாதியும் என்னடி சிங்கி! அஃது,
அந்தக் கருக்குழி முந்த இருளறை சிங்கா!
ஆதியாய் வந்த அரும்பொருள் ஏதடி சிங்கி—அது
சோதியில் ஆதி சொரூபாய் எழுந்தது சிங்கா!''

இக்குறவஞ்சி 63 கண்ணிகளையுடையது.

**குறம்**

குறம் என்பது குறி சொல்லுதல் என்னும் பொருளது. பாட்டுடைத் தலைவனைக் காமுற்ற தலைவி ஒருத்தியைக் கண்டு குறத்தி குறிகூறுவதாக வருவது குறமாகும்.

குறம் என்னும் நூலில் குறத்தியின் கூற்று மட்டுமே வரும். ஆனால், குறவஞ்சி என்னும் நூலில் குறத்தி கூற்றுடன் பிறர் பிறர் கூற்றும் பிற பிற செய்திகளும் உண்டாம்.

குறம் என்னும் வகையுள் குறிப்பிடத்தக்க ஒன்று மீனாட்சியம்மை குறம். அது காப்புத் தொடங்கி வாழ்த்துடன் 52 பாடல்களால் முடிகின்றது. கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் சிந்து கொச்சகக்கலி ஆகிய பாவகைகளைக் கொண்டுள்ளது.

"முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா;
முறத்தில் ஒரு படிநெல்லை முன்னேவை அம்மே;
இந்நாழி நெல்லையும்முக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட எண்ணினபோ தொற்றைபட்டதம்மே;
உன்னாமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார்;
உனக்கினியெண் ணினகருமம் இமைப்பினில்கை கூடும்
என்னாணை எங்கள்குலக் கன்னிமார் அறிய
எக்குறிதப் பினும்தப்பா திக்குறிகாண் அம்மே."

எனவரும் பாடல் நெற்குறி கூறுமுறையைக் கூறுவதாம். கைக்குறி, நிமித்தக்குறி என்பனவும் இக்குறத்தில் விரித்துரைக்கப்பெற்றுள. குறத்தியர் பாடல் பார்க்க.

**குறள்**

குறள்வெண்பா யாப்பில் அமைந்தநூல் குறள் எனப் படுகின்றது. திருக்குறள் முப்பாலைக்கூற வீட்டுப்பால் கூறுவதாக ஔவைக் குறள் விளங்குகின்றது. அட்டாங்க யோகக் குறள், கிறித்துமொழிக் குறள், அருட்குறள்; புதுமைக்குறள் என்பனவும் குறள் யாப்பால் அமைந்த நூல்கள்.

ஆளுடைய பிள்ளையார் பாடும் திருவிருக்குக் குறள், எழுத்தெண்ணிப் பாடும் இருசீரடிச் சிறுமையால் அமைந்த பெயராக உள்ளது.

" நீல மாமிடற்
றால வாயிலான்
பால தாயினார்
ஞாலம் ஆள்வரே."

இஃது ஆலவாய்த் திருவிருக்குக் குறள்.

## குறியறி சிந்து

உலாப்புறத்துக் கண்ட நங்கை ஒருத்தியின் இருப்பிடத்தைக் கேட்டு அறிதலும், ஆங்குச் சேர்ந்து அவளைக் கண்டு மகிழ்தலும், சிந்துப்பாவால் பாடப்பெறுவது 'குறியறி சிந்து' என்னும் பெயர்பெறும்.

" குறியகவல் நாடுபிற சேறல் குறியறி சிந்து."

என்பது பிரபந்தத்திரட்டு (17).

## குறுந்தொகை

" குறளடிச் செய்யுள் குறுந்தொகை யாமே"

என்பது குறுந்தொகை இலக்கணம் (பிரபந்ததீபம் 53).

குறளடி என்பது நான்குமுதல் ஆறெழுத்துள்ள நாற்சீரடி என்பது தொல்காப்பிய நெறி. ஆயின் அந்நெறி சங்கத்தார் காலத்திற்குப் பின்னே போற்றப்பெறவில்லை. 'இருசீரடிகுறளடி' எனச் சீரெண்ணிக்கை கொண்டு அடி அளவிடப்படுவதாயிற்று. ஆகலின் குறளடி அல்லது இருசீரடி கொண்டு பாடப்பட்ட நூல்வகை குறுந்தொகை எனப்பட்டதாம்.

" அறஞ்செய விரும்பு."

" ஆறுவது சினம்."

என்பனபோல இயல்வனவும் குறளடி வஞ்சிப்பா நடையினவும் இக்குறுந்தொகையாவதாம்.

இனிச் சங்கத்தார் குறுந்தொகை என்னும் தொகைநூலோ, நெடுந்தொகை என்னும் அகநானூற்றடியளவை

நோக்கக் குறுந்தொகை ஆயிற்றாம். 'ஐங்குறுநூறு' என்பதும் அத்தகையதே.

**கூடல்மாலை**

கூடல், கூட்டம், புணர்ச்சி, கலவி இன்னவெலாம் ஒரு பொருள். மகளொருத்தி தானே விரும்பி வந்து தலைவனைக் கூடுதல் கூடல்மாலைப் பெயரமைந்த நூற் பொருளாம்.

"மான்வலிய மேவவரல்கூடல் மாலையாம்"
(பிரபந்தத்திரட்டு 8)

மான்—மான்போலும் மங்கை.

**கூடற்சதுக்கம்**

நான்கு திருவிடங்கள் ஒரே பாடலில் வருமாறு ஞான சம்பந்தர் பாடிய ஒரு பதிகம், 'கூடற்சதுக்கம்' எனப்படு கின்றது. சதுக்கம்—நான்கு. கூடல்—இணைந்திருத்தல்.

திருக்கயிலாயம், திருவானைக்கா, திருமயேந்திரம், திருவாரூர் என்னும் நான்கு இடங்களிலும் கோயில் கொண்ட இறைவரைப் பத்துப் பாடல்களிலும் பாடி யுள்ளார்.

"மண்ணது வுண்டரி மலரோன் காணா
வெண்ணாவல் விரும்புமயேந்திரரும்
கண்ணது வோங்கிய கயிலை யாரும்
அண்ணல் ஆரு ராதியானைக்காவே."

கூடற்சதுக்க முதற்பாட்டு இது.

இனிக் 'கூட சதுர்த்தம்' என்னும் மிறைப்பா (சித்திரக் கவி) இதனின் வேறுபட்டதாம். அஃது, ஒரு பாடலின நான்காம் அடியில் உள்ள எழுத்துகள், மற்றை மூன்று அடிகளுள்ளும் மறைந்து நிற்குமாறு இயற்றப்படுவதாம். இதில், கூடம் என்பது 'மறைவு' என்னும் பொருட்டது.

**கேசாதிபாதம் (முடிமுதல் அடி)**

கலிவெண்பாவால் முடிமுதல் அடியளவும் கூறுவது கேசாதிபாதமாகும்.

"கலிவெண் பாவான் முடிமுதல் கால்வரை
கிளத்தல் சேகாதி பாத மாகும்."

—(முத்துவீ. 1107)

"கேசாதி பாதமே கலிவெண் பாவால்
முடிமுதல் அடிவரை மொழிவர்நா வலரே."

—(பிரபந்ததீபம் 73)

முடிமுதல் அடியும், அடிமுதல் முடியும் புனைந்துரைக்கும் வனப்பு சங்கச் சான்றோரிடை அரும்பி, காப்பிய நூலாரிடை முகிழ்த்து, மெய்யடியாரிடத்துத் திரளுற்றுச் சிற்றிலக்கியப் பாவலரிடத்தே மலர்ந்து மணம் பரப்பியதெனலாம்.

பெரியாழ்வார் அருளிய 'சீதக்கடல்' என்னும் திருப்பாசுரம், 'திருப்பாதாதி கேசவண்ணம்' எனப்படுவதும் "திருப்பாதகேசம்" எனத் தொகை நிலையில் கூறப்படுவதும் நோக்கத் தக்கவை.

"சீதக் கடலுள் ளமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே,
பவளவா யீர்வந்து காணீரே."

எனத்தொடங்கும் சீதக்கடல், பாதம், விரல், கணைக்கால், முழந்தாள், குறங்கு, முத்தம், மருங்கு, உந்தி, உதரம், திருமார், தோள், கைத்தலம், கண்டம், தொண்டை, வாக்கு, நயனம், வாய், முறுவல், மூக்கு, கண்கள், புருவம், குழை, நெற்றி, குழல்கள் என இருபது திருப்பாடல்களில் அடுக்கியும் அடக்கியும் அடிமுதல் முடிகாறும் இருபத்து நான்கு உறுப்புகளைக் கூறுதல் அருமையும் அழகும் உடையதாம்.

ஆழ்வார் தாயாக மாறிப்புக்கு இருந்தாலன்றித், தாயர்தம் ஆர்வ முத்தத்திற்கு உறையுளாம் மழலைக்குறி முத்தத்தை 'முத்தம்' என எழில்மிகு பெயரிட்டு ஆள இயலுமோ? அங்கமாலை, பாதாதிகேசம் பார்க்க.

**கைக்கிளை**

ஒருதலைக் காமத்தினை ஐந்து விருத்தப்பாக்களால் கூறுவது கைக்கிளை எனப்பெறும்.

> "ஒருதலைக் காமம் ஒரைந்து விருத்தம்
> கருத உரைத்தல் கைக்கிளை யாகும்."
>
> — (இலக். பாட். 67)

"கைக்கிளை தானே மூன்று பாட்டாய் வருதலாம்" என்றும், "இவையிற்றை (வெண்பா, கலித்துறை)த் தனித் தனியே முப்பது முப்பதாக ஒருதலைக்காமமாகப் பாடுவது கைக்கிளை என்று வழங்கப்படும்" என்றும் நவநீதப் பாட்டியல் உரையாளர் கூறுவர் (42).

செய்யுள் வகைமையுடையார்,

> "கைக்கிளை தானே கருதும் விருத்தம்
> ஐந்தும் மூன்றும் ஆகவும் பெறுமே."
>
> —(நவநீத. 42 மேற்.)

என்பார்.

> "ஐந்து விருத்தத் தாலே ஒருதலைக்
> காமத்தைக் கூறுவது கைக்கிளை."
>
> "அன்றியும் வெண்பா ஆறைந் திரண்டு
> பாடுவததல்பாற் படுமென மொழிப."
>
> —(முத்துவீரி. 1109—1110)

எல்பார், முத்துவீரியமுடையார் (ஆறைந்திரண்டு—முப்பத்திரண்டு). 32 பாடல்களால் பாடப்படுவது கைக்கிளை என்பதை,

> "கைக்கிளை என்ப தொருதலைக் காமத்தை
> நாலெட்டுச் செய்யுளில் நவிலுவர் புலவர்"

என்று கூறும் பிரபந்ததீபம் (74).

கைக்கிளையாவது ஒருதலைக் காமம் எனப்படும். திரையுலா வந்த 'ஒருதலை ராகம்' கைக்கிளைப் பொருளதே.

கைக்கிளை வெண்பா யாப்பிலும் மருட்பா யாப்பிலும் வருமெனத் தொல்காப்பியர் குறிப்பார். கலிப்பாவகையும் கைக்கிளைப் பொருளில் வருதல் கலித்தொகையால் அறியவரும்.

கைசிறுமைப் பொருட்டெனக் கொண்டு கைக்குடை, கைவாய்க்கால் முதலியவற்றை எடுத்துக்காட்டி விளக்குவார் இளம்பூரணர்.

கைக்கிளை ஆண்பால் ஒருமைத்தாகத் தொல்காப்பியம் குறித்தும் அதனை ஆண்பாற்கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை எனப்பங்கிட்டுக் கொண்டு பலபட விரித் துரைத்தன பிற்பட்டநூல்கள்.

முத்தொள்ளாயிரப் பாடல்களாகக் கிடைத்தனவற்றுள் பெரும்பாலன பெண்பாற்கைக்கிளைப் பாடல்களேயாம்.

சங்கச்சான்றோர் பாடிய கலித்தொகையில் இடம் பெற்ற கைக்கிளைப் பாடல்கள் ஆண்பாற்பட்டனவே என்றறிதல் தெளிவிக்கும்.

கைக்கிளை மாலை

ஒருதலைக் காதலால் வருந்துவது பற்றி அந்தாதியாகப் பாடப்பெறுவது கைக்கிளை மாலை எனப்பெறும்.

வருந்தச் செய்வன இவை என்பதையும், வருத்தும் மன்மதன் அம்புகள் இவை என்பதையும் பன்னிரு பாட்டியல் விரித்துக்கூறும்:

"இரங்க வருவது மயங்கிய ஒருதலை
இயைந்த நெறியது கைக்கிளை மாலை."

"தாயர் சேரியர் ஆயர் தீங்குழல்
தென்றல் சேமணி அன்றில் திங்கள்
வேலை வீணை மாலை கங்குல்
காமன் ஐங்கணை கண்வளர் கனவென
எஞ்சிய நன்னிற வேனில் குயிலே
கொஞ்சிய கிள்ளை கொய்தளிர்ச் சேக்கை
பயில்தரு நன்னலம் பாங்கர் பாங்கியர்
இயன்ற பருவரல் ஏன்மனார் புலவர்."

"முல்லை அசோகு மாந்தளிர் தாமரை
யல்லி நீலம் ஐங்கணை யாகும்."
—(பன்னிரு 295—97)

தாமரையல்லி — தாமரையாகிய அல்லி என்க.

கைக்கிளைக்கும் கைக்கிளை மாலைக்கும் பொருளொப்புடையதேனும் முடிமுதல் தொடையாகப் பாடுதல் மாலைக்குரியதென வேறுபாடற்க. இனிப் பாடல் எண்ணிக்கை பகராமையும் கருதுக.

இனிக் கைக்கிளை மாலை மருட்பாவாற் பாடப்படும். அல்லாதவழி ஆசிரியம் வஞ்சி ஒழிந்த பாக்களாலும் இனங்களாலும் பாடப்பெறும். சிறுபான்மை ஆசிரியப் பாவானும் பாடப்படும் என்றும் கூறுவர் (பன்னிரு 295—97 உரை).

**கையறுநிலை**

கையறுதல் — செயலற்று ஒழிதல், செயலொழிந்து போகத்தக்க கவல்வினை யூட்டுவது கையறுநிலையாம்.

வெற்றி வேந்தர் விண்ணுலகு புக்க போழ்தில் புலவர்கள் ஆற்றாது இரங்கிப் பாடுதல் கையறுநிலை என்னும் நூலின் பாற்படும்.

கையறுநிலை கலிப்பா, வஞ்சிப்பா என்னும் இரண்டு வகைப்பாக்களும் ஒழிந்த வெண்பா, அகவற்பாக்களால் பாடப்பெறும்.

"வலங்கெழு வேந்தர் வான்புகக் கவிஞர்
கலங்கித் தொடுப்பது கையறு நிலையே."
"வெற்றி வேந்தன் விண்ணகம் அடைந்தபின்
கற்றோர் உரைப்பது கையறு நிலையே."
"கலியொடு வஞ்சியிற் கையற வுரையார்."

—(பன்னிரு. 357—360)

இனிக் கையறுநிலையினைக் "கணவனொடு மனைவி கழிந்துழி அவர்கட்பட்ட அழிவுப் பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தித் தாமிறந்து படாதொழிந்த ஆயத்தாரும் பரிசில் பெறும் விறலியரும் தனிப்படர் உழந்து செயலறு நிலையைக் கூறுவது" என்பர்.

"கணவனொடு மனைவி கழிந்துழி அவர்கட்
பட்ட அழிவுப் பாக்கிய மெல்லாம்
பிறருக் கெடுத்தறி வுறுத்தித் தாமும்
இறந்துபடா தொழிந்த ஆயத் தாரும்
வேண்டு வனபெறும் விறலியர் குழாமும்
தனிப்படர் உழந்த செயலறு நிலையை
நிகழ்த்துவது கையறு நிலையா கும்மே."

—(முத்துவீ. 1100)

புறநானூற்றில் இடம் பெற்றுள்ள கையறுநிலைப் பாடல்கள் காலமும் இடமும் சூழலும் எட்டாநிலைக்கு மாறிய இந்நாளிலும், கண்ணீர் பனிக்கச் செய்யும் திறத்தை, 'உணர்ந்து கற்றோர்' அறிவர். "கல்லறைப் பாடலை" எடுத்தெடுத்தோதி 'என்னே! என்னே!' என்னும் ஆங்கிலத் தேர்ச்சியர், கண்ணோட்டம், கன்னித் தமிழ்க் கண்ணீர்க் குறையுளாம் கையறுநிலைப்பாடலின் பக்கம் கண்ணோட்டம் கொண்டுகூடக் கண்ணோட விடுவது இல்லை என்பதும் ஒரு கையறு நிலையே.

### கொம்பில்லா வெண்பா அந்தாதி

கொம்பு எழுத்து வாராமல் பாடப்படுவதொரு வெண்பா அந்தாதி இது. கொம்பு ஒற்றைக் கொம்பு,

இரட்டைக் கொம்பு என்பவை. இவ்வெழுத்துகள் பாடலில் இடம் பெறாவண்ணம் பாடப்படுவதாயிற்று. இது, ஒலி யமைதி நோக்கிய பனுவல் பிரிவாம். இதழகல்பா, இதழ் குவிபா என்பன போல் கொள்க.

'திருச்சுழியல் கொம்பில்லா வெண்பாவந்தாதி' இவ் வகைக்கு எடுத்துக்காட்டாம்.

**கோபப் பிரசாதம் (காய்வருள்)**

சினமும் அருளும் ஆகிய இருவகை முரணியல்களையும் இறைவன், நெறியுறச் செய்தமையை மாறிமாறிவர உரைப்பதொரு நூல்வகை 'கோபப் பிரசாதம்' எனப் படுகின்றது. காய்தலும் அருளலும் ஆகிய இது, காய் வருளாம்.

பிரசாதம் என்பது அருட்கொடையாம். இந்நூலின் உட்கிடைப்பொருளை,

" இன்னோர்க் காய்ந்தனர் இன்னோர்க் கருளினர்
என்றறிய உலகின்
முன்னே உரைப்பதில்லை.''

எனவரும் நக்கீர தேவநாயனார் இயற்றிய கோபப்பிரசாத அடிகள் விளக்கும். இந்நூல் 100 அடிகளைக்கொண்ட இணைக்குறளாசிரியப்பாவால் அமைந்ததாகும்.

" அண்ட வாணனுக் காழியன் றருளியும்
உலகம் மூன்றும் ஒருங்குடன் படைத்த
மலரோன் தன்னை வான்சிரம் அரிந்தும்.''

என நூல் தொடக்கத்திலேயே அருளலும் ஒறுத்தலும் இருத்தல் கண்டு கொள்க.

**கோமூத்திரி (ஆநீர்த்தடம்)**

ஆன் நடந்து கொண்டு நீர்விடுதலால் உண்டாகும் தடத்தின் வடிவாக அமைக்கப்படுவதொரு கோட்டிலே

எழுத்துகள் அமையப்பாடும் பாடல் 'கோமூத்திரி' எனப்படும்.

நான்கடிப் பாடலில் முன்னிரண்டடிகளையும் ஒரு வரிசையாயும் பின்னிரண்டடிகளையும் ஒரு வரிசையாயும் நேர் கீழே எழுதினால், இரட்டைப்படையாக வரும் எழுத்துகளெல்லாம் ஒரே எழுத்துகளாக அமைந்து ஒரெழுத்து மேலும் ஒரெழுத்துக் கீழுமாகக் கோத்துப் படிக்க அப்பாடல் அமைப்பு மாறிநின்று இருக்கும்.

" ப ரு வ மா க வி தோ க ன மா லை யே

ம ரு வு மா சை வி டோ க ன மா லை யே

பொ ரு வி லா வு ழை மே வ ன கா ன மே

வெ ரு வ லா யி ழை பூ வ ணி கா ல மே

1, 3; 2, 4 என அடிகளை இயைத்துக் காட்டியது இது.''

இவ்வகையில் திருக்கோமூத்திரிப்பதிகம் தேவாரத்தில் உள்ளது. அஃது ஆளுடைய பிள்ளையார் அருளியது. பெயர் இவ்வாறு இருந்தாலும், அதன் திருக்கடைக்காப்பு 'வழிமுடக்கு மாவின் பாய்ச்சல்' என்றுளது. கோமூத்திரி வகைக்கு இப்பதிகப் பாடல்கள் இயையாமையாலும், மாவின் பாய்ச்சல் என்பது 'குதிரைப் பாய்ச்சல்' எனப்படும் 'சதுரங்க துரககதி பந்தம்' போல்வதொரு மிறைக்கவி யாதல் வேண்டும். சதுரங்க துரககதிபந்தம் ஆகாதோ இஃது எனின், 64 கட்டங்களுள் அடக்கிக் காட்டத் தக்க பாட்டு அதுவாகலின் அவ்வகைப் படுத்தக்கூடவில்லை.

''திருக்கோமூத்திரி'' என்னும் பதிகக் குறிப்பு ஆய்த் தக்கதாம். பூ மகனூர் எனத்தொடங்கும் திருப்பிரமபுரப் பதிகம் காண்க.

**கோயிலொழுகு**

கோயில் நடைமுறை ஒழுங்குகளைக் கூறும் நூல் கோயிலொழுகு என்பதாம்.

'திருவரங்கக் கோயிலொழுகு' என்பதொரு நூல் குறிப்பிடத் தக்கது.

கோயிலொழுகு போல்வதொரு நூல் 'சீதளப் புத்தகம்' என்பது. 'சீர்தளம்' என்பது சீதளமாயிற்று. திருக்கோயில் என்பது அதன் பொருள். திருக்கோயில் திருப்பணி, கோயில் நடைமுறை பற்றிய செய்திகளைக் கூறும் நூலே 'சீதளப் புத்தகமாம்'; மதுரைத் திருக்கோயில் திருப்பணிகளைக் குறிக்கும் 'சீதள நூல்' உண்டு.

திருப்பணி மாலை என்பதொரு நூலும் கோயில் திருப்பணி பற்றியதே. 'மதுரைத் திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை' என்பது குறிப்பிடத் தக்கது.

பழம்பாண்டியர்கள் திருப்பணி தொடங்கி நாயக்க மன்னர்கள் காலம் வரை நிகழ்ந்த திருப்பணிகளை எடுத்துரைக்கும் திருப்பணிமாலை, நல்ல பெண் என்பாள் செய்த திருப்பணியை,

"மண்ணினுள் ளோர்களும் யாவரும் போற்று மதுரைச் சொக்கர்க்
கண்ணிய சந்நிதி வாசலி லேநல் லழகு பெறத்
திண்ணிய பேரருள் நந்தீ சரைப்பிர திட்டை செய்தாள்
பெண்ணினி னல்லபெண் ணென்றே பெயர்மிகப் பெற்றவளே."

என்கின்றது. இதன் பாடல்கள் பெரும்பாலனவும் கட்டளைக் கலித்துறையால் அமைந்தவை. சிதைவின்றிக் கிடைத்துள்ள பாடல்கள் நூற்று ஆறாம்.

**கோவை**

"எடுக்கவோ கோக்கவோ" என்னும் துரியன் நயத்தகு நாகரிக வினவல் நாடறிந்த செய்தி.

கோக்கப்பட்டது யாது? அது, கோவை என்க.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய முப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலமைந்த

அதின்புடைக்காமப் பகுதியவாம் களவொழுக்கத் திணையும் கற்பொழுக்கத்திணையும் கூறுதலை எல்லையாகக்கொண்டு கட்டளைக் கலித்துறை நானூறாகத் திணைமுதலாகத் துறையீறாகிய பன்னிரண்டு அகப்பாட்டுறுப்பும் வழுவின்றி வரப்பாடுவது அகப்பொருட்கோவை எனப்படும் கோவை யாகும்.

"யாவையும் பாடிக் கோவைபாடுக" என்னும் முன் மொழி, கோவையின் அருமையை உணர்த்தும். "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்னும் திரு மொழியோ, சுவைநலப்பேற்றினைச் சொட்டச் சொட்ட உரைக்கும்.

"கோவை என்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூறென்ப."

"களவினுங் கற்பினும் கிளவி வகையாற்
றிணைநிலை திரியாச் செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூ றுரைப்பது
கோட்ட மில்லாக் கோவை யாகும்."

—(பன்னிரு. 341-342.)

"முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முகந்து
களவு கற்பெனும் வரைவுடைத் தாகி
நலனுறு கலித்துறை நானூ றாக
ஆறிரண் டுறுப்பும் ஊறின்றி விளங்கக்
கூறுவ தகப்பொருட் கோவை யாகும்."

—(இலக். பாட். 56)

கோவை வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண்ணம் இவற்றாலும் வழங்கப்படும் என்பார்.

"முதல்கரு உரிப்பொருளொரு மூன்றும்
அடைந்து கைக்கிளை அன்புடைக் காமப்

பகுதிய வாங்கள ஒழுக்கமும் கற்பும்
இயம்புத லேயெலை யாகக் கட்டளைக்
கலித்துறை நானூற் றாற்றிணை முதலாகத்
துறையீ றாகச் சொல்லப்பட்டும்
ஈறா றகப்பாட் டுறுப்பும் இயையக்
கூறுவ தகப்பொருட் கோவையா மற்றிஃ
தகவல்வெண் பாக்கலி யடுக்கியல் வண்ண
வஞ்சி யினானும் வழுத்தப் படுமே.''

—(முத்துவீ. 1042)

தொல்காப்பியனார் கூறும் அகப்பொருட் கூற்றுவகைகளே இக்கோவைப் பனுவலுக்குக் கொடைவள வைப்பகமாம். கோவைக்கு எடுத்துக்காட்டுத் 'திரு' வைக் கூட்டுக.

அகப்பொருட்கோவை பார்க்க.

**கோவைச் சதகம் (கோவை நூறு)**

முடிமுதல் தொடை இயைபுற, நூறு பாடல்களால் அமைந்த நூல் கோவைச்சதகமாகும். கோவை என்னும் சொல்லாட்சியால், அகப்பொருட் கோவைக்குரிய கட்டளைக் கலித்துறைப்பாவான் இயல்வது என்பது விளங்கும்.

நெல்லை மாவட்டம் சார்ந்த வடகரைக் குறுநில மன்னர்மேல் புலவர் பெரியசாமி என்பவரால் இயற்றப் பட்ட 'கோவைச்சதகம்' எடுத்துக்காட்டாம்.

**சக்கரமாற்று**

ஒன்றன் பெயர்களையெல்லாம் முறையே கூறிச் சக்கரச் சுழற்சிபோல அவை அடுத்தடுத்துத் தலைமை பெறுமாறு பாடுதல் சக்கரமாற்று எனப்படுகிறது. இவ் வகையில் திருச்சக்கர மாற்றாகத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று விளங்குகின்றது. அது சீர்காழிப் பதிகமாகும்.

" பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருப் பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய முள்ளிடங் காதி யாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம்நாம் பரவு மூரே."

இது பதிக முதற்பாடல். பின்னர் வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம் எனப்பத்துப் பெயர்கள் பத்துப்பாடல்களிலும் முன்னாக விளங்கச் சக்கரமுறையில் சுழல்வதால் இப்பெயர் பெற்றதாம். இச்சக்கரமாற்றி லேயே அவ்வூர்க்கு அவராலேயே மேலுமொரு பதிகமும் பாடப் பெற்றுளது. அது விளங்கிய சீர்ப்பிரமனூர் என்று தொடங்குகின்றது.

**சகத்திராங்கி (ஆயிரம்)**

ஒரு பாடல்போல் ஒருபாடல் இல்லாமல் தொடர்ந்த ஆயிரம் பாடல்களையுடையது சகத்திராங்கி எனப்படும் ஆயிரம் என்னும் நூலாம்.

ஒரு பாடலை அடுத்தும் அதே பாடலாக இல்லா திருத்தல் என்பதும், பாடல் ஆயிரம் என்பதும் இந்நூல் அடிப்படை. இருபாடல் தானும் இயையாமை என்பது குறிப்பாம்.

" பாவெவையும் கூறியொன்று பார்த்தாலொன் றாயிராது
ஒய்விலெண் ணாயிரமா உற்றதுதான்— மேவு
சகத்திராங்கி."

"ஓய்வில் எண், ஆயிரமா உற்றது" எனப்பிரித்துப் பொருள் காண்க. இன்றேல் எண்ணாயிரமாகி விடும்.

'திருவரங்கத் திருவாயிரம்' 'தில்லைத்திருவாயிரம்' 'பழனித்திருவாயிரம்' 'கதிராயிரம்' 'தெய்வத்திருவாயிரம்' என்பவை தண்டபாணி அடிகள் அருளியவையாம். ஆனால் இவ் ஆயிரங்கள் ஒன்று பார்த்தால் ஒன்றாய் இராதவையல்ல.

'ஏழாயிரப் பிரபந்தம்' என ஒரு நூலும் அடிகளார் யாத்துளார். அதிலுள்ள பாடல்கள் வாழ்த்துடன் 7008.

**சட்கம் (அறுமணி)**

ஆறுபாடல்களையுடையதொரு சிறு நூல் சட்கம் எனப்படும். சட்கத்தை விருதை சிவஞானயோகிகள் அறுமணி எனப் பாடியுள்ளார். தண்டபாணியடிகளும் இயற்றியுள்ளார். இவ்வறுமணி ஒரேவகை யாப்பால் ஆறு பாடல்களும் பாடப்படுவதாம். சஷ்டி-சட்டி-ஆறு

'அலங்கார சட்கம்' பார்க்க.

**சடானனம் (அறுமணிமாலை)**

நான்மணிமாலைக்குரிய வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம் இவற்றுடன் கலிப்பாவும், தாழிசையும் இயன்று அறுமணியாகித் தொடர்வது சடானனம் எனப் படும்.

"கலிப்பாவும் தாழிசையும் நான்மணிமேற் காட்டல்
நலத்துறுச டானன நற்பா."

என்பது பிரபந்தத் திரட்டு (13)

நான்மணிமாலை காண்க.

**சண்டை**

தலைவன் நாடு ஊர் சிறப்பு ஆயவற்றைக் கூறி, வஞ்சினம் கூறல், போர்புரிதல், களக்காட்சி முதலியவற்றை விரித்துக்கூறல் 'சண்டை' என்னும் நூற் பொருளாகும். 'பாஞ்சாலங்குறிச்சிச் சண்டை' பட்டிதொட்டி

யெல்லாம் நாட்டுப்பாடலாக விளங்குகின்றது. கற்றறி யார்க்கும் பயன்படுமாறு 'சண்டை' நூல்கள் எழுந் தனவாம்.

**சத்தகம் (எழுமணி)**

ஏழுபாடல்களையுடைய தொரு நூல்வகை சத்தகம். ஒரே வகைப் பாடலால் பாடுதல் என்பது விதி. (சப்த-சத்த-ஏழு)

'சட்கம்' காண்க.

**சதகப்பதிகம் (நூறுகள் பத்து)**

சதகங்கள் பத்தினையுடையதும் ஆயிரம் பாடல்களைக் கொண்டதுமாகிய நூல் சதகப்பதிகம்.

சதகப்பதிகம், தண்டபாணி அடிகள் பாடியுள்ளார். அப்பதிகம், அடிகள் ஒடுக்கமுற்ற திருவாமாத்தூர்க்கு வாய்த்தது. அதிலுள்ள பாடல்கள் வாழ்த்துடன் 1006.

**சதகம்**

கற்றோர் விரும்பும் அகப்பொருள் மேலாவது, புறப் பொருள் மேலாவது, நூறு பாடல்கள் பாடுவது 'சதகம்' என்னும் பெயர்பெறும். சதகம் என்பது 'நூறு' எனவும் பெயர் பெறும்.

"விழையும் ஒருபொருள் மேலொரு நூறு
தழைய உரைத்தல் சதகம் என்ப."

—(இலக். பாட். 87)

"அகப்பொருள் ஒன்றன்மே லாதல் புறப்பொருள்
ஒன்றன்மே லாதல் கற்பித் தொருநூறு
செய்யுள் உரைப்பது சதகமா மென்ப."

—(முத்துவீ. 1117)

**சதுரங்கபந்தம் (அரங்கக்கட்டு)**

சதுரங்கம்—அரங்கம்; அரங்கின்றி வட்டாடலைக் கூறினார் வள்ளுவனார்.

அரங்கக்காய்களை நகர்த்துவதுபோலச் சரிவாகவும் வலமிருந்து இடமாகவும் இடமிருந்து வலமாகவும் மேலே, சென்று பின்னர்ச் சரிவாக இறங்கி முடிவது போன்ற அமைப்பில் பாடப்படுவது இது.

தண்டபாணி அடிகள் இயற்றிய திருவரங்கத் திருவாயிரத்தில் இப்பந்தம் இடம் பெற்றுளது. இது கட்டளைக் கலித்துறை, வெண்பா ஆகிய பாவகையில் அமைக்கப்படும்.

குதிரைப்பாய்ச்சல் அமைப்பில் வருவது 'சதுரங்க துரககதிபந்தம்' எனப்படும். 'சித்திரகவி விளக்கம்' என்னும் நூல் காண்க.

**சந்நிதிமுறை (திருமுன்னிலை முறை)**

இறைவன் முன்னிலையில் நின்று முறையிட்டு வேண்டுவதாகப் பாடப் பெறும் நூல் சந்நிதி முறையாம்.

'சந்நிதிமுறை' என்பது தனிநூல் என்று சொல்லப்படுவதெனினும், பல நூல்களின் தொகையாகிய அடக்க நூல் எனல் தகும்.

திருப்போரூர் முருகன் சந்நிதிமுறை என்பது இவ்வகை நூல்களுள் சிறப்பிடம் பெற்றது. அதில் தாலாட்டு, பள்ளி எழுச்சி, கட்டியம், எச்சரிக்கை, தூது, ஊசல் ஆகியவை உண்டு.

தாழிசை, வண்ணம், சந்தம், விருத்தம், அட்டகம் ஆகியவை உண்டு. விருத்தங்களிலும் கலிவிருத்தம், பெருங்கழிநெடில் விருத்தம், குறுங்கழிநெடில் விருத்தம், சந்தக்கழிநெடில் விருத்தம் என்பனவும் இடம் பெற்றுள.

வேறு சில சந்நிதி முறைகளில் இவற்றுடன் திருக்கோயில் சார்ந்த இலக்கிய அமைப்புகளும் இடம் பெற்றுள. கலம்பகத்தில் பல்வேறு பாடல்களும் துறைகளும் கலந்துள என்றால், சந்நிதி முறைகளில் பல்வேறு நூல்களும். நூற்பகுதிகளும் தொகுப்பாகச் செறிந்துள எனலாம்.

**சமசங்கினாமம் (சமனிலையோங்கல்)**

பெண், ஆண் ஒருவனுடன் சமனிலை கூற, அவன் அச்சமனிலையின் உயர்ந்து நின்று அவளை வெற்றி பெற்றதைக் கூறுவது இப்பனுவலின் பொருளமைதியாம். இதனை,

> '' அரிவை, சமங்கூற வேந்தன் சமந்தப்பி வேறல்
> சம சங்கி னாமமென்றே சாற்று. ''

என்கிறது பிரபந்தத்திரட்டு (62).

> '' ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய். ''
>
> —(திருக்குறள். 69)

என்னும் பொருள் வளமிக்க பொய்யாமொழிக்கே, ''பெண் ணியல்பால் தானாக அறியாமையின், 'கேட்டதாய்' எனவும் கூறினார்'' என்று விளக்கம் கூறுவதைக் கருதின், 'சமசங்கினாமம்' என இந்நூற் பெயர் எழுந்தமை வியப் பன்றாம்.

**சமுத்தி (கேள்பா)**

இன்ன வகையாய்ப் பாடுக என்றதும் அன்னவகை யாய்ப் பாடும் பாடல் சமுத்தி எனப்படும். கேட்டவாறு பாடப்படுவது ஆகலின் 'கேள்பா' எனத்தக்கதாம்.

அகப்பொருள் புறப்பொருள் ஆகிய இருபொருள் வழியிலும் இப்பா பாடப்படும்.

> '' சொன்ன எழுத்தினும் சொன்ன மொழியினும்
> அந்நிலை தன்னில் இருவகைப் பொருட்கும்
> முன்னிய கருத்து முடிவுறப் பாடல்
> சமுத்தி என்று சாற்றுவர்; அதுவே
> கொடுத்த பொருளெலாம் குறைபா டின்றித்
> தொடுத்தயாப் பிற்றாய்த் துணிந்து நிற்றலே,''

என்பது பிரபந்ததீபம் (97).

''யாப்பிற்றாய்த்து...நிற்றலே'' என்ற அளவில் சுவடிச் சிதைவு.

சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், கபிலர் கையைப்பற்றி 'மெல்லியவாமால் நுங்கை' என, அவர் பாடிய புறப்பாட்டும் (14), சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன் 'எம்முள்ளீர் எந்நாட்டீர்' என்று வினாவிய தற்கு ஆலூர் மூலங்கிழார் பாடிய புறப்பாட்டும் (38) இனையவும் சமுத்திக்குத் தோன்றாத் துணையாய்த் திகழ்பவை.

காளமேகப்புலவரும், மாம்பழக் கவிச்சிங்க நாவலரும் சமுத்தி பாடுதலில் கொடிகட்டிப் பறந்தவர்கள். இரட்டைப்புலவர்களும் இத்துறையில் வல்லாளர்களே.

> '' எழுத்துச் சொற்பொருள் அணியாப் பிழையின்
> விழுத்தக ஒருவன் விளம்பிய உள்ளுறை
> அப்பொழு துரைப்ப தாசு கவியே. ''
>
> —(இலக்கண. பா. 4)

என வரும் 'ஆசுகவி' இச்சமுத்தி பாடுவோன் என்க.

வினாவிடைப் பாடல் காண்க.

**சாதகம் (பிறப்பியம்)**

கலியூழியின், ஆண்டு நாள் பொழுது கிழமை இராசி முதலியவற்றை வைத்துப் பாட்டுடைத்தலைவன் கால நிலை கணித்துப் பாடுவது சாதகம் என்பதாகும்.

> '' தோற்றிய சாதகம் சாற்றுங் காலைப்
> பற்றிய கலியுகத் துற்ற யாண்டிற்
> றிருந்திய சகாத்தமும் ஆண்டும் பொருந்திய
> ஞாயிறும் பக்கமும் ஏய வாரமும்
> இராசியும் மன்னுற மொழிதற் குரிய. ''
>
> —(பன்னிரு. 73)

சாதகக்கவி என்பது, ''ஓரை நிலையும், திதி நிலையும், யோக நிலையும், நாண்மீன் நிலையும், வார நிலையும்,

கரண நிலையும், கிரக நிலையும் ஆகிய ஏழுறுப்புகளின் நிலைமையும் சோதிடநூலால் நன்குணர்ந்து அவற்றை அமைத்து அவற்றால் தலைமகனுக்கு அடைவன கூறல்'' என்பார் முத்துவீரிய நூலுடையார்.

'' ஓரை திதிநிலை யோகநாண் மீனிலை
வாரங் கரணம் நிலைவரு கிரக
நிலையெழு அவயவ நிலைமையும் உணர்வுற்
றவற்றை அமைத்தவற் றாற்றலை மகனுக்
கடைவன அறைதல்சா தகமென மொழிப. ''

—(முத்துவீ. 1038)

சாதகத்தைப் 'பிறப்பிய' மாக்கியவர் மொழி ஞாயிறு பாவாணர்.

**சாரப்பிரபந்தம் (சாரப்பனுவல்)**

இறைவன் திருமுன்பைப் புலவர் சார்ந்து, தமக்கு வேண்டுவன அருள வேண்ட, அவர்தம் நிலை உரைப்பதாகவும், புலவர் இறைவன் பெருநிலை கூறுவதாகவும், இறைவன் இவர் இவரைச் சார்ந்து இவ்விந் நலங்களைப் பெறுக என அருள்வதாகவும், புலவர் வாழ்த்துவதாகவும் அமைந்தது சாரப்பிரபந்தம் எனப்படும். கழிநெடில் ஆசிரிய விருத்தத்தால் இந்நூல் அமைந்துள்ளது. **நமசிவாய சுவாமிகள்** அருளிய அருணாசலேசுவரர் சாரப்பிரபந்தம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

**சாரம் (பிழிவு)**

பரந்துபட்ட செய்தியை விரித்துக் கூறாமல் தெளிந்து தேர்ந்து சுருக்கிக் கூறுவதொரு நூல்வகை சாரம் எனப்படுகிறது.

இவ்வகையில் சுட்டத்தக்கதொரு நூல் 'சிவபோக சாரம்', மற்றொன்று, 'சிவயோக சாரம்.'

முன்னது அடிகள் வணக்கம் முதல் பொதுநிலை ஈறாகப் பதினொரு பகுதிகளையுடையது. 139 வெண்பாக் களைக் கொண்டது.

பின்னது உரைநடையால் ஆயது. பூரணானந்தர் அருளியது என்றும் குறிப்புளது. தொடக்கத்திலும் முடிவிலுமாக நான்கு பாடல்களே உள.

இச்சார நூல்கள் சித்தர் தொகுதி சார்ந்தன.

'அறநெறிச் சாரம்' போல்வன உலகியல்நெறியை விளக்குவன. இங்குக் கூறிய சாரநூல்களோ, சித்தாந்தம் வேதாந்தம் (சிவக்கொண்முடிவு, மறைக்கொண்முடிவு) பற்றியன.

**சாழல்**

'சாழலோ' என ஈற்றுச் சொல்வருமாறான ஓர் அமைப்புடைய பாடல் சாழல் எனப்படுகின்றது.

'சாழல்' வழக்கிழந்த சொல்போலத் தோன்றினாலும் முற்றாக வழக்கிழக்க வில்லை. 'சாடுதல்' என்பதாக வழங்குகின்றது. "சாடு சாடு என்று சாடிவிட்டான்" என்று மறுத்து மறுத்து உரைப்பாரைக் கூறும் வழக்குடன் 'சாழல்' பாடல்களைப் பார்த்தால் விளக்கமாம்.

" பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலும் காணேடீ;
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ."

—(திருவா திருச்சாழல் 1)

இது மணிமொழியார் திருச்சாழல் முதற்பாட்டு.

" மானமரும் மென்னோக்கி வைதேகி யின்துணையா
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்தான் காணேடீ "
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்த பொன்னடிக்கள்
வானவர்தம் சென்னி மலர்கண்டாய் சாழலே"

—(பெரியதிருமொழி 11-5-1).

இது திருமங்கையார் பாடிய திருச்சாழல் முதற் பாட்டு.

கொச்சகக் கலிப்பா யாப்பும், பாடல் அமைதியும் பொருணிலையும் ஒப்பச் சாழலாக (சாடலாக) உள்ளன அல்லவோ!

**சித்திரகவி (மிறைப்பா)**

"சித்திரகவி யாறும்பின் தேற்றும் அட்ட நாகபந்தம்
ஒத்த கவியுமற்று முள்ளவெலாம் — வைத்துரைத்தல்
அத்ரவிழிப் பெண்ணே அணங்கே மடமானே
சித்ரகவிப் பாட்டென்றே செப்பு."

எனவரும் பிரபந்தத்திரட்டு (50) சித்திரகவி வகைகளைக் கூறும். அது கூறும் சித்திரகவிகள் கோமூத்திரி, இரட்டை நாகபந்தம், முரசபந்தம், சக்கரம், சுழிகுளம், சருப்ப தோபத்திரம், அட்டநாகபந்தம் என்பனவாம் (51—60).

சித்திரகவி விளக்கம் யாப்பருங்கலவிருத்தியிலும், தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய அணிநூல் களிலும், முத்துவீரியத்திலும் (1143—53) உண்டு. வினாவுத் தரம், எழுத்துவருத்தனம், மாலைமாற்று, நிரொட்டகம், எழுத்தழிவு, மாத்திரைச்சுருக்கம், மாத்திரை வருத்தனம், திரிபங்கி, திரிபாகி, ஒற்றுப்பெயர்த்தல், பிறிதுபடுபாட்டு என்பவற்றை முத்துவீரியம் கூறுகின்றது.

'சித்திரகவி விளக்கம்' என ஒருநூல் இயற்றியுள்ளார் பரிதிமாற் கலைஞர்; பதிப்பித்து உரைவரைந்தவர் பேராசிரியர் ந. பலராமர்.

பாம்பன் குமரகுருதாச அடிகளும் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளும் இத்துறையில் தேர்ச்சி மிக்கிருந் தனர். முன்னவர் இயற்றியது பத்துப்பிரபந்தம் என்னும் நூல். அதில் சக்கரபந்தம், மயூரபந்தம், கமலபந்தம், பிறிதுபடுபாட்டு, பகுபடுபஞ்சகம் முதலியவை உள. பின்னவர் இயற்றிய சித்திரகவிகள் பல்வேறு தொகுதிகளில் உண்டு. அரசஞ் சண்முகனார் பாடிய மாலைமாற்று மாலையில் சித்திரகவிகள் பல உண்டு.

சித்திரகவி வரவு, ஆளுடையபிள்ளையார் அருளிய எழுகூற்றிருக்கை, ஏகபாதம், திருக்கோமூத்திரி, திருச்சக்கர மாற்று, திருமாலைமாற்று, திருவியமகம் என்னும் திருப் பதிகங்களில் காணக்கிடக்கின்றது.

சித்திர கவிகளாலேயே அமைந்த நூல் 'சித்திர கவிமாலை' எனப்படும். அப்துல் கபூர் சாகிப் என்பார் 'சித்திரகவி சரபம்' எனப் புகழப்பெறுதல் அவர் திறம் வெளிப்படுப்பதாம்.

**சித்திரவு பாயசெயம்** (சூழ்ச்சிய வென்றி)

எல்லாவகைகளிலும் ஏற்றம்பெற்றுத் திகழும் நங்கை ஒருத்தியைப் பல்வேறு திறங்களால் வெற்றி கொள்ளுதல் 'சித்திரவுபாய செயம்' எனப்படும்.

"ஒப்பாமல், எத்தொழிலி னும்விருதாம் ஏந்திழையை
யேசெயித்தல், சித்ர வுபாய செயம்"

என்பது இதன் இலக்கணம் (பிரபந்தத்திரட்டு 45).

விருதாம் ஏந்திழை — விருது பெற்று விளங்கும் பெண்.

'தமிழறியும் பெருமாள் கதை' போல்வன இவ்வகையில் அமைந்தவையாம்.

**சிந்து**

ஓரெதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வருவது சிந்தாகும். இச்சிந்து குறளடி முதலாக எவ்வடி யானும் வரப்பெறும். காவடிச் சிந்து, தங்கச் சிந்து, நொண்டிச் சிந்து, வழிநடைச் சிந்து, ஆனந்தக்களிப்பு, தெம்பாங்கு எனச்சிந்து பலவகைப்படும்.

பாரதியார் பாடிய பலவகைச் சிந்துகளை நயந்த பாவேந்தர், அவரைச் 'சிந்துக்குத் தந்தை' என்று பாராட்டியது நினைக்கத்தக்கது.

**சிந்துமோகினி**

வண்ணக ஒத்தாழிசைப் பாடல்களால், ஒரு பெண்ணைக் கடலுக்கு ஒப்பிட்டுப் பாடுவது 'சிந்து மோகினி' எனப்படும் என்கிறது பிரபந்தத்திரட்டு (41).

"வண்ணகஒத் தாழிசையான் மாதுகடல் நேராக்கிற்
பண்ணுசிந்து மோகினியாம் பார்."

என்பது அது.

கடிகைமுத்துப் புலவர் இயற்றிய சமுத்திரவிலாசம் போன்றவற்றில் இருந்து இச்'சிந்துமோகினி' கிளர்ந்திருக் கலாம்.

**சிலேடா சாகரம் (இரட்டுறற்கடல்)**

பெரியகடலுக்கும் பெருமைமிக்க இறைக்கும் உவமை கூறி, முடிவில் அக்கடலுக்கும் மங்கைக்கும் வேந்தனுக்கும் ஒப்பாகக்கூறுதல் சிலேடா சாகரம் எனப்படுவதாம். இச்சாகரம் 'சிஃறாழிசை' ப்பாடலாதல் வேண்டும்.

"சேர்ந்தமான் வாரிக்கும் சீரிறைக்கு மேயுவமித்து
ஆர்ந்தவுடன் வாரிக்கும் மங்கைக்கும்—வேந்தன்
புரையப் புகலல் புகழ்சிலே டாசா
கரம்சிஃஃ றாழிசையிற் காட்டு."

— (பிரபந்தத்திரட்டு 47)

**சிலேடை வெண்பா (இரட்டுறல் வெண்பா)**

சிலேடை (இரட்டுறல்) இருபொருள்பட வருதல். சிலேடை யமைய இயற்றப்பெற்ற வெண்பாக்களால் அமைந்த நூல் சிலேடை வெண்பா எனப்பெறும். சிலேடை வெண்பாக்களின முன் இரண்டடிகளும் சிலேடையாகவும், பின் இரண்டு அடிகளும் மடக்காகவும் அமையும்; ஊர்ப் பெயரால் சிலேடைவெண்பாப் பாடப்பெறுதலால் அவ் வூர்ப் பெயருடன் சிலேடை வெண்பா என்பதும் சேர்ந்து

வழங்கும். **தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவரால் இயற்றப்** பெற்ற **'கலைசைச்** சிலேடை வெண்பா', நமச்சிவாய கவிராயரால் இயற்றப்பெற்ற 'சிங்கைச்சிலேடை வெண்பா' ஆகியவற்றைக் காண்க. சிலேடை வெண்பா நூறு பாக்களைக்கொண்டதாகும்.

### சிறு காப்பியம்

பெருங்காப்பிய உறுப்புகளில் சில குறைந்து வரினும், அறம்முதல் நான்கு பொருள்களில் குறைந்து வரினும் அது சிறுகாப்பியம் என்று கூறப்படும். காப்பிய நெறியில் சில குறைந்து வருமாயினும் காப்பியமே என்றும், அறமுதல் நான்கு பொருள்களில் குறைவுபட்டு வருவதே சிறுகாப்பியம் என்றும் கூறுவார் தண்டியாசிரியர்.

" அறமுதல் நான்கினும் குறைபாடுடையது
காப்பிய மென்று கருதப்படுமே."

— (தண்டி. 10)

காப்பியம் காண்க.

### சின்னப்பூ

அரசனது சின்னங்களை விரித்துக்கூறுவது சின்னப்பூ ஆகும்.

நேரிசை வெண்பாவால் அரசனது சின்னங்கள் ஆகிய தசாங்கத்தினைச் சிறப்பித்து நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னும் தொகைவரப் பாடப் பெறுவது அது. தசாங்கங்கள் மலை, ஆறு, நாடு, ஊர், பரி, களிறு, கொடி, முரசு, தார், பெயர் எனபன.

" மிக்க நேரிசை வெண்பா அதனால்
தக்க தசாங்கந் தன்னை நூறு
தொண்ணூ றெழுப தைம்பது முப்பஃ
தெண்ணப் பாடிற் சின்னப் பூவே."

— (இலக். பாட். 86)

நேரிசை வெண்பாவின் முற்பாதியில் சின்னத்தின் செய்தியும், பிற்பாதியில் பாட்டுடைத் தலைவன் இயற் பெயரும் வைத்து இணைத்துப் பாடப்பெறும்.

"மலையும் ஆறும் நாடும் ஊரும்
பரியும் களிறும் கொடியும் முரசும்
தாரும் பெயரும் எனத்தெரி பத்தும்
சொல்லும் எல்லையின் முதற்குறட் கண்ணே
சின்னத் தொழிலை மன்ன வைத்துப்
பின்னர்க் குறளுட் பாட்டுடைத் தலைவர்
இயற்பெயர் வைத்தவர்க் குரிமை தோன்றும்
செயல்பெற வைப்பது சின்னம் அதுவே
ஆதிப் பாவின் அதவினம் வருமே."

**-- (பன்னிரு. 239)**

அமரர்க்கும் அரசர்க்குமே சின்னப்பூப் பாடுதல் உரித்து என்பர்.

"உரைத்த தசாங்க மாவன பத்தாக
நிரைத்து வருவது நேரிசை வெண்பா."

"அமரரைச்
செங்கோல் வேந்தரைச் செப்புதல் சின்னப்பூவாம்;
ஏனையோர்க்குத் தசாங்கமல் லாதன
என்ப இயல்புணர்ந்தோரே."

**— (நவநீத. 40 மேற்)**

**சின்னமாலை**

"மயக்க வடிவஞ்சி யானணிசி றக்க
வியத்தல் மிளிர்சின்ன மாலை."

**— (பிரபந்தத்திரட்டு.27)**

என்பது இதன் இலக்கணம்

தளை மயக்கமமைந்த அடிகளையுடைய வஞ்சிப் பாவால் அழகுநலம் சிறக்குமாறு வியப்புவிளங்கக் கூறுதல் சின்னமாலை எனப்படும் என்பதாம்.

சின்னமாவது அழகு.

'அணி சிறக்க வியத்தல் 'என்பதால்' நலம்புனைந்துரைத்தல்' என்பது கொள்ளப்பெறும். எப்பொருள் பற்றியும் கூறலாம். எனினும் 'மயக்கவடிவஞ்சி' என்பதால் மயக்கத்தக்க வடிவழகமைந்த மங்கை ஒருத்தியை நயஞ் சிறக்க வியந்துரைத்தல் என இரட்டுறலாலும், குறிப்பாலும் கொள்ளலாம்.

## சீட்டுக்கவி

''இன்னார் விடுக்கும் ஓலையை இன்னார் கண்டு இன்னது செய்க'' என்னும் முறையமைப்பில் வருவது சீட்டுக்கவியாம்.

சீட்டுக்கவியில் பாடுவோன் புகழும் இடம்பெறும் என்பது, ''மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்'' ''தன்னைப்புகழ்தலும் தகும்'' என்னும் நன்னூற் பாயிரக் குறிப்பால் புலனாம். அன்றியும்,

'' ஏடாயிரம் கோடி எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கற்ற
கவிவீர ராகவன் விடுக்குமோலை. ''

என்பது போல வருவனவும் சான்றாம்.

திருமந்திர ஓலை, திருமந்திர ஓலைநாயகம், ஓலைக் கணக்கர் என்பவையும் வரலாற்றுச் செய்திகள்.

காவியங்களில் ஓலைபோக்கும் செய்திகள் உண்டு.

பதினொன்றாம் திருமுறையில் வரும் திருமுகப்பாசுரம் சீட்டுக்கவியேயாம்.

அந்தகக் கவிராயர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர், சரவணப் பெருமாள் கவிராயர் முதலியோர் யாத்த சீட்டுக் கவிகள் மிகப்பல. பின்னிருவர் விடுத்த சீட்டுக்கவிகளும் தனிநூலாமளவு பெருக்கமுடையனவாம்.

வறுமை தந்த 'வளர்தமிழ்' ஆகும் ஆற்றுப்படை போல்வது; இச்சீட்டுக் கவியும் அத்தகைத்தே எனின் தகும்.

தூதின் சாயலும் சீட்டுக்கவியில் உண்டு என்பது, ஆய்வார்க்குப் புலப்படும்.

சீட்டுக்கவியின் இலக்கணம்,

“ சீட்டுக் கவியே செப்பிம் வரன்முறை
தெய்வ வணக்கமும் தேசிகன் வணக்கமும்
தன்பெரும் புகழ்ச்சியும் தலைவன் புகழ்ச்சியும்
எய்தல் ஆசிரிய விருத்தத் தியம்பலே. ”

—(பிரபந்ததீபம். 96)

**சுயம்வரம் (தன்மணப்பு)**

இலக்கியங்களில் வரும் சுயவரப்படலப் பொருளைத் தனியே வாங்கிக் கொண்டு அமைந்த அமைப்புடையது 'சுயம்வரம்' என்னும் நூலாம்.

“ பெற்றோன் மகள்வதுவை பேசியே தேசங்கட்
குற்றோலை போக்க வுறமன்னர்—வெற்றியவன்
மான்வதுவை செய்ய மகிழ்கலிவெண் பாவுரைத்தல்
தேனே சுயம்வரப்பேர் செப்பு. ”

—(பிரபந்தத்திரட்டு. 61)

மணம்பேசுதல், மன்னர்களுக்கு ஓலைபோக்குதல், வந்த வேந்தருள் தேர்தல், அல்லது ஏதேனும் ஒரு வகையான் போட்டி வைத்துத் தேர்தல், வென்றவன் மணத்தல் ஆகிய செய்திகளைக் கலிவெண்பாவால் பாடுதல் 'சுயம்வரம்' என்னும் இலக்கியவகை என்க.

நளவெண்பாவிலும், பாரதத்திலும் வரும் சுயவரப் படலங்கள் அறியத்தக்கன.

மன்னர் மணங்குறித்த சிற்றிலக்கியவகையினது இது. பொது நிலைப்பாற்பட்ட தன்றாம்.

களவின்வழிக் கற்புநெறி சிதைவுற்ற நிலையில் புறப் பட்ட, சிற்றிலக்கிய வகை இது.

**செந்தமிழ் மாலை**

"எப்பொரு ளேனும் இருபத் தெழுவகை
செப்பின நெறியது செந்தமிழ் மாலை."

என்பது பன்னிரு பாட்டியல் (306).

பாவானும் இனத்தானும் பாடுவாருமுளர் என்றும், நான்கு முதற்பாவானாதல் ஒருபாவின் இனத்தானாதல் பாடுக என்பாருமுளர் என்றும் அதிற் குறிப்புரையுளது.

எப்பொருளேனும் என்றிருப்பினும் செந்தமிழ்மாலை என்பதாகலின், தமிழ்மொழிபற்றிய—தமிழ் அகப்புறப் பொருள்பற்றிய—செந்தமிழ்ப்பா எனக் கொள்க.

தமிழ்ஞானசம்பந்தர் என்றும் தமிழ்மாலை என்றும், "அங்கயற்கணாயகி குறஞ்செந்தமிழிற்பாட" என்றும் இவைபோன்றும் வருமாட்சிகளால் தெய்வ இசைத் திருப் பாடல்கள் இச்செந்தமிழ் மாலையாம் என்பதும் தகும்.

இருபத்தெழுவகை என்றது யாப்பியல் வேறுபாட்டை என்றறியலாம்.

**செருக்களவஞ்சி**

அமர்க்களவஞ்சி காண்க.

**செங்கோல் விருத்தம் (செங்கோற்பா)**

அரசர்தம் செங்கோற்சீர்மை குறித்து ஆசிரிய விருத்தம் பத்துப் பாடுவது செங்கோல்விருத்தம் என்னும் பெயர் பெறும். இதனைக் 'கோல் விருத்தம்' என்றும் கூறுவர். (நவநீத. 41.)

**செருக்களவழி**

வேந்தன் நிகழ்த்திய, நிலைபெற்ற புகழ்வாய்ந்த போர்க்களச் செய்தியை நேரிசை வெண்பாவினாவது,

இன்னிசை வெண்பாவினாவது, பஃறொடை வெண்பா வினாவது பாடுவது செருக்களவழி எனப்பெறும். இதனைப் போர்க்களவழி என்றும் கூறுவர்.

இக்களவழி, பாடல் அளவுடனும் பெயர் பெறுதல் உண்டு என்பது களவழி நாற்பது என்னும் நூற்பெயரால் அறியக்கிடக்கின்றது.

"தலைவன் செய்த நிலைபெறு புகழ்புனை
நேரிசை வெண்பா இன்னிசை வெண்பாப்
பஃறொடை வெண்பா மறக்கள வழியே"
"நேரிசை இன்னிசை பஃறொடை வெண்பா
போரின் களவழி புகலப் படுமே."
—(பன்னிரு. 315—316.)

**செவியறிவுறூஉ**

பெரியோர்களிடத்துச் சினங்கொள்ளாது அடங்கி யிருத்தல் கடன் என்னும் அவையடக்கியல் பொருளைப் பற்றி வருவது செவியறிவுறூஉ ஆகும். இது வெண்பா யாப்பிலும் ஆசிரிய யாப்பிலும் வரும். அன்றியும், செவியறிவுறூஉ மருட்பா என ஒன்று இருத்தலால் இது வெண்பா முன்னாக ஆசிரியம் பின்னாக இருபா இணைப்பாய் இயலும் மருட்பா யாப்பிலும் பாடப் படுமென அறியலாம் (தொல். பொ. 419)

புறநானூற்றில் செவியறிவுறூஉப் பாக்கள் சில உள. கடவுள் வாழ்த்தினை அடுத்து வைக்கப்பட்டுள்ள தொடக்கப்பாடல்கள் நான்கும் செவியறிவுறூஉத் துறைப் பாற்பட்டதாக இருத்தலும் நான்காம் பாடலும், "தாயில் தூவாக் குழவிபோல ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே" என்று வருவதால் செவியறிவுறூஉ ஆதலும் கூடும் எனக் கருத இடமிருப்பதாலும் ஆள்வோர்க்கு இச்செவி யறிவுறூஉ எத்தகு இன்றியமையாதது என்பது தெளிவாம்.

காய்நெல்லறுத்து எனத் தொடங்கும் செவியறிவுறூஉ (புறம். 184).

“ அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்,
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
...... . ......... .........
தானும் உண்ணான் உலகமும் கெடுமே.”

என்பது இலக்கணமாய் அமைதலோடு, எங்கும் என்றும் ஆள்வோர் கொண்டொழுகத்தக்க அருமையும் தகவும் உடையதாம் என்பது தகும்.

**சேத்திரத்திருவெண்பா (திருவூர்த்திருவெண்பா)**

பாட்டுடைத் தலைவன் ஊரினை நேரிசை வெண்பாவால் பாடுவது ‘ஊர் நேரிசை’ என்றும், இன்னிசை வெண்பாவால் பாடுவது ‘ஊர் இன்னிசை’ என்றும் பெயர் பெறும். ஆனால் சேத்திரத் திருவெண்பா என்பது இறைவன் கோயில் கொண்ட ஊர்களை அடைவுசெய்து வெண்பாவால் கூறுவதாகும். சேத்திரம், திருக்கோயில் என்க.

இவ்வகையில் எழுந்தது **ஐயடிகள் காடவர் கோன் நாயனாரால்** அருளப்பெற்ற ‘சேத்திரத்திருவெண்பா’ ஆகும். சேத்திரத்திருவெண்பா கலிவெண்பாவால் வருதலை வள்ளலார் அருளிய விண்ணப்பக் கலிவெண்பாவால் அறிக.

**சோடசமாலை பதினறுபாமாலை**

சோடசம் — பதினாறு; பதினாறு பாக்களால் ஆகிய நூல் சோடசமாலை எனப்படுகின்றது. பாடல் எண்ணிக்கை கொண்டு வரும் அறுமணி, எண்மணி, தொண்மணி என்பவை போலப் பதினறு பாவால் அமைந்ததென்க.

'துரோபதையம்மை சந்நிதி விளக்கச் சோடசமாலை' என்பது பதினான்கு சீர்க்கழிநெடிலடி ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது.

பதினாறு வகைக் கவனகம் செய்ய வல்லார் 'சோடசாவதானி' என வழங்கப்பட்டமை எண்ணத்தக்கது.

**சோபனம் (மங்கல வாழ்த்து)**

முன்னிலையாரை விளித்து, 'சோபனம்' 'சோபனம்' என வாழ்த்து உரைத்து, வாழிப்பகுதியோடு நிறைவுறும் அமைவுடையது சோபனமாம்.

திருமணநிகழ்ச்சியைப் பாராட்டி, வாழ்த்துரைப்பது பண்டு தொட்டே வரும் வழக்கம்.

புதல்வரைப் பெற்ற புகழ்சால் மகளிர் நால்வர் கூடி மண நிகழ்ச்சியை நடாத்திவைப்பதும், "கற்பினின் வழுவாமல், நற்பல உதவியொடு, பெற்றவன் பெட்கும் பிணைமான் அனையை யாகி" வாழியென வாழ்த்து வதை அகப்பாடல் தெரிவிக்கின்றது (86).

சிலப்பதிகார மங்கலவாழ்த்துக்காதையும் முதற்கண் இயற்கை வாழ்த்துக் கூறி, பின் மங்கல நல்லமளி யேற்றி வைத்து மணமக்களுக்கு வாழ்த்துரைத்து நடையிடுகின்றது.

"ஆல்போல் படர்ந்து, அரசுபோல் தளிர்த்து
அறுகுபோல் வேரூன்றி"

வாழ்கவென வாழ்த்துதல் வாழ்த்து மரபாக இந்நாளிலும் கல்லாரிடமும் அமைந்துள்ளது. இவ்வழிவழி மரபே மங்கல வாழ்த்தாய் அமையவேண்டியும் மொழிநலம் போற்றாத் தமிழர் மடமையால் சோபன மாயிற்று; நலுங்குமாயிற்று; திருமணம், மங்கலவிழா, மணவிழா, மன்றல் விழா எனப்பல பெயர்கள் வாய் மணக்க வாய்த்திருந்தும் வாழ்க்கைத் துணைநலமென வழிசிறக்க வாய்த்திருந்தும் விவாகத்தில்'

மாட்டிக்கொண்டவர் களும், 'வெட்டிங்கில்' திளைப்புவர் களும் சோபனத்தை விட்டு வைப்பரோ?

**ஞானம் (அறிவு)**

ஞானம் என்பது அறிவுப்பொருட்டதாம் சொல் லெனினும், மெய்யறிவுப் பொருளிலேயே 'ஞானப்பெயர்' நூல்கள் சுட்டுகின்றன.

சட்டைமுனி ஞானம், அகத்தியர் ஞானம், உரோமர் ஞானம், திருமூலர் ஞானம், சுப்பிரமணியர் ஞானம், காகபுசுண்டர் ஞானம் எனப் பல நூல்கள் சித்தர் தொகுதியுள் உள்ளன. சட்டைமுனி நாயனார் முன்ஞானம் நூறு, பின்ஞானம் நூறு எனவும் இரு நூல்கள் உள்ளன. இவ்விரண்டுமே எண்சீர் விருத்தங்களால் ஆனவை. முன், பின் என்பன காலமுறைச்சுட்டே ஆகலாம். சித்தர் ஞானம் கூறும் நூல்கள் பெரும்பாலும் எண்சீர்விருத்தங்களாலேயே அமைந்துள. பிறபா, இனம் பாவகைகள் அரிதாகவே உள.

**தங்கச்சிந்து**

'தங்கமே' என்னும் விளியுடன் வரும் சிந்து தங்கச்சிந்து எனப்பெறும்.

முன்னடி நான்கு சீர்களையுடையதாகவும் இறுதியடி இருசீர்களையுடையதாகவும் எதுகைத் தொடையுடன் அமைந்து, 'தங்கமே' என்னும் தனிச் சொல்லுடனும் எடுப்புடனும் முடியும். தங்கச்சிந்து இரண்டடிமுதல் பல அடிகளாகவும் வரும்.

**தசப்பிராதுற்பவம் (பதின் பிறப்புமாலை)**

உற்பவமாலை காண்க.

**தசமணிமாலை (பதின்மணிமாலை)**

வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமும் பத்துவர அந்தாதியாகப் பாடுதல் தசமணிமாலையாம்.

நவமணிமாலை காண்க.

**தாசங்கத்தியல் (பதினுறுப்பியல்)**

அரசன் தசாங்கத்தை ஆசிரிய விருத்தம் பத்தினால் கூறுவது தசாங்கத்தியலாகும். தசாங்கம் இவை என்பதைத் தசாங்கத்தில் காண்க. இதனைத் தசாங்கத்தயல், தசாங்க வன்னிப்பு என்பதும் உண்டு. வன்னிப்பு=வண்ணிப்பு.

" அரசன் தசாங்கம் ஆசிரிய விருத்தம்
ஐயிரண் டுறைவது தசாங்கத் தயலே. "

—(முத்துவீ. 1102)

**தசாங்கம் (பத்துறுப்பு)**

அரசனது பத்து அங்கங்களையும் பத்து நேரிசை வெண்பாக்களால் பாடுவது தசாங்கமாகும். தசாங்கப்பத்து என்பதும் இது.

" நேரிசை வெண்பாவான் நிருபன்பெறு
தசாங்கத் தினைச்சொலல் தசாங்கப் பத்தாம். "

—(இலக். பாட். 80)

தசாங்கங்கள் இவை என்பதை,

" மலையே யாறே நாடே ஊரே
பறையே பரியே களிறே தாரே
பெயரே கொடியே என்றிவை தசாங்கம். "

—(பன்னிரு. 240)

என்பதால் அறிக.

இவ்விலக்கணம் அமையப் பாரத தேவிக்குத் திருத் தசாங்கம் பாடியுள்ளார் பாரதியார். இது புதுவகையின தாகும்.

**தடாகசிங்காரம் (பொய்கைஎழில்)**

தலைவன் உலாவரல், சோலையிலும் மலர்ப்பொய் கையிலும் உலாவுதல், மின்போலும் கன்னியொருத்தியைக் காணல், இருவரும் மையலுறல், மகிழ்தல் ஆகியவற்றை யெல்லாம் பாடல் தடாகசிங்காரமாம்.

" மன்பவனி சோலை மலர்மலி வாலிவர
மின்னொருத்தி மின்போல் வியனெய்தக்—கன்னிக்கு
இறைமோகத் தாற்சோலை ஏற்றவெலாம் பாடல்
அறியுந் தடாகசிங்கா ரம். "

—(பிரபந்தத்திரட்டு 12)

**தண்டகமாலை (புணர்ச்சிமாலை)**

வெண்பாவினால் முந்நூறு செய்யுட் கூறுவது தண்டக மாலையாகும். **வெண்புணர்ச்சிமாலை** என்பதும் இது. பாவகை, வெண்பா; பொருள்வகை, புணர்ச்சி; ஆகலின் வெண் புணர்ச்சி மாலை என்றார்.

" வெண்பா வான்முந் நூறு விரிப்பது
தண்டக மாலையாம் சாற்றுங் காலே. "

— (முத்துவீ. 1068)

**தமிழ் சொரி சிந்தாமணித்தொகை**

ஒரு கதையை எடுத்துக்கொண்டு தமிழ்நலமெல்லாம் கெழும முடிமுதல் (அந்தாதி) அடைவால் பாடுதல் தமிழ் சொரி சிந்தாமணித் தொகை எனப்படும்.

" அந்தாதிப் பாக்கதை யாதல் தமிழ்சொரி
சிந்தா மணித்தொகை யாம். "

—(பிரபந்தத்திரட்டு 44)

**தரும விசேடம் (அறச்சிறப்பு)**

வஞ்சித் தாழிசை யாப்பால் முப்பத்திருவகை அறங் களையும் எடுத்துரைத்தல் 'தருமவிசேடம்' என்னும் இலக்கிய வகையாம்.

" முப்பத்திரண்டறம் முற்றவஞ்சித் தாழிசையிற்,
செப்பல் தரும விசேடமாம். "

— (பிரபந்தத்திரட்டு 45)

"அறம் 32 : ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்கு உண்டி, பசுவுக்குவாயுறை, சிறைச்

சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப்பிணம் சுடுதல், அறவைத் தூரியம், சுண்ணம், நோய்க்கு மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, சேலை, கண்மருந்து, பெண்போகம், பிறர் துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சு தறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலை கொடுத்து உயிர் காத்தல், கன்னிகாதானம்.''

**(வெள்ளிவிழாப்) பேரகராதி பக் 1162.)**

இவை ஒருகாலத்து ஒருவகை எண்ணிக்கை கொண்டு எண்ணப் பட்டவையாம். எண்ண எண்ண 'எண்ணிக்கையுயரும் அறத்தை எண்ணிச் செயலன்றி எண்ணிக்கையால் வரம்பிடல் கூடுமோ? வள்ளுவ அறம்' வாய்ச்சொல்லளவில் நின்றகாலையில் வந்தேறிய சரக்கெனல் வெளிப்படையாம். முழுதறவடிவே முப்பத்திருவகை அறம்பாலித்த (காஞ்சிப் புராணத்) தொன்மச்செய்தி எவரும் அறிந்ததே. 'அறம் வளர்த்த நாயகி' என்னும் அம்மைபெயரை அறியலாமே!

**தளசிங்காரம் (படைவணப்பு)**

வேந்தனொருவன் வியப்புற உலாச் செல்வதை விரித்துக் கூறி, இவன்றன் படைத்திற ஆண்மையைப் பாராட்டல் தளசிங்காரம் எனப்படும்.

தளம் = படை. 'கோட்டை கொத்தளம்' என்னும் இணைமொழி, கோட்டையும் கொல்தளமாம் படையுமாம்.

கொல்தளம்—கொற்றளம்—கொத்தளம்.

'' கொந்தள அரசர் தந்தளம் இரிய.''

என்பது முதற்குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி (பெருந் தொகை. 799),

'' வேட்டைப் பவனி விரித்துரைத்துச் சேனைமிடல்
காட்டல்தள சிங்காரம்.''

என்பது பிரபந்தத் திரட்டு (46). இரகுநாதசேதுபதியின் மேல், 'தளசிங்கமாலை' என்பதொருநூல், அழகிய சிற்றம்பலக் கவிராயரால் இயற்றப்பட்டது. அது கட்டளைக் கலித்துறையால் ஆகியது.

**தனிவெண்பா**

ஒன்றற்கு ஒன்று தொடர்பில்லாமலும், தனித்தனியே முடியக்கூடியதும், முடிமுதல்யியைபு (அந்தாதி) இல்லாமல் இயல்வதும் ஆகிய வெண்பாக்களால் அமைந்ததொரு நூல் 'தனிவெண்பா' எனப்படுகின்றது. 'தனிப்பாடல் திரட்டு' 'தனிப்பாசுரத்தொகை' என்னும் ஆட்சிகளை நினைக.

திருவண்ணாமலையில் இருந்த குகை நமசிவாயர் அருளிச்செய்த 'திருவருணைத் தனிவெண்பா' இவ் வகையில் எண்ணத்தக்கது. அதில் 35 வெண்பாக்கள் உள.

ஒரே ஓர் ஊடக இயைபு இப்பாடற்கு உண்டு எனின், அஃது அண்ணாமலையார் திருப்பெயரே.

**தாண்டகம்**

ஆறுசீர்களாலேனும் எண்சீர்களாலேனும் ஆடவரை யாவது கடவுளரையாவது புகழ்ந்து பாடுவது தாண்டகம் ஆகும். இவற்றுள் ஆறு சீர்கள் வரப்பாடுவது **குறுந்தாண்டகம்** என்றும், எண்சீர்கள் வரப்பாடுவுது **நெடுந்தாண்டகம்** என்றும் பெயர் பெறும் (அப்பரடிகளும், திருமங்கைமன்னரும் பாடிய தாண்டகங்களைக் காண்க).

நான்கு அடிகளுக்கும் எழுத்து எண்ணி ஒத்த அளவால் வருவது தாண்டகச் செய்யுளாகும்.

'' மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டகம்; அவற்றுள்
அறுசீர் குறியது நெடியதெண் சீராம்.''

" அறுசீர் எண்சீர் அடிநான் கொத்தங்
கிறுவது தாண்டகம் இருமுச் சீரடி
குறியது நெடிய திருநாற் சீரே."
—(பல்காயனார்)

" மங்கல மரபின் மானிடர் கடவுளர்
தம்புகழ் உரைப்பது தாண்டக வகையே."
" தாண்டகம் மானிடர் கடவுளர்க் குரித்தே."
(மாபூதனார்)

" அடிவரை நான்கும் வருமெழுத் தெண்ணி
நேரடி வருவது தாண்டக மாகும்."
(சீத்தலையார்) —(பன்னிரு 307 - 311)

இனித் தாண்டகம் நான்கடியும் அளவொத்து வருவது 'அளவியல் தாண்டகம்' என்றும், அளவு அழிந்து வருவது 'அழிவழி தாண்டகம்' என்றும், சந்தமும் தாண்டகமுமாக வருவது 'சந்தத் தாண்டகம்' என்றும், யாப்பருங்கல விருத்தியுடையார் காட்டுவர். எண்சீரின் மிக்குத் தாண்டகம் வருதற்கும் அவர் எடுத்துக்காட்டுத் தருவர் (95). இருபத்தேழு எழுத்துமுதலாகக் குறில்நெடில் ஒத்து வருதலைக் கணக்கிட்டுக் காட்டுவார்.

" இருபத் தேழெழுத் தாதி யாக
உயர்ந்த எழுத்தடி யினவாய் எழுத்துங்
குருவும் இலகுவும் ஒத்து வந்தன
அளவியற் றாண்டகம் எனவும் அக்கரம்
வெவ்வாதும் எழுத்தல கொவ்வாதும் வந்தன
அளவழித் தாண்டகம் எனவும் பெயர்பெறும்."
—(முத்துவீ . 1116)

என்பார் முத்துவீரியனார்.

**தாமரை நோன்பு**

மாலையில் தாமரை மலரில் புகுந்தவண்டு ஆங்கிருக்கும் போதில் கதிர்மறைதலால் மலர் மூடிக்கொள்ள ஆங்கேயே

தங்கியிருந்து காலையில் கதிரோன் எழும்பிய அளவில் அம்மலர் மலர்தலால் வெளிப்பட்டுச் செல்வதாய மலரை, இரவெல்லாம் கையில் கொண்டிருந்து நோன்பு கொண்ட தலைவி, அம்மலரைத் தோழியிடம் கொடுத்தலைப்பற்றிப் பாடுதல் தாமரைநோன்பு என்பதாம். அது கலிவெண் பாவால் இயற்றப்படுவதாம்.

" கங்குலின்வண் டேந்திநகை கால்பானு வான்மலர்த்திப்
பங்கய மாதொருத்தி பாங்கியிடம் — செங்கை
கொடுக்கவே கூறல்ஏடார் தாமரை நோன்பாம்
எடுத்தல் கலிவெண்பா வே."

—(பிரபந்தத்திரட்டு 24)

மாலையில் தாமரையுள் புகுந்தவண்டு காலையில் வெளிப்படுதல் முருகாற்றுப்படை, சிலம்பு ஆகியவற்றில் அறிந்த செய்தி. கவிமணி 'நினைவும் முடிவும்' என்னும் பாடலிலும் குறிப்பார். தாமரையை ஏந்தியிருந்து நோற்றலால், 'தாமரை நோன்பு' எனப்பட்டது. இது திருமகளை நோக்கிய நோன்பாகலாம்.

**தாரகைமாலை**

தாரகை = கண்மணி, விண்மீன்.

இருபொருள்களை இணைத்து இருபத்தேழு பாடல்கள் பாடுவது 'தாரகைமாலை' எனப்படும் என்பார் பன்னிரு பாட்டியலார். அரிய கற்புடைய மகளின் மாண்புகளை வகுப்பால் கூறுவது 'தாரகைமாலை' என்பார் இலக்கண விளக்கப் பாட்டியலார்.

" இரண்டு பொருள்புணர் இருபத் தெழுவகைச்
சீரிய பாட்டே தாரகைமாலை."

— (பன்னிரு. 305)

" வகுப்பாற் கற்புடை மகளிர்க் குள்ள
தகைத்திறம் கூறுதல் தாரகைமாலை."

— (இலக். பாட். 107)

"அருந்ததிக் கற்பின் அரிவையர்க் குள்ள
இயற்கைக் குணங்களை வகுப்பால் இயம்புதல்
தாரகை மாலையாம் சாற்றுங் காலே."

என்பார் முத்துவீர உபாத்தியாயர் (103).

இனித் தூசிப் படையைப் புகழ்ந்து வகுப்பால் ஒன்பது கவிபாடுவது **தாரகைமாலை** என்பார் வெண்பாப் பாட்டியலார் (32).

**தாலாட்டு**

நாற்சீர் ஈரடி ஓரெதுகைக் கண்ணிகளாகத் தாலாட்டுப் பாடல் வரும். **சீராமர் தாலாட்டு** முதலியவை இவ்வகையில் அமைந்த நூல்களாம்.

"பேராம் அயோத்திப் பெருமானைத் தாலாட்டச்
சீரார் குருகையர்கோன் சேவடிகள் காப்பாமே."

**அல்லி அரசாணிமாலை, பவழக்கொடிமாலை,** இவ்வகைக் கண்ணிகளால் வருவனவேயாம். இவை மாலை எனப் பெயர் பெறுவதைக் கருதி அந்தாதி எனக் கொள்ள வேண்டுவதில்லை. தொடர்கதை, தொடர்ந்து வரும் பாடல் என்னும் பொருளில் வருவது இம்மாலையாகும். பெரியாழ்வார் பாடிய கண்ணன் திருத்தாலாட்டு கவின் மிக்கது. கவிமணி பாவேந்தர் முதலியவர்கள் பாடிய தாலாட்டுகள் புதுமணம் கமழ்வன. தாய்மார் வளர்த்த தமிழ் தாலாட்டாம்.

**தாழிசை மாலை**

தாழிசையால் பாடப்படுவதொரு நூல் தாழிசை மாலை. திருச்சிராப்பள்ளி, 'சக்தி தாழிசைமாலை' தண்டபாணி அடிகளால் பாடப்பட்டது. அதில் 34 தாழிசைகள் உண்டு.

**தானைமாலை**

அகவல் ஓசையிற் பிறழாது அரசர்க்குரிய ஆசிரியப் பாவால் முன்னர் எடுத்துச்செல்லும் கொடிப்படையைச் சொல்வது தானைமாலையாகும்.

“ ஆசற உணர்ந்த அரசர் பாவால்
தூசிப் படையைச் சொல்வது தானை
மாலை யாகும்.”

— (இலக். பாட். 109)

“ அகவலோ சையிற்பிற ழாதகவ லின்முனர்
எடுத்துச்செல்லுங் கொடிப்படை இயம்பல்
தானைமா லைப்பெயர் தழுவுமா மெனவே.”

— (முத்துவீ. 1166)

**திக்குவிசயம் (திக்குவெற்றி)**

எட்டுத்திக்கும் படைகொண்டு சென்று, பகைவரை வெற்றி கொண்ட சிறப்பைப் பாடுவது திக்குவிசயம் என்பதாம்.

கடிகை முத்துப்புலவரால் ‘திக்குவிசயம்’ பாடப்பட்டுள்ளது. அது ‘சிவகிரி வரகுணராம பாண்டிய வன்னியனார் திக்குவிசயம்’ என்பது.

“ நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்.”

என்பது போலும் புகழ் நாட்டத்தால் முழுதாளும் முனைப்பு மீக்கூர்ந்தார்க்கு எழுந்த திசைவெற்றிப் பாட்டின் வழிவந்த சிற்றிலக்கிய வகை இது.

**திரட்டு**

ஒருவர் பாடிய பாடல்களைத் திரட்டிய நூலோ, பலர் பாடிய பாடல்களைத் திரட்டிய நூலோ திரட்டு என்று வழங்கப்பட்டன. முன்னே ‘தொகை’ என்று வழங்கிய ஆட்சியைத் ‘திரட்டு’ ஏற்றுக்கொண்டது பின்னே எனலாம்.

குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு, சிவஞான முனிவர் பிரபந்தத்திரட்டு என்பன போன்றவை முதல்வகையின. தனிப்பாடல் திரட்டு; பல பாடல் திரட்டு என வழங்குவன அடுத்த வகையின.

இனித் 'தெருட்டு' என்பதொரு நூல்வகையுண்டு. அது 'நீலகேசித் தெருட்டு' என்பதால் விளங்கும். 'தெருட்டு' என்பது தெரிவிப்பது என்னும் பொருளது.

திரட்டு என்பது 'தெரிவு' என வழங்கப்பெற்றமை சுவடிகளால் அறிய வருகின்றது. தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்களையுடையது என்பது பொருள்.

புறத்திரட்டு, பன்னூற்றிரட்டு என்பவை அரிய திரட்டு நூல்களாம். தொகை காண்க.

**திரிபந்தாதி (திரிபு முடிமுதல்)**

அடிதோறும் முதற்சீர் முதலெழுத் தொன்று மட்டும் அளவால் ஒத்துத் திரிந்து நின்று பிறவெழுத்துகளது தொகுதி யமகம் (மடக்குப்) போலவே வருவது திரிபு என்னும் சொல்லணி வகையினதாம். மடக்கு அமைப்பில், முதல் எழுத்து ஒன்று மட்டுமே திரிந்து நிற்றல் திரிபு என்க. திரிபுடன் அந்தாதியாக வரும் பாடல்களைக் கொண்ட நூல் திரிபந்தாதி எனப்பெறும். சிவப்பிரகாச அடிகள் இயற்றிய **பழமலைத் திரிபந்தாதி** காண்க.

(எ-டு) : "திருவருந் தங்க வருங்கல்வி மாது சிறப்புவருங்
கருவருந் தங்க நிலையாதென் றுள்ளங்
கரைந்திறைஞ்சிற்
பொருவருந் தங்க மலைபோலும் குன்றைப்
புராதனனை.
இருவருந் தங்க டலையா லிறைஞ்சு
மிறைவனையே."

—(பழமலையந்தாதி 1)

**திருச்சின்னம்**

சின்னம் என்பது திருக்கோயிற் பொருள்களையும் சங்கம் ஊதுகொம்பு ஆகியவற்றையும், அடையாளம், துண்டித்தல், துன்புறுத்துதல் ஆகிய பொருள்களையும் தரும் சொல்.

திருச்சின்னம் என்பது திருக்கோயிற் பொருள்களின் இறைமையின் சிறப்புகளை எடுத்துச் சங்கமும் கொம்பும் பிடிப்பதாக வரும். மெய்ப்பொருட் கொள்கைகளைக் கூறிச் சின்னம் பிடிப்பதாகவும் வரும்.

'திருச்சின்னமாலை' என்னும் பெயரால் வேதாந்த தேசிகர், வீரராகவாசாரியர் ஆகியோர் இயற்றிய நூல்கள் உண்டு.

வள்ளலார் அருளிய ஆனந்த மேலீட்டுப்பாடல் 'சின்னம் பிடி'ப்பதாக வரும்.

"அம்பலவர் வந்தாரென்று சின்னம்பிடி
அற்புதம் செய்கின்றாரென்று சின்னம்பிடி
செம்பலன் அளித்தாரென்று சின்னம்பிடி
சித்திநிலை பெற்றதென்று சின்னம்பிடி
சிற்சபையைக் கண்டோமென்று சின்னம்பிடி
சித்திகள்செய் கின்றோமென்று சின்னம்பிடி
பொற்சபை புகுந்தோமென்று சின்னம்பிடி
புந்திமகிழ் கின்றோமென்று சின்னம்பிடி."

என்பவை அவற்றில் முதலிரண்டு கண்ணிகள்.

### திருப்பல்லாண்டு

இறைவனையும், இறைவன் தொடர்புடைய பொருள் களையும், அடியார்களையும் இன்னபிறவற்றையும், "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்க" வென வாழ்த்து வதாய் அமைந்த நூல் திருப்பல்லாண்டு என்பதாகும்,

பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு அறுசீர் ஆசிரிய விருத்தத்தால் அமைந்துள்ளதறிக.

### திருப்பள்ளியெழுச்சி

உலகத்துயிர்களையெல்லாம் தன் அடிக்கண் ஒடுக்கி மீண்டும் மலர்க்கும் இறைவன் துயில் கொள்வதாகவும் அவன் அத்துயில் நீங்கி எழுந்தருள வேண்டுவதாகவும்

அவன் புகழ்பல பேசி எண்சீர் விருத்தத்தால் பாடப் பெறுவது திருப்பள்ளி எழுச்சியாகும். **தொண்டரடிப்பொடி ஆழ்வாரும், மாணிக்கவாசகரும்** அருளிய திருப்பள்ளி எழுச்சிகள் எடுத்துக்காட்டாம். **பாரதியாரால்** பாடப்பெற்ற பாரதமாதா பள்ளியெழுச்சி இவ்விலக்கணம் அமையப் புது நெறியில் அமைந்ததாகும். இறைவனைத் தந்தையாய்த் தாயாய்க் குருவாய்த் தெய்வமாய், அரசாய், வள்ளலாய் நிறுத்தித் திருப்பள்ளியெழுச்சி பாடுகிறார் வள்ளலார்.

**திருப்பெயர்ப்பொறி**

பீடும் பெயரும் எழுதிக் கல்நாட்டல் வீரவழிபாட்டு முறையாகும். 'நடுகல்' என்பது வீர வழிபாட்டுச் சின்னமே.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்."

என்னும் தொல்காப்பிய வழியிலேயே காட்சிக்காதை, கால்கோட்காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை, வாழ்த்துக்காதை, வரந்தருகாதை என்பவற்றை இளங்கோ வடிகளார் வஞ்சிக் காண்டமாக அமைத்துக் கொண்டார்.

செங்குட்டுவன் வடநாடு சென்று பனிமலையில் கல் லெடுத்து மேன்மலையில் கோயில் நிறுவி வழிபட்ட செய்தியை விரித்துரைத்தார். இச்செய்தியும், தென்னாட்டு வேந்தர்களாகிய கரிகாற்சோழன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் முதலியோர் வடநாடு சென்று இமயத்தில் தங்கள் இலச்சினைகளைப் பொறித்துக் கொடிநாட்டித் திரும்பிய செய்தியும் பின்னணியாகக் கிளர்ந்தது, இத்திருப் பெயர்ப் பொறி இலக்கியமாம்.

"வெற்றிக் கொடிமேரு வில்நாட்டில் தன்பெயரைப்
பற்றி வரைதலந்தப் பான்மைப்பேர்."

— **(பிரபந்தத்திரட்டு 68)**

என்பது திருப்பெயர்ப் பொறியின் இலக்கணம்.

**திருமறம்**

**கண்ணிடந்தப்பல், கையறுத்தல், கால்தடிதல்** முதலாகத் தமக்குத் தாமே செய்து இறைவன் திருவருளில் தோய்ந்த அடியார் வரலாற்றை ஆசிரியப்பாவாற் கூறுவது திருமறம் ஆகும். இவ்வகையில் எழுந்தவை **திருக்கண்ணப்ப தேவர் திருமறம்** முதலியவையாம்.

**திருமுக்கால்**

பாடலின் இரண்டாம் அடியும் நான்காம் அடியும் முச்சீரால் முடிவது திருமுக்கால் எனப்படும். முதலாம் மூன்றாம் அடிகள் நாற்சீர் என்க.

"விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீரும தொழுகழல்
எண்ணவல் லாரிட ரிலரே."

இத்திருப்பிரமபுரத் திருமுக்கால் (1) ஆளுடைய பிள்ளையார் அருளியதே.

**திருவாயிரம்**

தெய்வத்தைப்பற்றி ஆயிரம் பாடல்கள் பாடுவது திருவாயிரமாம்.

வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் நான்கு திருவாயிரங்கள் பாடியுள்ளார். அவை பழனித் திருவாயிரம், தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், தெய்வத்திருவாயிரம் என்பன.

இவற்றுள் பழனித் திருவாயிரத்தில் இடம் பெற்றுள்ளவை.

1. வெண்பாமாலை: தனித்தனி வெண்பாக்கள் நூறுடையது.
2. வெண்பா அந்தாதி: அந்தாதித் தொடரில் வெண்பா நூறுடையது.

3. அலங்காரம்: கட்டளைக்கலித்துறை நூறுடையது.

4. குருபரமாலை: எழுசீர் விருத்தம் ஐம்பத்தொன்றா லாகியது.

5. பதிற்றுப்பத் தந்தாதி: பத்துப்பாடல்களுக்கு ஒரு வகை யாப்பாகப் பத்துவகைப் பாடல்கள் அந்தாதித் தொடையில் நூறுடையது.

6. ஒருபா ஒருபஃது: அந்தாதித் தொடரில் 10 அகவற் பாக்களைக் கொண்டது.

7. நவமணிமாலை: வெண்பா, கட்டளைக்கலித் துறை, வெண்டளைக்கலிப்பா, கொச்சகம், கலி நிலைத்துறை, கட்டளைக்கலிப்பா, எழுசீர் விருத்தம், ஆசிரியப்பா, சந்த எண்சீர்ப்பா என ஒன்பது பாவகையில் அந்தாதி நடையில் இயல்வது. 81 பாடல்களையுடையது.

8. சித்திமாலை: பலவகைச் சந்தவிருத்தங்களை யுடைய 64 பாடல்களைக் கொண்டது.

9. நவரசம்: ஒன்பான் சுவைகளை ஒருவகை யாப்பினால் பாடியது; 9 பாடல்களையுடையது.

10. நடுஒலியல் அந்தாதி: 32 கலைச்சந்தப் பாடல்கள் 30 உடையது.

11. வகுப்பு: ''தனனத் தந்தத் — தனனத் தத்தத்'' என்றும்

'' தனதன தனதத்த—தனதன தனத்த'' என்றும்

'' தனனதன தானதன—தானான தந்தனா''

என்றும் வரும் சந்தத்தில் மூன்று வகுப்புப் பாடல்களை யுடையது.

12. வண்ணம்: கலவி மகிழ்தல் என்னும் அகத்துறை வண்ணப்பாடல் ஒன்றுடையது.

13. பிள்ளைக்கலி: நூறுபாடல்களையுடையது.

14. கலம்பகம்: நூறுபாடல்களையுடையது.

15. யமக அந்தாதி: நூறு பாடல்களையுடையது.

16. திரிபு மஞ்சரி: 51 பாடல்களையுடையது

ஆகப் பாடல் 1000.

**திருவியமகம் (திருமடக்கு)**

அடிதோறும் வந்த சொல்லோ தொடரோ மீண்டும் வந்து பொருள்வேறு தருவது மடக்கு என்னும் சொல்லணி யாகும். அடியின் முதல், இடை, கடை மடங்கி வருதல் முறையே முதன்மடக்கு, இடைமடக்கு, கடைமடக்கு எனப்பெயர் பெறும். முழுவதும் மடங்கிவருவதும் உண்டு. அது முழுமடக்காகும்.

திருஞானசம்பந்தர் பாடிய கடைமடக்குப்பதிகத்தில் முதல் பாடல்:

"உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது
நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்வழி காய்வது
காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே அமரர்கள்
செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே பிரம புரத்தையு
கந்தனையே."

**தும்பைமாலை**

"மாற்றாரோடு தும்பைப் பூமாலை சூடிப் பொருவதைக் கூறுவது தும்பை மாலையாகும்."

"தும்பைவேய்ந் தொனாரொடு சூழ்ந்து பொருவது
சொல்வது தும்பை மாலையாகும்."

—(முத்துவீ. 1077.)

**துயிலெடைநிலை**

கண்படை கொண்ட வேந்தரை வைகறைப் போழ்தில், முன்னே திறைதந்த வேந்தரும், திறைதாராத வேந்தரும் வாழ்த்தி நின்மொழிகேட்டு நடக்க விழைந்து நிற்கின்றனர்; வேந்தே! துயில் எழுக எனப்பாடுவது துயிலெடைநிலை என்பதாகும்.

"கண்படை மன்னவர் முன்னர்த் தண்பதம்
விடிய எல்லை இயல்புறீச் சொல்லித்
தந்த திறையரும் தாராத் திறையரும்
ஏத்தி நின்மொழி கேட்டினி தியங்க
வேண்டினர் இத்துயில் எழுகென விளம்பின்
அதுவே மன்னவர் துயிலெடை நிலையே."

—(பன்னிரு. 324)

பாசறையில் 'சூதர்' துயிலெழுப்புதலுமாம். (பிரபந்த தீபம் 61)

**துனிவிசித்திரம் (பிரிதுயர்ப் பேரெழில்)**

துனி என்பது அச்சம், சினம், துன்பம், வெறுப்பு, புலவி நீட்டம் முதலிய பொருள் தரும் சொல்.

விசித்திரம் என்பது வியப்பு, பேரழகு, வேடிக்கை, பலவண்ணம், எதிருரை எனப் பல பொருள்தரும் சொல்.

பிரிவுழிக்கலங்கும் கலக்கத்தை அழகுறக் கூறுவது துனிவிசித்திரம் என்பதாம்.

"முத்துமுலைப், பெண்கலவி பாடிப் பிரிவாய்
விரித்துரைத்தல், அண்ணும் துனிவிசித்திரம்."

என்பது இதன் இலக்கணம் (பிரபந்தத்திரட்டு. 5)

பிரி வாய்—பிரிகின்ற இடத்து.

பிரிவுழிக் கலங்கலைக், கற்றார் உருகிக் கலுழுமாறு உணர்வொன்றப் பாடுதலால் பேரெழில் ஆயிற்றாம். நெடியவாடையும், பிரிந்த தலைவனைக் கூட்டுவிக்க

உதவுவதால் 'நல்' வாடையாகி 'நெடுநல்வாடை'யாகி விடவில்லையா?

'செங்கடுமொழி' என்னும் தொல்காப்பியச் சொல்லாட்சியும் அது (களவு. 23).

**தூது**

கலிவெண்பாவினால் உயர்திணை இருபாலினரையும், அஃறிணைப் பொருள்களையும் தூதாக விடுத்துத் தம் வேட்கை நிலையுரைப்பதாகக் கூறுவது தூது ஆகும். ஆடவர் மகளிர் இருவர் வாக்காகவும் தூது நூல் கூறப் பெறுதல் உண்டு.

"பயில்தரும் கலிவெண் பாவி னாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப்
பொருளையும்
சந்தின் விடுத்தல் முந்துறு தூதெனப்
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே."
—(இலக். பாட். 114)

தூதுவிடுதற்குரியவை இவை என்பதைப் பத்தென வரைப்படுத்திக் கூறியவர்கள் உளர். ஆனால் அவ் வரையறை கடந்து எண்ணிலாப் பொருட்பெயரால் தூது நூல்கள் உளவாதல் கண்கூடு.

"எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை
சகிகுயில்நெஞ் சந்தென்றல் வண்டு—தொகைபத்தை
வேறுவே றாப்பிரித்து வித்தரித்து மாலைகொண்டான்
பூறிவா வென்றதூ து."
—(பிரபந்தத் திரட்டு)

"இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்
பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை."
—(இரத்தினச் சுருக்கம்)

"ஆணும் பெண்ணும் அவரவர் காதல்
பாணன் முதலிய உயர்திணை யோடும்
கிள்ளை முதலிய அஃறிணை யோடும்
சொல்லித் தூது போய்வா வென்னக்
கலிவெண் பாவால் அறைவது தூ து.

—(முத்துவீ. 1112)

**தெம்பாங்கு**

ஈரடி ஒரெதுகையாய் நாற்சீரடியாய் ஒவ்வொரடியின் மூன்றாம் சீரும் முதற்சீருக்கேற்ற மோனையுடையதாய் வரும் சிந்துநடை, தெம்பாங்கு என்பதாம். இதனைத் தென்பாங்கு என்பர். தேன்போல் இனிக்கும் பாட்டு என்பது பொருளாம். இனித் தெம்பாங்கு முதலடியின் இறுதிச்சீர், மடக்கா இரண்டாவது அடிவருவதும் உண்டு. நாட்டுப்புறம் தந்த பாட்டுவளம் இத் தென்பாங்காம்.

**தெய்வக்கையுறை**

"தெய்வத்தைக், விலித் துதித்துக் குவிமுலையைக்
கைகொடுத்தல்
ஓவில்தெய் வக்கை யுறை."

—(பிரபந்தத்திரட்டு 16)

காதலுக்குத் தடையுண்டாங்கால் உடன் போக்கு நிகழ்தல் உண்டு. அவ்வுடன் போக்குக்கு உடந்தையாகவும் உறுதுணையாகவும் இருப்பவள், தலைவியின் உயிருக்கு உயிரான தோழியே ஆவள். அவள் தன் கவலையை யெல்லாம் அடக்கிக் கொண்டு தலைவியின் நல்வாழ்வே கருத்தாகி, "வழிநனிபயக்க வெனத் தெய்வம் வாழ்த்தி"த் தலைவியைத் தலைவனிடம் கையடையாகக் கொடுப்பாள். இவ்வுருக்கமிகு செய்கையே கருப்பொருளாக அமைந்த இலக்கியம் தெய்வக்கையுறை. தெய்வத்தை வாழ்த்திக் கையுறையாகக் கொடுத்தலால் இப்பெயர்த்தாயிற்று.

**தேவபாணி**

தெய்வத்தைப் பாடும் பாடல் தேவபாணி. பாடும் திறம் வல்லார் பாணர், பாடினியர் என்று வழங்கப்

பட்டமை அறியத்தக்கது. திருப்பாணாழ்வாரும், திருநீல கண்ட யாழ்ப்பாண நாயனாரும், பாணாற்றுப்படைகளும் எண்ணத்தக்கன.

தேவபாணி தொல்காப்பியத்தில் சுட்டப்படுகின்றது. அது பெருந்தேவபாணி, சிறுதேவபாணி எனப்பகுக்கவும் ஆயிற்று. கலியும், பரிபாடலும் தேவபாணிக்குரியவை என்பது முந்தையோர் முடிபு. ஆயின் பின்னே மாறி யமைந்த சான்றும் உண்டு.*

பதினோராந்திருமுறையில் பெருந்தேவபாணி உண்டு. அது நக்கீர தேவநாயனார் பாடியது. 67 அடிகளைக் கொண்டது.

பரிபாடலில், திருமால் செவ்வேள் ஆகியோரைப் பற்றிய தேவபாணிகள் உள.

## தேவாங்கவரையுள் (பட்டுவரையுள்)

துய்க்கத் தக்க நலமெல்லாம் அமைந்த பட்டுடுத்த மின்னற்கொடி போல்வாளைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து அவளை அடைதல், 'தேவாங்க வரையுள்' என்னும் இலக்கியப் பொருளாகும்.

"துற்ற தேவாங்க மின்னையே சிறைவாய்
வைத்துவந்து மேவுதலே ஓங்கு தேவாங்க வரையுள்."

என்பது பிரபந்தத் திரட்டு (68).

தேவாங்கம்—பட்டு; தேவாங்கரைப் பட்டுநூல்காரர் என்னும் வழக்குண்மை அறிக.

தேவாங்க வரையுள், தேவாங்க சிலோச்சயம்' எனவும் சொல்லப்படும். சிலோச்சயம்—வரை, மலை.

## தொகைநிலைச் செய்யுள்

பாட்டின் பொருளால் இடத்தால் காலத்தால் தொழிலால் வருவனவும், பாட்டினது அளவால் எண்ணால் வருவனவும் செய்தவன் பெயரை நாட்டித் தொகுவனவும்

செய்வித்தவன் பெயரை நாட்டித் தொகுவனவும் தொகை நிலைச் செய்யுள் என்பதாம்.

': பாட்டுப் பொருளிடங் காலம் தொழில்பாட்
டளவினெண்ணின்
நாட்டித் தொகுத்தவும் செய்தவன் செய்வித்
தவன் தம்பேர்
மூட்டித் தொகுத்தவு மாகி முதநூல் மொழிந்தநெறி
கேட்டுத் தெரிந்துகொள் கிஞ்சுகச் செவ்வாய்க்
கிளிமொழியே.
—(நவநீதப்பாட்டியல். 66)

(பாட்டின்) பொருளால் தொக்கது, அகநானூறு.

இடத்தால் தொக்கது, களவழிநாற்பது.

காலத்தால் தொக்கது, கார்நாற்பது.

தொழிலால் தொக்கது, ஊசல்

பாட்டால் தொக்கது, கலித்தொகை.

அளவால் தொக்கது, குறுந்தொகை.

இனி மிகுதி, தன்மை, முதனூல் இடுகுறி, உறுப்பு முதலிய பிறவகையாலும் பெயர் பெறுவண்டு.

வெற்றிவேற்கையின் ஒரு பெயர் நறுந்தொகை; பிற் காலத் தொகைநூல்களில் பெருந்தொகைக்குத் தனி இடமுண்டு. 'திரட்டு' காண்க.

### தொகைவெண்பா

ஏதேனும் ஒரு பொருள்மேல் ஐம்பது, எழுபது, தொண்ணூறு வெண்பாக்கள் வரப் பாடுவது தொகை வெண்பா.

"வெண்பா, ஒத்தான ஐம்பது எழுபது தொண்ணூறும்
பேர்பெற்றதாய்...இயம்புவரே."

என்பது நவநீதப் பாட்டியல் (38).

**தொடர்நிலைச் செய்யுள்**

காப்பியம், பெருங்காப்பியம், அகலக்கலி காண்க.

சிலப்பதிகாரத்திற்கு, இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள் என்னும் பெயருண்மை அறிக.

**தொள்ளாயிரம்**

தொள்ளாயிரம் பாடல்களையுடைய நூல் வகை தொள்ளாயிரம் எனப்பட்டது. • தொள்ளாயிரம் ஒரு வகை யாப்பால் இயலும் என்பது முத்தொள்ளாயிரத்தால் விளங்கும். இனி அரும்பைத் தொள்ளாயிரம் ஒட்டக்கூத்தர் இயற்றியது. மற்றொரு தொள்ளாயிரம் வசந்தத் தொள்ளாயிரம். இவை இரண்டும் மறைந்து போன நூல்களைச் சார்ந்தவை. முத்தொள்ளாயிரத்தில் மட்டும் பாடல்கள் கிடைத்துள.

**தோணோக்கம்**

மணிவாசகரால் அறிந்து கொள்ள வாய்க்கும் ஓர் ஆட்டுப்பாட்டு 'தோணோக்க'மாம். தோள் நோக்கம் = தோணோக்கம். தோளெடுத்து வீசி ஆடுவதுடன், அதனை நோக்கிக் கொண்டு பாடுவதும் உண்மையால் இப்பெயர் பெற்றதெனலாம். இப்பாடல் முடிநிலை 'தோணோக்கம் ஆடாமோ? என்று வருதல் பெயர்க்குறி என்க. இது மகளிராடல் என்பது "துன்றார் குழலினீர், மங்கைநல்லீர்" என்பனபோல வரும் வரிகளால் விளங்கும். தோணோக்கப் பாடல்கள் திருவாசகத்தில் 14 உள. நான்காம் பாடல்:

"கற்போலும் நெஞ்சம் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙனம்
சொற்பால தானவா தோணோக்கம் ஆடாமோ."

**நகர் விருத்தம் (நகர்ப்பா)**

நகர நலங்கக்குறித்துப் பத்து ஆசிரிய விருத்தம் பாடுவது நகர்விருத்தம் என்னும் சிறுநூற் பாற்படும். (நவநீத. 41)

**நட்சத்திரமாலை (உடுமாலை)**

உடுவின் பெயர் ஒவ்வொன்றும் வருமாறு இனிய பாடல் இருபத்தேழு இயற்றித் தொடுத்தல் நட்சத்திரமாலை எனப்படும். உடுவின் எண்ணிக்கை 27 ஆகலின், இந்நூற் பாடல் தொகையும் 27 ஆயிற்று.

"உடுப்பேர்க் கார்த்திருத்தல் சந்தமேற்ற நட்சத்ர
மாலையே."

—(பிரபந்தத்திரட்டு. 26)

தாரகைமாலை' பார்க்க.

**நடுவொலியலந்தாதி**

'ஒலியந்தாதி' பார்க்க.

**நதிவிசேடம் (ஆற்றுச் சிறப்பு)**

தலைவன் நாட்டின் ஆற்றினைச் சிறப்பித்து, மற்றை ஆறுகளின் இயலை இகழ்ந்து காமுகர் கூடும் குறியிடத்திற்கு ஆற்றில் அடித்துவரப்படும் மலருக்கு உவமையாக்கிக் கூறுதல் ஆற்றுச்சீர் என்னும் நதிவிசேடமாம்.

"இறைவன் நதியை எடுத்துமற்ற வற்றைக்
குறியிகழ்ந்து காமக்குணத்தார்—குறியிடத்துக்
காற்று மலரையுவ மானித்தல் எந்நாளும்
ஆற்ற நதிவிசே டம்."

—(பிரபந்தத்திரட்டு 66)

காற்றுக்கும் மலருக்கும் உவமையாக்கிக் கூறுதலுமாம்.

**நயனப்பத்து (திருக்கண்பத்து)**

ஆசிரிய விருத்தம் பத்தினாலாவது, கலித்துறை பத்தினாலாவது நயனத்தைப் புகழ்வது நயனப்பத்தாகும் (நயனம்—கண்). (நவநீத. 50;

ஆசிரிய விருத்தம் பத்தால் பாடுவது என்று பன்னிரு பாட்டியல் (333) கூறும்.

பத்துப் பாடல் என்ற அளவில் இலக்கண விளக்கப் பாட்டியல் அமையும் (பாட். 92)

" பார்வையைப் பத்துப் பாட்டால் உரைப்பது
நயனப் பத்தென நவிலப் படுமே."

என்பது முத்துவீரியம் (1104).

**நவகம் (ஒன்பது)**

ஒன்பது பாடல்களால் ஆகிய நூல். அட்டகம் (எட்டு) சத்தகம் (ஏழு) என்பவைபோல வந்தபெயர்.

சோமசுந்தர நாயகர் இயற்றியது, 'தேவி தியான நவகம்.'

**நவகாரிகைமாலை (தொண்கலித்துறைமாலை)**

கட்டளைக்கலித்துறை ஒன்பதால் பாடப்பெறுவது நவகாரிகைமாலை எனப்பெறும். இக்காரிகை தெய்வத்தின்மேல் பாடப்பெறுவதாகும்.

திருவண்ணாமலை அருணாசலேசர் நவகாரிகைமாலை இவ்வகையைச் சார்ந்ததாகும்.

நவம்—ஒன்பது; காரிகை—கட்டளைக்கலித்துறை.

**நவரசம் (தொண்சுவை)**

ஒன்பான் சுவைகளையும் சுவைக்கு ஒன்றாக ஒரேவகை யாப்பால் பாடுதல் நவரசம் எனப்படும். பழனித் திருவாயிரத்தல் 'நவரசம்' ஒன்பதாம் பகுதியாம்.

**நவரசமஞ்சரி (தொண்சுவைமாலை)**

" நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பால் எட்டே மெய்ப்பா டென்ப."

என்பார் தொல்காப்பியர் (மெய்ப். 3)

இவ்வெட்டனுடன் சமனிலை என்பதொன்றையும் சேர்த்து ஒன்பான்சுவை என்பர்; நவரசம் என்பததுவே.

சுவைக்கு ஒன்பதாக ஒன்பான் சுவைக்கும் எண்பத்தொரு பாடல்பாடுதல் நவரச மஞ்சரி எனப்பெயர் பெறும்.

வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளின் திருச்செந்தில் 'நவரச மஞ்சரி' இவ்வகையில் எழுந்ததாம்.

**நவமணி (தொண்மணி)**

ஒனபான் மணிகளின் பெயரும் அமைய, ஒன்பான் பாடல்கள் இயற்றல் நவமணியாம்.

விருதை சிவஞானயோகிகள் இயற்றிய ஒரு நூல், 'சேறை நவமணிமாலை' என்பது. தொண்—ஒன்பது.

**நவமணிமாலை (தொண்மணிமாலை)**

வெண்பா முதலாக வேறுபட்ட பாவும், பாவினமும் ஒன்பது வர அந்தாதியாகப் பாடுதல் நவமணிமாலை எனப் பெறும். நவரத்தினமாலை என்பதும் இது. ஒன்பது பாடல்களிலும் ஒன்பது மணிப்பெயர்கள் வரும்.

"வெண்பா முதலா வேறோர் ஒன்பது
நண்பாக் கூறல் நவமணி மாலை."

—'இலக். பாட். 76)

"பாவே இனமே என்றிவை இரண்டும்
மேவிய வகையது நவமணி மாலை."

—(பன்னிரு. 294)

"ஆசிரிய விருத்தம் ஒன்பது வருவது நவமணிமாலை." என்று நவநீதப்பாட்டியல் (52) கூறும்.

"அந்தா தித்து வெண்பா ஆதிய
பாவும் பாவினமு மாக ஒன்பது
செய்யுள் அணிபெறச் செப்புவ ததுதான்
நவமணி மாலையாம் நாடுங் காலே."

—(முத்துவீ. 1051)

இவ்விலக்கணம் அமையப் பாரதியாரால் செய்யப்பெற்ற பாரதமாதா **நவரத்தினமாலை** புது நெறியினதாகும்.

வெண்பா, கட்டளைக் கலித்துறை, வெண்டளைக் கலிப்பா, கொச்சகம், கலிநிலைத்துறை, கட்டளைக் கலிப்பா, எழுசீர் விருத்தம், ஆசிரியப்பா, சந்த எண்சீர்ப்பா என ஒன்பது வகை யாப்பில் அந்தாதியாகப் பாடப்பட்ட நவமணிமாலை பழனித் திருவாயிரத்தில் உண்டு.

**நாட்டு விருத்தம் (நாட்டுப்பா)**

நாட்டின் சிறப்பியல் குறித்துப் பத்து ஆசிரிய விருத்தம் இயற்றுவது நாட்டு விருத்தம் என்னும் நூல்வகையாம். (நவநீத. 41)

**நாமக்கோவை (பெயர்க்கோவை)**

நாமம்—பெயர். எடுத்துக்கொண்ட ஒருவர் பெயரையோ, குழுவின் பெயரையோ ஒழுங்குறுத்திக் கூறுதல் நாமக்கோவை எனப்படும்.

திருத்தொண்டர் திருநாமக்கோவை என்பது சிவஞான முனிவரால் இயற்றப் பெற்றது. கலிவெண்பா யாப்பினது. திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டத் திருவந்தாதி, சேத்திரக்கோவை, சீகாழியின் பல்பெயர்களையும் கூறிய பல்பெயர்ப் பத்து என்பவை நாமக்கோவையின் முன்னவை என எண்ணத்தக்கவை.

**நாமமாலை**

பலவகை அடிகளும் மயங்கிவரும் வஞ்சிப்பாவால் ஆடவரைப் புகழ்ந்து பாடுவது நாமமாலையாகும்.

“மைந்தர்க் காயின் வஞ்சிப் பல்வகை
நேர்ந்தஅடி மயக்கம் நாம மாலை.”

“ஆடவர் திறத்து வஞ்சி யின்னெறி
நாடிய பாதம் மயங்க வைப்பின்
நாம மாலை.”

—(பன்னிரு. 284, 285)

"அகவல் அடிகலி அடியும் மயங்கிய
வஞ்சியாற் புருடனை வாழ்த்திப் புகழ்வது
நாம மாலையாம் நாடுங் காலே."

—(முத்துவீ. 1053.)

**நாமாவளி (திருப்பெயர் வரிசை)**

நாமம் — பெயர்; ஆவளி — வரிசை; விளக்கணி, 'தீபாவளி' எனப்படுதல் அறிக.

இறைவன் திருப்பெயர்களைப் பலபட வுரைத்து வாழ்த்துதலும் வேண்டிக் கிடத்தலும் நாமாவளியாம்.

"அம்பலத் தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள்விருந்தே
பொதுநடத் தரசே புண்ணியனே
புலவ ரெலாம்புகழ் கண்ணியனே."

எனத் தொடங்கும் வள்ளலார் 'நாமாவளி'

"நல்லோரெல் லார்க்கும் சபாபதியே
நல்வர மீயும் தயாநிதியே."

என அருள்விளக்கம் செய்து,

"புத்தந்தரும் போதா வித்தந்தரும் தாதா
நித்தந்தரும் பாதா சித்தந்திரும் பாதா."

என வேண்டி நிறைகின்றது.

அடியார் திருக்கூட்டத்து ஆர்வ இசையால் கொட்டாட்டுப் பாட்டாகத் திகழும் வண்ணம் பல்வேறு இசை வண்ணம் திகழப் பாடப்பட்டுள்ளதாம்.

'கொட்டாட்டுப்பாட்டு' (வாத்யநிருத்த கீதம்) என்பது கல்வெட்டில் கண்ட அருந்தொடர்.

**நாழிகைக் கவி**

அரசர்க்கும் அமரர்க்கும் உரைக்கும் கடிகைகளை, முப்பத்திரண்டு வெண்பாவினால் உரைப்பது நாழிகைக் கவி

யாகும். இது நாழிகை வெண்பா, கடிகை வெண்பா எனவும் பெறும்.

" வானவர்க்கும்,
அரசர் தமக்கும் அறிய உரைத்த கடிகைகளை
உரைசெய்யுள் முப்பத்திரண்டுவெண் பாவென
ஓதுவரே."
—(நவநீத. 54)

இதனைக் கடிகையளவில் தோன்றி நடப்பதாகக் கூறுவார் இலக்கண விளக்கமுடையார்.

" தேவர் அரசர் திறனே ரிசையான்
மேவுங் கடிகையின் மேற்சென் றதனை
நாலெட்டுறச்சொலல் நாழிகை வெண்பா."
—(இலக். பாட். 90)

"அமர ரிடத்தும் அரச ரிடத்தும்
நடக்கும் காரியம் நாழிகை அளவிற்
றோன்றி யொழுகுவ தாகமுப் பானோ
டிரண்டு நேரிசை வெண்பா இயம்பல்
கடிகைவெண் பாவெனக் கருதினர் புலவர்"
—(முத்துவீ. 1124)

நாழிகைக்கவி இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் பின்வருமாறு உரைக்கின்றது:

" ஈரிரண் டியாமத் தியன்ற நாழிகைச்
சீர்திகழ் வெண்பாப் பாடுநர் யாவரும்
இருநான் கேழே ழிருநான் காமெனக்
கன்னன் முப்பதும் எண்ணினர் இனிதே."

" மன்னர் கடவுளர் முன்னிலையாக
அன்ன கடிகை என்னும் இயல்பில்
தொகுநெறி அன்னவை நேரிசை வெண்பா."

"முதல்யாமம் ஏழு அளவும் பாடி எட்டாவதில் யாமம் ஒன்றென்றும், இரண்டாம் யாமம் ஆறளவும்பாடி ஏழில்

யாமம் இரண்டென்றும், மூன்றாம் யாமம் ஆறளவும் பாடி ஏழில் யாமம் மூன்றென்றும், நான்காம் யாமம் ஏழளவும் பாடி எட்டில் யாமம் நான்கென்றும் பாடின்முப்பது வெண்பாவாம்.'' (பன்னிரு. 292—293.)

**நாற்பது**

காலமும் இடமும் பொருளும் பற்றி நாற்பது வெண்பாப்பாடுதல் நாற்பதாகும்.

காலம் பற்றியது — கார்நாற்பது.
இடம் பற்றியது — களவழி நாற்பது.
பொருள் பற்றியது — இன்னாநாற்பது; இனியவை நாற்பது.

'' காலம் இடம் பொருள் கருதி நாற்பான்
சால உரைத்தல் நானாற் பதுவே''
—(இலக். பாட். 91)

நானாற்பதென்னாமல் நாற்பது வெண்பாவமைந்த நூல்கள் இப்பொருளமைதியால் மேலும் மிகுதற்கு இடந்தந்து பாடினார் முத்துவீரியனார்.

'' இடம் பொருள் காலம் இவற்றில் ஒன்றனை
வெண்பா நாற்பதால் விளம்பல் நாற்பது.''
—(முத்துவீ. 1113)

**நாற்பாமூவினமாலை**

நால்வகைப் பாவும், அப்பாக்களின் மூவினங்களாகிய தாழிசை, துறை விருத்தங்களும் ஓர் ஒழுங்காய் அமையப் பாடப்படுவதொரு நூல் 'நாற்பா மூவினமாலை.'

'சரசுவதியம்மை நாற்பா மூவினமாலை' என்பது பண்டித சங்குப் புலவர் இயற்றியதாகும்.

**நான்மணிமாலை**

வெண்பா, ஆசிரியம், விருத்தம், கலித்துறை என்பன முறையே வந்து நாற்பது பாட்டான் முடிவது நான்மணி மாலையாகும்.

"வெண்பா ஆசிரியம் விருத்தம் கலித்துறை
ஒண்பா நான்கும் நான்மணிமாலை."
—(செய்யுள்வகைமை)

இம்முறை மாறியும் வரும் வழக்குண்மை கீழ்வரும் நூற்பாக்களால் புலப்படும்:

"வெண்பாக் கலித்துறை அகவல் விருத்தம்
நண்பாய் வருவது நான்மணி மாலை."
"வெள்ளை கலித்துறை அகவல் விருத்தம்
கொள்வது நான்மணி கோத்தவந் தாதி."
—(பன்னிரு. 257, 259)

என்றும்,

"வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தா தியினாற் பதுபெறின்
நான்மணி மாலை யாமென நவில்வர்."
—(இலக். பாட். 61)

அகவலும் அகவல் விருத்தமும் நாற்பதாக, அகவலை முற்கொண்டு கூறுவதும் நான்மணிமாலை என்பர். ஆனால் அவர் அகவல் விகற்பமும், அகவல் விகற்பவிருத்தமும் நான்கு கூறுபடக் கொண்டு வகுப்பார்போலும். ஆயினும் தகவுடையதன்று.

"அகவலும் அகவல் விருத்தமும் நாற்ப
தகவலை முன்வைத் தறைவது கடனே."
—(பன்னிரு. 258)

**நானாற்பது**

நான்கு வகைப்பொருள்களைப்பற்றி நாற்பது நாற்பதாகப் பட்ட நூல்வகை நானாற்பது எனப்படும்.

இவ்வகையில் பதினெண்கீழ்க்கணக்குத் தொகுதியுள் இடம்பெற்றுள்ள கார் நாற்பது, களவழி நாற்பது, இன்னா நாற்பது, இனியவை நாற்பது என்னும் தொகுதி எடுத்துக் காட்டாம். ஆயின், ஒருவரால் செய்யப்பட்ட நூல்கள்

அவையல்ல. தனித்தனி ஒருவரால் செய்யப்பட்டது என்பது வேறுபாடு.

கீழ்க்கணக்கு இவையெனச் சுட்டும் பாடலில் 'நானாற்பது' என வருவது கொண்டு இவ்வகை தோற்றிய தெனல் வெளிப்படை. 'நாற்பது' என்னும் வகையே சாலும்.

**நானிலைச் சதகம் (நானிலை நூறு)**

சரியை, கிரியை, யோகம், ஞானம், (ஒழுக்கம், வழி பாடு, ஓகம், அறிவு) எனப்படும் நான்கு படிகளையும் பற்றி நூறு பாடல்கள் பாடுவது நானிலைச் சதகம்.

தண்டபாணி அடிகளால் 'நானிலைச் சதகம்' இயற்றப் பட்டுள்ளது.

**நிராகரணம் (மறுப்பு)**

பிறர்கொள்கை மறுப்பு நூலாக வெளிப்பட்டது 'நிராகரணம்' என்னும் ஒருவகை நூல்.

இவ்வகையில் முற்படிக்குறிப்பிடத்தக்கது 'சங்கற்ப நிராகரணம்' என்னும் நூல். இதில் பல்வேறு சமய வாதிகள் மறுக்கப்படுகின்றனர்.

நீலகேசி, குண்டலகேசி, பிங்கலகேசி முதலிய நூல் களும், நாவல் நாட்டுப் பிறசமயவாதிகளை வெல்லும் வழக்காறும்—நிராகரண நூல்களைத் தோற்றுவித்தலில் பங்குள்ளவை.

கிறித்தவ சமய மறுப்பாகக் கிளர்ந்தது 'யேசுமத சங்கற்ப நிராகரணம்' என்னும் நூல்.

**நிரொட்டகம் (இதழகல்பா)**

நிரொட்டி, இதழொட்டாப் பாட்டு என்பனவும் இது. உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ ஆகிய இவை இதழ்குவிந் தொலிக்கப் பிறப்பன ஆதலின் இவை வாராமல் பாடுவது நிரொட்டகம் ஆகும்.

"ஆறிரண்டாம் ஆவியும் ஐயிரண்டாம் ஆவியும்
மாறிகந்த உ ஊவும் ஔவும்—கூறில்
வகர பகரமஃகான் வந்தணையாச் செய்யுள்
நிகரில் நிரொட்டி எனல்."

—(யாப்பருங்கலவிருத்தி 96 மேற்.)

"இதழ்குவிந் தியையா தியல்பது நிரொட்டியாம்."

—(மாறனலங்காரம் 274)

"உ ஊ ஒ ஓ ஔபம வஇவற் றியைபு
சேராநி ரொட்டத் திறத்து."

—(தண்டி. 97)

நிரொட்டியாயும் யமகமாயும் அந்தாதியாயும் வந்த நூல் நிரொட்டக யமக அந்தாதி எனப்பெறும். **திருச்செந்தில் நிரொட்டக யமக அந்தாதி, திருத்தில்லை நிரொட்டக யமக அந்தாதி** என்பவை போல்வன எடுத்துக்காட்டாம்.

எ-டு:

"யானைக்கண் டங்கரி சென்றேத் தெழிற்செந்தி
லின்றடைந்தே
யானைக்கண் டங்கரி யற்கங் கயிலையை யேய்ந்ததகை
யானைக்கண் டங்கரி சேரெண்டிக் காக்கினற் கீநலிசை
யானைக்கண் டங்கரி தாகிய சீர்க்கதி யெய்தினனே."

—(திருசெந்தில் நிரொட்டக யமக அந்தாதி-1)

**நூல்**

நூல் என்பது இலக்கண நூலைக் குறிப்பதாக எழுந்தது. மரத்தின் வளைவை நீக்குதற்கு நூல் அடித்து அறுத்து ஒழுங்குபடுத்துவதுபோல, அறிவின் திரிவை அகற்றி ஒழுங்குபடுத்துவது நூல் என்னும் காரணியப் பெயராயிற்று.

நூல் இயற்றுதற்குரிய பாவகையாக இருந்தமையால் ஒருவகை அகவல் 'நூற்பா' என வழக்கூன்றியது. நூல் என்பது இலக்கணப் பொருளதாதல் நன்னூல், சின்னூல், தொன்னூல் என்பவற்றால் விளங்கும். இவை முறையே

பவணந்தி முனிவர், குணவீரபண்டிதர், வீரமாமுனிவர் ஆகியோரால் இயற்றப்பட்டவை. நூல் என்றொரு நூல் இருந்தமை சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையால் விளங்கும்.

**நூற்றந்தாதி**

நூறு வெண்பாவினாலேனும் நூறு கலித்துறையினாலேனும் அந்தாதித்துக் கூறுவது நூற்றந்தாதியாகும்.

"வெண்பா நூற்றினா லேனும் கலித்துறை
நூற்றினாலேனும் அந்தாதித் துரைப்பது
நூற்றந் தாதியாம் நுவலுங் காலே."

—(முத்துவீ. 1084)

(அந்தாதி காண்க).

**நெஞ்சறிவுறூஉ**

அறிவுறூஉ - அறிவுறுத்துதல். பாடும் புலவர் தம் நெஞ்சுக்கு அறிவுறுத்திக் கூறுமாறுபோலக் கூறி, உலகோர் பயனெய்த அருளும் நூல்வகை நெஞ்சறிவுறூஉ ஆகும்.

வள்ளலார் அருளிய நெஞ்சறிவுறுத்தல் 1406 அடிகளால் ஆகிய கலிவெண்பாவாக இயல்கின்றது.

"பொன்னார் மலைபோற் பொலிவுற் றசையாமல்
எந்நாளும் வாழியநீ என்னெஞ்சே."

எனத் தொடங்கி,

"பாழ்வாழ்வு நீங்கப் பதிவாழ்வில் எஞ்ஞான்றும்
வாழ்வாயென் னோடு மகிழ்ந்து."

என நிறைகின்றது.

நெஞ்சுக்கு அறிவுறுத்தல் உரையாக,

"செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீய தென்றே தெண்ணிலையே
—மல்லல்பெறத்
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க என்றதனைப்

பொன்னைப்போற் போற்றிப் புகழ்ந்திலையே—துன்னி
அகழ்வாரைத் தாங்கு நிலம்போல வென்னும்
திகழ்வாய் மையநீ தெளியாய்.'' (433-35)

என்று குறள்மணிகளையும் பிறர்பிறர் கூறும் மணிகளையும் படைபடையாக எடுத்துரைத்து நடையிட்டுச் செல்கிறது நெஞ்சறிவுறுத்தல். செவியறிவுறூஉ காண்க.

**நெடுந்தொகை**

'' நெடிலடிச் செய்யுள் நெடுந்தொகை யாமே.''

என்பது பிரபந்ததீபம் (52).

அடியின் எண்ணிக்கை கருதி நெடுமை குறுமைகாணல் தொல்வழக்கு.

ஆசிரியர் தொல்காப்பியர் 'நெடுவெண்பாட்டு', குறு வெண் பாட்டு' என்று கூறியமை அடி எண்ணிக்கை கருதியே.

13 முதல் 31 அடிகளையுடைய பாடல்களால் ஆகிய நூலை 'நெடுந்தொகை' என்றும், 4 முதல் 8 அடிகளை யுடைய பாடல்களால் ஆகிய நூலைக் 'குறுந்தொகை' என்றும் முந்தையோர் முடித்துக்கொண்டது தொன்னெறி யிலேயேயாம்.

ஆனால், இடைக்காலத்தில் அடியின் எண்ணிக்கைப் பெருக்கம் சுருக்கம் கருதாமல், ஓர் அடியிலுள்ள சீர்களின் எண்ணிக்கைப் பெருக்கம் சுருக்கம் கொண்டு நெடுமை குறுமை கணக்கிடப்பட்டன. இதனை, நெடுந்தாண்டகம், குறுந்தாண்டகம் என்னும் ஆட்சியால் அறியலாம். அதற்கு அடிப்படை 2, 3, 4, 5, 6 முதலாய சீர்களையுடைய அடிகளை முறையே குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி எனப்பெயரிடும் வழக்கு ஊன்றியமையாம். இந்நிலையிலேயே, 'நெடிலடிச் செய்யுள் நெடுந்தொகை' எனவும், 'குறளடிச் செய்யுள் குறுந்தொகை' எனவும் பிரபந்ததீபத்தார் உரைக்கிறார். ஆகலின் கழிநெடில்

அடிப்பாடல்களால் அமைந்த நூல் நெடுந்தொகை என்றும், அதிற்குறுகிய சீர்களையுடைய அடிகளால் அமைந்த பாடல்களையுடைய நூல் குறுந்தொகை என்றும் கொண்டார் என அறியலாம்.

### நெடுமொழி வஞ்சி

நெடுமொழிவஞ்சி, போர்த்துறையாம் புறத்துறை சார்ந்தது. வஞ்சினம் என்பதும் இது. அத்துறையை இறைமையோடியைத்துப் பாடியுள்ளார் வள்ளலார்.

"கோவ மென்னுமோர் கொலைப்புலைத் தலைமைக்
கொடியனேஎனைக் கூடிநீ நின்ற
பாவ வன்மையாற் பகையடுத் துயிர்மேற்
பிரிவி லாமலே பயனிழந்தனன்காண்
சாவ நீயில தேலெனை விடுக
சலஞ்செய் வாயெனிற் சதுர்மறை முழக்கம்
ஓவி லொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மையென் றுணரே!"

தமக்குண்டாம் 'கோவத்தை' விளித்து, இறையருள் வாளால் வெட்டுதல் உண்மை எனச் சுட்டுகிறார். புறத்துறை வஞ்சிக்கும் இதற்கும் வேற்றுமை 'இது செய்யாக்கால் இன்னன் ஆவேன்' என்று அமைவது புறத் துறை. இதில் 'இன்னது செய்வேன்' என்னும் அளவே யுள்ளது.

காமம், கோவம், உலோபம், மோகம், மதம், ஆணவம் என்னும் அறுகுணக்கேடுகளையே பகையாய்ச் சுட்டி, அவற்றை வெட்டியழிப்பதாம் உண்மையுடன் முழுப் பதிகமும் அமைந்துளது.

### நொச்சிமாலை

புறத்து ஊன்றிய பகைவர் கொள்ளாமல், நொச்சிப் பூமாலை சூடித் தன் மதில்காக்கும் திறம் கூறுவது நொச்சி மாலையாகும்.

" கோலிய மாற்றார் கோட லின்றி
நொச்சிவேய்ந் தகல்எயில் நோக்குந் திறனை
வழுத்துதல் நொச்சி மாலையாகும்."
—(முத்துவீ. 1075)

**நொண்டிச்சிந்து**

நொண்டி நாடகங்களுக்கு அமைந்த சிந்து வகையே நொண்டிச்சிந்து எனப்பட்டதாகலாம். அச்சிந்து அந் நாடகம் தவிர்த்துப் பிறவற்றுக்கும் பயன்படுத்தப்பட்ட போது அப்பெயரைக்கொண்டு வழங்கப்பட்டிருத்தல் கூடும்.

நொண்டிச்சிந்து பெருவழக்குடையது. 'சித்தராரூட நொண்டிச் சிந்து' என்பதொரு நூல் பாம்புகளின் இயல்பு, அவற்றின் வகை, பெயர்கள், பற்களின் பெயர்கள், அவற்றின் தன்மை, நஞ்சினை இறக்கும் வழி ஆகியவற்றை யெல்லாம் மிக விரித்துரைக்கின்றது.

" நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்
அஞ்சியஞ் சிச்சாவார் — இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே."

என்பது நொண்டிச்சிந்தே.

பாதி ஓரடி (மேலடி) குறைந்தும், மீதிப்பாதி ஓரடி (கீழடி) நீண்டும் இருக்கவில்லையா! பாட்டின் அடி அளவே நொண்டிக் கொண்டுவிட்டதல்லவா! நொண்டி நடப்பவர் அடிநெடுமை குறுமையைப் பார்த்தால், 'நொண்டிச்சிந்து' என்னும் பெயர் விளக்கமாகுமோ? இரண்டு அடிகளாய் ஒவ்வோர் அடியும் முதற்கண் இருசீர்களும் தனிச்சொல்லும் பின்னர் மூன்று சீர்களும் உடையதாகவும், இரண்டிகளும் ஓரெதுகை உடையதாகவும் அமையும் சிந்துகளை எண்ணுங்கால் இவ்வெண்ணம் வருவது இயல்பே. நாலடிகளாகவும், தனிச்சொல் இன்றியும், முன்னடி மிக்கும் வருவனவெல்லாம் பின்வளர்ச்சி நிலையாகலாம்.

**நொண்டி நாடகம்**

களவுக்குற்றத்திற்கு ஆட்பட்டுக் கால் இழந்த நொண்டி தன் குறையுணர்ந்து இறையருளை வேண்டிக் கிடக்க, அவனருளால் நொண்டிநீங்கி நலம் பெற்றதாகக் கூறும் அமைப்புடையது நொண்டிநாடகம். பள்ளு, குறவஞ்சி என்பவைபோலப் பாட்டுடைத் தலைவன் ஒருவனைக்கொண்டு இயலும்.

வாழ்த்து, அவையடக்கு, தோடையம், தரு, விருத்தம் முதலியவை இவற்றின் உறுப்புகளாம்.

சீதக்காதி நொண்டிநாடகம், திருச்செந்தூர் நொண்டி நாடகம் என்பவை பரவலாக வழங்குபவை.

''வலிக்காவிற் காலற்ற லேகாங்கிரி; கலிவெண்பாச் சிந்தாய்க் கோலுற்றார் நொண்டியென்று கொண்டு'' என 'நொண்டி' இலக்கணத்தை பிரபந்தத் திரட்டு (13) கூறுகின்றது.

திருட்டுக்குற்றத்திற்காக வலிந்து பற்றிச் சென்று தண்டனையாகக் கோயிலில் காவு (பலி) தருதலால் தனித்துக் கிடப்பவனைப் பற்றிக் கலிவெண்பாச் சிந்தாகப் பாடுவது நொண்டி எனப்படும் என்கிறார். ஏகாங்கிரி— தனியாள். கோலுற்றார் — அமைத்தார்.

**பஃறொடை**

பஃறொடை என்பது வெண்பா வகையுள் ஒன்றாகிய பஃறொடை வெண்பாவைக் குறிக்கும். இவ்வகை வெண்பாவால் அமைந்த நூல் பஃறொடை என்றும், பஃறொடை வெண்பா என்றும் வழங்கும்.

மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் ஒன்றான 'போற்றிப் பஃறொடை வெண்பா' இவ்வகை சார்ந்தது. உமாபதி சிவாசாரியரால் இயற்றப்பட்ட அது, தொண்ணூற்றைந்து கண்ணிகளால் நடக்கின்றது.

பஃறொடை வெண்பா ஐந்தடிமுதல் பன்னீரடி உயர் எல்லையினது என்பதைக் கடந்து கலிவெண்பாவேபோல நீண்டு வளர்ந்த குறிப்பை இதனால் அறியலாம்.

## பகுபடுபாட்டு

ஒருபாட்டு அதே இனப்பாட்டாகவோ வேறினப் பாட்டாகவோ மூன்றுக்கு மேற்பகுக்கப்படுமாறு அமையுமானால் அது 'பகுபடு பாட்டு' எனப்படும். அவ்வகைப் பாக்களால் அமைந்த நூலும் 'பகுபடு பாட்டு' எனப்படும். ஒரு பாட்டு, ஐந்து பாட்டாக அமைந்த நூல் பகுபடு பஞ்சகம் என்று வழங்கப்பெறும்.

"சிவகந்தன் சீர்மயின் மேற்றிகழ் செய்யும் தினம
தோன்றீ
வைகண்டஞ் சூழினன் றானமின் விஞ்சொண்
ணகையிதென்னெனன்
கவலொன்றுங் காலவற் குட்கதி ரெண்முக் கணிறை
யெஞ்சே
யவனங்கங் காணதென் றானரி வந்தித் தன
னெழுந்தே."

என்னும் இக்கட்டளைக் கலித்துறையை, அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தத்தில் இருவகையாகவும், தரவு கொச்சகக் கலிப்பாவாகவும், கலிநிலைத்துறையாகவும் காட்டப்பெற்றுள்ளதைப் பத்துப் பிரபந்தத்துள் காண்க.

—(ஐந்தாதி என்னும் பகுபடுபஞ்சகம். 1)

## பஞ்சகம் (ஐந்தகம்)

ஐந்து பாடல்களைக் கொண்டதொரு சிற்றிலக்கியம் பஞ்சகம் எனப்படுகின்றது.

விருத்தம், வெண்பா, தாழிசை, சிந்து முதலாய பல வகைகளில் பஞ்சகம் காண வருதலால் ஐந்து பாடல்கள் என்றே முடிவே செய்யலாம்.

இனி ஐந்து பொருள்களைப் பற்றித் தனித்தனி ஒரு பாடலால் பாடுதலும் பஞ்சகம் என்பது, தண்டபாணி அடிகள் பாடிய 'ஐம்படை மாலை'யால் அறியலாம்.

கண்ணிகளாகவும் 'பஞ்சகம்' வருமென்பது கவி மணியின், இலக்கிய பஞ்சகத்தால் அறியலாம்.

இனிப், பஞ்சரத்தினம்' என்னும் 'ஐம்மணியும்' ஐந்து பாடல்களையுடையதே.

திருவள்ளுவ நாயனார் பஞ்சரத்தினம் பன்னிரு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம் ஐந்தனைக் கொண்டுள்ளது.

திருப்புகழ் ஐந்து கொண்ட நூல் 'பஞ்ச ரத்தினத் திருப்புகழ்' என வழங்குகின்றது. ஆகலின் இசை வண்ணமும் இதற்கு இசைவே எனக் கொள்க.

**பஞ்சரத்தினக்கோவை (ஐம்மணிக்கோவை)**

திருப்புகலூர்க்குப் பஞ்சரத்தினக்கோவை உள்ளது. வாழ்த்துப் பாடல்கள் இரண்டும், நூல் பாடல்கள் ஐம்பதும் கொண்டது. இவண் பஞ்சரத்தினம் என்பது பதிக பஞ்சகம் போல ஐம்பதைக் குறிப்பதாக உள்ளது. இது கோவை எனப்படுதலின் பொருட்டொடர் ஒழுங்கு வேண்டும் என்பதும் பதிக பஞ்சகத்திற்கு வெவ்வேறு ஐந்து பொருள் பற்றிய பதிகமும் இருக்கலாம் என்பதும் கொள்ளலாம். இக்கோவை தண்டபாணி அடிகள் பாடியது.

**பட்டாபிசேகம் (திருமுடிசூட்டு)**

வேந்தன் ஒருவன் தான் இலிதின் ஆட்சி நடாத்தி அதன் பின்னர் அவன் பெற்ற மைந்தனுக்கு ஆட்சியைத் தருதல் 'திருமுடிசூட்டு' எனப்படும் 'பட்டாபிசேக' மாகும்.

''அரியணை அனுமன் தாங்க'' என வரும் பாட்டு, 'திருமுடிசூட்டாக' இராமகாதையில் திகழ்கின்றது.

அரசர் தம் பெருவிழாக்களுள் தலையாயது முடிசூட்டு விழாவாம். இந்நாள் மக்களாட்சி முறையில் அமைச்சர்கள் பதவியேற்பு விழாவை ஒப்பிட்டுக் காணத்தக்கதாம்.

"தானரசு செய்துதவு தன்சேய்க் கரசுதரல்
தேன்மொழியாய் பட்டாபி சேகமாம்."

—(பிரபந்தத்திரட்டு 69;

**படைப்போர்**

நபிகள் நாயகம் பங்கு•கொண்ட போர்கள் தொடர்பாக எழுந்த இவ்விலக்கிய வகை, பின்னே சமயப்போர் தொடர்பாக வளர்ச்சியுற்றது.

படைப்போர்களில் இறவுசுல்கூல் படைப்போர் புகழ் மிக்கது. காப்பிய இயலாய் இயல்வது. ஐந்து போர் களைப் பற்றித் தொடர்ந்துரைக்கும் படைப்போர் ஐந்து படைப்போர் என்பது. படைப்போர் கண்ணிகளால் அமைந்தது.

இசுலாமியக் கொடையாக எழுந்தது 'படைப்போர்' இலக்கியம். 'சண்டை' பார்க்க.

**படைவீட்டுப் பதிகம்**

'படை' என்பது 'கருவி' என்னும் பொருளது. கலப்பை' 'உழுபடை' என்னும், அது செல்லும் சால். 'படைச்சால்' என்றும் வழக்கிலுள்ளதை அறிந்தால் 'பொதுவில் கருவிப் பொருளதே 'படை' என அறியலாம். எனினும் 'படை', போர்க்கருவிகளைக் குறித்தலே பெரு வழக்காயிற்று. படைக்கருவிகள் வைக்கப்பட்டுள்ள சாலை, 'படைக்கலக் கொட்டில்' என்று பண்டு வழங்கப்பட்டது. 'ஆயுதசாலை' என்னும் வழக்கு வருமுன்னே தமிழ் வழக்கில் இருந்தது, படைக்கலக் கொட்டிலே. படை வழிபாடே, ஆயுதபூசைக்கு முன்னோடி.

இனிப் படைக்கலம் என்பதும் தன் பொதுமை நிலையில் இருந்து 'வேல்' என்பதைக் குறிக்கும் நிலை

யுண்டாயிற்று. போரில் சிறந்த போர் யானைப்போர்; முயலை எய்ய அம்பும், யானையை வீழ்த்த வேலும் வீரர் கொள்வர். ஆகலின் "கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது" என வள்ளுவம் பேசிற்று.

வேல், வீரன், கையதாம் கருவி. வீரருள் தலையாய வீரனாகச் செவ்வேள் மதிக்கப்பட்டான்; அவனே வேந்தனாகவும், இறைவனாகவும் கொள்ளப்பட்டான். அவன் கை 'வேற்படை' மெய்வழிபாட்டுக்கு உரியதாயிற்று. வழிபாட்டுக்கரகப் படை நிறுத்தப்பட்ட இடமே 'படை வீடு' எனப்பட்டது. 'படை' வழிபாடே, முருக வழிபாடாகவும் இணைந்த வழிபாடாகவும் இயலாயிற்று. 'படைவீடு' என்பதற்கு விளக்கச் செய்தியே இது.

முருகன் வேற்படை வழிபாடு உடைய இடங்கள் எல்லாமும் படைவீடுகள் தாமே! அப்படைவீடுகளுக்குப் பாடப்பட்ட பதிகங்கள் படைவீட்டுப் பதிகங்களாம். எத்தனை இடங்களுக்குப் படைவீட்டுப் பதிகங்கள் பாடியுள்ளார் ஒருவர்? அவர் எவர்?

அவர் 'முருகனடி' என்னும் தண்டபாணியடிகளார். அவர் பாடிய படைவீட்டுப் பதிக இடங்கள் அவலூர். இலஞ்சி, உடுப்பி, எட்டுக்குடி, குன்றக்குடி, சத்திமலை, சிவமலை, சோமாசிபாடி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருவேரகம், திருத்தணிகை, திருவரிப்பாடு, திருவேங்கடம், திருப்போரூர், நட்சத்திரமலை, பழனி, பழமுதிர்சோலை, பெரும்பேறு, மயிலம், வள்ளிமலை, வாசகிர், விராலிமலை, வேலுடையான்பட்டினம், வேள்விமலை என்பனவாம்.

**பண்ணைவிசித்திரம் (பண்ணை வியப்பு)**

தலைவன் வளமிக்க நிலம், ஆறு, மழை, செங்கோல், நெல், மாடு, களஞ்சியம், நாற்றிடல் ஆகியவற்றை மாதர்

இருவர் புகழ்தலும், தம்முள் ஏசிக் கொள்ளுதலும் பண்ணை விசித்திரம் என்னும் நூற் செய்தியாம்.

" மாதர் இருவரிறை வன்நாறு மீறுதிணை
ஓதுநதி மேகமழை ஒள்ளிறைவன்—நீதியா
நென்மாடு கோட்டை (நிரை) நாறிட்டல் நின்றேசல்
அன்னசிந்து பண்ணைவிசித் ரம். "

—(பிரபந்தத்திரட்டு 18)

நாறுமீறு திணை—வளம் விஞ்சிய ஐந்திணையாம் நிலம்.

நாறு இட்டல்— நாற்றுநடல். 'நிரை' என்பது சுவடிச் சிதைவை இட்டு நிரப்பிய சொல். வரிசை என்னும் பொருட்டது உழத்தியர், பள்ளு இவற்றையன்றி யொருவகையாக உழவுத் தொழில் வழியில் வந்த சிறுநூல் இது.

**பத்துப்பாட்டு**

நூறடிச்சிறுமையாய் ஆயிரம் அடிப் பெருமையாய் அமைந்த பத்துப்பாட்டுகள் பத்துப்பாட்டு எனப்பெறும். அப்பாட்டு அகவலால் வரும்.

" நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே. "

" அதுவே
அகவலின் வருமென அறைகுவர் புலவர். "

—(பன்னிரு. 353, 354)

**பதம்**

இசைப்பாட்டு வகைக்குப் பதம் என்பது பெயர். 'தாள்' என்பதில் இருந்து தாளம் பிறந்தது' 'பதம்' என்பதும் 'தாளம்' என்னும் பொருளதே.

பதம்>பாதம் = தாள்.

எடுப்பு (பல்லவி), தொடுப்பு (அநுபல்லவி), அடி (சரணம்) என்னும் உறுப்புகளால் பதம் இயலும். கீர்த்தனை (சீர்த்தனை)யும் பதம் எனப்படுதல் உண்டு.

பத்தித்துறையில் பயிலும் 'பதம்' பிற துறைகளிலும் இடம் பெறல் மிகுதி.

அழகிய சொக்கநாதர் பதம், பத்தித்துறைப்பாற் பட்டது. முத்துத்தாண்டவர் பாடிய சபாநாயகர் பதம் 25 கீர்த்தனைகளால் ஆயது.

மூக்குத்தூள் புகழ்பதம், மூக்குத்தூள் இகழ்பதம் என்பன எள்ளற்பதங்கள்.

சீர்முத்துக் குமாரசாமிபேரில் பதம் என்னும் சுப்பராயர் இயற்றிய பதம், இறைமையும் பல்வேறு அகத்துறையும் இயைந்து செல்வது.

கீர்த்தனை காண்க.

**பதிகம்**

ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம் ஆகியன வும் நான்கடி முதல் எட்டடிகாறும் உயர்ந்த வெண்பாவும் ஒருபது, இருபது என்று எண்ணிக்கை வர இயற்றப் பெறுவது பதிகம் ஆகும். இவண் கூறப்பெற்ற வெண்பா பஃறொடை வெண்பா என்க.

"ஆசிரி யத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி
எட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத் திரைந்து நாலைந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிகம் ஆகும்."

— (பன்னிரு. 312)

இனி, இதனை ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுள் செய்வது பதிகம் என்பர்.

" கோதிலார் பொருளைக் குறித்தை யிரண்டு
பாவெடுத் துரைப்பது பதிக மாகும்."
— (முத்துவீ. 1116)

**பதிற்றந்தாதி**

பத்து வெண்பா, பத்துக் கலித்துறை பொருட்டன்மை தோன்றப் பாடுதல் பதிற்றந்தாதியாம்.

" வெண்பாப் பத்துக் கலித்துறை பத்துப்
பண்புற மொழிதல் பதிற்றந் தாதி."
— (இலக். பாட். 81)

" ஈரைந்து வெண்பாக் கலித்துறை யீரைந்
தரும்பொருள் புலப்பட அந்தா தித்துப்
பாடு வனபதிற் றந்தாதி யாகும்."
— (முத்துவீ. 1083)

" பதிற்றந் தாதியே பாடவல் லோர்கள்
பப்பத்து வெண்பா பப்பத்துக் கலித்துறை
பொருள்தன்மை தோன்ற அந்தாதித்துப் பாடுவர்."
— (பிரபந்தத்தீபம். 54)

பதிற்றந்தாதிக்கு முன்னோடி பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றின் தொண்டிப்பத்துமாம். ஆயின் அவை அகவற்பாவால் இயல்வன.

**பதிகச் சதகம் (பத்துகள் நூறு)**

பதிகங்கள் நூறு கொண்டமையால் ஆயிரம் பாடல்களையுடைய நூல் என்பது விளங்கும்.

சதகப்பதிகம் (நூறுகள் பத்து) பெற்ற திருவாமாத்தூரே பதிகச் சதகமும் பெற்ற பெருமையது. அதனை இயற்றியவரும் அதனைப் பாடிய தண்டபாணி அடிகளே ஆவார். அந்நூலில் வாழ்த்து முதலியவற்றுடன் 1006 பாடல்கள் உள.

**பதிக பஞ்சகம் (பதிக ஐந்தகம்)**

பதிகங்கள் ஐந்தனைக் கொண்ட இலக்கியம் பதிக பஞ்சகம் எனப்படுகின்றது. ஆகலின் 50 பாடல்களைக்

கொண்டது என்பது தெளிவாம். தில்லைக்குப் 'பதிக பஞ்சகம்' உள்ளது. அதனை இயற்றியவர் தண்டபாணி அடிகள். வாழ்த்துடன் 53 பாடல்களைக் கொண்டுள்ளது அது.

### பதிற்றுப் பத்தந்தாதி

பதிற்றுப்பத்து = நூறு. நூறு பாடல்களையுடையதே இவ்வந்தாதியும். எனினும், வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி போல ஒரேவகைப் பாவால் அமைந்த தன்று. 'பதிற்றுப்பத்து' என்னும் பெயர் விளக்கும் வண்ணம் பத்து வகைப் பாக்களால் அமையும், ஒவ்வொரு வகைக்கும் பத்துப் பாடல்கள் இடம்பெறும். இவண் 'பா' வகை என்றது 'பாஇன' வகையாம்.

'பதிற்றுப்பத்து' என்னும் பழம் பெயராட்சி, சேர அரசர் பதின்மரைப் பற்றி, பப்பத்துப் பாடல்களாகப் பாடப் பெற்றமை கொண்டமைந்தது. இவண், பாவகையும் தொகையும் கருதிப் பதிற்றுப்பத்தாயிற்று. முடிமுதல் இயல்புடைமையால் அந்தாதியும் ஆயிற்று.

திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி 'குட்டித் திருவாசகம்' எனப் பெறும் சிறப்பினது. இன்னும் கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி, மதுரைப்பதிற்றுப் பத்தந்தாதி முதலியவை எடுத்துக்காட்டாம்.

'பதின்பத்தந்தாதி' எனப் பதிற்றுப் பத்தந்தாதியைச் சுவாமிநாதம் கூறும்.

### பந்தடி

பந்தடி என்பது பண்டு 'கந்துகவரி' எனப்பட்டது. சிலம்பின் சீரிய கொடையாகிய 'கந்துகவரி' பெருங்கதையில் 'பந்தடி'யாகச் சிறக்கின்றது. மதுரை மால் பகுதி, ஒரு காலத்தில் பந்தடியாக இருந்தமையால் பந்தடி ஒன்று, இரண்டு எனத் தெருப் பெயர்கள் இன்றும் வழக்கில் உள்ளன.

மதுரை மீனாட்சியம்மன் பந்தடி இவ்வகையில் எழுந்த நூல்.

" பொன்னிலங்கு பூங்கொடிபொ லஞ்செய்கோதை
வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்பஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்றுபந்
தடித்துமே
தேவரார மார்பன் வாழ்கவென்றுபந் தடித்துமே."

என்பது சிலம்பு.

" மென்சிலம்பு நன்கிலங்கப் பண்குலுங்கு வாய்ச்சியர்
இன்பலுங்கு பொன்சதங்கை ஒங்கவோங்கப்
பாங்கெலாம்
பொன்னியண்ணல் வாழ்கவாழ்க என்றுபந் தடிக்குமே
பூவைவண்ணன் வாழ்கவாழ்க வென்றுபந் தடிக்குமே."

என்பது அடிகள் அடியைப் பற்றி எழுந்த புதிய குண்டலகேசிப் பாட்டு.

**பயோதரப்பத்து (மார்புப்பத்து)**

ஆசிரிய விருத்தம் பத்தினாலாவது, கலித்துறை பத்தினாலாவது 'பயோதரத்தை (மார்பை)ப் புகழ்வது பயோதரப்பத்து எனப்படும். (நவநீத. 50.)

இத்னை ஆசிரிய விருத்தத்தால் பாடுவது என்று பன்னிரு பாட்டியல் (333) பகரும்.

பொதுவகையில்,

'பத்துப் பாடல்' என்று இலக்கணவிளக்கம் இயம்பும் (பாட். 92).

" பருமுலை பத்துப் பாவால் அறைவது
பயோதரப் பத்தெனப் பகரப் படுமே."

— (முத்துவீ. 1105)

**பரணி**

போரிடை ஆயிரம் ஆண்யானைகள் பட்டழிய வென்ற வீரமகனுக்குப் பாடப்படுவது பரணி நூலாகும்.

" ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி."
— (இலக். பாட். 78)

ஆனைப்போர் வெற்றியாளர்க்கன்றிப் பிறர்க்குப் பரணி வகுப்பதில்லை என்புதை,

" யானை எய்த அடுகளத் தல்ல
தியாவரும் பெறாஅர் பரணிப் பாட்டே."
— (பன்னிரு. 244)

என்பதால் அறியலாம்.

யானைத் தொகையைப் பிறவாறு கூறினாரும் உளர்.

" ஏழ்தலைப் பெய்த நூறுடை இபமே
அடுகளத் தட்டாற் பாடுதல் கடனே."
— (பன்னிரு245)

என்பது பன்னிருபாட்டியல்.

கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு முதலிய பல உறுப்புகளை அமைத்துப் பாட்டுடைத் தலைவனுடைய பலவகைச் சிறப்புகளையும் பல்வேறு வகைகளால் புறபொருள் அமைதி தோன்ற விளக்கிக் கலித்தாழிசையால் பரணி பாடப்பெறும். இதனுள் இருசீரடி முச்சீரடி யுடையவை வாரா.

பரணியின் பொருட்டொடர் நிலை வருமாறு:

" தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை
மேவி அமரும் காளி கோயில்
கன்னியை ஏத்தல் அலகை விநோதம்
கனாநிலை நிமித்தம் பசியே ஓகை
பெருந்தேவி பீடம் அழகுற இருக்க
அமர்நிலை நிமித்தம் அவள்பதம் பழிச்சா

மன்னவன் வாகை மலையும் அளவும்
மரபினி துரைத்தல் மறக்களங் காண்டல்
செருமிகு களத்திடை அடுகூழ் வார்த்தல்
பரவுதல் இன்ன வருவன பிறவும்
தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே.''
— (பன்னிரு. 243)

'' கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொங்காளி கோட்டம்
கடிகணம் உரைத்தல் காளிக் கிதுசொலல்
அடுபேய்க் கவள்சொலல் அதனால் தலைவன்
வண்புகழ் உரைத்தல் எண்புறத் திணையுற
வீட்டல் அடுகளம் வேட்டல் இவைமேல்
அளவடி முதலா அடியிரண் டாக
உளமகிழ் பரணி உரைக்கப் படுமே.''
—(இலக். பாட். 79)

பரணிப்போர் முறையைப் பன்னிருபாட்டியல்,

'' மயக்கறு கொச்சகத் தீரடி இயன்று
நயப்புறு தாழிசை உறுப்பிற் பொதிந்து
வஞ்சி மலைந்த உழிஞை முற்றித்
தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்புசின மாற்றான் தானைவெங் களத்திற்
குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்
தொருதனி ஏத்தும் பரணியது பண்பே.''
(பன்னிரு. 242)

எனக்கூறும். நவநீதப் பாட்டியலோ பரணியின், இலக்கணத்தை ஐந்து கட்டளைக்கலித்துறைகளால் விரியக் கூறும் (57-61)

பரணி என்பது நாண்மீனின் பெயர். பரணி நாள் முதன்முதல் அடுப்பில் தீமுட்டி அடுதற்கு உற்றநாள் என்பர். அந்நாளைத் தேர்ந்து அடுகளத்துற்ற பேய்கள் கூழட்டு உண்டு கூத்தாடி மகிழ்வதாக அமைந்த நூலுக்குப் பெயராயிற்று.

பரணி நாட் பெயர்ப்பொருள்,

“காடு கிழவோள் பூதம் அடுப்பே
தாழி பெருஞ்சோறு தருமனாள் போதமெனப்
பாகு பட்டது பரணிநாட் பெயரே.”

என்று திவாகரம் கூறுதலால் புலப்படும். இப்பொருள்களுக்கும் பரணியில் வரும் செய்திகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பரணி நூலால் இனிது விளங்கும்.

**பராக்கு**

கட்டியம் பார்க்க.

**பருவமாலை**

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனப்படும் பெண்டிர்பருவம் ஏழனையும் உரைத்து, அவ்வேழ் பருவத்தும் கற்றுக் கொண்டுள்ள துறைக்கல்விச் சிறப்புகளையும் எடுத்துரைத்தல் பருவமாலை எனப்படும்.

“பெண்பருவம், ஏழுக்கும் ஆண்டேழ் துறைக்கல்வி
ஏற்றமுறல்
வாழ்பருவ மாலையா மால்.”

—(பிரபந்தத்திரட்டு 10)

பெண்டிர் பருவவருணனை நோக்குமட்டுமன்றி, அவர்தம் கல்வித்திறம் குறித்தும் கருதியிருத்தல் குறிப்பிடத் தக்கதாம்.

‘பொருந்து கல்வியும் செல்வமும் பூக்கும்’ புகழ் வாழ்வுக்குத் தக்க புதுப்படைப்பாகப் பருவமாலை வெளிப்படல்வேண்டும்.

**பல்சந்தமாலை**

பலசந்தங்களால், பத்துமுதல் நூறு பாடல்கள் வருவது பல்சந்த மாலையாகும். பலசந்தம் என்பராயினும் பத்துச் சந்தங்கள் வருதல் வழக்கு என்க.

சந்தம் என்பது நான்கெழுத்து முதல் இருபத்தாறு எழுத்தளவும் ஒரோ அடியான் ஒத்துவருவது என்க.

"பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலை."
—(நவநீத. 38)

"சந்தத் தொருபது பல்சந்த மாலை."
—(முள்ளியார் கலித்தொகை)

"பத்துக் கொருசந்தம் படிப்பா நூறாக
வைத்தல்தான் பல்சந்த மாலையாம்."
—(பிரபந்தத்திரட்டு)

"பத்து முதலாகப் பப்பத் தீறா
வைத்த வண்ண வகைபத் தாகப்
பல்சந்த மாலை பகரப் படுமே."
—(இலக் பாட். 74)

**பல்பெயர்**

ஒன்றற்குரிய பலபெயர்களையும் முறையே கூறும் பாடல் தொகுதி பல்பெயர் எனப்படும். இதற்கு எடுத்துக் காட்டு 'ஞானசம்பந்தர் பாடிய 'பல்பெயர்ப்பத்து' ஆகும்.

பிரமபுரம், வேணுபுரம், பூம்புகலி, வெங்குரு, தோணி புரம், பூந்தராய், சிவபுரம், புறவம், சண்பை, சீர்காழி, கொச்சை, கழுமலம் என்னும் பெயர்கள் முறையே வரப்பாடப்பட்டுள்ள பதிகம் பல்பெயர்ப்பத்தாம்.

ஒரு பொருட்பன்மொழி வளர்ச்சி இப்பதிகப்பனுவல் (ஓரிடப்பன்மொழி) எனத்தகும்.

**பல்லாண்டு**

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்விதிருக்காப்பு."

எனக் குறள்வெண்செந்துறையால் தொடங்கும் பல்லாண்டு அறுசீர் ஆசிரிய விருத்தம் பதினொன்றால் நிறைகின்றது. இது பெரியாழ்வார் பாடியது.

மன்னரை வாழ்த்துதல் பழமையானது. புறப்பாடலில் புரவலரை வாழ்த்திக்கூறிய வாழ்த்துகள் மிகப்பல. அவை அகவல் நடையன.

இறைவனை வாழ்த்துதல் உண்டு; அகவல், கலி வெண்பா, விருத்தம் இன்ன பல யாப்புகளில் பாடப் பட்டுள்ளன. எனினும் 'பல்லாண்டு' என்னும் சொல் லாட்சியும், பாடல்தோறும் 'பல்லாண்டு கூறுதும்' என்னும் முடிநிலையும் ஆழ்வார் அருளியவையே.

"வையக மன்னவன் மன்னுக பல்யாண்
டெய்துக வென்ப தியாண்டுநிலை யாகும்."

என்பது பன்னிருபாட்டியல் (328).

மன்னவன் மாலோடொப்பான் என்றமையால், மாலுக்குப் பல்லாண்டு பாடினார்போலும் ஆழ்வார்,

**பழமொழி**

பழமொழி, இலக்கிய வகையாதல் பழமையானது.

"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப."

என்பது பழமொழி பற்றிய தொல்காப்பியச் செய்தி.

பழமொழி=முதுமொழி. பழமலை, முதுகுன்றம் என்னும் ஓரூர் இருபெயர் அறிக. முதுமொழி சீரிய அடிப் படையில் செவ்விது கிளப்பதாய் வருதலின் "ஏது நுதலிய முதுமொழி" என்றும் கூறுவார் தொல்காப்பியர்.

பழமொழி நானூறு இவ்வகையில் எழுந்த தனிப் பெருந்தொகைநூல். பதின்மூவாயிரம் என்னும் அளவில்

திரட்டப்பட்ட பழமொழிகள் இருப்பினும் முழுதுறு திரட்டில் முக்கால் விடுபாடுடைய கால்பகுதியே அது எனலாம். 'பழமொழிமேல் வைப்பு' பார்க்க.

## பழமொழிமேல் வைப்பு

முதுமொழி என்பதும் பழமொழியே. திருக்குறளை மேல் வைப்பாகக் கொண்டதொருநூல் 'முதுமொழிமேல் வைப்பாக' விளங்குகின்றது. சிவஞான முனிவரர் இயற்றிய அந்நூல் 'சோமேசர் முதுமொழி வெண்பா' என்னும் பெயர்த்து. அவ்வாறே திருக்குறளை மேல் வைப்பாகக் கொண்டு பிறந்த நூல்கள் பல. அவற்றுள் திருக்குறள் குமரேசவெண்பா 1330 குறள்களையும் மேல் வைப்பாகக் கொண்ட 1330 நேரிசை வெண்பாக்களால் ஆயது. கவிராச பண்டித செகவீர பாண்டியனார் இயற்றியது அது.

'முதுமொழி' தொல்காப்பியர் சுட்டும் ஒருவகை நூற்குறிப்பு. முதுமொழிக் காஞ்சி கீழ்க்கணக்கில் ஒன்று. தண்டலையார் சதகம் முதுமொழி விளக்கமே.

நாவரசர் பாடிய திருவாரூர்த் திருப்பதிகம் ஒன்று பழமொழிப் பெயராகவே விளங்குகின்றது. "கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே" "முயல் விட்டுக் காக்கைப் பின் போனவாறே" என்று தொடர்ந்து, "கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே" எனப் பழமொழியுடன் நிறைகின்றது.

பழமொழிமேல் வைத்தலைப் பிறரெல்லாம் முடி நிலையாகக் கொள்ள, வள்ளலாரோ முதல்நிலையை மேல்நிலையாகக் கொள்கிறார்.

"வானை நோக்கி மண்வழி நடப்பவன்போல்."

"வாயிலான் பெருவழக் குரைப்பது போல்."

"வித்தையின்றியே விளைத்திடு பவன்போல்."

"நீர்சொரிந்தொளி விளக் கெரிப்பவன்போல்."

எனத் தொடங்கிப் பாடுகின்றார். ''பழமொழிமேல் வைத்துப் பரிவு கூர்தல்'' என்பது இப்பதிகப் பெயர். இவ்வகையில், பழமொழி நானூறு முதற்கண் எழுந்த பனுவல் எனலாம்.

மேல்வைப்புப் பார்க்க.

**பள்ளி எழுச்சி**

உறங்குபவரை எழுப்புவதற்குப் பாடும் பாடல் பள்ளியெழுச்சி எனப்படும்.

உறங்குவதற்கு அல்லது உறக்காட்டுவதற்கு ஒருபாட்டு என்றால் எழுப்புவதற்கும் ஒரு பாட்டு வேண்டுமே!

உறங்குவதற்குக் கண்படைநிலை, உறக்காட்டு, தாலாட்டு என்றால், எழுப்புவதற்குத் துயிலெடைநிலை, துயில்நீக்கு, பள்ளி எழுச்சி என்பவை.

மற்றை மற்றைப் பெருநகர்களெல்லாம் கோழியின் எழுமாம்! ஆனால் மதுரை மாநகர் கோழியின் எழாதாம்!

> '' நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
> ஏம இன்றுயில் எழுதல் அல்லதை
> வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
> கோழியின் எழாதேம்பேரூர் துயிலே.''

என்பது பரிபாடல்.

சமணத்துறவோர் குகைகளில் தங்கியிருந்தனர். இருந்த இடத்தே தங்கி, உண்டு, உறங்கி, கற்று, கற்பித்து உறைந்தனர். அவ்விடம் 'பள்ளி' யாயிற்று. ஒவ்வொருவர் படுப்பதற்கும் பாறையில் பள்ளம் தோண்டியும், தலைக்கு மேடுவைத்தும் அமைத்த அவ்விடம் பள்ளியாகி, உறைவிடத்திற்கும் வழிபாட்டிடத்திற்கும் ஊணிடத்திற்கும் உறங்கிடத்திற்கும் கற்கும் இடத்திற்கும் காலந்தோறும் வளர்ந்தது. அமண்பள்ளி, புத்தப்பள்ளி, பள்ளிவாசல்,

மடைப்பள்ளி, பள்ளியறை, பள்ளிக்கூடம் என்றுள்ள வழக்குகளைக் காண்க.

'பள்ளியெழுச்சி' வேந்தர்க்கு இருந்தது. அது துயிலெடைநிலை என்னும் புறத்துறையாயிற்று.

பள்ளியெழுச்சி இறைநலம் பெற்றதால் திருப்பள்ளி எழுச்சிகள் கிளர்ந்தன.

தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பள்ளி எழுச்சி பாடுகின்றார் திருமாலுக்கு:

"கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிருள் அகன்றது காலையம் பொழுதாய்!
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவர் அரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றிட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மாபள்ளி எழுந்தரு ளாயே."

என்பது பள்ளியெழுச்சிப்பத்தில் முதலொன்று.

பள்ளியெழுச்சி பாடியதால் தொண்டரடிப்பொடியின் மண்டங்குடியே மாப்புகழ் எய்திற்று! எப்படி? தொண்டரப் பொடி நகராயிற்றாம்!

"மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம் — வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த ஊர்."

இது திருவரங்கப்பெருமாளரையர் பாடிய தனியன்.

பள்ளி எழுச்சி எண்சீர் விருத்தத்தால் இயல்வது என இப்பாடலால் அறியலாம். பாரதியார் பாரத தேவிக்குப் பள்ளி எழுச்சி பாடினார்; பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி என்பது அதன் பெயர்.

நூன்முறை பழையது! பொருண்மரபு புதுவது! பாடல் எண்ணிக்கை பதிகத்திற்பாதி.

"பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கிய தறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்
விழிதுயில் கின்றனை இன்னுமெந் தாயே!
வியப்பிதுகாண்! பள்ளி எழுந்தரு ளாயே."

என்பது முதற்பாட்டு.

**பள்ளு**

கடவுள் வணக்கம், முறையே மூத்தபள்ளி, இளைய பள்ளி, பள்ளன் வரவோடு அவன் பெருமைபேசல், முறையே அவர் வரலாறு, நாட்டுவளம், குயிற்கூக்கேட்டல், மழை வேண்டிக் கடவுட் பரசல், மழைக்குறி ஓர்தல், ஆற்றின் வரவு, அதன் சிறப்புக் காண்டல், இவற்றிற்கு இடைஇடை அகப்பொருள் துறையும் கூறிப் பண்ணைத் தலைவன் வரவு, பள்ளியர்கள் இருவர் முறையீடு, இளையாளை அவன் உரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செயல்வினவல், அவன்அது கூறல், ஆயரை வருவித்தல், அவர் வரல், அவர் பெருமை கூறல், மூத்த பள்ளி முறையீடு, குடும்பன் கிடையில் இருந்தான்போல் வரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்த பள்ளி அடிசில் கொண்டுவரல், அவன் அவளோடு கூறல், அவன் அவளை மன்னித்தல்கேட்கவேண்டல், அவள் மறுத்தல், அவன் சூளுறல், அவள் அவனை மீட்கவேண்டிப் பண்ணைத் தலைவனைப்பரவல், விழி முதலிய வளங்கூறல், உழவர் உழல், காளைவெருளல், அது பள்ளத்துப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவன் எழுந்து வித்தல், அதைப் பண்ணைத் தலைவர்க்கு அறிவித்தல், நாற்றுநடல்,

விளைந்தபின் செப்பஞ் செய்தல், நெல் அளத்தல், மூத்த பள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க்கொருவர் ஏசல், என இவ்வுறுப்புக்களுறப் பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவிவரப் பாடுவது உழத்திப்பாட்டு எனப்பெறும் பள்ளுப்பாட்டாகும்.

பள்ளு இலக்கியத்திற்குரிய இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் விரித்தில. ஆயின் நவநீதப் பாட்டியலில் காணப் படும் மிகைச் செய்யுள்கள் பள்ளு நூலின் இலக்கணத்தைத் தெரிவிக்கின்றன. அவை:

"கடவுள் வணக்கம் உழத்தியருங் குடும்பன் வரலொன்
றடைமுறை நாடுவளங் குயில்கூ மழைக்காங் குறியோர்ப்
படுமாறு வரற்சிறப்புட்டுறைத் தலைவன் வரற்கூப்
படுமவ னன்னாள் உரப்பல் வெளியாம் பண்ணைச் செயலே."

"வினாச்சொலல் ஆயர் வருவிக்க வரல்தகை முதலாள்
தனாதுரைக் கேட்டுக் குடும்பன் கிடையிருந் தானெனவந்
தனாற்றொழு மாட்டப்புலம்பல் முற்பள்ளி கூழ் கொண்டுவரல்
சொனானவள் மன்னித்தற் கேட்க வேண்டற்கு மறுத்திடலே."

"சூளவனை மீட்பவனைப் பணிவித் துழவருழக்
காளை வெருட்பாளை பாயப்புலம்பல் எழுந்து வித்தல்
ஆளத் தலைவற் குணர்த்தல் நடல்விளை செப்பம் செய்நெல்
நீள அளத்தல் முதற்பள்ளி கூவேசல் மூட்டவையே."

"இவ்வமயங்களிற் பாட்டுடைத் தலைவன் பெருமை யாங்காங்
கொவ்விய சிந்து விருத்தம் விரவிவரத் தொடர்பு
செவ்விதிற் பாடுமது உழத்திப்பாட்டு பள்ளுமென்பர்
நவ்வி எனக்கண் மடவீர் பிறர்தம் நாட்டுவரே."

இப்பாடல்களின் அமைப்பும் ஓட்டமும், பள்ளுநூல் களின் செய்திகளை வாங்கிக்கொண்டு 'முதலுழவு செய்வான் முறை'யெனத் தெளிவாக்குதல் வெளிப்படை யாம்.

'திருவாரூர்ப்பள்ளே' முதற்பள்ளு என்பர். முக்கூடற் பள்ளின் சுவை நாடறிந்தது. பள்ளு நூலின் இசைவளம் 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என வரும் நாட்டியற் புலவர் பாரதியார் பாட்டால், 'பள்ளு' என்பதற்குப் 'பாட்டு' என்னும் பொருள் உண்டாதல் அறிந்த செய்தி. இது பள்ளின் சிறப்பெனல் வெளிப்படை.

**பவனிக்காதல்**

உலாக்காட்சியினால் உண்டாகிய காமம் மிகுந்தால் அதனைப்பிறரொடும் உரைத்து வருந்துவது பவனிக்காதல் என்னும் பெயர்பெறும்.

'' காமரு முலாவற் காட்சி யாலே
அடைந்த காம மிக்கா லவற்றைப்
பிறரொடும் எடுத்துப் பேசி வருந்துதல்
பவனிக் காதலாம் பகருங் காலே.''

—(**முத்துவீ. 1121**)

**பறந்தலைச்சிறப்பு**

பேய்கள் போர்க்களத்தில் ஆக்கின கூழை உண்டு களித்துக் கைகோத்துக் குரவைக்கூத்து ஆடுவது பறந்தலைச் சிறப்பு எனப்பெறும். அதனைப் பாடுவது பறந்தலைச் சிறப்புப்பாட்டு ஆகும். பறந்தலை = போர்க்களம்.

—[**நவநீத. 61 (உரை)**]

**பறைநிலை**

அரசர் இனியவையெல்லாம் எய்துமாறு தெய்வம் காக்க வேண்டித் திருவிழாவின் பொழுதிலும், முடிசூட்டு விழாவின்பொழுதிலும் வேண்டிக்கொண்டு நாடும் நகரமும் நலம்பல எய்துமாறு வாழ்த்துரைத்து வஞ்சிச்சீர் பயிலப் பாடுவது பறைநிலை என்னும் பெயர்பெறும்.

"காவலர் இனிதுறத் தேவர்காத் தளிக்கெனக்
கடவுளர் விழவினும் கதிர்முடி விழவினும்
நாடும் நகரமும் நலம்பெற இயம்பி
வருநெறி வஞ்சி வழங்கப் பற்றிய
மொழிவரத் தொடுப்பது பறைநிலையாகும்."
—(பன்னிரு. 329)

**பன்மணிமாலை**

கலம்பக உறுப்புகளுள் அம்மானை, ஊசல், ஒருபோகு ஆகியவை ஒழிந்து ஏனையவெல்லாம் வரப்பாடுவது பன்மணிமாலையாகும்.

"கலம்பகத்தின், ஆட்டிய அம்மனை ஊசல் ஒருபோகும்
அற்று வந்தால் பாட்டியல் பன்மணிமாலை"
—(நவநீத. 39)

"அவற்றுள்,

"ஒருபோ கம்மானை ஊசல் இன்றி
வருவது பன்மணி மாலை யாகும்."
—(இலக். பாட். 54)

"முற்கூ றியகலம் பகத்துள் வருமொரு
போகும் அம்மனை ஊசலும் போக்கி
ஏனைய உறுப்புகள் எல்லாம் அமையப்
பாடுவ ததுதான் பன்மணி மாலை."
—(முத்துவீ. 1055.)

**பன்னிருபாமாலை**

பன்னிருவகை யாப்பால் அமைந்த பன்னிரு பாடல்களையுடையது இம்மாலை. தண்டபாணி அடிகள் அருளிய திருச்செந்தூர்ப் பிரபந்தத்தில் 'பன்னிருபாமாலை' இடம்பெற்றுள்ளது.

**பாதாதிகேசம்**

கலிவெண்பாவால் அடிமுதல் முடியளவும் கூறுவது பாதாதி கேசமாகும்.

"கால்முதல் முடிவரை கலிவெண் பாவாற்
பாடுவதுபா தாதி கேசம்
ஆகும் என்மனார் அறிந்திசி னோரே."
—(முத்துவீ. 1106.)

**பாட்டியல்**

செய்யுளியல், யாப்பு, பாப்பாவினம் என்பன யாப்பிலக்கண நூல்கள். இப்பாட்டியலோ நூல்வகை நுவலும் நூலாயிற்று.

பன்னிரு பாட்டியல் முன்னோடி; வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல் போல்வன தனிப்பாட்டியல் நூல்கள். இலக்கண விளக்கத்தில் ஒருபகுதி பாட்டியல். ஆகலின் தனிநூலாகவும், நூலின்பகுதியாகவும் பாட்டியல் எழுந்தன எனலாம்.

பன்னிரு பாட்டியல் எழுத்தியல் சொல்லியல் இனவியல் என மூவியல்களையுடையது.

எழுத்தின்பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள், என்பவற்றை எழுத்தியல் கூறுகின்றது.

சீர்க்கணம், மங்கலச் சொல், பெயர்ப்பொருத்தம் என்பவற்றை விளக்குவது சொல்லியல்.

பாப்பொருத்தம் பாவினம் என்பவற்றைக் கூறுவது இனவியல். சாதகம் முதல் கையறுநிலை ஈறாக அறுபத்தாறு வகைகளைப் பாவினமாகக்கூறுகின்றது. இப்பன்னிரு பாட்டியல், பாட்டியல் நூல்களின் செய்திக்கோவையை விளக்கும்.

**பாடாண்பாட்டு**

பாடாண் என்பது புறத்திணைகளுள் ஒன்றாகும். இத்திணைப் பொருள் அமையப் பாடப்பெறும் நூல் 'பாடாண்பாட்டு' எனப்பெறும்.

இவ்வகையில் எழுந்தநூல், 'சிவஞான பாலய தேசிகர் பாடாண்பாட்டு' என்பதாகும். இது நேரிசை ஆசிரியப் பாவாய் 608 அடிகளில் அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் ஆத்திரேயன் சீனிவாசன் என்பார்.

" வித்தகர் இயற்கை வெட்சிமுதல் எட்டொடும்
அவர்சித் தாந்தம் அமைவுறக் காட்டிப்
பாடாண் பாட்டெனப் பகர்ந்தனன்."

எனவரும் பாயிரத்தால் பாடாண்பாட்டின் இலக்கணம் இன்னதென ஆசிரியர் சொல்கிறார்.

தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றில் பாடாண்திணைச் செய்தியுண்டு. புறநானூறு பாடாண்பாடல் பலவற்றையுடையது.

" ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று."

எனவரும் புறப்பொருள் வெண்பாமாலை (189 'பாடாண்' பொருள் விளக்கும்.

**பாவை**

பாவையன்ன கன்னிப்பெண்கள் நன்மழை பெரழிந்து நாடு செழிக்கவும், வீடும் குடியும் விளங்கவும், காதற் கணவனை எய்திக் கவினவும் நோன்பு கொண்டு, தம்மன்ன பாவையரையும் எழுப்பிச் சென்று பாவையுருச் செய்து வழிபட்டு நீராடுவதாக அமைவது 'பாவை' என்னும் நூல்வகைச் செய்தியாம்.

வெண்டளையான் இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பாவாற் பாவைப்பாட்டு வரும் என்பதை மணிவாசகர் அருளிய திருவெம்பாவை யானும், ஆண்டாளம்மையார் அருளிய திருப்பாவையானும் அறிக. திருவெம்பாவை 20 பாடல்களாலும், திருப்பாவை 30 பாடல் களாலும் அமைந்தனவாம். ஒவ்வொரு பாட்டும் 'எம்பாவாய்' என்னும் நிறைநிலை எய்தும்.

"கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்."

என்பது திருவெம்பாவையுள் எட்டாம் பாட்டு.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்."

என்பது திருப்பாவை மூன்றாம் பாட்டு.

**பிள்ளைத்தமிழ்**

பிள்ளைத்தமிழ் ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

காப்புப்பருவம், செங்கீரைப்பருவம், தாலப்பருவம், சப்பாணிப்பருவம், முத்தப்பருவம், வாரானைப்பருவம், அம்புலிப்பருவம், சிறுபறைப்பருவம், சிற்றிற்பருவம், சிறுதேர்ப்பருவம் எனப் பத்துப் பருவங்கள் வகுத்து ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பாடப்பெறும். இவற்றுள் இறுதிக்கண் நின்ற சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்பவற்றை விலக்கி கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றை இணைத்துப் பெண்பாற்பிள்ளைத்தமிழ் பாடப்பெறும். பெண்பாற் பிள்ளைத்தமிழில் 'நீராடல்' என்பதும் இணைக்கப்பெறுதல்

வழக்கு. எனினும் பத்துப் பருவங்களுக்கு மிக்குப் பிள்ளைத் தமிழ் செய்யும் வழகில்லை.

" கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீ ரைதால் சப்பாணி முத்தம்
வாரா னைமுதல் வகுத்திடும் அம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதேர் என்னப்
பெறுமுறை ஆண்பாற் பிள்ளைப் பாட்டே."

" அவற்றுடன்,
பின்னைய மூன்றும பேதையர்க் காகா
ஆடும் கழங்கம் மானை ஊசல்
பாடுங் கவியாற் பகுத்து வகுப்புடன்
அகவல் விருத்தத் தாற்கிளை யளவாம்."
—(இலக். பாட். 434, 435)

பிள்ளைத்தமிழ் ஓதுங்கால் அளவை மூன்று முதலாக இருபத்தொரு திங்கள் என்பர். ஒன்று முதல் ஐந்தாண்டளவு என்றும், பதினாறு யாண்டளவு என்றும் கூறுவர். அரசர் முடிசூடிய பின்னரும், மகளிர் பூப்பெய்திய பின்னரும் பிள்ளைத் தமிழ் பெறார் என்றும் கூறுவர்.

" பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே."

" ஒன்று முதல் ஐயாண் டோதினும் வரையார்."
(பொய்கையார்)

" தோற்ற முதல்யாண் டீரெட்டளவும்
ஆற்றல் சான்ற ஆண்பாற் குரிய."

" காப்பு முதலாகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற் குரிய."
(இந்திரகாளியார்)

"தொன்னில வேந்தர் சுடர்முடி சூடிய
பின்னப் பெறாஅர் பிள்ளைப் பாட்டே."
(பரணர்) —(பன்னிரு. 174-178)

பிள்ளைத் தமிழ்ப்பாட்டு, ஆசிரியச் சந்த விருத்தங்களாற் பாடப்பெறும். அதில் காப்புப்பருவம் ஒன்பது அல்லது பதினொரு விருத்தங்களால் அமைதல் வேண்டும் என்பது விதி.

"ஒன்பது பதினொன் றென்பது காப்பே."
(பரணர்) —(பன்னிரு. 188)

இனி வேறு வகைப்பாவால் பிள்ளைத்தமிழ் பாடுதற்கு நேர்ந்தாரும் ஒரு சார் ஆசிரியர் உளர். அவர் கூறுமாறு:

"அகவல் விருத்தமும் கட்டளை ஒலியும்
கலியின் விருத்தமும் கவின்பெறு பாவே."

"பிள்ளைப் பாட்டே நெடுவெண் பாட்டெனத்
தெள்ளிதிற் செப்பும் புலவரும் உளரே."
—(பன்னிரு. 189, 190)

முதற்கண் எடுக்கப்பெறும் அகவல் விருத்தம் நான்கடிக்கும் எழுத்தின் பகுதி எண்ணிக்கொள்ளவேண்டும் என்றும், எழுத்தொப்பப்பாடவேண்டும் என்றும் கூறுவர்.

"முதற்கண் எடுக்கும் அகவல் விருத்தம்
எழுத்தின் பகுதி எண்ணினர் கொளலே."
—(பன்னிரு. 191, இலக். பாட். 51 மேற்.)

பருவத்திற்குரிய பாடல்கள் ஒற்றைப்படப் பாடுதல் சிறப்பென்றும், இரட்டைப்பட வருமாயின் ஓசை பெயர்த்துப் பாடுதல் வேண்டும் என்றும் கூறுவர்.

காப்புப்பருவத்தின் முதற்பாடல் திருமாலைப் பற்றிய தாதல் வேண்டும்; அவன் காவற் கடமை பூண்டவன் ஆதலாலும், திருவின் கிழத்தியின் கேள்வன் ஆதலாலும்

பிறவற்றாலும் அவனை முற்படக்கூறித் தொடங்குதல் முறையென்பர். பின்னே இவரிவரைக் கூறுக என்றும் வரைந்து கூறுவர்.

"காப்பின் முதல் எடுக்கும் கடவுள் தானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தோ னாகும்."
(பரணர் பாட்டியல்) —(நவநீத. 26)

"மங்கலம் பொலியும் செங்கண் மாலே
சங்கு சக்கரம் தரித்த லானும்
காவற் கடவுள் ஆத லானும்
பூவினுட் புணர்த லானுமுற் கூறிக்
கங்கையும் பிறையும் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதுல கீன்ற பழுதறும் இமயப்
பருப்பதச் செல்வியை விருப்புற உரைத்து
நாமகள் கொழுநன் மாமுகில் ஊர்தி
ஒற்றைக் கொம்பன் வெற்றி வேலன்
எழுவர் மங்கையர் இந்திரை வாணி
உருத்திரர் அருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை ஊர்தியிற் பொலிவோர் அனைவரும்
காப்ப தாகக் காப்புக் கூறல்."
—(இலக். பாட். 68)

இனி இவர்களைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் உரைப்பாருளர்:

"திருமால் அரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேல் முருகன் பரிதிவடுகன்
எழுவர் மங்கையர் இந்திரர் சாத்தன்
நதியவன் நீலி பதினொரு மூவர்
திருமகள் நாமகள் திகழ்மதி என்ப
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே."
—(பன்னிரு. 184)

இனிக் காப்புக் கூறுங்காலைக் கொலையும் கொடுமையும் கூறாமல் மங்கலம் மல்கக் கூறுதல் வேண்டும் என்றார்:

"விரிசடைக் கடவுளும் வேய்த்தோள் எழுவரும்
அருளொடு காக்கவென் றறையுங் காலைக்
கொலையுங் கொடுமையும் கூறா ராகிப்
பெயருஞ் சின்னமும் பிறவுந் தோன்றக்
கங்கை திங்கள் கடுக்கை மாலை
மங்கல மழுவொடு மலைமகள் என்றிவை
விளங்கக் கூறல் விளம்பிய மரபே."

—(பன்னிரு 187)

இவ்விப்பருவங்களில் இவ்விச் செயல்கள் பாடுதற்குரியவை எனக் குறிப்பதும் வழக்காகும். அவர் கூறுமாறு:

"இரண்டாம் மாதத்திற் காப்புக் கூறுதலும், ஐந்தாம் மாதத்திற் செங்கீரை கூறுதலும், ஆறாம் மாதத்திற் சொற்பயில்வு கூறுதலும், ஏழாம் மாதத்தில் அமுதூட்டலும், எட்டாம் மாதத்தில் தாலாட்டுக் கூறுதலும், ஒன்பதாம் மாதத்தில் சப்பாணி கூறுதலும், பதினொன்றாம் மாதத்தில் முத்தம் மொழிதலும், பன்னிரண்டாம் மாதத்தில் வாரானை கிளத்தலும், பதினெட்டாம் மாதத்தில் சந்திரனை அழைத்தலும், இரண்டாம் ஆண்டிற் சிறுபறை கொட்டலும், மூன்றாம் ஆண்டில் சிற்றில் சிதைத்தலும், நான்காம் ஆண்டில் சிறு தேர் உருட்டலும், பத்தாம் ஆண்டில் பூணணிதலும், பன்னிரண்டாம் ஆண்டில் கச்சினோடு உடைவாளை விரும்பத்தரித்தலும் என்று சொல்லப்பட்டவும் பிறவும் உடைத்து" என்றும்,

"இனிப் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு, அம்புலி இறுதியாய் நின்ற பருவங்களுடன் மூன்றாம் ஆண்டில்தான் விளையாடும் பாவைக்கு மணம் பேசுதலும், ஐந்தாம் ஆண்டு முதல் ஒன்பதாம் ஆண்டுகாறும் மன்மதனை ஒத்த புருடனைப் பெறத் தவம் செய்தலும், குளிர்ந்த

நீராடலும், பதுமை வைத்து விளையாடலும், கழங்காடலும், பந்தாடலும், சிறு சோறாடுதலும், சிற்றில் இழைத்தலும், ஊசலாடலும் என்பன கூறப்படும் என்க'' என்றும் கூறுவர். —(பேரகராதி. 1218)

பன்னீராண்டு ஆண் பிள்ளைக்கு இளம்பிறை, புலி, யானை, அரிமா இவற்றின் குட்டிகளையும், காளையையும் உவமையாகக் கூறவேண்டும் எனவும், பெண் பிள்ளைக்கு மான்கன்று, மயிற்பிள்ளை, தேன், மது, கரும்பின்முளை, கிள்ளை, கொடி இவற்றை உவமையாகக் கூறவேண்டும் என்றும் பாட்டியலார் உரைத்தனர். 'வளர்பிறை'யை ஒப்பிட்டுக் கூறுதல் இருபாலார்க்கும் ஒக்கும் என்றும் உரைத்தாருளர்.

'' பொங்குகதிர் இளம்பிறை புலியின் சிறுபறழ்
குஞ்சரக் குழவி கோளரிக் குருளை
மடவிள் விடையே யாறிரண் டாண்டின்
இடைநிகழ் உவமை என்மனார் புலவர். ''

'' பெண் மக விற்குப் பேசு மிடத்து
மானின் கன்று மயிலின் பிள்ளை
தேனின் இன்பம் தெள்ளாத் தேறல்
கரும்பின் இளமுளை கல்லாக் கிள்ளை
இளந்தளிர் வல்லி என்றிவை எல்லாம்
பெய்வ்ளை மகளிர்க் கெய்திய உவமை. ''
—(பன்னிரு. 193, 194)

'' இளங்கதிர்த் திங்கள் எல்லார்க்கும் உரித்தே. ''
(பரணர்) —(பன்னிரு. 195)

**பிரிவு சுரம்**

சுரம்—வெப்பம், பாலைநிலம். பிரிவு என்பது, பாலைத் திணை சார்ந்ததொரு துறை.

தலைவன் பிரிந்து செல்ல அப்பிரிவு தாங்காமல் தலைவி வருந்துதல் 'பிரிவு சுரம்' என்னும் இலக்கிய வகையின் உள்ளுறையாம்.

"தலைவன் பிரியத் தலைவி வருந்தல்
விரிவார் பிரிவுசுரம் என்பார்."

—(பிரபந்தத்திரட்டு 62)

பிரிதல்—பிரிதல் நிமித்தம் இரண்டும் பிரிதலாம். 'விரிவார் பிரிவு' என்றதால், பிரிவுக்குரிய காரணமும், பிரிவு கருதுதலும், பிரிவைக் குறிப்பால் உணர்த்துதலும், ஒருவாற்றான் பிரிவைத் தலைவி அறிதலும், தோழி அறிதலும், பிரியேன் என்றலும், காட்டின் அருமை கூறலும், பருவ வரவு கூறலும், நினைந்து பருவரலும், பிரிதலும், செலவும், செலவிடை அழுங்கலும், வினை முடித்து மீளலும், தலைவி ஆற்றாமையும், தோழி ஆற்று வித்தலும், தலைவி ஆறியிருத்தலும், பருவ வரவும், பருவமன்று எனத் தோழி கூறலும், தலைவன் வினைமுற்றி மீளலும், தேரை விரைந்து செலுத்தலும், தலைவியை அடைதலும், மகிழ்தலும் இன்னவெல்லாம் அடக்கிக் கொள்ளத்தகும்.

திருவள்ளுவர் பிரிவுக்கு ஐந்து அதிகாரங்கள் ஒதுக்கி யமை கண்டு கொள்க.

## பிறிதுபடுபாட்டு

ஒரு பாட்டினுள் வேறு இனப்பாட்டு ஒன்றோ பலவோ அமையும் வண்ணம் பாடுவது பிறிதுபடுபாட்டாகும். தன்னினப் பாட்டும் வேறினப்பாட்டும் ஒரு பாட்டுள் அடங்கி வரப் பாடினும் பிறிதுபடு பாட்டேயாம். இவ் வகைப் பாடல்களால் வரும் நூல் 'பிறிதுபடு பாட்டு' என்பதாம்.

### கட்டளைக்கலித்துறை

"ஓமய வேலவ னோய்வறு சீர்த்திய னோமவுன
சீமய சுத்தமர் நாதன் மயின்மிசைச் செல்லிளைஞன்
கோமய மின்னிய வீடேறு மிட்டர் குரவனென
தாமய வீறிறு மாறன கானந்த மார்கவன்றே."

**நேரிசையாசிரியப்பா**

" ஓமய வேலவ னோய்வது சீர்த்திய
னோமவ்வு னசிமய வுத்தமர் நாதன்
மயின்மிசைச் செல்லிளை ஞன்கோ மயமின்
னியவீ டேறு மிட்டர் குரவ
னெனதா மயவீ றிறுமா
றனகா னந்த மார்க வன்றே. "

—(பிறிதுபடுப்பாட்டுப்பிரபந்தம். 1)

பிறிதுபடு பாட்டு இரண்டு பாட்டாகப் பகுக்கப்படுமானால் **பிறிதுபடு** இருபங்கி (துவிதபங்கி) என்றும், மூன்றாகப் பகுக்கப்படுமானால் **பிறிதுபடு முப்பங்கி** (திரிபங்கி) என்றும் வழங்கப் பெறும். குமரகுருதாசர் இயற்றிய பத்துப் பிரபந்தங்கள் என்னும் நூல் காண்க.

**புகழ்ச்சி மாலை**

பலவகை அடிகளும் மயங்கிய வஞ்சிப் பாவால் மகளிரைப் புகழ்ந்து பாடுவது புகழ்ச்சி மாலையாகும்.

" மயக்க அடிபெறு வஞ்சிப் பாவால்
வியத்தகு நல்லார் விழுச்சீர் உரைத்தல்
புகழ்ச்சி மாலை. "

—(இலக். பாட். 106)

இதனை வெண்பாவால் பாடுவதும் உண்டென்பது சேந்தம்பூதனார் பெயரால் வரும் ஒரு நூற் பாவால் அறியப் பெறுகின்றது.

" வெள்ளடி இயலால் புணர்ப்போன் குறிப்பிற்
றள்ளா இயலது புகழ்ச்சி மாலை. "

—(பன்னிரு. 287)

இனி அகவலடியும் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப் பாவால் பாடுவது என்றும் கூறுவர்.

" அகவல் அடிகலி அடியும் மயங்கிய
வஞ்சியின் அரிவையர் மாண்பை உரைப்பது
புகழ்ச்சி மாலையின் பொருளா கும்மே. "

—(முத்துவீ. 1057)

**புராணம் (தொன்மம்)**

உலகத் தோற்றம், மக்கட் பிறப்பு முதலியவற்றை அழகுறக் கூறுவது புராணம் ஆகும்.

"குலவரவு காரிகை,
யாப்பிற் புராணமே யாம்."
—(வெண். பாட். 43)

இதன் உரைகாரர் மனுவந்தரம் உலகத் தோற்றம் ஆகியவற்றைக் கூறுவது புராணம் என்பர்.

இனிப், பழமையான செய்திகளைக் கூறும் நூல்களைத் 'தொன்மை' என்பார் தொல்காப்பியர். அவ்வகையால் பழங்கதைகளைக் கூறும் புராணம் 'தொன்மம்' என்னும் ஆட்சிபெற்றதாம். இதனை வழங்கியவர் பாவாணர்.

நாட்டிலும் ஏட்டிலும் வழங்கிய கதைகளைத் தொகுத்தமைத்த நூல் புராணம் ஆயிற்று. அவ்வகையில் பெரிய புராணம் குறிப்பிடத்தக்கது. கந்தபுராணம் விரிந்தது. பின்னே பதினெண் புராணங்கள், அரிச்சந்திரபுராணம் என்பவை வளர்ந்தன. திருக்கோயில்களுக்குப் புராணம் பாடும் மரபு பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரரால் பெருவழக்காயிற்று. "புராணம் பாடப்பெறாக் கோயில் புகழிலாக் கோயில்" என்ற தவிப்பும் இருந்தது என்பது அவர் வரலாற்றால் விளங்குகின்றது.

திருக்கருவைத் தலபுராணம் காப்பு, பாயிரம், வணக்கம் அவையடக்கம் என்பவை 49 பாடல்களைக் கொண்டுளது. பின்னர்த் திருநாட்டுச் சருக்கம், திருநகர்ச் சருக்கம், தல விசேடச் சருக்கம், தீர்த்தவிசேடச் சருக்கம், மூர்த்திவிசேடச் சருக்கம், புராணகதை வரலாறு எனக்கூறி, முதலாவது கதை காகபுசுண்டர் கதியடைந்த சருக்கம் முதலாக முப்பத்தைந்தாவது சேரவரதுங்கர் தெரிசனம் பெறு சருக்கம் ஈறாக வளர்கின்றது. புராணநூல் அமைப்பின் ஒரு பொதுப்போக்கு இதனால் புலப்படும்.

**புலம்பல்**

'புலம்பே தனிமை' என்றார் தொல்காப்பியர். புரப்பாரையோ அன்புப்பிறப்பாரையோ இழந்த காலையில் தனிமைப் பட்டுப்போன உணர்வும், அவ்வுணர்வால் புலம்புதலும் உண்டாம்.

உலகியல் புலப்பம் வேறு; தூய துறவு நிலைப்படியேறித் துலங்கும் சான்றோர் 'புலப்பம்' வேறு; அவர்கள் இறையைப் பிரிந்து தனித்திருத்தலுக்கும், உயிர்களின் மேல் கொண்ட பேரருள் உருக்குதலுக்கும் புலம்பினர். முன்னது கலங்கல் என்றும், கையறு நிலையென்றும், ஒப்பாரி என்றும் பெயர்களைத் தாங்க, பின்னது புலம்பலாகவும், ஆற்றாமையாகவும், ஏசறவாகவும் பிறவாகவும் விளங்குகின்றன. சித்தர்களுள் ஒருவர் அழுகணிச் சித்தர்; அழுகண்ணராகவே இருந்தவர் எவ்வளவு ஆற்றாது புலம்பியிருப்பார். பட்டினத்தார் புலம்பலும், பத்திரகிரியார் புலம்பலும் அறிவுப் புலம்பல் (ஞானப்புலம்பல்), மெய்யறிவுப் புலம்பல் (மெஞ்ஞானப் புலம்பல்) ஆம்.

மணிவாசகரின் திருவேசறவு; திருப்புலம்பல், வள்ளலாரின் ஆற்றா இரக்கம், ஏழைமையின் இரங்கல், ஆற்றாப் புலம்பல், முறையீடு இவையெல்லாம் உருக்கத்தால் பிறந்து உருக்கவே உருக்கொண்டவை அல்லவோ?

மைந்தன் கான் புகுந்தான்; தந்தை வருந்தி வான் புகுந்தான்! ஏன் புகுந்து புலம்புகிறார் குலசேகர ஆழ்வார்! தசரதனே ஆகிவிட்டாரே?

"கொல்லணைவேல் வரிநெடுங்கண் கோசலைதன்
குலமதலாய் குனிவில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
மனமுருக்கும் வகையே கற்றாய்,
மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றினிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்,
கல்லணைமேல் கண்டுயிலக் கற்றனையோ
காகுத்தா! கரிய கோவே"!

—(பெருமாள் திருமொழி 9-3)

ஆழ்வார் புலம்பலில் பத்தில் ஒன்று இது.

புலம்பலுக்கு யாப்பு என்ன? ஒவ்வொரு புலம்பலும் உருக்குகின்றது! உணர்வே புலம்பல் யாப்பு! அறுசீரா? எழுசீரா? அகவலா? தாழிசையா? வெண்பாவா? தாழிசையா? சிந்தா? கண்ணியா? எல்லாவற்றிலும் புலம்பல் சான்று உண்டே!

### புறநாட்டுச் செய்கை

வேந்தன் திருவோலக்கத்தில் இருந்து தன் ஒற்றரை அழைத்து அடுத்த நாட்டு நிலையை அறிந்து வருமாறு போக்குதலும், போக்கிய அவர் வேண்டுமாற்றான் கரந்து போய் ஒற்றறிந்து மீளலும், வேந்தனைக் கண்டு அடுத்த நாட்டு ஒற்றுச் செய்தியை உரைத்தலும், 'புறநாட்டுச் செய்கை' என்னும் நூற்பொருளாம். இவற்றுடன் அவ் வடுத்த நாட்டரசன், வேந்தன் மகிழுமாறு திறைகுவித்துப் பணிதலும் புறநாட்டுச் செய்கை என்பதேயாம்.

"வேந்தன்அத் தாணிமிசை யுற்றொற்றர்ப் போக்கித்
தாந்திரும்பி வேந்தரியல் சாற்றுவது—வாய்ந்த
புறநாட்டுச் செய்கை; புறநாட்டார் பொன்னைத்
திறைகுவித்தல் அப்பெயர்ப்பாச் செப்பு."

— (பிரபந்தத்திரட்டு. 23)

சிலப்பதிகாரத்திலும் கலிங்கத்துப் பரணியிலும் இப்புற நாட்டுச் செய்கைக்குரிய கருப்பொருள்கள் உண்டு. அவற்றை வாங்கிக் கொண்டு இச்சிற்றிலக்கியப் படைப்பு வெளிப்பட்டதென்க.

### புறநிலை

நீ வணங்கும் தெய்வம் நின் வழிவழி மிகுவதாக எனக் கூறுவது புறநிலையாகும்.

"நீவணங் கொருவன் நினைப்பாது காப்ப
நின்னுடை வழிவழி நீளுவ தாக
என இயம் புவது புறநிலை என்ப."

— (முத்துவீ. 1098)

**புறம்புல்கல்**

புறம் — முதுகு; புல்கல் — தழுவுதல்.

பெரியாழ்வார் ஏக்கத்தோடு எதிர்பார்க்கிறார், கண்ணன் வந்து தம் 'புறம் புல்குதலை'. என்ன வேட்கை! என்ன வேட்கை!

அகவை முதிர்ந்தவர்க்கு இளையர்கை வருடல் இன்பக் கொள்ளையன்றோ? அதிலும் எட்டாமுதுகில் அச் சொட்டும் தண்ணந்தாமரைக் கைவருடல் எப்படி இன்பம் செய்யும்?

" வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க
மொட்டு நுனையில் முளைக்கின்ற முத்தேபோல்
சொட்டுச்சொட் டென்னத் துளிக்கத் துளிக்களன்
குட்டன்வந் தென்னைப் புறம்புல்குவான்
கோவிந்தன் என்னைப் புறம் புல்குவான்!''

—(பெரியாழ்வார் திருமொழி 1-9)

முதுகுவருடலும் முத்தமிழ்க்கொரு பனுவல் வழங்குமெனின், அதன் முழுமையை எவரே உரைப்பார்?

புறம் புல்லலைப், பிறர்ப் புல்லா தொழிதல் பெரியவர் பெருமையாம் தனிப்பெருமைக்கோ?

**பூச்சி காட்டல்**

பூச்சி காட்டுதல் = பொய்யாக அச்சங்காட்டுதல். குழந்தைகள் மறைந்திருந்தோ, துணி முதலியவற்றால் முகத்தை மறைத்துக் கொண்டோ அச்சங்காட்டுதல் உண்டு. பெரியவர்கள் செயல்களைப் பின்பற்றும் செயல் அது. கற்பித்த பெரியவர்க்கே கற்பித்துக் காட்டும் குழந்தையல்லவோ! ஆகலின், குழந்தைமைப் பூச்சி காட்டல் வளர்ந்தோர்க்கும் வளமான இன்பம் சேர்ப்பதாம்; பிள்ளைத் தமிழ்ப் பருவங்களுள் ஒன்றாகக் காட்டற் குரியதாம். இதனைப் போற்றிக் கொண்டவர் பெரியவர் பெரியாழ்வார். அவர், கண்ணன் பூச்சி காட்டுதலைக் கூறும் பதிக முதற்பாட்டு :

"மெச்சூது சங்க மிடத்தான்நல் வேயூதி
பொய்ச்சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்ப்
பத்தூர் பெறாதன்று பாரதம் கைசெய்த
அத்தூ தன் அப்பூச்சி காட்டுகின்றான்.
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்."

—(பெரியாழ்வார் திருமொழி 2-1)

பூச்சி என்பது நிழலுக்கு மட்டுமோ பெயர்? பாம்புக்கும் கூடப் பெயராயிற்றே!

**பூவைநிலை**

பூவைநிலை என்னும் புறத்துறைப்பெயரால் சிறுநூல் வகை ஒன்று கிளர்ந்தது என்பதை நவநீதப் பாட்டியல் உரை (26) வெளிப்படுத்துகின்றது. அது வருமாறு:

"அந்த நாராயணனே முடிபுனைந்த மன்னற்குச் சமமாக உவமை வைத்துப் பாடற்கும் உரியவனாகும். தேவர்களை மானிடருடன் சமமாக வைத்துப்பாடு தற்குப் பூவைநிலை என்று பேராம். இப்படிப்பாடுவது இருபத்தைந்து வயசுக்கு மேற்பட்டு முப்பது வயசுக்கு உட்பட்ட முடிபுனைந்த மன்னற்காம். முப்பது வயசுக்கு மேற்பட்ட மன்னருக்கு ஆகாது."

**பெயர்நேரிசை (பேர்நேரிசை)**

பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்ப தேனும் பாடுதல் பெயர் நேரிசை என்று கூறப்பெறும்.

"பாட்டுடைத் தலைமகன் பெயரைச் சார
நேரிசை வெண்பாத் தொண்ணூ றேனும்
எழுப தேனும் ஐம்ப தேனும்
அறைவது பெயர்நே ரிசையா கும்மே."

—(முத்துவீ. 1094)

**பெயரின்னிசை (பேரின்னிசை)**

பாட்டுடைத் தலைவன் பெயரினைச் சார இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்ப தேனும் பாடுதல் பெயரின்னிசை என வழங்கப்பெறும்.

" பாட்டுடைத் தலைமகன் பெயரைச் சார
இன்னிசை வெண்பா எழுபான் இருபஃ
தேனும் எழுபா னேனும் ஐம்பஃ
தேனும் உரைப்பது பெயரின் னிசையே,"

—(முத்துவீ. 1092)

**பெருங்காப்பியம் (பெரும்பாவிகம்)**

வாழ்த்துதல், வணக்கம், வருபொருள் உரைத்தல் என்னும் மூன்றனுள் ஒன்று முன்வரநடந்து, அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு ஒழுகலாறுகளையும் உடையதாய், தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவனை உடையதாய், மலை கடல் நாடு நகர் பருவம் ஞாயிறு திங்கள் இவற்றின் தோற்றம் ஆகியவை பற்றிய வருணனையுடையதாய், திருமணம், முடிசூட்டு, பொழிலாட்டு, புனல்விளையாட்டு, உண்டாட்டு, மகப் பேறு, புலவி, கலவி ஆகிய இத்தகையவற்றைக் கூறும் நடையுடையதாய், சூழ்ந்து ஆய்தல், தூதனுப்பல், படை யெடுப்பு, போர்புரிதல், வெற்றியெய்தல், ஆகியவை நெறியே தொடர்ந்து காண்டம், இலம்பகம், சருக்கம் முதலிய பாகுபாடுகளையுடையதாய், நகை முதலிய எண் வகைச் சுவையும் மெய்ப்பாட்டுக் குறிப்பும் பொருந்தப் புலவரால் இயற்றப் பெறுவது காப்பியமாகும்.

அவற்றுள்,

" பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்த்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்

தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையில் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.''

—(தண்டி. 8)

**பெருமகிழ்ச்சி மாலை**

பெண்கள் அழகும் குணமும் ஆக்கமும் சிறப்பும் ஆகியவற்றைக் கூறுவது பெருமகிழ்ச்சி மாலையாகும்.

'' தெரிவை எழில்குணம் ஆக்கம் சிறப்பை உரைப்பது
பெருமகிழ்ச்சி மாலை எனப்பெயர் பெறுமே.''

—(முத்துவீ. 1058)

**பெருமங்கலம்**

''நாள்தோறும் தான்மேற்கொள்கின்ற சிறை செய்தல் முதலிய செற்றங்களைக் கைவிட்டுச் சிறைவிடுதல் முதலிய சிறந்த தொழில்கள் பிறந்ததற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவது.'' (வெள்ளணிநாள்— பிறந்தநாள்).

**பொய்ம்மொழி அலங்காரம் (பொய்ம்மொழி அழகு)**

அலங்காரம்—அழகு.

பொய்யாகப் புனைந்து கூறும் அழகு பொய்ம்மொழி அலங்காரம் எனப்படும்.

பொய்யாகப் புனைந்து கூறவேண்டுவது என்ன? அதில் அழகு இருப்பதும் என்ன? என ஐயம் எழுதல் இயற்கை.

கட்டுக்கதை என்றும், புனைகதை என்றும், சொல்லப் படும் சிறுகதை, தொடர்கதை என்பவையும், நாடகம்

திரைப்படம் ஆகியவையும் உள்ளது உள்ளவாறு கூறுவன அல்ல. 'இல்லோன் தலைவனாக இல்லது கூறலும்' கூத்து வகைக்குரிய தெனக் கொள்கை வகுத்துளர், இப் பொய்ப்புனைவால் மெய்ந்நலம் உண்டு என்னும் கருத்தாலேயாம்.

நல்ல பொழுதுபோக்காவதுடன், புனைவில்வரும் நன்னிகழ்வு நறுவிதாய் நெஞ்சகம் புகுந்து நிலைபெற்றுத் தன்வயமாக்கித் தீயோனையும் திருத்தும் நலப்பாடு உடையதாம். 'கட்டி பூசிக் கடுத்தீற்றுவதுபோல' சுவை யாகத் தோன்றிச் சுட்டும்நலம் சேர்ப்பது கண்கூடாகலின் இத்தகையவும் நூற்பொருளாக நுவலப்பட்டதென்க.

"பொய்ம்மொழியும் மெய்ம்மொழியும் போற்றுமலங் காரமிரண்
டய்யகலி வெண்பாவால் ஆற்றுவன."
—(பிரபந்தத்திரட்டு 16)

என்பதால் இது கலிவெண்பாட்டால் வருமென அறியலாம்.

"பொய்மையும் வாய்மையிடத்தபுரை தீர்ந்த,
நன்மை பயக்கு மெனின்."

என்னும் குறள் (292) கருதத்தக்கது.

'மெய்ம்மொழி அலங்காரம்' பார்க்க.

### பொருள்வஞ்சி

புறத்திணைக்கண் ஒருதுறைப் பொருளை விரித்துக் கூறின் அஃது அப்பொருள் வஞ்சியாகும்.

"விரித்தொரு பொருளை விளம்பினப் பெயராம்."
—(இலக். பாட். 109)

### போதம் (மெய்யறிவு)

மெய்ப்பொருள்பற்றி விளக்கிக் கூறும் நூல்வகை 'போதம்' எனப்படுகின்றது. அத்தகு நூல்களுள் 'சிவஞான போதம்' தலைப்பட்டது. அதனைக் கண்டவர் பெயரே

'மெய்கண்டார்' எனின் வேறுவிளக்கம் வேண்டுவதின்று' பன்னிரு நூற்பாக்களால் அமைந்த சிவஞானபோதம், குன்றத்தைக் குன்றி மணிக்குள் அடக்கியபான்மையது.

சித்தர் தொகுதியுள் சிவானந்தபோதம், நிசானந்த போதம் என இரண்டு நூல்கள் உள. இவ்விரண்டும் உரையும் பாட்டும் வீரவிய நூலாக இயல்கின்றன. பல் வகைப்பாவும் இனமும் பயில்கின்றன. தனித்தனி நூல் களாமளவு விரிவும் உடையன.

### போர்க்கெழுவஞ்சி

பகைவர்மேல் போர் குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப்பூமாலை சூடிப் புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை ஆசிரியப்பாவாற் கூறுவது போர்க்கெழு வஞ்சி யாகும்.

"போர்க்கெழு மன்னவர் வஞ்சிப் பூத்தொடை
அணிந்து புறப்படும் அடுபடை எழுச்சிச்
சிறப்பக வலினாற் செப்புதல் போர்க்கெழு
வஞ்சி எனப்பெயர் வைக்கப் படுமே."

—(முத்துவீ. 1071)

### மங்கலவள்ளை

உயர்குல மங்கையை ஒன்பது வெண்பாவாலும் வகுப் பாலும் பாடுவது மங்கலவள்ளை எனப் பெறும்.

"ஒன்பது வெண்பா வகுப்பால் உயர்குல
மங்கையைப் பாடுதல் மங்கல வள்ளை."

—(இலக். பாட். 68)

"மங்கல வள்ளை வகுப்பொடு வெண்பாவால்
இங்காமொன் பானென் றிசை,"

—(வெண். பாட். 32)

ஒன்பது வெண்பாவாலும் ஒன்பது வகுப்பாலும் பாடுவது என்று முத்துவீரியம் கூறும்.

" மேற்குலத்திற் பிறந்த மின்னாளை வெண்பா
ஒன்பதா லும்வகுப் பொன்பதி னாலும்
வழுத்துவது மங்கல வள்ளை யாகும். "

இனி, மங்கல வள்ளையை மங்கல வெள்ளை என்பார் பன்னிரு பாட்டியலார். வெண்கலிப்பாவும் வருதற்கு உரியது என்பார் அவர். வகுப்பும் வெள்ளையும் தனித் தனி வருவதையும் ஏற்பார்.

" சந்தமும் வெள்ளையும் தருவன கற்புடை
மங்கல வெள்ளை வருவன ஒன்பான். "

" அதுவே,
வெண்கலி யானும் வருதற்கும் உரித்தே. "
(மாபூதனார்)

" சந்தமும் வெள்ளையும் தனித்தனி புணர்தலும்
அந்தமில் புலவ ராமென மொழிப. "
(சீத்தலையார்)

—(பன்னிரு. 302, 304)

**மஞ்சரி**

தலைவன் பத்து நாள் உலா வரல்; அவ்வுலாவின் நாலாம் நாள் பாவை யொருத்தி அவனைக் காணல்; அவளிடம் அன்பு அரும்புதல்; ஒன்பானாம் நாளில் தன் முன்றிலில் வந்து அவனைக் காணல்; பத்தாம் நாள் கரி மேல் அவன் உலா வரல்; பின்னர்ப் பாவை பிரிவால் வருந்துதல்—என்னும் பொருளில் வருவது 'மஞ்சரி' என்னும் இலக்கியம். இவ்விலக்கியம் வணிகச் செல்வருக்கு உரியதாகச் சொல்லப் பெறுதல் இல்லை.

'ஒன்பான் நாள் முன்றிற்காகும்' என்றதால் எட்டாம் நாள்காறும் அவள் இல்லுள் அடையுற்றிருந்து வாயில் பலகணி, மாடம் வழியாகக் கண்டாள் என்பது புலப்படும். முத்தொள்ளாயிரக் கைக்கிளைப் பாடல்கள் இப் பொருளை விளக்குவன வாதல் அறிக.

வேந்தர்க்குரியதாகக் கூறிய இம்மஞ்சரி, 'இளங் கோக்கள்' என்னும் பெருமை பூண்ட வணிகர்க்கு ஆகுமோ என்பார்க்கு, ஆகாது என்றார். வணிகநலம் பேணுவார், 'முதலிழக்கும் செய்வினை ஊக்குதல் கூடாது' என்னும் உன்னிப்பாக இதனைக் கொள்ளலாம்.

"வரும்பவனி பத்து வருமவர்காண் நாலில்
அரும்பும்ஒன் பானாள்முன் றிற் காகும்—விரும்புகரி
பத்தாநா ளைப்பவனி யால்வபிரி வே; வணிக
வத்தருக்கா காமஞ் சரி."

—(பிரபந்தத்திரட்டு 34)

பாடற் சொல்லமைதி நல்விளக்கமாக அமையா மையின் பிறவாறு பொருள் காணவும் வாய்க்கும்.

**மடல்**

அறம் பொருள் வீடு என்னும் மூன்று பொருள்களையும் பழித்து, மங்கையரைச் சேர்தலான் உளவாகிய இன்பத் தையே பயனெனக்கொண்டு இன்னிசைக் கலி வெண்பா வால் தலைவன் இயற்பெயர் எதுகையில், அப்பொருள் முழுவதும் பாடுதல் மடல் எனப்படும்; இஃது **இன்பமடல், வளமடல்** என்றும் கூறப்பெறும்.

"அறம்பொருள் வீடெனு மம்முக் கூற்றின்
திறங்கடிந் தரிவையர் திறத்துறும் இன்பம்
பயனெனக் கலிவெண் பாவால் தலைவன்
பெயரெது கையினிற் பேசுதல் வளமடல்."

—(இலக். பாட். 96)

"அறம்பொருள் வீடு திறம்பெரி தழித்துச்
சிறந்த வேட்கை செவ்விதிற் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவன் இயற்பெயர்க் கெதுகை
நாட்டிய வெண்கலிப் பாவ தாகித்
தனிச்சொல் ஒரீஇத் தனியிடத் தொருத்தியைக்
கண்டபின் அந்த ஒண்டொடி எய்தலும்

மற்றவள் வடிவை உற்றகிழி எழுதிக்
காமங் கவற்றல் கரும்பனை மடல்மா
ஏறுதல் ஆடவர் என்றனர் புலவர்.''

—(பன்னிரு. 246)

மடல் என்பது பனையின் கருக்கோடு கூடிய மட்டை. அதனால் குதிரை வடிவுசெய்து அதன்மேல் ஆடவர் ஏறி யிருந்து ஊர்வதாகக் கூறுதல் மடல் என்னும் நூலாயிற்று. அவர் எருக்குமாலை சூடுவர்.

''மாவென மடலும் ஊர்ப; பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப.''

—(குறுந். 17)

இனி **வளமடல்,** இரந்து குறைபெறாத் தலைமகன் மடலேறுவன் என்றும், இரண்டடி எதுகையாய் வருமென்றும் கூறுவர்.

'' அறம்பொருள் இன்பம் ஆகிய பயனை
எள்ளி மகடூஉக் காமவின் பத்தைப்
பயனெனக் கொண்டு பாட்டுடைத் தலைமகன்
இயற்பெயர்க் கெதுகை இயல்பு நாடிப்
பகர்ந்தவ் வெதுகைப் படத்தனிக் கிளவி
இன்றி இன்னிசைக் கலிவெண் பாவால்
தலைமகன் இரந்து குறைபெ றாது
மடலேறுவதாய் ஈரடி எதுகை
வரப்பா டுவது வளமட லாகும்.''

—(முத்துவீ. 1087)

மகளிர் மடல் ஊர்வதாகவோ, ஊரப்போவதாகக் கூறுவதாகவோ நூல் செய்யத் தமிழ்நெறி ஏற்பதில்லை. இதனை,

'' கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.''

என்னும் குறளால் (1137) அறிக. எனினும் பாட்டியல் நூல்கள் மகளிர் மடலேற்றையும் சுட்டியுரைக்கின்றன.

அவ்வாறு சுட்டுதல் வடவர்நெறி என்பதைத் திருமங்கை மன்னர் பாடிய பெரிய திருமடலில் (38, 39),

"அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூ ரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவ துண்டதனை
யாம்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்."

என்பதால் தெளியலாம். மகளிர் மடலேறுவதாகக் கூறும் நிலையொன்றைக் குறிக்கின்றது பாட்டியல்:

"மடன்மாப் பெண்டிர் ஏறார்; ஏறுவர்
கடவுளர் தலைவராய்வருங் காலே."

"கடவுளர் மேற்றே காரிகை மடலே."

"எந்தை யுடைப்பெயர்க் கெதுகை சாற்றி
அந்தமில் இன்பம் பொருளா ஏத்திப்
பொருளும் அறனும் வீடும் பழித்து
மடன்மா ஏறுதல் மாதர்க் குரித்தே."

—(பன்னிருபாட்டியல் 247-249)

இவற்றுக்குத் திருமங்கைமன்னர் பாடிய சிறிய திருமடல், பெரிய திருமடல் முதலியவை எடுத்துக்காட்டாம்.

**மதனசிங்காரம் (காமனெழில்)**

காமனை முதற்கண் பாடுதல்; பின்னர் மகளிர் விரும்பும் எழில் மையலாளன் காமக்கவலையை விரித்துரைத்தல்; நிறைவில் இருவர்தம் இன்புநிலை இயம்பல்; இவ்விணைவு ஊழ்வினையால் நிகழ்ந்தமை சாற்றல் என்பவை மதன சிங்காரப்பொருளாம். இப்பொருளை வெண்கலிப்பாவால் கூறுதல் முறையாம்.

வெண்கலிப்பாவாவது, கலித்தளையாலும் வெண்சீர் வெண்டளையாலும் இயன்று ஈற்றடி, வெண்பாவைப் போல் முடிவுறுதலாம். மாச்சீர் கலியுள் புகாது என்பது வெண்கலிக்கும் உரியதே.

"மதனனைமுன் பாடியவண் மாற்றிநினை மாது
விதனனைப் பாடியவன் மேவும்—இதம்பாடல்
வெண்கலியா லேயுரைத்தல் ஊழ்விதிபோல் ஆக்கலே
அண்சீர் மதனசிங்கா ரம்."

—(பிரபந்தத்திரட்டு 43)

**மணிமாலை**

எந்தப் பொருள்மேலும் வெண்பா இருபதும் கலித்துறை நாற்பதும் விரவிப்பாடுவது மணிமாலையாகும்.

"எப்பொருள் மேலும் வெண்பா இருபதும்
கலித்துறை நாற்பதும் கலந்து வருவது
மணிமாலை யாகும் வழுத்துங் காலே."

—(முத்துவீ. 1056)

'மணி' செம்மணி, பச்சைமணி, நீலமணி என ஒன்பான் வகைப்படும். அவற்றுள் இருமணித் தொடையாய், அறுபது எண்ணால் இயல்வது இம்மாலையாம். அறுபதாம் ஆண்டு 'மணிவிழா' எனல் கருதலாம்.

**மதனவிசையம் (காமவுலா)**

திக்குவிசயம் (திக்குலா) என்பது வெற்றிப்பொருட்டால் நிகழ்த்தப்பெறுவது. இது காமப்பொருட்டால் நிகழ்த்தப்பெறுவதாம்.

கட்டழகமைந்த தலைவன் ஒருவன் தன் எழிலுக்கும் வேட்கைக்கும் தகவுக்கும் ஏற்ற நங்கையைத் தேடித் திசையுலாக் கொள்வதும், அவன் உலாக் கொள்ளும் நோக்கறிந்த நங்கையர் கூட்டம் அவன் உலாக்கொள்ளும் யானையின் முன்னுற எதிர்த்துப் போர்ப்பார்போல நிற்றலும் மதனவிசையம் என்பதாம்.

அரச குமரர்கள் பெண்தேடிப்புறப்பட்டதாகவும் தக்கவளைத் தேர்ந்து மணந்து திரும்பியதாகவும் கிளர்ந்த கதைகளையுட்பொருளாகக் கொண்ட பனுவல் இதுவாம்.

மகளிர் சீர்மையைச் சிதைப்பதுபோல் எழுந்த சிறுநூல் வகைகளுள் ஈதொன்று எனலாம்.

'பெண்ணிற் பெருந்தக்கது யாது?' என வினவிப் 'பெண்ணிற் பெருந்தது இல்' என விடையிறுத்த வள்ளுவம் பிறந்த மண்ணின் மாண்பு மறைந்தகாலை அல்லது மறைக்கவென்றே எழுந்த சிறுநூல் இத்தகைய எனல் தகும்.

"மதன நலத்தார், திசைவென்றிறைவன்
செயலறிந்த மாமுன், இசைந்தெதிர்த்தல்
அவ்விசைய மே.''

என்பது பிரபந்தத்திரட்டு (37).

**மருட்பாப் பிரபந்தம் (மருட்பாப் பனுவல்)**

புறநிலைவாழ்த்து, செவியறிஅறூஉ, கைக்கிளை, வாயுறை வாழ்த்து என்னும் நான்கு பொருளின் மேலும் வரும் மருட்பாவால் அமைந்தநூல் மருட்பாப் பிரபந்தம் எனப்பெறும். இப்பொருட்கள் மருட்பாவன்றிப் பிற பாக்களாலும் பாடப்பெறுவதும் உண்டு.

"புறநிலை வாயுறை வாழ்த்துப் புவியில் ஒருவன்செவி
யறிவே உறுத்தல் அகப்புறக் கைக்கிளை ஆனவிந்த
நெறியிற் பொருள்களை அன்றி மருட்பா நிகழ்தலினால்
அறியவிந் நாற்செய்யு ளல்லாத பாவினால்
ஆமென்பரே.''
— (நவநீத. 55)

இவற்றைத் தனித்தனித் தலைப்பிலும் காண்க. இப்பொருள்கள் அகவல், கலிப்பாவகைகளிலும் வருதல், தொகை நூல்களாலும் பிறவற்றாலும் அறியக்கிடக்கின்றன.

**மறக்களவஞ்சி**

பகைமேற்கொண்டெழுந்த மன்னவர் மறக்களச் சிறப்பைக் குறள் சிந்து அளவு வகைகளில் வரும்

அகவலடிகள் கலந்த (மயங்கிய) வஞ்சிப்பாட்டில் குறைவின்றிப்பாடுவது மறக்களவஞ்சி எனப்பெறும்.

" குறள்சிந் தளவடி அகவல் அடிவிராஅய்
வஞ்சிச் செய்யுளின் மன்னவர் மறக்களம்
எஞ்சா துரைப்பது மறக்கள வஞ்சி."

" இயங்குபடை மன்னர் இகற்களம் புகழ்ந்த
மயங்கியல் வஞ்சி மறக்கள வஞ்சி."

— (பன்னிரு. 317, 318)

மறக்களம் — போர்க்களம். — வஞ்சி — போர்க்களத்தில் கொள்ளப்பட்ட வெற்றி.

'வஞ்சி' என்பது மாற்றார் மண்ணைக் கொள்வதற்குக் கிளர்ந்த படையெடுப்பு. புறத்திணைகளுள் ஒன்று வஞ்சி. இதற்கு வஞ்சிமாலை சூடிச்செல்லல் வழக்காறு. இவர்க்கு எதிரிடுவார் 'காஞ்சி' மாலை சூடுவர்.

" வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே."

என்பது பழம்பாடல்.

**மறம்**

பெருவேந்தன் ஒருவன் குறுநில மன்னனாகிய வேடனிடத்து அவன் மகளை வேண்டித் தூது விடுக்கத் தூதன் மொழிகேட்ட குறுநில மன்னன் சினந்து உரைப்பது மறம் என்பதாகும்.

" பெருநில வேந்தன் மகட்பால் வேண்டி
ஒருபெருந் தூதன் உரைத்தமொழி கேட்டுக்
குறுநில மறவன் வெஞ்சினந் திருகி
மாற்றமிக உரைப்பது மறமென மொழிப."

— (பன்னிரு. 250)

இனி, 'மகட்பாற் காஞ்சி' என்பதையும் மறம் எனக் கூறுவாரும் உளர். மகட்பாற் காஞ்சி என்பது, குலத்தொடு பொருந்தாத மன்னன் ஒருவன் மகள் வேண்டத் தந்தை

தாய் உடன்பிறந்தார் ஆகிய அனைவரும் மகள் மறுத்துரைப்பது என்பர்.

“ கூடாக் குலமுதல் மன்னன் மகள்வேண்டத்
தாதையுந் தாயும் தன்னையர் அனைவரும்
மாறுசொல் மகட்பாற் காஞ்சியும் மறனே.”
— (பன்னிரு. சங்கப்பிரதி. 62)

மறம் கலம்பகத்து உறுப்புகளுள் ஒன்றாகவும் விளங்கி வருகிறது. ‘மறம்பாடல்’ என்பதொருவகைநூல், மறவர் தம் வரலாறும் வழக்காறும் கூறுவதாக அமைந்துளது.

**மாதிரக்கட்டு (திசைக்கட்டு)**

மாதிரம் — திசை. “மாதிரம் எவையும் நோக்கான்” என்றார் கம்பர்.

“ மான்மயல்தான் கூனியென்று தாய்மந்திர
வாதிகொண்டு
தான்பார்க்க, கொட்டங்கி தாலத்தின்
—வான்திசையைக்
கட்ட இவள்எழுந்து கைநொடித்துக் கோமயலைக்
கொட்டங்கிக் கேயுரைத்தல் கூறு.”

என்றும்,

“ உள்ளிட்டுக் கல்யாணத் துக்குமுகிழ்த் தம்வைக்க
உள்ளுமவன் என்கணவன் உண்மையென — வள்ளலுறக்
கொட்டங்கிக் கெல்லாங் கொடுத்தனை பின்சேறல்
ஒட்டிலகு மாதிரக் கட்டு.”

என்றும் மாதிரக் கட்டின் இலக்கணத்தைப் பிரபந்தத் திரட்டு (35, 36) கூறுகின்றது.

**மாலை**

மாலைபோல் தொடுக்கப்படுவது மாலை எனப் பட்டது. பூவால் தொடுக்கப்படுதல், பாவால் தொடுக்கப் படுதலுக்கு ஆயது.

மாலைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பூக்களைக் கொள்ளலும், அவற்றையும் ஓர் ஒழுங்குறவும் கலைநலம் செறியவும் தொடுத்தலும் வினைத்திறத்தாலும் ஒப்புமையாம்.

மாலைகள் பல்வகைய. இணைமணிமாலை, இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, மாலைமாற்றுமாலை, மடக்குமாலை, திரிபுமாலை இன்னவை.

மாலையில் பெரும்பாலனவும் முதல்முடி இயைபுத் தொடையாதல், வரப்படுத்திக்கொண்டார் வரிசைப் படுத்திக்கூறுதற்கு வாய்ப்பாம்.

மாலை என்னும் பகுப்பின் வகுப்புகள் எண்ணற்றன. அதனை வேண்டியாங்குக் கொள்வதற்கு வாய்ப்பாகச் சிதம்பரப் பாட்டியல் வகுத்துக் கூறுகின்றது:

"முப்பான், நாற்பான், எழுபான், தொண்ணூறு,
நூறால் வெண்பா, மன்னுகலித் துறையாதல்
புகலப் பேரான், மாலையுமாம் எண்ணாலும்
மருவும் பேராம்."

என்பது அது.

—(சிதம். மர. 11)

**மாலைமாற்று மாலை**

ஒரு செய்யுளை இறுதி முதலாகக்கொண்டு படிப்பினும் அச்செய்யுளே ஆவது மாலைமாற்று என்பதாகும். அஃது அந்தாதியாகத் தொடர்வது மாலைமாற்று மாலையாம். இலக்கண நூல்களில் குறள்வெண்பா, வெண்பா, வஞ்சித் துறை ஆகியவை மாலைமாற்றுக்கு எடுத்துக்காட்டாகத் தரப்பெற்றுள்ளன. பெரும்புலவர் **அரசஞ்சண்முகனார்** கலித்துறையில் இயற்றினார். அதனுள் யமகம், திரிபு, காதை கரப்பு முதலிய சொல்லணிகளும் அமைய 33 செய்யுட்கள் இயற்றி மாலைமாற்றுமாலை எனப்பெயர் சூட்டியுள்ளார். நுண்ணுணர்வினர்க்கே அமைந்த படைப்பு

இஃதாகும். திருஞானசம்பந்தர் திருப்பிரமபுரப் பதிகம் ஒன்றை மாலைமாற்றுமாலையாகப் பாடியுள்ளார். அதற்குத் 'திருமாலைமாற்று' என்பது பெயர்.

(எ-டு.)

" வாலகன மாஷீயா மாவல வேனித
நீலன நேசாயா நீயல — மாலய
னீயாசா னேநல னீதனி வேலவ
மாயானீ மானகல வா."

—(மாலைமாற்றுமாலை 1)

**மானதவம்**

அகன்ற மலைக்கானில் அழுத்தமான தவமியற்றி அத்தவத்தால் நங்கை ஒருத்தியை வருவித்துத் தருவது பற்றிக் கூறுவது 'மானதவம்' என்றும் நூல்வகைச் செய்தியாம்.

மானம் — பெருமை.

" விட்டவறைக், கானந் தரிபூசை யாலழைத்து
மாலரிவை தானுதவல் மான தவம்."

—(பிரபந்தத்திரட்டு)

**முதுகாஞ்சி**

இளமை கழிந்து அறிவின் மிக்கோர், இளமைகழியாத அறிவில்லாத மாக்கட்குக் கூறுவது முதுகாஞ்சியாகும்.

"இளமைகழிந் தறிவு மிக்கோர் இளமை
கழியாத அறிவின் மாக்கள் தமக்கு
மொழியப் படுவது முதுகாஞ்சி யாகும்."

—(முத்துவீ. 1127)

காஞ்சி — நிலையாமை.

இவ்வுலகியலைக் கூறும் தொல்காப்பியம்,

" நில்லா உலகம் புல்லிய நெறித்தே."

என்னும்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே."

என்னும் புறநானூறு.

"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்."

என்னும் திருக்குறள். (233)

நாலடியார் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என்பவற்றை விரிக்கும்.

நிலையாமை பொதுவில் அறியப்படுமாயினும், போர்க்களத்து அறியப்படுதல் மிகத்தெளிவாம். ஆகலின் களப்போர் சுட்டும் வஞ்சிக்கு எதிரிடையாம் காஞ்சி, நிலையாமைப் பொருளும் தரலாயிற்று. நிலையாமை கருதி, அறமேற்கொண்டு ஒழுக அறிவுறுத்தும் நூல்களுள் ஒன்று முதுமொழிக்காஞ்சி என்பதும் அறிக. அசோக மன்னன் வெற்றியிலே 'புத்தசமயப் பரப்பம்' எழுந்ததும் உணர்க.

**மும்மண்டிலப்பா**

ஒரே ஒரு பாடலாக இருந்து, அதனைப் பகுத்துப் பார்க்க மூன்று பாடல்களாய், மூவகையாப்பியல்புடையதாய், பொருளமைதி நிறைவுடையதாகத் திகழும். இவ்வகைப்பா மும்மண்டிலப்பா எனப்படும். மும்மண்டிலப்பா திருவரங்கத்திருவாயிரத்தில் இடம்பெற்றுள்ளது.

'பகுபடு பஞ்சகம்' 'பிறிதுபடுபாட்டு' பார்க்க.

**மும்மணிக்கோவை**

ஆசிரியம், வெண்பா, கலித்துறை ஆகிய மூன்றும் முறையே முப்பது பாட்டான் வருவது மும்மணிக்கோவையாகும். கோவையாவது கோக்கப்பட்ட மாலைபோல்வது.

"ஆசிரியம் வெண்பாக் கலித்துறை முப்ப
தாக வருவது மும்மணிக் கோவை."

—(நவநீத. 36)

(செய்யுள் வகைமை)

இப்பாக்களை வெண்பா, அகவல், கலித்துறை என்னும் முறையில் வரும் என்றும், வெண்பா அகவல் என்பவை நேரிசை வெண்பாவும், நேரிசை ஆசிரியமுமே என்றும் கூறுவர்.

"வெள்ளையும் அகவலும் நேரிசையாகக்
கலித்துறை வரவந் தாதி யாகி
முறைமையின் இயல்வது மும்மணிக்கோவை."
—(பன்னிரு. 262)

கலித்துறையாவது கட்டளைக் கலித்துறை. இதனை அசையெண் கலித்துறை என்பார் இலக்கண விளக்க நூலார் (55).

**மும்மணிமாலை**

வெண்பா, கலித்துறை, ஆசிரியவிருத்தம் என்னும் மூன்றும் முறையே முப்பது பாட்டான் வரின் மும்மணி மாலை எனப் பெயர்பெறும்.

"வெள்ளை கலித்துறை ஆசிரிய விருத்தம்
புல்லும் முப்பதும் மும்மணி மாலை."
(செய்யுள் வகைமை) —(நவநீத. 36)

"மிகுந்த வெள்ளை கலித்துறை அகவல்
விருத்த மும்மணி விளம்புமந் தாதி."
—(பன்னிரு. 256)

இவற்றை, "'வெண்பா கலித்துறை அகவல்' அந்தாதி" என்பார் இலக்கண விளக்கப்பாட்டியலார்.

**மும்மணி யந்தாதி**

'தளவாய் மும்மணி அந்தாதி' என்பதொரு தொகுப்பு நூல். அதனைச் செய்தார் தளவாய் திருமலையப்பர். மூவர் தேவாரங்களில் இருந்து முடி முதல் தொடை அமையத் தொகுக்கப்பட்ட நூறு பாடல்களையுடையது. மூவகைப்பாடல்கள் என்னும் வழக்கில் இருந்து விரிந்து மூவர் பாடல் தொகுப்புக்கு ஆயிற்று இம் மும்மணி.

**முரண்வஞ்சி**

முரணாவது பகை, வஞ்சியாவது பகைமேற் சென்று போரிடல்; அதற்கு அடையாளமாக வஞ்சிமாலை அணிதல்.

வஞ்சிப்பாவால் போர்வாய்த்த செய்கைகளை யெல்லாம் குறையாமல் கூறுவதாகவும் பகைவர் அடிப் படுதலாகவும் உரைப்பது முரண்வஞ்சியாம்.

"வஞ்சிப்பா வால்மறம் வாய்த்தசெய்கை எல்லாமும்
எஞ்சா திறைவன் இசைத்தலாய்ப்—பஞ்சார்
சரணாய் உரைத்தல் தலந்தன்னில் என்றும்
முரண்வஞ்சி முன்னி அறி."

—(பிரபந்தத்திரட்டு 28)

பஞ்சார்—பஞ்சு போலப் பறந்தோடும் பகைவர். 'பஞ்சாகப் பறத்துதல்' என்பது வழக்காறு. "ஆளையா உனக் கமைந்தன மாருதம் அறைந்த பூளையாயின கண்டனை' என்று கம்பர் கூறுதல் பஞ்சாகப் படை பறந்ததைத் தெளிவாக்கும். பூளை—பூளைப்பூ; 'பஞ்சார்' என்று பறந்தோடும் பகைவரைச் சுட்டுதல் அரிய ஆட்சி.

**மெய்க்கீர்த்தி (மெய்ச்சீர்த்தி)**

அரசரது மெய்யான புகழைக் கூறுவது மெய்க்கீர்த்தி எனப்பெறும். மெய்க்கீர்த்தி ஆசிரிய அடியும் வஞ்சியடியு மாகிய சொற்சீரடியான் வரும். சீர்த்தி > கீர்த்தி; "சீர்த்தி மிகுபுகழ்" என்பது தொல்காப்பியம்.

"சிறந்தமெய்க் கீர்த்தி அரசர் செயல்சொற் றனவாய்ச் செய்யுள்
அறைந்ததோர் சொற்சீரடியாம்."

—(நவநீத. 53)

"சொற்சீ ரடியால் தொழிற்படு புகழை
வேந்தர்பாற் கூறின் மெய்க்கீர்த்தி யாகும்."

—(இலக். பாட். 71)

இதனைச் **சீர்மெய்க்கீர்த்தி** என வழங்கி அதன் இலக்கண அமைதியையும் இயம்பும் பன்னிரு பாட்டியல்.

"சீர்நான் காதி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச்சிறக்க யாண்டெனத்
திறம்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி."

"நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியின் அந்தம்
உரையாய் முடியும் எனவுரைத் தனரே."
(கோவூர் கிழார்) —(பன்னிரு. 313, 314)

இதனை **மெய்க்கீர்த்தி மாலை** என்பாரும் உளர்.

"சொற்சீர் அடியெனும் கட்டுரைத் தொடர்பாற்
குலமுறை ஆற்றிய கீர்த்தியைக் கூறல்
மெய்க்கீர்த்தி மாலையாம் விளம்புங் காலே."
— (முத்துவீ. 1060)

**மெய்ம்மொழி அலங்காரம் (மெய்ம்மொழி அழகு)**

உள்ளதை உள்ளவாறு கூறுதலாகிய அழகு, மெய்ம் மொழி அலங்காரம் எனப்படும். இவ்வழகு, கலிவெண் பாவால் கூறப்படும்.

"பொய்ம்மொழியும் மெய்ம்மொழியும் போற்றுமலங் காரமிரண்
டய்யகலி வெண்பாவால் ஆற்றுவன."

என்பது பிரபந்தத்திரட்டு (16).

மெய்ம்மையைக் கூறுதற்கும் அழகு வேண்டுமோ எனின் பாலின் தூய்மையுடன் பாற்கலத்தின் தூய்மையும் வேண்டத்தக்கதே அல்லவோ! கலந்தூய்மையின்மையால் நலம் பயக்கும் பாலும் நஞ்சாந்தன்மை எய்திவிடுதல் உண்டு என்பதால் அன்றோ, "நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று" என்றார் பொய்யாமொழியார் (1000).

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

என்பதும் குறளே (648). ஆகலின் மெய்ம்மொழியையும் அழகு நலம் கெழுமக் கூறுதல் வேண்டுமென்க.

"சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்" என்பன முதலாகப் பத்து வகை அழகுகளை நூல்கள் கூறிய நுட்பம் இன்னதேயாம்.

**மேல்வைப்பு**

ஒரு பாடலின் மேல்வைக்கப்படும் மிகையடி மேல் வைப்பு எனப்படும். ஈரடிமேல்வைப்பு, நாலடி மேல்வைப்பு என இஃது இருவகையாம்.

"தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே."

இஃது ஈரடிமேல்வைப்பு.

"இயலிசை யெனும்பொரு ளின்திறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன அரிநெடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ அமர்ந்தவனே
கலனாவது வெண்டலை கடிபொழில் புகலி
தன்னுள்
நிலனாள்தொறு மின்புற நிறைமதி யருளினனே."

இது நாலடி மேல்வைப்பு.

இவை திருஞானசம்பந்தர் அருளியவை.

பதிகம் தனிநூலாம் பான்மைய வென்பதறிக.

**மேற்கணக்கு**

அகவற்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியவற்றால் ஐம்பது முதலாக ஐந்நூறு ஈறாகப் பொருள் நெறிமரபில்

தொகுப்பது மேற்கணக்கு எனப்படும். கணக்கு — நூல். கணக்காயர் — நூற்கற்பிக்கும் ஆசிரியர்.

> " அகவலும் கலிப்பா வும்பரி பாடலும்
> பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
> மிகுத்துடன் தொகுப்பன மேற்கணக் கெனவும்."
>
> — (பன்னிரு. 346)

இனி அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபா என்னும் ஐவகைப்பாவாலும் மேற்கணக்குத் தொகுக்கப்படும் என்றும் கூறுவர்.

> " ஐம்பது முதலா ஐந்நூ றீறா
> ஐவகைப் பாவும் பொருள்நெறி மரபிற்
> றொகுக்கப் படுவது மேற்கணக்காகும்."
>
> — (பன்னிரு. 346)

கீழ்க்கணக்கு பதினெட்டாதல் போல மேற்கணக்கும் பதினெட்டாம். அவை பாட்டு தொகை என்பன.

பாட்டாவது பத்துப்பாட்டு; தொகையாவது எட்டுத் தொகை.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பவை பத்துப்பாட்டு.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவை எட்டுத்தொகை.

இப்பாட்டும் தொகையும் பதினெண்மேற்கணக்கு என்றும், மேற்கணக்கு என்றும் வழங்கப்படுகின்றன.

**மொழிமாற்று**

மொழிகளை மாற்றிச் கூட்டிப்பொருள் கொள்ள வைக்கும் மிறைக்கவி மொழி மாற்றாகும்.

"உரித்தது பாம்பை உடல்மிசை இட்டதோர்
ஒண்களிற்றை
எரித்த தொராமையை இன்புறப் பூண்டது
முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத் தக்கனை
வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு வீல்வீற் றிருந்தவரே."
— (தேவா. ஞான.)

இதில்

"உரித்தது களிற்றை; உடல்மிசை யிட்டதுபாம்பை;
எரித்தது முப்புரத்தை; பூண்டது ஆமையை; செருத்தது
தக்கனை வேள்வி; ஏந்திற்று சூலத்தை."

என மொழிமாற்றி அமைக்க.

**யமக அந்தாதி (மடக்கு முடிமுதல்)**

யமகம் என்பது மடக்கு ஆகும். எழுத்துகளது தொகுதி பிற எழுத்தானும் சொல்லானும் இடையிடாதும் இடையிட்டும் வந்து பெயர்த்தும் வேறுபொருளை விளைப்பது மடக்காகும்.

"எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருள்தரின் மடக்கெனும்
பெயர்த்தே."
— (தண்டி. 91)

இம்மடக்கென்னும் சொல்லணி அமைந்த பாக்களால் இயற்றப்பெற்று அந்தாதியாக வரும் நூல் யமக அந்தாதி எனப் பெயர்பெறும்.

குற்றால யமக அந்தாதி, செந்தில் யமக அந்தாதி, தில்லை யமக அந்தாதி முதலியவை இவ்வகையைச் சார்ந்தவையாம்.

**யாண்டுநிலை**

'மன்னன் பல்லாண்டு பல்லாண்டு மன்னுக!' என்று வாழ்த்துவதாக அமைந்தது யாண்டுநிலை என்பதாகும்.

பெரும்பாலும் நேரிசை வெண்பாவானும் சிறுபான்மை பிற எல்லாப் பாக்களானும் பாடப்படும் என்பர்.

"வையக மன்னவன் மன்னுக பல்யாண்
டெய்துக என்ப தியாண்டுநிலை யாகும்."
— (பன்னிரு. 328)

**யானைவஞ்சி**

'ஆனைத் தொழில்' காண்க. யானைத் தொழில் மாலை என்பதுவும் இதீ. வஞ்சிப்பாவால் பாடுதலால் யானை வஞ்சி எனப்பெற்றது.

"இசைந்த நிலம்குலம் ஒத்த எழிலோ
டிசைந்த பிராயத் தளவும்—இசைந்தமதம்
துன்னஅஞ்சி வீடுயிர்கோன் மன்னன் தொடர்ந்
தணைத்தல்
சொன்னவஞ்சி யானைத் தொழில்."
— (வெண். பாட். 33)

**வகுப்பு**

வகுத்துக் கூறுவதாக அமைந்த பனுவல் வகுப்பு எனப் படுகின்றது. கலம்பகத்தில் வரும் புயவகுப்பு (தோள் வகுப்பு) தனி நூலாகக் கூறப்படலாயிற்று எனலாம்.

வகுப்பு சந்த நடையது; நெடிய அகவலாய் இயல்வது.

அருணகிரியாரின் வேல்வகுப்பு, புயவகுப்பு என்பவை இவ்வகையில் சிறப்பு வாய்ந்தவை.

வகுப்பு பாடுதலில் தண்டபாணி அடிகள் தனிப் பெருமையுடன் இயங்குகின்றார். அவர் பாடிய வகுப்புகள் தனிப்பெரு நூலாம் அளவின. அவர் பாடிய திருவாயிரங் களுள் வகுப்புக்குச் சீரிய இடமுண்டு.

**வச்சிராங்கி (வேந்தன் வெள்ளி)**

வேந்தன் — இந்திரன்.

"வேந்தன் மேய தீம்புனல் உலகம்."
— (தொல். அகத்.)

அரம்பையராம் தெய்வப் பெண்டிர் மன்னவன் ஒருவனைக் கண்டு அவன் அழகால் மயங்கி அவனை நெருங்கி வர இந்திரன் மன்னனை எதிர்த்து நின்றானாக இந்திரன் மன்னனால் வெல்லப்படுவதாகப் பாடுதல் 'வச்சிராங்கி' என்பதாம். வச்சிரம், இந்திரன் படைக்கருவி. அவனை வெற்றி கொள்ளுதலால் வச்சிராங்கி எனப்பட்டது.

> '' அரம்பையர் இவனழகாற்—சாலவர, இந்திரன்
> எதிர்க்க இறைவெல்லப் பாடல் மகிழ்ந்திலங்கு
> வச்சிராங்கி.''

— (பிரபந்தத் திரட்டு 38)

**வசனசம்பிரதம் (எதிருரையாட்டு)**

> '' சாற்றுவன எல்லாம் தகைஇ ரணமொழியாச்
> சாற்றல் வசனசம்ப்ர தாயமே.''

— (பிரபந்தத்திரட்டு 64)

சொல்பவற்றையெல்லாம், தகவார்ந்த வகையில் எதிரிட்டு விளங்கும் மொழியினால் மறுத்துரைத்தல், 'வசன சம்ப்ரதாயம்' என்னும் நூலின் நுவல்பொருள்.

இரணம்—எதிரிடை, முரண்.

**வசந்தமாலை**

தென்றலை வருணித்து அந்தாதியாகப் பாடுவது வசந்தமாலையாம்.

> '' வசந்த வருணனை வசந்தமாலை.''

— (இலக். பாட். 76)

> '' தென்றலைப் புகழ்ந்து செப்புதல் வசந்த
> மாலை யெனப் பெயர் வைக்கப் படுமே.''

— (முத்துவீ. 1063)

**வசைப்பாட்டு**

கடைநிலை காண்க.

**வஞ்சிமாலை**

எப்பொருளைப் பற்றியாயினும் வஞ்சிப்பாவால் பாடுதல் வஞ்சிமாலை எனப்படும்.

வஞ்சிமாலை வரலாற்று வஞ்சி, அமர்க்கள வஞ்சி போன்றது என்னும் நவநீதப்பாட்டியலுரை (48).

**வண்ணம்**

வண்ணமாவது வண்ணித்துப் பாடப்படும் பாடல்; அஃது இசைப்பாடல்.

வண்ணம் தொல்காப்பியனாரால் சுட்டப்படுகின்றது. அதன் வகைகளும் பாஅவண்ணம், தாஅவண்ணம் என எண்ணப்படுகின்றது. ஒலிநயம் கருதிய அமைப்பு வண்ணம் என்பது வெளிப்படத் திகழ்கின்றது. கலிப்பாவின் உறுப்பான 'வண்ணகமும்' இவ்வகைப் பட்டதே. கம்பர் பாடல்களிலும் வண்ணம் உண்டு. கம்பன் பாடிய வண்ணம் 96 என்பதொரு வழக்கு.

ஆயிரத்துக்கு மேலும் வண்ணம் இசைத்த வளமார்ந்த பாவலர் அருணகிரியார். அவர்க்கு முன்னே வண்ண இசையில் கொடி கட்டிப் பறந்தவர் ஆளுடையபிள்ளையாராம் தமிழ் ஞானசம்பந்தர்; பின்னே வண்ண இசையில் பேருலாப் போந்தவர் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள்; பட்டினத்தாரின் உடற்கூற்று வண்ணம் உலகறிந்தது.

இசுலாமியப் புலவர்கள் சிலரும் வண்ணம் பாடுதலில் இணையற்றுத் திகழ்ந்தனர் என்பதற்குச் சான்று பாட்சாப் புலவர் இயற்றிய வண்ணங்கள், வண்ணக்குழிப்புகள் என்னும் நூல்.

அகப்பொருள் நுவல்வதாய் எழுந்த வண்ணம், மெய்ப்பொருள் கிளப்பதாகவும் திகழும். சில வண்ணங்களின் சந்தச் சுவைக்கு ஒவ்வாப் பொருளிழிவு அதன் பெருமையைக் குன்றச் செய்து விடுவதாகவும் உள்ளது.

**வண்ணவிருத்தம்**

ஓரடிக்குப் பதினாறு கலை வகுத்து, இப்படி நாலடிக்கும் அறுபத்துநாலு கலை வகுத்து, வண்ண விருத்தமாகப் பாடப் படுவது வண்ண விருத்தம்.

— (நவநீத. 31)

"எட்டுக் கலையாய் இடையிட் டெதுகையாக்
கட்டுக் கலைக்குழக் கண்ணியாத்—திட்டத்தில்
தொங்கலும் எட்டாய்த் தொடைமூன்று
நான்காறாய்ப்
பங்குபெறும் வண்ணப் பரப்பு."

— (இலக்கண சூடாமணி)
— (நவநீத. 31 மேற்)

வண்ணம் பார்க்க.

**வணக்கம்**

வணக்கப் பொருளமைந்த பாடல்களாலாகிய நூல் வகை வணக்கம் எனப்படுகின்றது.

வணக்கம் இறைவனையும் இறைமை சார்ந்த அடியார் ஆசிரியர் ஆகியோரையும் முன்னிலைப் பொருளாகக் கொண்டு விளங்குகின்றது.

வணக்க நூல்களுள் முன்னோடியும் புகழ் மிக்கவையு மாக விளங்குவன மௌன குரு வணக்கம், பரசிவ வணக்கம் என்பன.

**வதனசந்திரோதயம் (முகமதி)**

"தூதி ஒருவிவந்து சொல்லுவதாய், மான்முகத்துக்(கு)
ஏதம் மதியென்(று) இதமுரைத்தே—ஓதுகலி
வெண்பாவாய் மாமதுரம் ஏற்றதாய்ப் பாடுதலே
அண்வதன சந்த்ரோ தயம்."

— (பிரபந்தத்திரட்டு 67)

தூதி ஒருத்தி வந்து சொல்லுவதாகவும், தலைவியின் முகத் துக்கு மதி எவ்வகையானும் ஒப்பாகாது என்று புனைந்து

கூறுவதாகவும் பொருளமைதியுடையது 'வதனசந்திரோதயம்' ஆகும். அந்நூல், கலிவெண்பாவால் பாடப்படும்.

" மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி."

என்னும் குறளே (1118), மாதர்முகம்போல் ஒளிவிடவல்லதன்று மதி என்னும் புனைவையுட்கொண்டதே.

பிள்ளைத் தமிழில் வரும் அம்புலிப்பத்து ஒப்பும் உறழ்வும் கூறிப் பாடப்படுவதே. பாவிகத்தில் இத்தகு புனைவு மிகவுண்டு. இவற்றையெல்லாம் வாங்கிக் கொண்டு வளர்ந்த இலக்கிய வகை ஈது. 'ஒருவி' என்பது 'ஒருத்தி' என்பதன் புதிய ஆட்சி. இனித், 'தூதி தலைவியை அகன்று தனியே வந்து' என்னும் பொருளதுமாம்.

**வர்ணிப்பு (வண்ணிப்பு)**

புனைந்துரை வகையால் விரித்துப்பாடுதல், வண்ணிப்பு ஆகும். வண்ணப்பாடல் வேறு; வண்ணிப்பு வேறு; வண்ணிப்பு எளிய நடையும் தெளிசொல்லும் உடையதாகச் செல்லும். 'அழகர் வர்ணிப்பு' என்பதொருநூல், சோலைமலை அழகர் சிறப்புகளை விளக்குவதாம்.

**வரலாற்று வஞ்சி**

ஒருவன் வனப்பு, ஆற்றல், கல்வித்திறம், குடிப்பிறப்பு, குணநலம் முதலியவற்றை வஞ்சிப்பாவால் வாழ்த்திப் பாடுவது வரலாற்று வஞ்சியாகும்.

[நவநீத. 48 (குறிப்புரை) ]

" விழுமிய குலமுறை பிறப்புமேம் பாட்டின்
பலசிறப் பிசையையும் வஞ்சிப் பாவால்
வழுத்தல் வரலாற்று வஞ்சியாம் என்ப."

(முத்துவீ. 1072.)

" வரலாற்று வஞ்சி,
ஞாலமேல் தானை நடப்பது சொல்லல்"

வரலாற்று வஞ்சி என்பார் இலக்கண விளக்கப்பாட்டிய லார் (109).

**வருக்கக்குறள்**

மொழிக்கு முதலாக வரும் எழுத்துகள் எல்லாம், பாடல் முதலெழுத்துகளாக முறையே வர குறள்வெண் பாவால் பாடுவது வருக்கக்குறள் எனப்படும். தண்டபாணி அடிகள் வருக்கக்குறள் யாத்துளார். அதில் 249 பாடல்கள் உள.

**வருக்கக்கோவை**

அகரமுதலாக மொழிக்கு முதலாக வரும் எழுத்துகள் எல்லாம், பாடல் முதலெழுத்தாக வரக் கட்டளைக் கலித் துறையாகப் பாடுவது வருக்கக் கோவையாகும்.

> "அகர முதலா கியவாம் அக்கர
> வருக்க மொழிக்கு முதல்வரு மெழுத்து
> முறையே கட்டளைக் கலித்துறை யாக
> வழுத்துவ ததுவே வருக்கக் கோவை."
>
> (முத்துவீரியம் 1044)

கோவைப்பா, கட்டளைக்கலித்துறைப்பாவாம்.

**வருக்கமாலை**

மொழிக்கு முதலாக வரும் வருக்க எழுத்துகளுக் கெல்லாம் ஒவ்வொரு கவி கூறுதல் வருக்கமாலையாகும்.

> "வருக்கத் தினைச் சொலல் வருக்க மாலை."
>
> —(இலக். பாட். 66)

> "மொழிக்குமுத லாகிய எழுத்துக் கெல்லாம்
> வருக்கம் உரைப்பது வருக்க மாலை."
>
> —(பன்னிரு. 283)

இனி, உயிரானும் கசதநபமவ என்னும் உயிரோடு கூடிய மெய் ஏழானுமாக எட்டு ஆசிரியப்பா வந்தால்

அவை வருக்கமாலை எனவும் கூறுவாரும் உளர் என்பார் இலக்கண விளக்கப்பாட்டியலார் (66).

வருக்கக்கோவை கட்டளைக் கலித்துறையாக வரும் என்பதுபோன்ற வரம்பு வருக்கமாலைக்கு இல்லை என்க. எப்பாவானும் எவ்வினத்தானும் வருமெனக் கொள்க.

**வருக்கச் சந்தவெண்பா**

அகரமுதலாக மொழிமுதல் வரும் எழுத்துகள் எல்லாம் முறையே பாடல் முதலெழுத்தாய் வரச் சந்த வெண்பாவால் பாடப்பெறும் நூல் வருக்கச் சந்தவெண்பா எனப்பெயர் பெறும்.

சரவணப் பெருமாள் கவிராயர் இயற்றிய 'கந்த வருக்கச் சந்தவெண்பா' இதற்கு எடுத்துக்காட்டாகும். இந்நூல் 102 பாக்களையுடையது.

**வருக்க எழுத்துகள்**

அ க ச த ந ப ம என்னும் ஏழுவரிசையிலும் வரிசைக்குப் பன்னிரண்டாக எழுத்துகள்: 84

| | |
|---|---|
| வகர வரிசையில் (வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ) | 8 |
| யகர வரிசையில் (ய, யா, யு, யூ, யோ, யௌ) | 6 |
| ஞகர வரிசையில் (ஞ, ஞா, ஞி, ஞெ) | 4 |
| ஆக எழுத்துகள் | 102 |

வருக்கமாலை, வருக்கக்கோவை காண்க.

**வழிநடைச்சிந்து**

இரண்டடிகளாய் ஓரெதுகையுடையதாய் ஒவ்வோர் அடியும் மூன்று சீர்களும் தனிச்சொல்லும் பின்னும் நான்கு சீர்களும் உடையதாய் அமைந்துள்ள சிந்து நடையில் வருவது வழிநடைச்சிந்து ஆகும்.

அடியார் கூட்டம் தம் ஊரில் இருந்து தாம்வழிபட விரும்பும் இறைவன் திருக்கோயில் கொண்டுள்ள இடம் வரைக்கும் உள்ள வழிகளையும் வனப்புகளையும் ஊர் களையும் உயர்வுகளையும் சிந்துப்பா நடையில் கூறுவது வழிநடைச்சிந்தாம்.

வழிநடைச் செலவு வகையில் முற்பட இருந்ததாகக் கூறப்படும் நூல் 'செங்கோன் தரைச்செலவு'; அந்நூலை யடுத்துப் பாடப்பட்டதாகக் கிடைத்துள்ள ஒரு சிதைவு நூல் 'தகடூர் யாத்திரை.'

திருப்பரங்கிரி வழிநடைச்சிந்து என்னும் நூல் ஓடாத் தூர் என்னும் ஊரில் இருந்து திருப்பரங்குன்றம் வரைக்கும் வந்து மீண்டும் ஓடாத்தூர் செல்லுதலைக் குறிப்பது. ஒரு தலைவன் தன் தலைவியை விளித்துக் கூறிக்கொண்டு போவதாகப் பல்வேறு சந்தநடையில் நடக்கின்றது. அதனைப் பாடியவர் ஓடாத்தூர் இராமசாமிப் புலவர் என்பார்.

சில வழிநடைச் சிந்துகள் வழிநடைக் காவடிச்சிந்து எனவும் படுதல் உண்டு.

காவடிச்சிந்தும் வழிநடைச்சிந்தும் பொருளாலும் போக்காலும் 'இரட்டைப்பிறவி' எனலாம்.

### வழிமொழித் திருவிராகம்

இராகம்—இசை.

இப்பெயரால் திருப்பிரமபுரப் பதிகமொன்று தேவாரத் தில் உள்ளது. இது யாப்பியலால் பெற்ற பெயர் என்பது வெளிப்படுகின்றது.

" சுரருலகு நரர்கள்பயில் தரணிதலம் முரணழிய
அரணமதில்முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய
பரமனிடமாம்

வரமருள வரன்முறையி னிரைநிறைகொள் வருசுருதி
சிரவுரையினாற்
பிரமனுயர் அரனெழில்கொள் சரணவிணை பரவவளர்
பிரமபுரமே.''

'பிரமபுரம்' என்பதற்கு ஏற்ப எதுகை வழிமொழி தலாதலறிக.

இவ்வாறே வேணுபுரம் என்பதற்கு,

'' தாணுமிகு வாணிசைகொள் தாணுவியர் பேணுமதி
காணுமளவிற்
கோணுநுதல் நீணயனி கோணில்பிடி மாணிமது
நாணும்வகையே
ஏணுகரி பூணழிய வாணியல்கொள் மாணிபதி
சேணமரர்கோன்
வேணுவினை யேணிநகர் காணறிவி காணநடு
வேணுபுரமே.''

என வந்துளதும், புகலிமுதலிய பிறவூர்ப் பெயர்களும் வழியெதுகைபடவே வந்துளதும் அறிக. இதனால் சீகாழிப் பன்னிரு பெயர்களும் வந்த வரலாற்றினை, அவ்வழியே மொழிதலின் வழிமொழி எனப் பெயர்பெற்றது என்பது தேவாரப் பதிப்பில் திருத்தம்பெறவேண்டும் என்பது புலப்படும் (தேவாரம் — தலமுறைப்பதிப்பு, திருப்பனந்தாள் 1961 பதிப்பு: குறிப்புரை).

**வளமடல்**

'மடல்' காண்க.

**வள்ளைப்பாட்டு**

உலக்கைப்பாட்டு, வள்ளைப்பாட்டே. சுண்ணம் இடித்தல் என்பதும் வள்ளைப்பாட்டே.

'' பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள்.''

கண்குவளை அல்ல; கொலைக்கொடியவை என்பது சிலம்பு. குறுவாள்—குற்றுவாள்.

பரணியில் பேய்கள் கூழடுதற்கு அரிசிகுற்றுதல் விரிவாக வரும். சிந்தாமணிச் சுண்ணமிடிப்பு தேர்ச்சிமிக்கது.

களிற்றுக்கோடு உலக்கை; செம்பின் இலை சுளகு; மூங்கில் நெல்லை, சந்தன உரலில் பெய்து இடித்தல் ஆகியன பற்றிக் கலித்தொகை ஒலிக்கும் (41).

சுண்ணமிடிக்கும் ஆர்ப்பென்ன மெலியதா?

"ஆடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை, ஆர்ப்ப ஆர்ப்ப
நாமுமவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி ஆக்கு மங்கை
பங்கன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடகப்பொற் சுண்ண மிடித்துநாமே" (7)

**வாகனக்கவி (ஊர்திப்பா)**

"ஊர்தி வால்வெள் ஏறே" என்பது சங்கப்பாடல். ஊர்தியில் ஏறி இறைவன் உலாக் கொள்ளுங்கால் பாடப் படும் பாடல் வாகனக்கவி என்பதாம்.

திருவிழாக் காலங்களில் ஊர்திச் சிறப்பையும், இறைவர் சிறப்பையும், உலாச் சிறப்பையும் கொண்டு பாடும் தனிப் பாடல் வாகனக்கவி எனப்படுமாயினும் ஒரு நூல்வகை யினதாகச் சுட்டப்படுதலுண்டு. இதனை, வாகனமாலை என்று கூறும் மாறனலங்காரம். ஆகவின், பல பாடல்கள் பாடப்படுவதும் உண்டு என்பது விளங்கும். 'மாலை' என்பது தனிப்பாடலன்றே. பன்மலர்த் தொடையல் ஆயிற்றே.

கொட்டையூர் பெருமாள்கோயில் வாகனக்கவி, திருப் புல்லணை வாகனக்கவி என்பவை இவ்வகைய.

**வாகைமாலை**

பகைவரை வென்று புகழ்படைத்து வாகைமாலை சூடுவதை ஆசிரியப்பாவாற் கூறுவது வாகைமாலையாகும்.

" மாற்றாரை வென்று வாகை சூடுவதை
அகவலி னாலறை வதுவாகை மாலை."

—(முத்துவீ. 1780)

" வாகை மாலையே வூட்காரை வென்று
வாகைத்தார் சூடும் வயமது வழுத்தலே

—(பிரபந்ததீபம் 49)

வாகை=வெற்றி. இந்நாளை விளையாட்டு முதலியவற்றில் பெறும் வெற்றியையும் 'வாகை சூடுதல்' என்னும் வழக்கிருத்தல் அறிக. இனி இருமடியாக 'வெற்றிமாலை' சூடினான் என்பதும் அறிக.

**வாடாதமாலை**

மையலால் தவம் புரிய விருப்பமிக்க கன்னியர் எழுவரும் மாலை தருவதாகப் பாடுதல் வாடாதமாலை எனப்படும்.

" மாலால் தவம்புரிந்து மாதுலகேழ் கன்னிமார்
மாலைதரல் வாடாத மாலையாம்."

— (பிரபந்தத்திரட்டு 25)

**வாதோரண மஞ்சரி**

யானையை வயப்படுத்தி அடக்கினவருக்கும், எதிர்த்த யானையை வெட்டி அடக்கினவருக்கும், பற்றிப் பிடித்துச் சேர்த்தவருக்கும், அவர்தம் வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப் பாவால் தொகுத்துப்பாடுவது வாதோரண மஞ்சரியாகும்.

" யானை வயப்படுத்தி அடக்கின வருக்கும்
எதிர்பொரும் யானையை ஈரவெட்டி
அடக்கின வருக்கும் அதட்டிப் பிடித்துச்
சேர்த்த வருக்கும் வீரச் சிறப்பை

வஞ்சியாற் பாடுவ ததுவா தோரண
மஞ்சரி எனப்பெயர் வைக்கப் படுமே.''
—(முத்துவீ. 1079)

'யானைத் தொழில்' காண்க.

**வாயுறை வாழ்த்து**

'' வாயுறை வாழ்த்தே வயங்கீ நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.''

என்பது தொல்காப்பியம் கூறும் வாயுறை வாழ்த்தின் இலக்கணம்.

வாயுறை வாழ்த்து, பனுவல் நிலையை அடையுங்கால் அதன் அமைதியை,

'' வாயுறை வாழ்த்தே வன்சொல்பொறுத்து
வாழிஎன வெண்பா ஆசிரியம் வகுத்தலே.''

என்கிறது பிரபந்ததீபம்.

வாயுறை வாழ்த்து மருட்பாவில் வருமெனத் தொல்காப்பியர் சுட்டுவார். பிரபந்ததீபத்தார் வெண்பாவானும் ஆசிரியத்தானும் வருமென்றார். இரண்டு பாத்தன்மையும் ஒருபாடலில் இடம் பெறின் மருட்பாவாம். அவை தனித் தனிவரின் வெண்பா என்றும் அகவல் என்றும் பெயர் பெறுமாம். ஆகலின் மூவகை யாப்பும் பொருந்தும் என்க.

**வாழ்த்து**

வாழ்த்திப் பாடப்படும் பொருள் வகையால் பெற்ற பெயர் வாழ்த்து ஆகும்.

வாழ்த்து வாயுறை வாழ்த்து, இயன்மொழி வாழ்த்து, கடவுள் வாழ்த்து எனப் பலவகைப்படும். இக்காலையில் நாட்டு வாழ்த்து, மொழிவாழ்த்து என்பனவும் இணைக்கத்

தக்கன. ஆங்கிலர் ஆட்சிக் காலத்தில் 'அரசவாழ்த்து' என நாள்வழி வாழ்த்தாகக் கல்வி நிலையந்தோறும் பாடப்பட்டதுண்டு.

புறநானூற்றில், இயன்மொழி வாழ்த்துப் பாடல்கள் பல உள. அவை, புலவர்களால் புரவலனை நேரில்கண்டு பாடப்பட்டவை. அவ்வாழ்த்தியலே பின்னே தனிநூலுருக் கொள்ளச் செய்தது எனலாம். 'போற்றி', 'அடிபோற்றி,' 'போற்றிபோற்றி' 'வாழி' என வாழ்த்துவகை வருதல் கடவுள் வாழ்த்தாக இயலுதல் பரக்கக் காணக் கூடியதாம்.

'' நமசிவாயம் வாழ்க நாதன்தாள் வாழ்க'

எனத் தொடங்கும் சிவபுராணம் வாழ்த்தில் தொடங்கிப் போற்றியில் நடக்கின்றது. போற்றித் திருவகவல் பெயரே பொருளமைதியைச் சுட்டும்.

இறைவன் திருப்பெயர் சொல்லி வாழ்த்துரைக்கும் 'வாழித்திருநாமம்' எனப்படும் நூல்கள் இவ்வாழ்த்து வகையில் எழுந்தனவே.

## வாள்விருத்தம் (வாட்பா)

வாட்படையைப் பற்றிப் பத்து ஆசிரிய விருத்தம் இயற்றுவது வாள்விருத்தம் எனப்பெறும். — (நவநீத. 41).

## விசயம் (வருகை அல்லது தோற்றரவு)

விசயம் என்னும் பெயரில் உள்ள நூல்கள் பெருநூல்களின் சுருக்க நூல்களாக இயல்கின்றன.

இவ்வகையில் தண்டபாணி அடிகள் இயற்றிய 'கௌமார விசயம்' குறிப்பிடத்தக்கது. அது 16 உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை: அவதாரம், தரிசனம், விளையாடல், கருணைவென்றி, உபதேசம், ஈகை, அபிமானம், ஐயமறுத்தல், திருவாய்மலர்தல், சத்தியம், செவிகொடு வினவல், வல்லபம் வேண்டல், புகழ் வேண்டல், திருவடிவேண்டல், காப்புக்கூறல் என்பன.

கௌமார விசயம் என்பது 'திருமுருகன் தோற்றமு' என்பதாம்.

**விசய வித்தாரம் (வெற்றி விளக்கம்)**

எண்திசை மேலும் படைகொண்டு சென்று, ஆங்குள்ள அரசர்கள் பணிந்து கப்பம் செலுத்த, அவர்களைப் பகையாகக் கொள்ளாமல் அவர்கள் நாட்டை அவர்களே ஆளவிட்டு வருதல் பற்றிக் கூறும் பனுவல் விசய வித்தாரம்.

"அட்டதிக்குப் பாலர் திறைதர வாள்இறைவன்
விட்டு வரல்விசய வித்தாரம்."
—(பிரபந்தத்திரட்டு 48)

இது 'திசைவெற்றி' (திக்குவிசயம்) என்பதுமாம்.

**விடயசந்திரோதயம் (காதல் நிலாத் தோற்றம்)**

வியடம் = காதல். உள்ளத்தில் ஊன்றிய மயலை விரித்து வெண்ணிலவு ஒளிகாலும் பொழுதில் கூறுதல் விடய சந்திரோதயம் எனப்படும். கலித்தாழிசையால் சொல்லப்படும்.

நிலவொளியால், பிரிவுக்கு ஆட்பட்ட தலைவன் தலைவியர் வெதும்புதல் பாவிக அமைப்பில் பெருவரவினதாம். 'சந்திரோபாலம்பனம்', 'மன்மதோபாலம்பனம்' என நூல்களில் இடம் பெற்றுள. இராமகாதையில் இவ்வண்ணனை மிகப்பெருக்கமாக உள்ளது. இத்தகைய பாவிகக் காட்சியை வாங்கிக்கொண்டு எழுந்த சிறுநூல், 'விடயசந்திரோதயம்' ஆகும்.

"நாட்டுமயல், வெண்ணிலவிற் கூறல் விடயசந்திரோதயமாம், எண்ணுங்கலித்தாழிசை" என்பது பிரபந்தத்திரட்டு (45).

**விடுகவி**

'விடுகதை' உரைநடை வழிப்பட்டது. 'விடுகவி' பாடல் வழிப்பட்டது.

ஆசிரியர் தொல்காப்பியர் எழுவகை யாப்புகளைக் குறிக்குங்கால் (செய். 78) "நொடியொடு புணர்ந்த பிசி" என்பதொன்றனைச் சுட்டுகின்றார். "பிசியாவது உவமையை அடிப்படையாகக்கொண்டு தோன்றும் விடுகதைப் பாட்டு வகை" என்ப.

பிசி இருவகைப்பட்டு இயலுதலை,

" ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவது கிளந்த துணிவினாலும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே."

எனத் தெளிவிப்பார் ஆசிரியர் (தொல். செய். 176) இதற்கு,

"பிறைகவ்வி மலை நடக்கும்" என்பது ஒப்பொடு புணர்ந்த உவமம்; இஃது யானையென்றாவது.

" முத்துப்போற் பூத்து முதிரிற் களாவண்ண
நெய்த்தோர் குருதி நிறங்கொண்டு
— வித்துதிர்த்து."

என்பதும் அது. இது கமுகின் மேற்று.

" நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடில்
ஊராடு நீரிற்காக் கை."

என்பது தோன்றுவது கிளந்த துணிவினான் வந்தது. இது "நெருப்பென்றாவது" என்பார் பேராசிரியர்.

விடுகதை என வழக்கில் உள்ளனவும் எதுகை மோனை முதலிய தொடைநயம் உடையனவாகவே உலாவுதல் எவரும் அறிந்தது. எனினும் புலமக்களால் யாப்பியல் தவறாமல் செய்யப்படுவது இவ்விடுகவியாம். தண்டபாணி யடிகள் பாடிய 'விடுகவி', இருபது பாடல்களையுடையது

ஒன்றும், பத்துப்பாடல்களையுடையதொன்றும் ஆக் இரண்டுள. தனிப்பாடல்களிலும் விடுகவிப்பாடல்கள் உண்டு.

**விண்ணப்பம்**

வேண்டுகை என்னும் பொருளது விண்ணப்பமாகும். இறைவன் திருமுன்னிலையில் நின்று வேண்டும் வகையால் அமைந்துளது விண்ணப்பப்பாடல்கள்.

நீத்தல் விண்ணப்பம் மணிமொழியார் அருளியது. பிள்ளைப் பெருவிண்ணப்பம், பிள்ளைச் சிறு விண்ணப்பம் முதலாகப் பல விண்ணப்பங்கள் வள்ளலார் அருளியவை. இவை விருத்த யாப்பால் அமைந்தவை.

நீத்தல் விண்ணப்பம் ஐம்பது பாடல்களால் முடிமுதல் தொடையால் நடையிடுகின்றது.

விண்ணப்பம் பல்வகைப் பாக்களால் பத்தடுக்கிப் பாடப்பெறும் என்பது மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றிய பழனிக்கோயில் விண்ணப்பம் என்னும் நூலால் அறியப்பெறும். அதில், கலிவிருத்தம், ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, சந்தக்கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, கலிநிலைத்துறை, வஞ்சித்துறை ஆகியவை இடம் பெற்றன. அந்நூல் 120 பாடல்களைக் கொண்டுள்ளது.

விண்ணப்பப் பொருளமையக் கலிவெண்பாவால் பாடுவது **'விண்ணப்பக் கலிவெண்பா'** எனப்பெறும். வள்ளலார் அருளிய விண்ணப்பக் கலிவெண்பா இவ்வகையைச் சார்ந்தது. 417 கண்ணிகளால் அமைந்த அந்நூல் 290—291 ஆம் கண்ணிகளில்,

"நீறுடையாய் ஆறுடைய நீண்முடியாய் நேரிடரிய
வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம் — மாறுபட
எள்ளல் அடியேன் எனக்குள் ஒளியாமல்
உள்ள படியே உரைக்கின்றேன்."

என்று தொடங்கித் தம் விண்ணப்பத்தை விழுமியதாய் உரைத்து,

—" நீ தயவு
சூழ்ந்திடுக என்னையுநின் தொண்டருடன் சேர்த்
தருள்க
வாழ்ந்திடுக நின்தாள் மலர்."

என்று நிறைகின்றது.

விருத்தம் (மண்டலிப்பு)

யாப்பால் பெற்ற பெயர் விருத்தம் என்பது. இனி, ஒரு சாரார் வரலாறு தழுவியது என்றும் கூறுவர். ஆயின், அவர் சுட்டும் வரலாறும் விருத்தயாப்பால் இயன்றுள தாகலின், யாப்பே கொளத்தகும்.

விருத்த யாப்பால் இயன்ற ஒரு நூல் 'நரிவிருத்தம்'. அது திருத்தக்க தேவரால் இயற்றப்பெற்றது.

கிளிவிருத்தம், எலிவிருத்தம் முதலியனவும் இருந்த செய்திகள் உண்டு.

நம்மாழ்வார் அருளிய 'திருவிருத்தம்' கட்டளைக் கலித்துறையாக அமைந்துளது. ஆயின் இப்பெயராட்சி புதுமையானது.

திருமழிசையார் பாடிய விருத்தம் சந்தவகையின் தாகலின் திருச்சந்த விருத்தம் எனப்படுகின்றது. முதலாறு சீர்களும் மாச்சீராகவும் ஏழாம் சீர் விளாச்சீராகவும் வருதல் சந்த விருத்தயாப்பாகும்.

" பரிசிலை யானை வாள்குடை வேல்செங்
கோலொடு நாடுஊர் உரைப்பின் அகவல்
விருத்தம் பத்தென வேண்டினர் புலவர்."

என்பது பன்னிரு பாட்டியல்.

அகவல் விருத்தம் என்பது ஆசிரிய விருத்தம். அறுசீர் முதலாக நீண்டுவரும் பாட்டே ஆசிரியவிருத்தம் ஆகும்.

பரியாவது குதிரை; சிலையாவது வில். அவை பரிவிருத்தம், சிலைவிருத்தம் எனப்பெயர் பெறும் என்க.

இனி, ஆனைவிருத்தம், குதிரைவிருத்தம், வாள் விருத்தம், குடைவிருத்தம், செங்கோல் விருத்தம், வில் விருத்தம், வேல்விருத்தம், நாட்டுவிருத்தம், நகர் விருத்தம் என ஒன்பது வகை காட்டுவார் நவநீதப் பாட்டியலார் (41).

நகர்விருத்தத்தை ஊர்விருத்தம் என்பார் முத்து வீரியனார்.

"வில்வா ளொடுவேல் செங்கோல் யானை
குதிரை நாடூர் குடையிவ் வொன்பதும்
பப்பத் தகவல் விருத்தத் தாலே
ஒன்பது வகையுற உரைப்பது விருத்த
இலக்கணம் என்மனார் இயல்புணர்ந் தோரே."
—(முத்துவீ. 1126)

(இவ்விருத்தங்களை அவ்வப் பெயர்களில் காண்க).

**வில்லுப்பாட்டு**

வில்லடி, வில்லடிப்பாட்டு என்பதும் இது.

வில் படைக்கருவியாகப் பழமை தொட்டே வழங்கி யுள்ளது. அதன் அமைப்பில் 'வில்யாழ்' என்னும் இசைக் கருவியும் இருந்துளது. 'வில்பூட்டு' அல்லது 'பூட்டுவில் பொருள்கோள்' என இலக்கண ஆட்சியும் பெற்றுளது. 'வல்வில் ஓரி' என்பவன் வில்லாண்மை தனிச்சிறப்புடைய தாம். வில்லின் தோற்றம் வானவில்லை நினைவுகூரச் செய்துளது. அது 'திருவில்' எனக் குறிக்கப்படும் சிறப் புடையதாயிற்று.

வில்லடிப்பாட்டு சிந்துவகைப்பாடலால் இயலும்; இரு சீரடி இரண்டு இரண்டாய் இணையும்; அடிகள் மோனைத் தொடையில் இயலும்; பொருளுக்கு ஏற்ற சந்தத்தோடும் அமையும்; முன்பாட்டு பின்பாட்டு வில்லடி குடமடி

எல்லாம் இணைந்து சதங்கை ஒலியோடு வெளிப்படுங்கால் கேட்பவரை வயப்படுத்துதல் கண்கூடு.

பழங்கதை, சமுதாயக் (குமுகாயக்) கதை இவற்றைப் பற்றிய வில்லடிப்பாடல்கள் பாடப்படுகின்றன. சிலப் பதிகாரம், இராமாயணம் முதலிய காவியச் செய்திகளும், நல்லதங்காள் கதை, கட்டபொம்மன் கதை முதலியனவும் கல்லா மக்களுக்கும் களிப்பூட்டுவனவாய் வில்லடிப் பாடலாய் அமைகின்றன. இடையிடையே வரும் உரை நடைச்செய்தி கதையைச் சுருக்கவும் பெருக்கவும் துணையா கின்றது. சாத்தூர் பிச்சைக்குட்டியின் வில்லுப்பாட்டு அண்மைக் காலத்தே சிறப்புடன் விளங்கிற்று.

**வில்விருத்தம் (விற்பா)**

விற்படையைப் பற்றிப் பத்து ஆசிரிய விருத்தம் யாப்பது வில்விருத்தமாம்.

—(நவநீ. 41)

**விலாசம் (முகவம்)**

பாட்டுடைத் தலைவன் உலாக் கண்ட மகளிர் தம் காதலை வெளிப்படுத்தி யுரைப்பதாகவும், கனவுநிலை உரைப்பதாகவும், தலைவன் அருள் வரப்பெறுவதாகவும் கழிநெடில் ஆசிரிய விருத்தத்தால் பாடப்பெறும் ஒரு நூல் வகை விலாசம் என்பதாம். பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகவருவதும், 'மா மா காய்' என்னும் அமைப்பு நான்கு கொண்டது ஓரடியாய் வருவதும் விலாச நூல்களால் அறியக்கிடக்கின்றன. இரட்டுறல், மடக்கு ஆகியவை பாடல்தோறும் வர இயற்றுவது விலாச மரபாகும். விலாசம் நூறு பாடல்களாலும், அதற்குக் குறைந்தும் வருவதுண்டு. மாம்பழச்சிங்க நாவலரால் இயற்றப் பெற்ற சந்திரவிலாசம், கடிகை முத்துப்புலவரால் இயற்றப் பெற்ற சமுத்திரவிலாசம், சேறை கணபதிக் கவிராயரால் இயற்றப்பெற்ற நதிவிலாசம் ஆகியவற்றைக் காண்க.

விலாசங்களில் புதுமையானது 'பஞ்சலட்சணத் திருமுக விலாசம்' என்பது. இதன் பெயரைக் கேட்ட அளவில் ஐந்திலக்கணம் கூறும் நூல்போலும் என எண்ண நேரலாம். ஆயின் பஞ்சகால நிலையை விரித்துக்கூறும் நூலாக உள்ளது. சிவகங்கைத் துரைசிங்க அரசர்மேல் வில்லியப்பக் கவிராயரால் பாடப்பட்டது இப்பஞ்சலட்சணத் திருமுக விலாசமாம். நகைச்சுவை மிக்கதாக அங்கதப் பொருளுக்கு எடுத்துக்காட்டாக இந்நூல் அமைந்துளது.

விலாசப் பெயருடைய சில நூல்கள் நாடகமாக உள்ளன. 'அரிச்சந்திர விலாசம்,' 'தமயந்தி விலாசம்' என்பன போல்வன அவை.

**விளக்கம்**

எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதாக அல்லது விளக்குதலில் விளக்குப் போல்வதாக அமைந்த ஒரு நூல் வகை விளக்கம் எனப்படுகின்றது.

மனவாசகங்கடந்தார் இயற்றியது 'உண்மை விளக்கம்': உமாபதியார் இயற்றியது 'உண்மைநெறி விளக்கம்.' இவை மெய்ப்பொருள் விளக்கவழி வந்தவை.

குமரகுருபரர் அருளிய 'நீதிநெறி விளக்கம்' அறநெறி விளக்கமாம்.

மேழிவிளக்கம் என்பதொருநூல் வேளாளர் வரலாற்று விளக்கமாக அமைந்துள்ளது.

சித்தர்பாடல் தொகுதியில் 'நெஞ்சறி விளக்கம்' உண்டு.

**விளக்குநிலை**

வேலும் வேல்தலையும் விலங்காது ஓங்கியவாறு போலக் கோலொடு விளக்கும் ஒன்றுபட்டு ஓங்குமாறு கூறுவது விளக்கு நிலையாகும்.

"வேலும்வேந் றனையும் விலங்கர் தோங்கிய
வாறுபோற் கோலொடு விளக்கு மொன்றுபட்
டோங்குமா றோங்குவ தாக உரைப்பது
விளக்கு நிலையென விளம்பப் படுமே."
(முத்துவீ. 1097)

இதனைத்,

"துளக்கமில் மன்னர்க் காம்விளக் குரைப்பது
விளக்கு நிலையென வேண்டினர் புலவர்."

என்றார் பன்னிரு பாட்டியலார் (325).

வேந்தன் விளக்கைப் பற்றிக் கூறுவதும், அவனைக் கதிருடன் ஒப்பிட்டுக் கூறுவதும் விளக்குநிலை என்னும் துறையாகப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும். (200, 201).

**வினாவிடை**

வினாவிடை என்பது வினாவும் விடையுமாக அமைந்த பாடல்களால் ஆகிய நூல்வகையைக் குறிப்பதாயிற்று.

தாமே வினாவை எழுப்பிக்கொண்டு விடையிறுப்ப தாகவும், பிறர் கேட்ட வினாவுக்கு விடையிறுப்பதாகவும் 'வினாவிடை' அமைதலுண்டு.

ஆளுடையபிள்ளையார் தாமே வினா எழுப்பி விடையிறுப்பதாகப் பல பதிகங்கள் பாடியுள்ளார்.

மணிமொழியாரின் 'திருச்சாழல்' வினாவும் விடையுமாக அமைந்துளது.

சாற்றல் — மறுமொழி கூறல். சாழல் > சாடல்.

முத்துராமலிங்க சேதுபதி வினாவிய வினாக்களுக்குச் சரவணப்பெருமாள் கவிராயர் விடையிறுத்தாக 78 பாடல்கள் தனிச்செய்யுட் சிந்தாமணியில் இடம் பெற்றுள.

**வினாவுரை**

"செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்த்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே."

"கழலீர், சடையிற்பிறை பாம்புடன் வைத்தது சொலீர்" என்னும் வினாவுரை இருத்தலால் இப்பூந்தராய்ப்பதிகம் வினாவுரை எனப்படுகிறது.

'வினாவிடை'க்கும் இதற்கும் வேற்றுமை, 'விடை' இன்மையே. இப்பதிகம் ஞானசம்பந்தர் அருளியது.

**வெட்சிமாலை**

சீரிய வீரனொருவன் பகைவரூர் சென்று பசுநிரை கவர்ந்து வருவதை மிகுத்துக் கூறுவது வெட்சிமாலை யாகும். இதனை வீரவெட்சி மாலை என்றும் கூறுவர்

"ஆனிரை கவர்ந்து வருபவன் வெற்றி
விளம்புதல் வீர வெட்சி மாலை."

— (முத்துவீ. 1069)

**வெண்புணர்ச்சி மாலை**

தண்டகமாலை காண்க.

**வெற்றிக்கரந்தை**

பகைவர் கொண்ட தம் பசுநிரையைக் கரந்தைப் பூமாலை சூடிப் போய் மீட்பது பற்றிக் கூறுவது வெற்றிக் கரந்தையாகும். இதனை வெற்றிக் கரந்தை மஞ்சரி என்றும் கூறுவர்.

"தழுவார் கொண்ட தந்நிரை மீட்போர்
கரந்தை புனைந்து கனன்றுலவை யிற்செலீஇ
மீட்பதைக் கூறல் வெற்றிக் கரந்தை."

— (முத்துவீ. 1070)

**வேட்டல்**

வேட்டல் — விரும்புதல்; வேண்டுதல் பொருளும் வேட்டலாக வரும்.

ஞானசம்பந்தர், பாடிய 'மழை வேட்டல்' தேவாரத்து இடம்பெற்றுள்ளது. வேட்டலைப் பெருவரவிற்றாகச் செய்தவர் தமிழ்த் தென்றல் திரு. வி. க. ஆவார்.

இறைவர் பலர் பெயரிலும் 'அருள்வேட்டல்' பாடிய அவர், புதுமை வேட்டலும், பொதுமை வேட்டலும் பாடுகிறார். கிறித்துவின் அருள்வேட்டலும் நபிகளருள் வேட்டலும் இசைக்கிறார்.

**வேடர் வினோதம் (வேடத்தணைதல்)**

தன்னை அடைவதை விரும்பாத நங்கையை அடைவதற்குத் தக்க வேடத்தைக் கொண்டு சென்று வயப்படுத்துதல் பற்றிக் கூறுவது வேடர் வினோதம் என்னும் பனுவல் செய்தி.

> "மேவலுறா மானையொரு வேடத்தான் மேவுதல்
> மேவலுறு வேடர் வினோதமாம்."
>
> — **(பிரபந்தத்திரட்டு 63)**

முருகன் வள்ளியை அடைந்த தொன்மக்கதையை உட்கொண்டு இத்தகு சிறு பனுவல் கிளர்ந்ததாகலாம்.

வேலன் வேடன் முதுவன் என முந்நிலை கொண்டு முடித்துக்கொண்ட கதையைக் கருதுக.

**வேடுபறி**

வழியே செல்வார் வைத்திருக்கும் பொருள்களை வேடர்கள் சென்று வழிப்பறி செய்ததைப் பற்றிய பனுவல் வேடுபறி.

சுந்தரர் கூடலை யாற்றூர் வழியே போனபோது இறைவன் பூதகண வேடரைக் கொண்டு பொன்மணி

களைப் பறிப்பித்து, மீட்டளித்த செய்தி பற்றியமைந்த ஒரு நூல் சுந்தரர் வேடுபறி என அமைந்தது.

— [சரசுவதிமால் சுவடி (681 ஆ)]

**வேந்தன் குடைமங்கலம்**

கொற்றவன் குடையைச் சிறப்பித்து நேரிசை வெண்பாவால் பாடுவது வேந்தன் குடைமங்கலம் எனப்பெறும்.

நேரிசை வெண்பாவின் முன் இரண்டு அடிகளிலும் குடைத்தொழிலும், தனி நிலை தொடங்கிப் பின்னிரண்டு அடிகளிலும் வேந்தன் புகழும் கூறப்பெற்றுக் 'குடை' என்று முடியும் அமைதியுடையது குடைமங்கலப் பாட்டு.

முன்மூன்று அடிகளும் கட்டளை அடிகளாக அமைதல் வேண்டும் என்றும், கட்டளையாவது குற்றியலிகரம், குற்றியலுகரம் ஒற்று ஆய்தம் நீங்கிய உயிர்மெய் அளவால் ஒத்து இருத்தல் என்றும் கூறுவர்.

'குடைமங்கலம்' ஒரு புறத்துறை ஆதலைப் புறப்பொருள் வெண்பாமாலையால் அறிக (222).

" முன்னீ ரடியிலும் குடைத்தொழில் இயம்பியும்
பின்னீ ரடியில் தனிநிலை இரட்டியும்
கொற்றவற் புகழ்ந்து குடையென முடிக்கும்
நற்றிற நேரிசைக் குடைவெண் பாட்டே."

" அதுவே,
குடைச்சொற் சிந்தடி ஈற்றில்வைத் தந்தக்
குடைச்சொல் லாதிக் குறளகத் தடக்கி
ஈற்றய லடியினும் ஈற்றினும் இறைவனைப்
போற்றிப் புகழ்ந்து புகறல் வேண்டும்."
(இந்திரகாளியார்) — (பன்னிரு. 199, 200)

" ஒட்டிய குடைப்பொருள் உரைக்கும் நேரிசை
கட்டளை யாகுதல் கடனென மொழிப."

" கட்டளை என்பது கருதுங் காலை
ஈற்றடி ஒழிய ஏனைமூன் றடியும்
பாற்படும் எழுத்தின் பகுதிஒப் பதுவே."

" இதற்கே யாமெழுத் தெண்ணுங் காலைக்
குற்றிய லிகரமும் குற்றிய லுகரமும்
ஒற்றுமாய் தழமொழித் துயிர்மெய்யுங் கொளலே."
— (பன்னிரு. 201, 203)

**வேல்விருத்தம் (வேற்பா)**

வேற்படையைப் பற்றிப் பத்து ஆசிரிய விருத்தம் பாடுவது வேல்விருத்தம் என்பதாகும். —(நவநீத. 41.)

வேலன் வழிபாட்டு வழிப்பட்டது, வேல்வழிபாடு. வேல் உடையான் வேலனாயினமை வேற்சிறப்பை வெளிப் படுத்தும்.

வேல்வழிபாட்டு இடமே 'படைவீடு' எனப்பட்டதும், படைவீட்டுப் பதிகம் அது பெற்றதும் அறியத்தக்கவை.

**வேனில்மாலை**

இளவேனிலையும் முதுவேனிலையும் சிறப்பித்துப் பாடுவது வேனில்மாலை எனப்படும்.

" வேனிலைப் பாடுதல் வேனில் மாலை."
— (இலக். பாட். 73)

" வேனிலொடுமுதிர் வேனிலும் புனைந்து
விளம்புதல் வேனின்மாலை யாகும்."
— (முத்துவீ. 1062)

அறுவகைப் பெரும் பொழுதுகளில் இருவகையை உள்ளடக்கியது வேனில். இளவேனில் செல்வன் காமன், ஆகலின் அவன் வண்ணிப்பும் இம்மாலையில் இடம் பெறுவதாம்.

---


மணிவாசகர் பதிப்பகம்

கத்தின்

கள்

ரிக்கம்

தன்

ராமையா

இரா. சாரங்கபாணி

ாருள் —

ர் சோ. ந. கந்தசாமி

அரவிந்தன்

முத்திரம்

—

)ரா. வ. கமலக்கண்ணன்

க்டர் சு. சக்திவேல்


நூலகம்

ம்பரம்-608 001

ன, சென்னை-600 001

ரு சென்னை-600 001

ல வீதி, மதுரை-625 001

பமுத்தூர்-641 001

, சிதம்பரம் போன்: 2799

m Achakam, Madras-600 002.